விலை 10.00

Registered as a Newspaper at G.P.O.

பக்கங்கள்: 32

✱ விளம்பரங்கள்
✱ வாழ்த்துகள்
மற்றும் இதர வணிக தொடர்பாடலுக்கு:
Tel: 0114 - 369411
Fax: 0114 - 641294
e-mail: thamilthanthi@gmail.com

THAMILTHANTHI தமிழ்த்தந்தி

# தமிழ்த்தந்தி

www.facebook.com/thamilthanthi
Follow@thamilthanthi

உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..

தமிழ் 07 தந்தி 13 ஞாயிற்றுக்கிழமை 24.02.2019 Sunday 24th February 2019 e-mail: thamilthanthi@gmail.com www.thamilthanthi.com

# தமிழ் மக்களின் உரிமைகளுக்கு பதிலாக சலுகைகளை எதிர்பார்க்கும்



## உரிமை அரசியலிலிருந்து சலுகை அரசியலுக்குள் மூழ்கும் கூட்டமைப்பு

## பதவியிழந்தும் சலுகைகளை இழக்க மறுக்கும் சம்பந்தன்


சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவர் அல்ல என்று சபாநாயகர் அறிவித்த பின்பும் சம்பந்தன் ஐயா அவர்கள் தனது எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காக கொடுக்கப்பட்ட டிஸ்கவரி வாகனத்தையும், விஎயிட் டொயட்டா சஹாரா வாகனத்தையும் மீளளிப்பதற்கு மறுப்புத் தெரிவித்து வருகின்றார்.

இதற்குமப்பால் எதிர்க்கட்சித் தலைவருக்கு வழங்கப்பட்ட பங்களாவையும் மீளக்கையளிப்பதற்கு சம்பந்தன் ஐயா மறுப்புத் தெரிவித்து வருகின்றார். தமிழர்களின் அரசியல் வரலாற்றில் தமிழரசுக் கட்சி என்பது எதிர்க்கட்சி அரசியலைத்தான் வரலாறாகக் கொண்டிருக்கின்றது. தமிழரசுக் கட்சி ஆரம்பித்ததிலிருந்து அது அரசாங்கத்தில் இணைந்து பயணித்த வரலாறுகள் இல்லை.

ஒரேயொரு

02 ஆம் பக்கம் பார்க்க





# சிங்கள மேலான்மையற்ற சுயாட்சியே எமக்கு அவசியம்

## வடக்கு மாகாண முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன் தமிழ்த்தந்திக்கு விசேட பேட்டி

பேட்டியின் முழுவிபரம் 06ஆம் பக்கத்தில்

## நெல்லுக்கும் விலைச் சூத்திரம்



அடுத்த போகத்தில் இருந்து நெல்லுக்கு விலைச் சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக விவசாய அமைச்சர் பி.ஹெரிசன் கூறியுள்ளார்.

அரிசி விலைக்காக எதிர்வரும் ஏப்ரல் மாதம் 01ம் திகதி முதல் வர்த்தமானி அறிவித்தல் வெளியிட நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் கூறினார்.

## முள்ளிவாய்க்கால் செயற்குழு இன்று கூடுகின்றது



இவ்வாண்டுக்கான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அனுஸ்டிப்பு நிகழ்வின் செயற்குழு நிர்வாக தெரிவு இன்றைய தினம் 24.02.2019 இறுதியுத்தம் முற்றுப்பெற்ற முள்ளிவாய்க்கால் பகுதியில் தெரிவு செய்யப் படுகின்றது.

கடந்த வருடம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் பல சர்ச்சைகளும்

02 ஆம் பக்கம் பார்க்க



## சமந்தா பவர் இலங்கை வருகை

ஐக்கிய நாடுகளுக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் சமந்தா பவர், எதிர்வரும் வாரம் இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

அரசியல் வாழ்வில், 30 ஆண்டு

02 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு, கிழக்கில் நாளை பூரண ஹர்த்தால்



கோப்புபடம்

நாளை 25 ம்திகதி வடக்கில் பூரண கர்த்தாலை அனுஸ்டிக்குமாறு அழைப்புவிடுக்கின்றார் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கபட்டோர் அமையத்தின் ஊடகபேச்சாளர் கே.தேவராஜா

அதன்பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே

02 ஆம் பக்கம் பார்க்க

## அரச நிறுவன முறைகேடுகள் தொடர்பில் 185 முறைப்பாடுகள்

கடந்த நான்கு வருட காலப் பகுதியில் அரச நிறுவனங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல்களை விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு இரண்டு வாரங்களுக்குள் 185 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

2015 ஜனவரி 14 ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரையான 4 வருடங்களுக்குள் அரச நிறுவனங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் செயற்பாடுகள், நிறுவன நம்பிக்கையை மோசடி செய்தல், முறையற்ற வளப் பாவனை

02 ஆம் பக்கம் பார்க்க

## இனந்தெரியாத நோயினால் பெருமளவிலான மாடுகளுக்கு பாதிப்பு

தம்புள்ள பகுதியில் வாய் மற்றும் கால் நோயினால் மாடுகள் இறக்கின்றன. இதனைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றோம்.

இவ்வாறு கால்நடைகள் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் ஹரீசன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

02 ஆம் பக்கம் பார்க்க

## ஒரு மாதத்திற்குள் புதிய கூட்டணி



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான புதிய கூட்டணி இன்னும் ஒரு மாத காலத்துக்குள் அமைக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பீ. திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், முன்னாள் ஜனாதிபதியும் எதிர்க் கட்சித் தலைவருமாகிய மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் இடம்பெற்ற

02 ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேசமே எங்களின் ஒரே நம்பிக்கை

எங்களது சுழற்சிமுறை உணவு தவிர்ப்புப் போராட்டம் நாளையுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றது. அன்றைய தினம் நாங்கள் ஏற்கனவே அறிவித்திருந்ததற்கமைய அமெரிக்க ஐரோப்பிய நாடுகளை அழைத்திருந்ததற்கமைய தமிழர்களின் சுதந்திரமான தீர்வினைப் பெறலாமென்று வலியுறுத்தி வந்துள்ளோம்.

அதனடிப்படையில், இரண்டு வருட பூர்த்தியினை தெருவிலிருந்து ஜனநாயக வழியிலே சர்வதேசத்தின் ஆதரவைப் பெற்று சர்வதேசத்திற்கு மூன்று கோரிக்கைகள் அடங்கிய பரிந்துரைகளை சமர்ப்பித்து அது பெரும் வரவேற்பைப் பெற்ற இடத்திலே, நாங்கள் கூறியதற்கிணங்க, யாழ்ப்பாணத்தில் நாளை நல்லூர்

02 ஆம் பக்கம் பார்க்க



# இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்க தமிழ் தேசிய கூட்டமைப்பு முயற்சி -பீரிஸ் குற்றச்சாட்டு

தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப இராணுவத்தினர் வழங்கிய பங்களிப்பை தமிழ் தேசிய கூட்டமைப்பு வழங்கவில்லை. சர்வதேசத்தில் இராணுவத்தை குற்றவாளிகளாக்கி மீண்டும் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்கவே முயற்சிகளை மேற்கொள்கின்றனர் என பொதுஜன முன்னணியின் தவிசாளர் பேராசிரியர். ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக தொடர்ந்து சர்வதேச அமைப்புக்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இவற்றுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆதரவு வழங்குவது பொருத்தமற்ற செயற்பாடாகவே கருதப்படும்.

இறுதிக்கட்ட யுத்தத்தில் போர்க் குற்றங்கள் இடம் பெற்றது என்று இவர்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் இது வரை காலமும் உள்ளூர் மற்றும் சர்வதேச மட்டத்தில் உறுதிப்படுத்தப்படவில்லை. எனவே சர்வதேசமும் இவ்விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது பயனற்றது.

நாட்டில் இனங்களுக்கிடையிலும், தேசிய மட்டத்திலும் நல்லிணக்கத்தினை கட்டியெழுப்ப இராணுவத்தினர் வழங்கிய பங்களிப்பினை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இதுரை காலமும் முன்னெடுக்கவில்லை.

யுத்த களத்திலும், அதற்கு அப்பாற்பட்ட இடங்களிலும் இராணுவத்தினர் முறையற்ற விதத்தில் செயற்பட்டுள்ளனர். அவர்களுக்கு கடுமையான தண்டனைகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் பலர் இன்றும் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவற்றை சிவில் குற்றங்களாகவே கருத வேண்டும். இவ்விடயத்தில் நாங்கள் எவ்விதமான எதிர்ப்பினையும் தெரிவிக்கவில்லை.

வடக்கில் இராணுவத்தினர் தமிழ் மக்களுடன் நல்லுறவுடனேயே செயற்படுகின்றனர். இராணுவ முகாம்களை அகற்ற வேண்டாம் என்று பாதிக்கப்பட்ட மக்கள் இன்று போராடுகின்றார்கள். தமிழர்களுக்கு இராணுவத்தினரை சர்வதேசத்தில் குற்றவாளிகளாக அடையாளப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் கிடையாது. இதனால் எவ்வித நன்மையும் எவருக்கும் ஏற்படாது. ஆனால் இவ்விடயத்தில் கூட்டமைப்பினரே தொடர்ந்து முறையற்ற விதத்தில் செயற்படுகின்றனர்.

மனித உரிமை இன்று அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டியே அமெரிக்கா விலகிக் கொண்டது. இதனை அரசாங்கம் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். 2015, 2017ஆம் ஆண்டுகளில் காலஅவகாசம் பெற்றுக் கொண்டதைப் போன்று இம்முறையும் காலஅவகாசம் பெற்றுக் கொள்ளாமல் இலங்கைக்கு ஒரு நிரந்தர தீர்வை பெற்றுக் கொள்ளும் யோசனைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என்றார்.

# கொகெய்ன் பயன்படுத்துவோரை மோப்பம் பார்த்து கூற முடியாது

பாராளுமன்றத்திற்குள் கொகெய்ன் போதைப் பொருள் பயன்படுத்துவோர் இருந்தால் இரத்தப் பரிசோதனை செய்ய முடியும் என்று அமைச்சர் சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

கம்பஹா பிரதேசத்தில் வைத்து ஊடகங்களிடம் பேசும் போது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கொகெய்ன் போதைப் பொருள் பயன்படுத்தியவர்கள் போன்று சிலர் பாராளுமன்றத்திற்குள் செயற்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

எனினும் அரசாங்கத்தில் உள்ள எந்தவொரு அமைச்சரும் கொகெய்ன் போதைப் பொருள் பயன்படுத்துவதாக தான் நம்பவில்லை என்றும் அது தொடர்பில் நாய் போன்று மோப்பம் பார்த்து கூற முடியாது என்றும் கூறியுள்ளார்.

# தொடரை வென்றது இலங்கை

இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியிலும் இலங்கை அணி 08 விக்கட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

இதன்மூலம் தொடரை இலங்கை அணி 2-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியுள்ளது. தென்னாபிரிக்காவின் போர்ட் எலிசபெத் மைதானத்தில் நடைபெற்ற போட்டியின் நாணயசுழற்சியை வென்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென் ஆப்பிரிக்கா அணி 61.2 ஓவரில் 222 ஓட்டங்கள் எடுத்து அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதனையடுத்து போட்டியின் முதல் இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 154 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கட்டுக்களையும் இழந்துள்ளது. இரண்டாவது இன்னிங்சில் தென்னாபிரிக்க அணி 128 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கட்டுக்களையும் இழந்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 02 விக்கட் இழப்பில் 197 ஓட்டங்களைப் பெற்று 08 விக்கட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

# வரவு செலவுத் திட்டம் நிதிநெருக்கடிக்கு மத்தியில் தயாரிப்பு சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு; அமைச்சர் மங்கள

இலங்கையில் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையிலும் நடப்பு நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் வடக்கு கிழக்கு உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளையும் அபிவிருத்தி செய்யும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக இலங்கையின் நிதி மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். இலங்கைக்கு நிதியுதவி வழங்குவதை சர்வதேச நாணய நியதியம் நிறுத்தியுள்ளது. ஆனாலும் மீண்டும் அந்த உதவிகளைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். சர்வதேச நாணய நியதியத்தின் பிரதிநிதிகள் தற்போது கொழும்புக்கு வந்துள்ளனர் என்றும் அவர்கள் இலங்கை மத்திய வங்கி உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலருடன் கலந்துரையாடுவதாகவும் அமைச்சர் மங்கள சமரவீர கூறியுள்ளார்.

நடப்பு நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டம் பாரிய நிதிப் பற்றாக்குறைக்கு மத்தியிலும் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மங்கள கூறியுள்ளார்.

எதிர்வரும் காலங்களில் தனியார் துறையினருடன் மேலும் நெருக்கமாக செயற்பட முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும், நடப்பு நிதியாண்டுக்காக எதிர்வரும் மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவுசெலவுத் திட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் எனறும் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கான நிதியை வழங்குமானால் புதிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியும் என்றும் கூறிய அமைச்சர் மங்கள சமரவீர, சர்வதேச நாணய நிதியம் நிதியுதவிகளை வழங்க பல்வேறு நிபந்தணைகளை விதிப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை நல்லாட்சி என கூறிக்கொண்டு 2015ஆம் ஆண்டு ஜனவாரி ஆட்சிக்கு வந்த மைத்திரி ரணில் அரசாங்கம் கடந்த ஆண்டு மே மாதத்தில் மாத்திரம் 800 மில்லியன் ரூபாவை கடனாக பெற்றுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஏலவே கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



யாழ்.ஒஸ்மானியா கல்லூரியின் இல்ல விளையாட்டு போட்டி நிகழ்வின் போது பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த கௌரவ கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் அவர்களுக்கு ஒஸ்மானியா கல்லூரி சமூகம் சார்பாக யாழ்.எழுத்தாளர் தேசாபிமானி எம்.எப்.எம். இக்பால் (ஜே.பி) நினைவுச்சின்னம் வழங்குவதை படத்தில் காணலாம். அருகில் கல்லூரி அதிபர் எம்.சேகு ராஜீது,யாழ்.மாநகர சபை உறுப்பினர் கே. எம். நியாஸ் நிலாம், பழைய மாணவர் சங்க உறுப்பினர்களான ஜே.நசார், ஆர்.றஸ்பஹான் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## சர்வ...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

முருகன் கோவிலில் விசேட வழிபாட்டுடன், யாழ்ப்பாணத்தில் முதலாவது கையெழுத்து வேட்டை ஆரம்பித்து வைக்கப்படும்.

தாயகப்பகுதியில் அனைத்துப் பகுதிகளிலும் கையெழுத்துக்கள் சேகரிக்கப்படும். அதன் தொடர்ச்சியாக திருகோணமலை மாவட்டத்திலும் இரண்டாம் திகதி கிளிநொச்சியிலும் இந்தக் கையெழுத்து வேட்டையையும், போராட்டத்தையும் தொடர்ந்து செய்யவுள்ளோம். அதைத் தொடர்ந்து, மன்னார், மட்டக்களப்பு போன்ற இடங்களிலும் செயற்பட்டு அமெரிக்க தூதர அதிகாரிகளிடம், கையெழுத்துகளுடன் சேர்ப்பதற்கு ஆயத்த பணிகளை மேற்கொள்ளவுள்ளோம்.

எங்களது போராட்டத்தை ஒடுக்குவதற்கு பல வழிகளிலும் தடைகள் ஏற்படுத்தப்பட்டன. அந்த வகையில் கூட்டமைப்பின் செயற்பாடு மிகவும் மோசமாக உள்ளது. தமிழர்களையும் ஏமாற்றி எம்மையும் ஏமாற்றி, நடுத்தெருவில் மக்களை நிற்க வைத்துள்ளது. அதனால் கூட்டமைப்பை நாங்கள் அடியோடு நிராகரிக்கின்றோம். தற்பொழுது மாற்றுத் தலைமைகள் தமிழர் பகுதிகளில் உருவாகியிருக்கின்றன. அவர்களிடம் உரையாடியதிலிருந்து, இலங்கையிடமிருந்து எங்களுக்கு தீர்வைப் பெற முடியாது என்பதை அவர்களும் உறுதிப்படுத்தியிருக்கின்றார்கள்.

ஜனநாயக வழியின்படி ஒருதொகை கையெழுத்துகளை பெற்று அமெரிக்க தூதரக அதிகாரிகளிடம் எங்கள் கோரிக்கையோடு சமர்ப்பிக்கவிருக்கின்றோம்.

## வடக்கு...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவித்த அவர்...

எதிர்வரும் 25ம் திகதி வடக்குகிழக்கின் வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களின் அமையம் கிளிநொச்சியில் மாபெரும் ஆர்பாட்ட பேரணியை ஏற்பாடு செய்துள்ளது. அன்றைய நாள் முழுவதும் வடமாகாணத்தில் கர்த்தாலை அனுஸ்டிக்குமாறு அனைத்து தரப்பிடமும் நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

குறித்த போராட்டம் கிளிநொச்சி கந்தசாமி ஆலயத்தின் முன்பாக ஆரம்பித்து டிப்போசந்தியில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலகத்தில் மகஜர் கொடுப்பதுடன் நிறைவடையும்.

பத்து வருடகாலமாக எமதுகோரிக்கைளிற்கு சரியான பதில்கள் அரசினால் வழங்கபடவில்லை. உறவுகளின் போராட்டங்கள் 700 நாட்களை தாண்டியும் அதற்கான பதில்களை இலங்கை அரசு வழங்கவில்லை.

கடந்த இரண்டு வருடங்களாக இலங்கை அரசிற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை கால அவகாசத்தை வழங்கியிருந்தது. எனவே எதிர்வரும் 25ம் திகதி இலங்கை அரசிற்கு மீண்டும் கால அவகாசத்தை வழங்குவதற்கு எதிர்பினை தெரிவிக்கிறோம்.

அத்தோடு கால அவகாசத்தை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்களும் ஈடுபட்டிருப்பதனை நாம் அறியக் கூடியதாக உள்ளது.

இந்த இரண்டு வருடத்தில் அரசானது எந்தவித முன்னேற்றமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாத நிலையில் இருபதுக்கும் மேற்பட்ட தாய்மார்கள் மரணத்தை தழுவியிருக்கின்றார்கள். எனவே இனிமேலும் கால அவகாசம் வழங்கபடகூடாது என்பதை நாம் வலியுறுத்துகின்றோம். அத்துடன் எந்தவித தீர்வுகளும் கிடைக்காத நிலையில் தொடர் போராட்டநகளை மேற்கொள்வதற்கு நாம் எத்தணித்துள்ளோம்.

எனவே குறித்தபோராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள், மதகுருமார்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், பொதுமக்கள், அரசியல் வாதிகள் ஆகியோர் ஒன்றிணைந்து இந்தபோராட்டத்திற்கு வலுசேர்குமாறு நாம் கேட்டுகொள்கின்றோம்.

அண்மையில் கிளிநொச்சியில் வைத்து பிரதமர் ரணில் மறப்போம், மன்னிப்போம் என்று எமது தலைவர்களிற்கு மத்தியில் கூறிய நிலையில் அதனை ஒரு தமிழ் தலைமையும் தட்டிகேட்கும் நிலையில் இருக்கவில்லை. எனவே அவர்கள் தமது பதவிகளை பாதுகாப்பதற்காக எம்மை பயன்படுத்துகிறார்களே தவிர மக்களின் பிர்சினைகள் பற்றி அவர்களிற்கு அக்கறையில்லை என்றார்.

## முள்ளி...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

சிக்கல்களும் நிலவின. காரணம் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள், அரசியல் வாதிகள் என பலர் இச் செயற்குழுவில் செயற்பட்டனர். இவ்விடத்தில் அரசியலுக்கு இடமில்லை. பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாடுகள் பக்கச்சார்பாகவும் மறைமுகமான அடக்குமுறையாகவும் அமைந்திருந்தன.

ஆனால் இந்நினைவேந்தல் நிகழ்வில் முழுப்பங்களிப்பு மற்றும் ஏற்பாட்டுக்குழுவில் அங்கம் வகிக்க பூரண அதிகாரங்கள் இறுதிகட்ட யுத்தத்தில் கடைசிவரை களத்தில் நின்ற போராளிகளுக்கும் பொது மக்களுக்குமே ஆகும். ஆகையினால் அரசியல்வாதிகள் பிரமுகர்கள் சிவில் அமைப்புக்கள் பல்கலைக்கழக மாணவர்கள் என அனைவரும் முள்ளிவாய்க்கால் நிகழ்வில் கலந்துகொண்டு நினைவுகூர முடியும் ஆனால் செயற்குழுவில் அங்கம் வகிக்க அருகதையற்றவர்கள் செயற்குழுவில் இணைந்து செயற்படமுடியும் தனித்து செயற்பட முடியாது.

அந்தவகையில் நிர்வாக தெரிவானது இன்று 24/02/2019 ஞாயிற்றுக்கிழமை முள்ளிவாய்க்கால் புனித மண்ணில் இடம் பெற உள்ளதனால் முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு பிரதேச பொதுமக்கள் , வடகிழக்கு வாழ் தமிழ்த் தேசிய ஆர்வலர்கள், செயற்பாட்டாளர்கள், முன்னாள் போராளிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், என அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைப்பு விடுக்கின்றோம்.

## அரச...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

தொடர்பில் மக்களின் முறைப்பாடுகளைப் பெற்று, அவை தொடர்பில் விசாரித்தல் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

எழுத்துமூல முறைப்பாடுகளை அல்லது தகவல்களை சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழிகளில்

செயலாளர்,

அரச நிறுவன முறைகேடுகளை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு,

அறை இலக்கம் 210, 2 ஆவது மாடி,

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம்,

பௌத்தாலோக மாவத்தை,

கொழும்பு 07

எனும் முகவரிக்கு சமர்ப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வாய்மொழி மூலம் தகவல்களைத் தெரிவிக்க 011-2665382 எனும் இலக்கத்தை தொடர்புகொள்ள முடியும்.

மார்ச் மாதம் 07 ஆம் திகதி வரை முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

## ஒரு...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

சந்திப்பு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அடிப்படைக் கொள்கைகள் தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு மூன்று பிரதான அம்சங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளன. இதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கூட்டணியின் பெயர், சின்னம் என்பன தொடர்பில் இதுவரை எந்த தீர்மானமும் இல்லை. அடுத்த கட்டமாக அது குறித்து கவனம் செலுத்தப்படும் எனவும் ஸ்ரீ ல.சு.க.யின் சிரேஷ்ட உறுப்பினரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.பீ. திஸாநாயக்க மேலும் கூறினார்.

## இனந்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

மாடுகளை வேறுபிரதேசங்களுக்கு கொண்டு செல்வது மற்றும் இறைச்சிக்காக மாடுகள் அறுக்கப்படுவதனை நீதிமன்ற உத்தரவினூடாக தடுத்து நிறுத்தியுள்ளோம். மூதூர், கிண்ணியா, மன்னார் போன்ற பகுதிகளில் மாடுகள் மற்றும் ஆடுகளுக்கு கண்டுபிடிக்க முடியாத நோய் தொற்று ஏற்பட்டுள்ளது. அதுதொடர்பில் விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றோம். அறிக்கை கிடைக்கும் பட்சத்தில் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்வோம்.

## சமந்தா...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

களை நிதி அமைச்சர் மங்கள சமரவீர நிறைவு செய்வதை முன்னிட்டு கொழும்பில் நடைபெறவுள்ள நிகழ்வில் பங்கேற்கவே சமந்தா பவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 28ஆம் திகதி பிற்பகல் 3 மணியவில் நடைபெறவுள்ளது.

இராஜதந்திரியும் கல்வியாளருமான சமந்தா பவர், பராக் ஒபாமாவின் அரசாங்கத்தில் முக்கிய பதவிகளை வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழர்களின்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

கட்டத்தில் மாத்திரம் தந்தை செல்வா அவர்கள் தலைவராக இருக்கின்ற காலகட்டத்திலே நீலன் திருச்செல்வத்தின் தந்தையாரான திருச்செல்வத்தை இரண்டு வருடங்கள் அதிகாரப் பகிர்வுகளை பகிர்ந்தளிப்பதற்கு மாத்திரம் அமைச்சராக்கி அதனூடாக தமிழர்களுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளிக்க வேண்டுமென்று இரண்டு வருடங்கள் அமைச்சராக்கினார். அமைச்சாரகிய பொழுதிலும் அப்பொழுதிருந்த டட்லி சேனநாயக்க அரசாங்கம் தமிழர்களுக்கான அரசியல் தீர்வை வழங்காத பொழுது பதவியைத் துறந்து கௌரவமாக வெளியேறினார்கள்.

தமிழர்கள் இப்படியான வரலாற்றுக்கு அப்பால் தமிழ் இயக்கங்களுடன் இருந்த காலகட்டத்திலிருந்து பல உயிர்த்தியாகங்களை செய்த தமிழர்களின் வரலாற்றினை சிங்கள தேசம் கண்டு வியந்தது. தமிழர்கள் தியாகச் செம்மலாக இயங்குகின்றார்களே நாட்டுக்காக, இந்த நாட்டில் தமிழர்களின் உரிமைக்காக எத்தனை உயிர்கள் சமாதிகளாகின? தமிழர்கள் உடமைளை இழந்தார்கள், உயிர்களை இழந்தார்கள், உறவுகளை இழந்தார்கள், ஆனால் அவர்கள் உரிமையை இழக்க தயாராகஇல்லை.

மாற்றாக தமிழ் தேசிய கூட்டமைப்பு சலுகை அரசியலில் மூழ்கி தனிப்பட்ட அபிலாசைகளை தீர்ப்பதில் மாத்திரம் கண்ணும் கருத்துமாக இயங்கி வருவது, வேடிக்கையாக இருக்கிறது. இதற்குமப்பால், தற்பொழுது இந்த வாகனங்களை தனக்கு சொந்தமாக்குவதற்கான முயற்சியில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுவருவதாக சம்பந்தன் ஐயாவும் அவருடைய கூட்டமைப்பும் தாங்கள் தொடர்ந்து அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதினால் இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து எதிர்க்கட்சித் தலைவர் பதவி உருவாக்கப்பட்டதிலிருந்து எவருக்கும் வழங்காத சலுகையை தனக்குத் தரும்படி தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடாக இரா.சம்பந்தன் ஐயா அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளதாக தகவல்கள கசியத்தொடங்கியுள்ளன. இதில் உண்மை எது என்பதை பொறுத்திருந்து அமைச்சரவை கூட்டங்களிலிருந்துதான் அறிய முடியும். சம்பந்தன் ஐயாவுக்குச் சொந்தமாக அந்த டிஸ்கவரி வாகனத்தையும், டொயட்டா சஹாரா வாகனத்தையும், பங்களாக்களையும், பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தனுக்கு வழங்கும்படி அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை போடும்படி அரசுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசுடன் பேரம் பேசி வருகின்றது. இந்தப் பேரம் பேசலில் அரசாங்கத்திலிருந்து தற்பொழுது தமிழ் தேசிய கூட்டமைப்பு விலகுமாக இருந்தால், அந்த அரசாங்கம் கவிழுகின்ற நிலைமையில் இருக்கின்ற பொழுது தமிழ் தேசிய கூட்டமைப்பு கேட்கின்ற சகல சலுகைகளையும் செய்வதற்கு அவர்கள் தயாராகி வருகின்றார்கள். தமிழர்களின் உரிமைகளைக் கேட்கவில்லை, அரசியல் கைதிகளின் விடுதலையைக் கேட்கவில்லை. வடகிழக்கின் அபிவிருத்தியைக் கேட்கவில்லை. காணாமல் போனவர்களை நாங்கள் கேட்கவில்லை. ஜெனீவாவில் நாங்கள் விளக்கம் கேட்கவில்லை. நாங்கள் சர்வதேச நீதிமன்றம் கேட்கவில்லை. நாங்கள் கேட்பது இரண்டு வாகனங்களும் ஒரு பங்களாக்களும் என்று தமிழ் தேசிய கூட்டமைப்பு முடக்கியிருக்கிறது. இதன் உண்மைத் தன்மையை வருகின்ற அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் மக்களால் அறிந்து கொள்ள முடியும்.

ஆனால் இதெல்லாம் ஒருபுறமிருக்க, என்று பதவி போகிறதோ அன்று அரச சொத்துக்களையெல்லாம் மீள்கையளிக்க வேண்டும். அப்படி அளிக்கப்படா விட்டால், சட்டப்படி குற்றம். சட்டம் படித்த சம்பந்தனும் அரசாங்க சொத்துக்களை பதவியிழந்தும், பதவி வைத்திருப்பதன் ஊடாக இன்று தெற்கிலிருக்கின்ற அரசியல்வாதிகள் சிரிக்கின்றார்கள். உரிமைக்காக தற்கொலைப் படையாக மாறினார்கள். பல உயிர்களை இழந்தார்கள். இன்று அவர்கள் கேட்பது என்ன? இவர்கள் அரசு கொடுத்த வாகனங்களை திருப்பித் தாரார்கள் இல்லை. அரசு கொடுத்த பங்களாக்களை திருப்பிக் கொடுக்கவில்லை. இவர்களது உரிமைப் போராட்டம் தரங்குறைவான சலுகை அரசியலாக மாறியிருக்கிறது என்ற கருத்துக்களை தெற்கிலிருக்கின்ற அரசியல்வாதிகள் பல இடங்களிலும், பல விழாக்களிலும், பல கூட்டங்களிலும் பேசி நகைப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. இது தமிழ் தேசிய கூட்டமைப்பு மாத்திரமல்ல, இவர்கள் இன்று தமிழர்களின் உடமைகளையும், உரிமைகளுக்கும் அப்பால் தமிழர்களின் தன்மானத்தினை விற்றுப்பிழைக்கின்ற கீழ்த்தரமான அரசியலை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றமையை காணக்கூடியதாக இருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.



# பட்டிருப்பு தொகுதி மக்களுக்கு கம்பரெலிய வேலைத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு புறக்கணிக்கப்பட்டால் வீதியில் இறங்கிப் போராடுவதற்கும் தயார்

**க.விஜயரெத்தினம்**

பட்டிருப்பு தொகுதி மக்களுக்கு கம்பரெலிய வேலைத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு புறக்கணிக்கப்பட்டால் தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி வீதியில் இறங்கிப் போராடுவதற்கும் தயார் என அக்கட்சியின் பொதுச்செயலாளரும்,முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

கம்பரெலிய வேலைத்திட்டத்தின் பட்டிருப்பு தொகுதிக்கான நிதி ஒதுக்கீடு சம்பந்தமாகவும்,பொது மக்களின் அபிவிருத்தி சம்பந்தமாகவும் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்:-பட்டிருப்பு தொகுதியானது தற்போது எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தெரிவு செய்யப்படாத தமிழ்தொகுதியாகவும்,பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் அமைச்சர்களின் பார்வைக்கு தெரியாத தொகுதியாகவும் காணப்படுகின்றது.

இப்பிரதேச மக்களின் தேவைகள்,அபிவிருத்திகள்,குறைபாடுகள் உள்ளடக்கப்பட்ட கோரிக்கைகளை பிரதேச செயலாளர் ஊடாக முன்வைத்து செயற்படுத்துமாறு அரச சுற்றுநிரூபம் குறிப்பிடுகின்றது. இருந்தபோதிலும் ஆளும்தரப்புக்கு ஆதரவு தெரிவிக்கின்ற ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் 150மில்லியன் ரூபா ஒதுக்கப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்ற நிலையில்; மட்டக்களப்பு மாவட்டத்தில் அவ்வாறு ஒதுக்கப்படும் நிதியில் 2தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும்,2சகோதர முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமாக 600மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டால் 4 பாராளுமன்ற உறுப்பினர்களும் கம்பரெலிய வேலைத்திட்டத்தின் பட்டிருப்பு தொகுதியையும்,தொகுதிமக்களையும் மறந்து தத்தமது தொகுதிக்கே நிதி ஒதுக்கீடு செய்து அபிவிருத்தியை முன்னெடுத்து வருகின்றார்கள்.

இவ்வாறான நிலையில் கம்பரெலிய வேலைத்திட்டத்தில் நிதிஒதுக்கீடு பட்டிருப்பு தொகுதிக்கு மறுக்கப்பட்டால் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி வீதிக்கு பொதுமக்களை இறக்கிப் போராடும் நிலையேற்படும்.மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு, கல்குடா,பட்டிருப்பு தொகுதிகள் என மூன்று இருந்தும் பட்டிருப்புதொகுதி தவிர்ந்த ஏனைய தொகுதியில்தான் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள்.

இம்மூன்று தொகுதிகளுக்குமாக 900 மில்லியன் ரூபா அரசாங்கத்தினால் ஒதுக்கப்ட்டால் பட்டிருப்பு தொகுதியையும்,தொகுதிமக்களையும் 4பாராளுமன்ற உறுப்பினர்களும் படுமோசமாக புறக்கணிப்பார்கள் என்பதில் எந்தகருத்துக்கும் இடமில்லை.80வீதம் தமிழ்சமூகம் வாழும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 960 கிராமங்கள் காணப்படுகின்றது.ஒவ்வொரு கிராமமக்களின் தேவைகளையும்,அபிவிருத்தியையும் செய்வதற்கு அரசாங்கம் ஒதுக்கப்படும் நிதியினால் பட்டிருப்பு தொகுதி புறக்கணிக்பட்டு வருகின்றது.

பட்டிருப்பு தொகுதியில் உள்ள களுவாஞ்சிகுடி, வெல்லாவெளி, பட்டிப்பளை போன்ற பிரதேச செயலகத்திற்குட்பட்ட வறுமைப்பட்ட பொதுமக்கள் கடந்த யுத்தத்தினால் பாரிய அழிவுகளை சந்தித்தமக்கள் என்பது எல்லோரும் அறிந்த உண்மையாகும்.கடந்த வருடம் கம்பரெலிய வேலைத்திட்டத்தில் பட்டிருப்பு தொகுதிக்கு மிகக்குறைந்த நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது.ஆனால் ஏறாவூர் நகர்பகுதிக்கு 78மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு வேலைத்திட்டம் செய்யப்பட்டது.ஆனால் 16மில்லியன் மட்டுமே போரதீவுப்பற்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.இது பட்டிருப்பு தொகுதி மக்களுக்கு செய்த வெறும் கண்துடைப்பாகும். இவ்விடயம் நால்லாட்சி அரசாங்கத்தை உருவாக்குவதற்கு அயராது உழைத்த அரசியல்வாதிகளின் பார்வைக்கு இதுவரையும் புலப்படவில்லை.

சிறுபான்மையின மக்களின் வாக்குகளால் தெரிவான ஜனாதிபதியும்,அவரது ஆட்சிக்கு கைகோர்த்து நிற்கும் அரசியல்வாதிகளும், பட்டிருப்பு தொகுதி மக்களுக்கு சமத்துவமாக நிதி ஒதுக்கீடு செய்யப்படவேண்டும்.அவ்வாறு நிதிகள் குறைவாக கிடைக்கும் பட்சத்தில் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி பொதுமக்களை வீதிகளுக்கு இறக்கி மக்களோடு மக்களாக போராட்டத்தில் குதிப்தற்கு தயார் எனத்தெரிவித்தார்.

# வவுனியா கந்தபுரம் கிராமத்தில் கிராம சக்திக்காக திரண்ட மக்கள்

**வவுனியா நிருபர்**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் ஆலோசனைக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டு வரும் கிராம சக்தி வேலைத் திட்டம் வவுனியா, கந்தபுரம் கிராமத்தில் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.



நாடுபூராகவும் இன்று தொடக்கம் 24 ஆம் திகதி வரை கிராம சக்தி வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும் வாரமாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு வறுமையை ஒழிக்கும் முகமாக இத்திட்டத்தை ஜனாதிபதி அவர்கள் ஆரம்பித்துள்ளார்.

இதற்கமைவாக கந்தபுரம் 'கிராமசக்தி' அமைப்பினரால் கந்தபுரம் கிராமத்தில் மக்களது முழுமையான பங்களிப்புடன் முதற்கட்டமாக கிராம சுகாதாரத்தை பேண சிரமதானம் இடம்பெற்றது. கிராம வீதிகள், ஆலய வளாகம் மற்றும் பொது இடங்கள் என்பன இதன்போது துப்பரவு செய்யப்பட்டன.

இந்நிகழ்வில் அப்பகுதி கிராம அலுவலர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புக்கள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# பரிசளிப்பு விழா

**ஹஸ்பர் ஏ ஹலீம்**

'இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வை ஏற்படுத்தும் வாசிப்பு' என்ற தொனிப் பொருளிற்கு அமைய நடாத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளுக்கு பரிசளிப்பு விழா

தேசிய வாசிப்பு மாதமான ஒக்டோபர் மாதத்தினை முன்னிட்டு 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டி, ஓவியப் போட்டி, கட்டுரை போட்டி மற்றும் குர்ஆன் மனனப் போட்டி என்பன பல நிகழ்ச்சிப் போட்டிகள் கிண்ணியா நகர சபை மற்றும் கிண்ணியா பொது நூலகம் இணைந்து இவ் போட்டிகளை நடாத்தி முடித்தன.

அதற்கமைய இவ் போட்டியில் வெற்றி பெற்றவர்களை கௌரவப்படுத்த இவர்களுக்கான பரிசளிப்பு விழா 23.02.2019 ஆம் திகதி காலை 10 மணியளவில் கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் நடை பெற்றது.

இவ் நிகழ்வில் கௌரவ விருந்தினராக நகர சபை தவிசாளர் எஸ்.எச்.எம். நளீம் , விஷேட விருந்தினராக கிண்ணியா வலயக் கல்வி பணிப்பாளர் முனவ்வரா நளீம்,

சிறப்பு விருந்தினர்களாக SEN அமைப்பின் தலைவர் ஜனாப் AMM. Akram, நகர சபை உறுப்பினர் ஜனாப். அனீஸ், நகர சபை உறுப்பினர் ஜனாப். மஹ்தி, நகர சபை உறுப்பினர் ஜனாப். நிஹார் சத்தார் சனசமூக முகாமையார் மற்றும் நகர Maas graphic முகாமையாளர் ஜரூக் அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.


# திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

**கந்தளாய் நிருபர்**

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் மாவட்ட செயலக மண்டபத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறுமென, அரசாங்க அதிபர் என்.ஏ.ஏ.புஸ்பகுமார தெரிவித்தார். இக்கூட்டம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களான துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறைப் பிரதியமைச்சர் அப்துல்லா மஹ்ரூப் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் ஆகியோர் தலைமையில் நடைபெறவுள்ளது. திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்படவுள்ளன.

# சப்தகன்னி மலையை பார்வையிட அனுமதி

**மஸ்கெலியா நிருபர்**



வெளிநாட்டு உல்லாச பயணிகளை கவர்வதற்காக உள்ள சப்தகன்னி மலை (7மலை)தொகுதியை சென்று பார்வையிட, அம்பேகமுவ பிரதேசசபையின் வேண்டுகோளுக்கு இணங்கி, மத்தியமாகாண ஆளுனர் மைத்திரி குணரட்ன அவர்கள் அனுமதிவழங்கியுள்ளார்

இதனைதொடர்ந்து அம்பகமுவ பிரதேசசபை அதற்கான ஏற்பாடுகளை முன்வந்து செய்துக் கொண்டுள்ளது.

இதனால் நோட்டன் கிரிஎலிய மற்றும் கினிக்கத்தென மக்கள் நன்மையடைவார்கள் என அம்பேகமுவ பிரதேசசபையின் தவிசாளர் கூறினார்.







**மண்முனைப்பற்று பிரதேச செயலகமும் கிழக்கு மாகாண விளையாட்டத் திணைக்களமும் இணைந்து நடாத்திய பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான பிரதேச மட்ட விளையாட்டு விழா பாலமுனை நெஷனல் விளையாட்டு மைதானத்தில் மண்முணைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி நமசிவாயம் சத்தியானந்தி தலைமையில் வெகு விமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மாணிக்கம் உதயகுமார் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வெற்றியீட்டிய விளையாட்டு வீரர்களுக்கு வெற்றிக்கிண்ணங்களை வழங்கிவைப்பதனையும்இ இளைஞர்கள் ஆர்வத்துடன் விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றுவதனையும் படங்களில் காணலாம்.**

**படம் : உ.உதயகாந்த்**

# மாணவர்களுக்கான இலவச பயிற்சிநெறி

**இரத்தினம் நடராஜன்**

ஆலையடிவேம்பு பிரதேச இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களின் எதிர்கால வாழ்வியலில் சுபிட்ஷத்தை மலரச் செய்வதில் அவர்களின் வாழ்நாள் வரைக்கும் பயன்படக்கூடியதுமான கல்வி மற்றும் ஆன்மீக செயற்பாடுகளினை இனம் கண்டு நடைமுறைப்படுத்துவதன் பிரதான நோக்கமாகக் கொண்டு அகில இலங்கை இந்து மாமன்றம் 25ஆம் திகதி திங்கட்கிழமை பிரதேச மாணவர்களுக்கான விழுமியக் கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாக விசேட செய்முறை பயிற்சி நடாத்தவுள்ளது

மாணவர்களது கல்வி தொடர்பான பணி மகத்தானது மாணவர்களின் வாழ்வியல் பாடசாலை கல்வியுடன் வாழ்க்கைக்கான அறநெறிகளினையும் கற்பதன் மூலமே சமூகத்தில் நல்லொழுக்கமுள்ள ஆன்மீக விழுமியங்கள் மேம்பட்ட ஆளுமையுடன் வாழ்ந்து சாதனைகளை உருவாக்க கூடியவர்களாக சமூகத்தில் அவர்கள் சிறந்த ஆனந்தமாக வாழ வைப்பதே குறிக்கோளாகக் கொண்டு இவ் நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் நிகழ்வில் வளவளராக தமிழ்நாட்டைச் சேர்ந்த கலாநிதி தமிழருவி பேராசிரியர் வே. சங்கரநாராயணன் பங்குபற்றலுடன் மிகவும் சிறப்பான முறையில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என ஆலையடிவேம்பு பிரதேச இந்து மாமன்ற தலைவர் கனகரத்தினம் தெரிவித்தார்.

# காணாமல் போன 30 வயதுடைய இளைஞன் மவுஸ்ஸாக்கலை நீர்தேக்கத்திலிருந்து சடலமாக மீட்பு

**க.கிஷாந்தன்**

மஸ்கெலியா நகரில் காணாமல் போன 30 வயதுடைய இளைஞன் மவுஸ்ஸாக்கலை நீர்தேக்கத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மஸ்கெலியா தபால் நிலையத்திற்கு அருகாமையில் வசிக்கும் 30 வயதுடைய பெத்தும் மதுசங்க லியனகே என்ற திருமணம் ஆகாத இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி இளைஞனை காணவில்லை என இளைஞனின் பெற்றோர் பொலிஸில் முறைபாடு செய்திருந்தனர்.


முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸார், தேடுதல் பணியிலும் ஈடுப்பட்டிருந்தனர்.

அந்தநேரத்தில் மவுஸ்ஸாக்கலை நீர்தேக்கத்திற்கு அருகாமையில் இளைஞனின் பாதணி ஒன்று மீட்கப்பட்டிருந்தது. இதனையடுத்து குறித்த இளைஞன் நீர்தேகத்தில் பாய்ந்திருக்கலாம் என சந்தேகித்து தேடுதல் பணியில் ஈடுப்பட்டனர்.

20.02.2019 அன்று இரவு வரை தேடுதலில் ஈடுப்பட்டிருந்த பிரதேசவாசிகள் மற்றும் பொலிஸார் 21.02.2019 அன்று கடற்படையினரின் உதவியைக் கொண்டு தேடுதலில் ஈடுப்பட்ட போது இளைஞன் சடலமாக நீர்தேகத்திலிருந்து மீட்கப்பட்டார்.

19ம் திகதி இரவு குறித்த இளைஞனுக்கு வந்த தொலைபேசி அழைப்பை அடுத்து அவர் வெளியே சென்றதாகவும், அதன்பிறகு அவர் வீடு திரும்பவில்லை என பெற்றோர்களால் பொலிஸ் நிலையத்தில் முறைபாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைபாட்டையடுத்து, சந்தேகிக்கும் பொலிஸார் மேற்படி இளைஞன் நீர்தேகத்தில் பாய்ந்துள்ளாரா அல்லது யாரேனும் தள்ளிவிட்டார்களா என்ற பல கோணங்களில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.










**வரலாற்று சிறப்புமிக்க இரத்தினபுரி மாவளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த இரதோற்சவம் இடம்பெற்றது. இதன்போது பால்குட பவனி மற்றும் தீ மிதிப்பு, பறவை காவடி என்பனவும் இடம்பெற்றது.**

**இரத்தினபுரி நிருபர்**

# ட்ரோன் ஒலிம்பிக்ஸ்: அஜித்தின் தக்ஷா குழு 3 போட்டிகளில் அசத்தல் வெற்றி

ஏரோ இந்தியா கண்காட்சியின் ஓர் அங்கமான ட்ரோன் ஒலிம்பிக்ஸ் போட்டியில், நடிகர் அஜித்தின் 'தக்ஷா' குழு மூன்று பிரிவுகளில் வெற்றி பெற்றுள்ளது.

நடிகர் என்பதைத் தாண்டி கார் ரேஸ், பைக் ரேஸ், புகைப்படக் கலை ஆகிய துறைகளில் தடம் பதித்தவர் அஜித். இந்தியாவிலேயே பைலட் உரிமம் பெற்ற நடிகர்.

கடந்த ஆண்டு சென்னை தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் உள்ள வான்வெளி ஆராய்ச்சி மையமான தக்ஷா குழுவின் ஆலோசகராக நியமிக்கப்பட்டார் அஜித். அதன் மூலம் ஆளில்லா விமானங்களை உருவாக்கும் மாணவர்களுக்கு உதவினார். அஜித்தின் வழிகாட்டுதலில் 'தக்ஷா' அணியின் ட்ரோன் (ஆளில்லா விமானம்) நீண்ட நேரம் வெற்றிகரமாகப் பறந்து சாதனை படைத்தது.

இதே குழு ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாண்ட் பகுதியில் நடைபெற்ற 'மெடிக்கல் எக்ஸ்பிரஸ் யுஏவி சேலஞ்ச் - 2018' போட்டியில் கலந்துகொண்டது. அப்போட்டியில் நூலிழையில் தங்கப் பதக்கத்தை இழந்த தக்ஷா அணி, சர்வதேச அளவில் இரண்டாம் இடத்தைப் பிடித்து சாதனை பிடித்தது.

இந்நிலையில், எச்.ஏ.எல் நிறுவனத்தின் சார்பில் நடத்தப்படும்'ஏரோ இந்தியா - 2019' பெங்களூருவில் உள்ள எலஹங்கா விமானப் படை தளத்தில் நடத்தப்பட்டது.




2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இந்தக் கண்காட்சியில் 22 நாடுகளின் 61 அதிவேக போர் விமானங்களும், 165 கண்காட்சி மையங்கள் உட்பட 365 நிறுவனங்களின் மையங்களும் இடம் பெற்றன. இதில் விமானவியல் தொழில்நுட்பம் தொடர்பான கருவிகள், புதிய கண்டுபிடிப்புகள், முப்படைக்கும் தேவையான விமானங்கள், ஆளில்லா விமானங்கள், ஏவுகணைகள், ஹெலிகாப்டர்கள், ரேடார்கள் உள்ளிட்டவை இடம் பெற்றன.

இதில் 'ட்ரோன் ஒலிம்பிக்ஸ்' என்ற பெயரில் முதல் முறையாக போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் அஜித்தின் தக்ஷா அணியும் கலந்துகொண்டது. ஐந்து பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் 4 கிலோவுக்கும் அதிகமான கண்காணிப்பு விமானப் பிரிவில் தக்ஷா அணி இரண்டாம் இடத்தைப் பிடித்து, ரூ.1.5 லட்சம் பரிசுத் தொகையைக் கைப்பற்றியது.

அதேபோல, 4 முதல் 20 கிலோவுக்கு இடையிலான கண்காணிப்பு விமானப் பிரிவில், தக்ஷா முதலிடத்தைப் பிடித்து 3 லட்ச ரூபாயைத் தட்டிச் சென்றது. பறக்கும் தொழில்நுட்ப சவால் பிரிவில், தக்ஷா இரண்டாம் இடத்தைத் தக்க வைத்தது. இதில் தக்ஷாவுக்கு ரூ.3 லட்சம் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்ட எந்த அணியும் தக்ஷாவைப் போல மூன்று பிரிவுகளில் வெற்றி வாகை சூடவில்லை. 'சாகர் டிஃபென்ஸ்' மற்றும் 'ரோவெஞ்சர்ஸ் குவாட்' ஆகிய இரு அணிகளில் தலா இரு பிரிவுகளில் அதிகபட்சமாக வெற்றி பெற்றன.

# அதிமுக - பாமக கூட்டணி இயல்பானது; மேலும் பல கட்சிகள் இணையும்: ஜி.கே.மணி பேச்சு



அதிமுக - பாமக கூட்டணி இயல்பானது என, பாமக தலைவர் ஜி.கே.மணி தெரிவித்துள்ளார்.

பாமகவின் சிறப்பு பொதுக்குழுக்கூட்டம் விழுப்புரம் வானூரில் தொடங்கியது. பாமக நிறுவனர் ராமதாஸ், இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்துக்கு கட்சியின் தலைவர் ஜி.கே. மணி தலைமை வகித்து அரசியல் தீர்மானத்தை வாசித்துப் பேசியதாவது:

நடைபெற உள்ள மக்களவைத் தேர்தலில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள மொத்தம் 40 தொகுதிகளில் அதிமுக-பாமக- பாஜக கூட்டணி வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று அரசியல் தீர்மானம் முன்வைக்கப்படுகிறது. மாநில உரிமைகளை மீட்டெடுக்கவும், தமிழக திட்டங்களை அதிக எண்ணிக்கையில் போராடி பெறவும், பாமகவுக்கு அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்களை அனுப்புவது அவசியம் என்பதால் ஒத்த கருத்து உடைய கட்சிகளுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட முடிவு எடுக்கப்பட்டது. கூட்டணி கட்சிகள் குறித்து முடிவு எடுக்கும் அதிகாரம் ராமதாஸுக்கு தரப்பட்டது.

தமிழகத்தின் நலனைக் கருத்தில் கொண்டு மக்களவைத் தேர்தலில் அதிமுகவுடன் பாமக கூட்டணி அமைத்துள்ளது. பொதுவாக தேர்தல் வெற்றிக்கான அடித்தளம் கூட்டணி என்றால், வெற்றி என்ற இலக்கை நோக்கி கூட்டணிக் கட்சிகளை உயர்த்திச் செல்லும் தூண்களாக இருப்பவை, கூட்டணிக் கட்சிகளிடையே நிலவும் ஒற்றுமையும், ஒன்றுபட்டு பணியாற்றும் ஏற்ற மனநிலையாகும். அந்தவகையில் அதிமுக-பாமக இடையிலான கூட்டணி இயல்பான கூட்டணி. இதில் பாஜகவும் இணைந்துள்ளது. மேலும பல கட்சிகள் இணையவுள்ளன.

ராமதாஸால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள கூட்டணி வெற்றிக் கூட்டணியாக உருவெடுத்துள்ளது. அதிமுக தலைமையிலான கூட்டணியில் இணைந்துள்ள பாமக அதற்கான முன் நிபந்தனையாக காவிரி பாசன மாவட்டங்களை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலங்களாக அறிவிக்க வேண்டும்.

நீர்பாசன திட்டங்கள், சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, 7 தமிழர்கள் விடுதலை, படிப்படியாக மதுவிலக்கை ஏற்படுத்தும் நோக்கில் 500 மதுக்கடைகளை மூடுதல், மணல் குவாரிகளை படிப்படியாக மூடுதல், அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டத்தைச் செயல்படுத்துதல், மேகேதாட்டு அணை கட்டும் கர்நாடகத்தின் சதியை முறியடித்தல், விவசாயிகளின் பயிர்க் கடனை தள்ளுபடி செய்தல், மருத்துவ படிப்புக்கு நீட் தேர்வை ரத்து செய்தல் ஆகிய பத்து கோரிக்கைகளை முன் வைத்துள்ளது.

இவ்வாறு ஜி.கே.மணி பேசினார்.

## புல்வாமா தாக்குதல் எதிரொலி:
# காஷ்மீர் மாணவர்கள் சொந்த மாநிலம் திரும்பினர்



புல்வாமா தீவிரவாத தாக்குதலில் 40 சிஆர்பிஎப் வீரர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து பல்வேறு மாநிலங்களில் பயின்றுவரும் காஷ்மீர் மாநில மாணவர்களுக்கு மிரட்டலும், துன்புறுத்தலும் ஏற்பட்டுள்ளதால், அவர்கள் சொந்த மாநிலம் திரும்பி வருகின்றனர்.

ஏற்கனுறைய இதுவரை 100-க்கும் மேற்பட்ட மாணவர்கள், தாங்கள் பயிலும் இடங்களில் இருந்து வெளியேறி சொந்த மாநிலம் திரும்பியுள்ளனர். பெரும்பாலும் உத்தரகாண்ட் மாநிலத்திலிருந்து காஷ்மீர் மாணவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

புல்வாமாவில் கடந்த வியாழக்கிழமை ஜெய்ஷ் இ முகமது தீவிரவாதி நடத்திய தற்கொலைப்படைத் தாக்குதலில் 40 சிஆர்பிஎப் வீரர்கள் கொல்லப்பட்டனர். இந்த கொடூரத் தாக்குதலுக்கு நாடுமுழுவதும் பெரும் கண்டனமும், எதிர்ப்பும் கிளம்பியுள்ளது. தீவிரவாதிகளுக்கு தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும் என மக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்கள் பல்வேறு மாநிலங்களில் உள்ள கல்வி நிலையங்களில் பயின்று வருகின்றனர். அவர்களுக்கு பல்வேறு தரப்பில் இருந்து அச்சுறுத்தலும், துன்புறுத்தலும் வருவதாக உள்துறை அமைச்சகத்துக்கு புகார்கள் வந்துள்ளன.

ஜம்மு காஷ்மீர் போலீஸாரிடம் மட்டும் கடந்த 2 நாட்களில் 50 பேர் அழைப்புச் செய்து தங்களுக்கு ஏற்பட்டுள்ள துன்புறுத்தல்களையும், மிரட்டல்களையும் தெரிவித்துள்ளனர்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் அரசின் மூத்த அதிகாரி ஒருவர் தி இந்துவிடம்(ஆங்கிலம்) கூறுகையில், உத்தரகாண்ட், மகாராஷ்டிரா, டேராடூன், ஹரியானா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் பயிலும் காஷ்மீர் மாநில மாணவர்கள் தங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக புகார்கள் தெரிவித்து, பாதுகாப்பு அளிக்கும்படி கேட்டுள்ளனர் எனத் தெரிவித்தார்.

இதையடுத்து, பாதிக்கப்பட்டுள்ள மாணவர்கள், பொதுமக்கள் அனைவரும் 14411 என்ற உதவி எண்ணில் தொடர்பு கொண்டால் விரைவாக நிவாரணம் கிடைக்கும், எந்தவகையான மிரட்டல், துன்புறுத்தல் இருந்தாலும் இதில் தொடர்பு கொள்ளலாம் என்று சிஆர்பிஎப் நேற்று இந்த உதவி எண்ணை அறிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர் மாநில மாணவர்கள் அமைப்பின் செய்தித்தொடர்பாளர் நசிர் குஹேமி கூறுகையில், கடந்த 3 நாட்களில் நாங்கள் அறிவித்திருந்த உதவி எண்கள் மூலம் 800 அழைப்புகள் காஷ்மீர் மாணவர்கள் மற்றும் பெற்றோரிடம் இருந்து வந்துள்ளது. பெரும்பாலான அழைப்புகள் டேராடூனில் இருந்து வந்தது.

பஜ்ரங்தள் மற்றும் விஎச்பி அமைப்பைச் சேர்ந்தவர்கள் காஷ்மீர் மாணவர்களுக்கு மிரட்டல், துன்புறுத்தல் செய்து வருகின்றனர். இதையடுத்து போலீஸாரின் உதவியுடன் 100 மாணவர்களை சொந்த மாநிலம் அனுப்பி வைத்தேன். 4 ஆண்டுகளாக டேராடூனில் இருக்கிறேன், இதுபோன்ற சம்பவங்களை அனுபவித்தது இல்லை. வெளிமாநிலத்தவரை இதுபோன்று யாரும் நடத்தியது இல்லை எனத் தெரிவித்தார்.

உத்தரகாண்ட் மாநில சட்டம் ஒழுங்கு போலீஸ் ஏடிஜி அசோக் குமார் கூறுகையில், டேராடூனில் உள்ள அனைத்து கல்வி நிலையங்கள், கல்லூரி விடுதிகளில் போலீஸார் ரோந்து சென்று வருகின்றனர். அங்கு பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அரசமைப்புச் சட்டத்துக்கு அனைவரும் கட்டுப்பட வேண்டும். அனைத்து மாணவர்களுக்கும் உரிய பாதுகாப்பு அளிக்கப்படும். அதே சமயம்,தேசத்துக்கு எதிராக குரல் கொடுத்தாலும், உணர்வுகளை வெளிப்படுத்தினாலும் நடவடிக்கை எடுப்போம். இருதரப்பினருக்கும் எச்சரிக்கை விடுத்து அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளோம் எனத் தெரிவித்தார்.

புதுடெல்லி துணை போலீஸ் கமிஷனர் மதுர் வர்மாவிடம் கேட்டபோது, அவர் கூறுகையில், டெல்லி முழுவதும், குறிப்பாக சிறுபான்மையினர் வசிக்கும் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. போலீஸார் கண்காணிப்பு பலப்படுத்தி இருக்கிறோம். காஷ்மீர் மாநில மக்கள் மட்டுமல்லாது ஒவ்வொரு குடிமகனின் பாதுகாப்பையும் உறுதி செய்வோம் எனத் தெரிவித்தார்.

# சவுதி இளவரசருக்கு கார் ஓட்டிய இம்ரான் கான்

பாகிஸ்தான் அரசின் நடைமுறைகளை புறந்தள்ளி விட்டு சவுதி இளவரசருக்கு கார் ஓட்டிச் சென்றார் இம்ரான் கான்.

புல்வாமா தாக்குதல் சம்பவத்தால் இந்தியா - பாகிஸ்தான் இடையே மோதல் சூழல் நிலவி வருகிறது. இதனால் பாகிஸ்தானுக்கு வருகை தர திட்டமிட்டு இருந்த சவுதி இளவரசர் பின் சல்மான் மூன்று நாள் தாமதத்துக்கு பிறகு பாகிஸ்தான் சென்றுள்ளார்.

பாகிஸ்தான் சென்ற சவுதி இளவரசர் சல்மானை பாகிஸ்தான் நாட்டின் வழக்கமாக பின்பற்றப்படும் வழக்கமான அரசு நடைமுறைகளை புறந்தள்ளி விட்டு தனது காரில் அழைத்து வந்தார் பிரதமர் இம்ரான் கான். காரை இம்ரான் கானே ஓட்டி வந்தார்.

இதைத்தொடர்ந்து இரு தலைவர்களின் சந்திப்பில் பல ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. அத்துடன், ஒரு லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் உதவித்தொகை மற்றும் வர்த்தக ஒப்பந்தங்களும் செய்யப்பட்டன.



பின்னர் இது குறித்து இம்ரான் கான் தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அதில், சவுதியில் பணியாற்றும் 25 லட்சம் பாகிஸ்தானியர்களின் சார்பாக வைத்த கோரிக்கையை சவுதி இளவரசர் ஏற்றுக் கொண்டுள்ளார். சவுதி அரேபியாவுக்கான பாகிஸ்தான் தூதராக ஏற்றுக் கொண்டுள்ளார். பாகிஸ்தான் மக்களின் மனங்களை சவுதி இளவரசர் வென்று விட்டார் எனக் கூறியுள்ளார்.

# ஐஎஸ் இயக்கத்திலிருந்து மீண்ட பெண் நாடு திரும்ப ட்ரம்ப் தடை



ஐஎஸ் இயக்கத்திலிருந்து மீண்டு வந்த ஹூடா முதானா தனது சொந்த நாடான அமெரிக்கா திரும்ப அந்நாட்டு அதிபர் ட்ரம்ப் தடை விதித்துள்ளார்.

அலபாமா மாகாணத்தைச் சேர்ந்தவர் ஹூடா முதானா. இவர் கடந்த 2014 ஆம் ஆண்டு ஐஎஸ் இயக்கத்தில் சேர்ந்தார். தற்போது ஐஎஸ்லிருந்து மீண்ட அவர், ஐஎஸ்லிடம் சேர்ந்தது தவறுதான். எனது மகனுடன் தனது தாய்நாட்டுக்குச் செல்ல விரும்புகிறேன் என்று தெரிவித்தார்.

ஆனால், அவரை மீண்டும் அமெரிக்காவுக்கு அழைக்க முடியாது என்று ட்ரம்ப் தலைமையிலான அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து புதன்கிழமை ட்ரம்ப் பேசும்போது, நான் வெளியுறவுத் துறை அமைச்சருக்கும், முதானாவை அமெரிக்காவுக்கு மீண்டும் அனுமதிக்கக் கூடாது என்ற எனது கருத்தை தெரிவித்துவிட்டேன். அவரும் ஒப்புக் கொண்டார் என்றார்.

இந்த நிலையில் இதுகுறித்து வெளியுறவுத் துறை அமைச்சர் பாம்பியோ கூறும்போது, முதானா அமெரிக்கக் குடிமகள் இல்லை. அவர் அமெரிக்காவில் பிறக்கவில்லை. நாங்கள் அவரை அமெரிக்காவில் அனுமதிக்க முடியாது. அவரிடம் அதிகாரபூர்வமான பாஸ்போர்ட் கூட இல்லை என்று தெரிவித்தார்.

ஆனால், முதானாவின் உறவினர்கள் அவர் அமெரிக்காவில்தான் பிறந்தார் என்றும் அவரிடம் முறையான பாஸ்போர்ட் இருக்கிறது என்றும் தெரிவித்துள்ளனர்.

எனினும் அவரது பெற்றோர்களின் பிறந்த இடங்களை சுட்டிக்காட்டி இதனை ஏற்க அமெரிக்க அரசு மறுக்கிறது என்றும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# கழிப்பறை பேப்பர் தேடினால் வரும் பாகிஸ்தான் கொடி?

உலகின் சிறந்த கழிப்பறை பேப்பர் எது என்று தேடினால் பாகிஸ்தான் கொடி வருவது போல் கூகுள் தேடலில் மாற்றி அமைக்கப்படவில்லை என்று அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர் மாநிலம், புல்வாமா மாவட்டத்தில் 40 சிஆர்பிஎப் வீரர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இந்தியா - பாகிஸ்தான் இடையே மோதல் ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது.

இந்த நிலையில் இரு நாட்டினரும் சமூக வலைதளங்களில் ஒருவரை ஒருவர் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

இந்நிலையில் கூகுளில் உலகத்திலேயே சிறந்த கழிப்பறை பேப்பர் எது என்று தேடினால் பாகிஸ்தானின் கொடி காண்பிக்கப்படுகிறது என்றும், கூகுள் தேடலில் அவ்வாறு மாற்றியமைக்கப்படுவதாகவும் செய்திகள் பகிரப்பட்டன. இதனை கூகுள் மறுத்துள்ளது.

இதுகுறித்து கூகுள் தரப்பில், நாங்கள் தொடர்ந்து இது தொடர்பான விசாரணையில் ஈடுபட்டோம். ஆனால், இது தொடர்பாக எந்தவித ஆதாரமும் கிடைக்கவில்லை. தற்போது கூகுளில் சிறந்த பேப்பர் என்று தேடினால் அது தொடர்பான வெளியான செய்திகள், படங்கள் காட்டப்படுகின்றன. இதுதொடர்பாக வந்த செய்திகளின் படம் சித்தரிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே மாதிரியான நிகழ்வு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மற்றும் இந்தியப் பிரதமர் மோடி விவகாரத்திலும் நடந்தது. கூகுளில் முட்டாள் என்று தேடினால் ட்ரம்ப், மோடி படங்கள் வருகிறது என்று தகவல் பரப்பப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதற்குப் பின்னர் கூகுள் தலைமை நிர்வாகி சுந்தர் பிச்சை விளக்கம் அளித்தது குறிப்பிடத்தக்கது.

# இந்தியப் பாடலுக்கு நடனமாடிய தனியார் பள்ளியின் அங்கீகாரம் ரத்து

பாகிஸ்தானில் இந்தியப் பாடலுக்கு நடனமாடிய தனியார் பள்ளியின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

புல்வாமாவில் கடந்த பிப்.14-ம் தேதி ஜெய்ஷ் இ முகமது தீவிரவாதி நடத்திய தற்கொலைப்படைத் தாக்குதலில் 40 சிஆர்பிஎப் வீரர்கள் கொல்லப்பட்டனர். இந்த கொடூரத் தாக்குதலுக்கு நாடு முழுவதும் பெரும் கண்டனமும், எதிர்ப்பும் கிளம்பியுள்ளது. இதனால் இந்தியா-பாகிஸ்தான் இடையே பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

பாகிஸ்தானின் கராச்சியில் 'மாமா பேபி கேர் கேம்பிரிட்ஸ்' தனியார் பள்ளி உள்ளது.

இதில் நடைபெற்ற கலை நிகழ்ச்சியில் சில குழந்தைகள் இந்தியப் பாடலுக்கு நடனமாடினர். நடனத்தின் போது பின்னணியில் இந்தியக் கொடி அசைந்தது.

இதுதொடர்பான வீடியோ இணையத்தில் வைரலானது. இதற்கு பாகிஸ்தானில் கடுமையான விமர்சனம் எழுந்தது. இதுதொடர்பாக விளக்கம் அளிக்கும்படி பள்ளி முதல்வருக்கு பாக. கல்வித்துறை சார்பில் நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

அதில், கல்வி நிறுவனங்களில் தேசத்தின் கண்ணியத்தைக் குலைக்கும் வகையில் அத்தகைய பொருளைக் (இந்தியக் கொடி) காண்பிப்பது தவறு. இதை எக்காரணத்தைக் கொண்டும் சகித்துக் கொள்ள முடியாது என்று கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில், இதுகுறித்து கல்வித்துறை இயக்குநரகத்துக்குப் பள்ளி முதல்வர் பதிலளிக்கவில்லை என்றும் நேரில் ஆஜராகவில்லை என்றும் கூறப்படுகிறது. இதனால் இந்தியக் கலாச்சாரத்தை ஊக்குவித்ததாகக் கூறி, பள்ளியின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

# பிரேசில் எல்லையை மூட உத்தரவிட்ட வெனிசுலா அதிபர்

பிரேசிலுடனான எல்லையை மூட வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து பிரேசில் அதிபர் நிக்கோலஸ் மதுரோ தொலைக்காட்சியில் வியாழக்கிழமை பேசும்போது, வெனிசுலாவுடனான பிரேசில் எல்லைப் புறத்தை மூட உத்தரவிடப்பட்டுள்ளது. எதிர்க் கட்சிகள் கூறுவதுபோல் வெனிசுலாவில் எந்த நெருக்கடியும் இல்லை. கொலம்பியாவின் எல்லையை மூட ஆலோசித்து வருகிறோம் என்றும் தெரிவித்தார். தென் அமெரிக்க நாடுகளில் எண்ணெய் வளம் உள்ள நாடுகளில் வெனிசுலாவும் ஒன்று. இங்கு அதிபராக இருந்த ஹ்யூகோ சாவேஸ் கடந்த 2013-ம் ஆண்டு மரணமடைந்த பின்னர் அதிபராக நிக்கோலஸ் மதுரோ பதவி ஏற்றார். அப்போதே அவரின் மீது விமர்சனங்கள் எழுந்தன.

கடந்த ஆண்டு மே மாதம் நடந்த நடந்த தேர்தலிலும் நிக்கோலஸ் மதுரோ வெற்றி பெற்று இரண்டாவது முறையாக அதிபரானார். தேர்தலில் பல்வேறு முறைகேடுகள் செய்து மதுரோ வென்றிருப்பதாக சர்வதேச அளவில் விமர்சனங்கள் எழுந்தன.

மேலும் வெனிசுலா மக்கள் நெருக்கடியில் இருக்கின்றனர் என்ற தொடர் பிரச்சாரங்களில் அமெரிக்க அதிபர் ஈடுபட்டு வருகிறார். மேலும் கொலம்பியா மூலம் வெனிசுலா மக்களுக்கான உதவிகளையும் மதுரோ தடுத்து நிறுத்தியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

தமிழ்த்தந்தி
ஞாயிற்றுக்கிழமை 24.02.2019
இல. 146,டோசன் வீதி, கொழும்பு2
தொலைபேசி: 0114369412 பக்ஸ்: 0114641294
மின்னஞ்சல்: thamilthanthi@gmail.com

# காணாமல் போனவர்களின் கதைகளை கேளுங்கள்

இலங்கையில் அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற இறுதி யுத்தத்தின் போது காணாமல் போன தமது உறவுகளைக் கண்டுபிடித்துத் தரும்படி தமிழ் பொதுமக்கள் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக பலவிதமான போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இப்படி போராட்டங்கள் நடத்தும் பொதுமக்களை காலத்துக்காலம் அரசாங்கத் தலைவர்களும், தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களும், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும், சில வேளைகளில் சில வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் சந்தித்து சில வாக்குறுதிகளை வழங்கி வருகின்ற போதிலும், அந்த மக்களின் கோரிக்கைகளில் ஒரு வீதம் தன்னும் நிறைவேற்றப்படவில்லை. இந்தப் பிரச்சினை முடிவின்றி தொடர் கதையாக இழுபடுவதற்கு உண்மையான காரணம், காணாமல் போனவர்களில் பெரும்பாலோர் உயிருடன் இல்லை என்பதே. இந்த உண்மை சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினர்க்கும் தெரிந்திருந்தும் அதை வெளியே சொல்வதற்கு அச்சப்பட்டு மூடி மறைத்து வருகின்றனர். காணாமல் போனோர் என பொதுவாகக் கூறப்பட்டாலும், இவ்வாறு காணாமல் போனோரில் பல வகைப்பட்டவர்கள் அடங்குகின்றனர். இவர்களில் ஒரு பகுதியினர் உண்மையான பொதுமக்கள். இன்னொரு பகுதியினர் புலிகளின் போராளிகள். அதனால் தான் புலிகளின் திரிகோணமலை முன்னாள் பொறுப்பாளர் எழிலனின் மனைவி அனந்தி சசிதரனும் தனது கணவர் இராணுவத்திடம் சரணடைந்த பின்னர் காணாமல் போயுள்ளார் என்று கூறி இந்தப் போராட்டங்களில் பங்குபற்றி வருகின்றார். இவர்கள் எப்படிக் காணாமல் போனார்கள் என்பதிலும் பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. இராணுவம் தமது உறவுகளைக் கொன்றிருக்கலாம் என சில மக்கள் நம்புகின்றனர். இன்னும் சிலர் தமது உறவுகளை இராணுவம் இரகசிய முகாம்களில் தடுத்து வைத்திருக்கிறது என நம்புகின்றனர். ஆனால் முன்னைய மகிந்த ராஜபக்ச அரசாங்கமும் சரி, தற்போதைய ரணில் விக்கிரமசிங்க அரசாங்கமும் சரி, அப்படியான இரகசிய முகாம்கள் எதுவும் இலங்கையில் இல்லை என மறுப்புத் தெரிவித்துள்ளனர். இவர்கள் காணாமல் போனதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. புலிப் போராளிகளைப் பொறுத்தவரையில் இறுதி யுத்த நேரத்தில் இராணுவத்திடம் சரணடைந்த சுமார் பதினோராயிரம் பேர் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இன்னொரு தொகை புலிப் போராளிகள் இறுதி யுத்த நேரத்தில் செத்து மடிந்துவிட்டனர்.

; பொதுமக்களைப் பொறுத்தவரை, இறுதிநேரத்தில் அவர்கள் ஒரே குடும்பங்களாகக் கூட இருக்க முடியாமல் திக்குத்திக்காக சிதறி இருந்துள்ளனர். இப்படியான ஒரு சூழலில் இருதரப்பும் மாறிமாறி ஏவிய எறிகணை வீச்சிலும் துப்பாக்கிச் சூட்டிலும் யார்யார் மரணித்தனர், யார் தப்பினர் என்ற விபரமே தெரிய வரவில்லை. சில குடும்பங்களில் தந்தையும் சில பிள்ளைகளும் தப்ப, தாயும் சில பிள்ளைகளும் மரணமடைந்துள்ளனர். ஒழுங்கான ஆய்வுகள் எவையும் மேற்கொள்ளப்படாததால் உண்மையான விபரங்கள் எவையும் இதுவரை கண்டறியப்படவில்லை.

காணாமல் போனவர்களின் உறவினர்கள் நடத்தி வரும் போராட்டம் முடிவின்றி பல மாதங்களைக் கடந்துள்ள நிலையில் அந்தப் போராட்டங்களை நடத்தும் மக்கள் விரக்தியின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்தச் சூழலைப் பயன்படுத்தி அவர்களிடம் சில தீய சக்திகள் ஊடுருவ ஆரம்பித்துள்ளதை வவுனியாவில் அண்மையில் நிகழ்ந்துள்ள சம்பவம் ஒன்று எடுத்துக் காட்டியுள்ளது. அந்தச் சம்பவத்தில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் வவுனியாவில் உள்ள கோயில் ஒன்றின் முன்னால் அமெரிக்க தேசியக் கொடியையும், ஐரோப்பிய யுனியனின் கொடியையும் பிடித்த வண்ணம், அமெரிக்காவும் ஐரோப்பிய யுனியனும் வந்து எமது உறவுகளைக் கண்டு பிடித்துத் தாருங்கள் என வேண்டுவதாக ஊடகங்களில் செய்திகள் வந்துள்ளன. இது ஒரு பாரதுரமான நிலைமை. இந்த மக்கள் இலங்கை அரசாங்கத்தின் மீதும், தமிழ் அரசியல் கட்சிகள் மீதும் நம்பிக்கை இழந்ததின் விளைவே அவர்கள் அந்நிய சக்திகளுக்கு அழைப்பு விடுவதின் அர்த்தமாகும். அவர்கள் பக்கத்திலுள்ள இந்தியாவுக்குக் கூட அழைப்பு விடவில்லை. எங்கோ உள்ள அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் அழைப்பு விடுகின்றனர். இது அபாயகரமான போக்கு!

போருக்குப் பின்னரான இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையில் காத்திரமாக அமைவது காணாமல் போனர்களின்பிரச்சினை. இது தொடர்பாக அரசாங்கமும் சர்வதேசமும் ஒரு திடமான முடிவுக்கு வரவேண்டும். இவ்விவகாரத்தில் காலத்தை இழுத்தடிப்பதாலோ கவனமெடுக்காமல் இருப்பதாலோ இலங்கை அரசாங்கம் சர்வதேச ரீதியில் பாரிய அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும். அத்தோடு அவர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணாது தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண முயல்வது கானல் நீராகும். காணாமல் போனவர்களின் உறவுகளுக்கு உடனடி தீர்வு பெற்றுக் கொடுக்க வேண்டியது அனைத்து மனித உரிமைகள் அமைப்பினதும் சர்வதேசத்தினதும் கடமையாகும்.

# கூட்டமைப்பும் மறுபக்கமும்

பொதுவாக தேர்தல் காலங்களில் ஒரு கட்சி, மறுகட்சியை விமர்சிக்கும் போக்கு காலம் காலமாக தேர்தல் கலாசாரமாக மாறியுள்ள நிலையில், சிவில் அமைப்புக்களும் கட்சிகளை, கட்சிசார் உறுப்பினர்களை விமர்சிக்கின்ற சூழல் தேர்தல் களத்தில் உருவாகிவருகின்றமை இன்றைய சூழலாக மாறியுள்ளது.

குறிப்பாக கடந்த மாதங்களாக தமிழரசுக் கட்சியின் போக்கினையும் அக்கட்சியிலுள்ள பொறுப்பு வாய்ந்த தலைமைகளின் திரைமறை திருவிளையாடல்களையும் ஊடகங்கள் புடம் போட்டுக் காட்டுகின்றன. அவர்களது தமிழ் மக்கள் குறித்த கரிசனையற்ற போக்குகளை சுட்டிக்காட்டி, அவர்களது சுய சுகபோகங்களுக்காகவும், அரசியல் இலாபங்களுக்காகவும் இருப்புக்களுக்காகவும் அவர்கள் விலைபோகும் விடயங்களையும் சில நம்பத் தகுந்த அரசியற் வட்டாரங்கள் குறிப்பிட்டுவருகின்றன.



**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமக்கு தமிழ் மக்களின் பிரச்சினை சம்மந்தமாக ஒரு பாரிய பொறுப்பு இருப்பதை உணர்ந்து, தன்னிச்சையாக ஒரு குறிப்பிட்ட கட்சியினை மட்டும் முதன்மைப்படுத்தி செயற்படுவதைத் தவிர்த்து அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடி ஒரு நிரந்தர தீர்வினைப் பெற்றுத் தர முன்னின்று செயற்பட வேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்பின் பூர்வீகத்தை திரிபுபடுத்தி அந்தப் பெயரை உச்சரித்து, தமிழ் மக்களையும் ஏமாற்றி தங்கள் சுயநல அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் எவராக இருந்தாலும் அவர்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்களே**

மக்களின் குறை நிறைகளை ஆராய்ந்து அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகமாக தேர்தல் காலங்களுக்கு முன்னுள்ள பணிகள், பின்னுள்ள பணிகள் என பட்டியலிட்டு விஞ்ஞாபனங்களை முன்வைக்காது வெற்றுப் பேச்சுக்களையும் வீணான போலி பிரசாரங்களை, விஞ்ஞாபனங்களை தேர்தல் காலங்களில் முன்வைத்து மக்களை பரிகாசக்காரர்களாக்குவதிலேயே தமிழ் அரசியற் தலைமைகள் ஈடுபட்டு வருகின்றார்கள்.

அந்தவகையில், கடந்த வருடம் வைரலாக பரவி வந்த இரண்டு கோடி ரூபா விவகாரம் குறித்து பல்வேறு தரப்பினரும் பல்வேறுபட்ட விதங்களில் கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். இது தொடர்பாக தமிழ்த் தலைமை கூறுகையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தலா இரண்டு கோடி ரூபா (200 இலட்சம்) அபிவிருத்திப் பணிகளுக்காகவே வழங்கப்பட்டதாகவும் இலஞ்சமாக அவை வழங்கப்படவில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார். எவ்வாறாயினும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினால் வழங்கப்பட்ட பணம் தொடர்பில் அரசியல் மேடைகளில் தொடர்ந்தும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அத்துடன் இப்பணம் எவ்வகையிலும் கட்சியிலுள்ள ஒரு சிலருக்கு பகிரப்பட வில்லை என்பதுடன் இதனை குறிப்பிட்ட ஒரு சிலரே பகிர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக இவ்விவகாரம் தொடர்பில் பணத்தில் எவ்வித பங்கினையும் பெற்றுக் கொள்ளாத பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனும் கருத்து வெளியிட்டிருந்தார். சட்டரீதியாக இப்பணம் பன்முகப்படுத்தப்பட்ட நிதி என்ற வகையில் வட கிழக்கு அபிவிருத்திப் பணிகளுக்காக வழங்கப்பட்ட நிதி என்றால் இப்பணம் ஏன் பிரதமரினால் தனிப்பட்ட வகையில் ஒரு சிலருக்கு மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது என்ற கேள்வி எழுந்திருந்தது. இதனால் இந்நிதி உறுப்பினர்கள் சிலருக்கு மாத்திரம் வழங்கப்படும் நிலையில் பிரதமரினால் வழங்கப்பட்ட இலஞ்சமாகவும் ஒரு தரப்பினர் குற்றம் சுமத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுமாத்திரமின்றி பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உட்பட தமிழரசுக் கட்சியின் பிரதம உறுப்பினர்களான தலைவர் சம்பந்தன், பேச்சாளர் சுமந்திரன் போன்றோருக்கு அரச ஆடம்பர சொகுசு மனைகளும், வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்ற நிலையில், இவர்கள் மக்களின் தீர்வை முடக்குவதிலும் தங்களது அரச உடைமைகளை அனுபவிப்பதிலுமே மிகுந்த அக்கறை கொண்டவர்களாக செயற்படுகின்றமை தொடர்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி குற்றம் சுமத்தி வருகின்றது. எதிர்கட்சியில் அமர்ந்து கொண்டும் அரசின் குறைகளைச் சுட்டிக்காட்டாது அரசுடன் பங்காளிகளாக செயற்பட்டு வரும் இத்தரப்பினர், இன்று நாட்டில் குறிப்பாக வடகிழக்கில் பாரிய பிரச்சினையாக வேலையில்லாப் பட்டதாரிகளின் தொழில் நியமனம், காணாமல் போனோருக்கான தீர்வு, காணி, தமிழ் அரசியற்கைதிகளின் விடுதலை, இனப்பிரச்சினைக்கான தீர்வு போன்றவற்றுக்கு எவ்வித தீர்வுகளையும் பெற்றுக் கொடுக்க முனைப்பாகச் செயற்படாமல் தேர்தலுக்காக மக்களை நாடி நிற்கின்றனர்.

இன்று கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அதிகளவில் சகோதர இனமான முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களாக ஓட்டமாவடி, ஏறாவூர், காத்தான்குடி பிரதேசங்களைக் குறிப்பிட்டுக் கூறலாம். இப்பிரதேசங்களின் அபிவிருத்தி நிலைகளை அவதானிக்கும் போது, இன்று மினி டுபாய், சின்னச் சவூதி போன்ற பெயர்களால் அழைக்குமளவிற்கு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் இப்பிரதேசத்திற்குள்ளும் அண்டிய பகுதிகளிலும் அதிகளவான தொழில் வாய்ப்புக்களை வழங்கும் ஆடைத் தொழிற்சாலைகள் 6 (தனியார்கள் உட்படவும்), நெற்தொழிற்சாலைகள் 15, நெசவுக் கைத்தொழில் பேட்டைகள் 20, செருப்பு மற்றும் இதர அழகுசாதன கைத்தொழில் விற்பனை நிலையங்கள் முதலான தொழில்பேட்டைகள் இயங்கிவருகின்றன. இவற்றுள் பிரதான விடயம் என்னவெனில் இப்பேட்டைகளில் தொழில் புரியும் ஊழியர்களில் 75% மானோர் குறித்த பிரதேசத்துக்கு அருகாமையில் வாழும் தமிழ் மக்களே ஆவர். அவற்றிலும் குறிப்பாக 60 வீதமானோர் பெண்களாவர். இவர்களை பற்றி ஆராயுமிடத்து இப்பெண்கள் அனைவரும் அதிக;டப் பிரதேசமான படுவான்கரைப் பிரதேசங்களிலிருந்து தங்களது குடும்ப சூழல் நிமிர்த்தம் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகை தருகின்றமை தெளிவாகியது.

கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களாக மட்டக்களப்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பிரதிநிதிகள் காணப்படுகின்றனர். ஆனால் இவர்களால் தங்களது பிரதேசம் சார்ந்த அபிவிருத்தி பணிகளை பூரணமான வகையில் நிறைவேற்ற முடிகின்றதா? பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து அபிவிருத்திகள் முறையாகச் செப்பனிடப்படுகின்றதா? தம்மினம் சார் அபிவிருத்திகளில் சகோதர இனத்துவங்களுக்குள்ள வர்த்தக நோக்கம், அபிவிருத்தி மேந்திறல், உள்ளூர் இளைஞர் யுவதிகளுக்கான தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் தொழிற் பேட்டைகள் போன்றவற்றை நிறுவி தமது பிரதேசங்களை முன்னிலைக்குக் கொண்டுவரும் நோக்கம் அரிதாகவே காணப்படுகின்றது. மக்களின் வாக்குகளால் பதவியேற்ற இவர்களால் ஏன் மட்டக்களப்பில் உள்ள கல்லடியை ஒரு காத்தான்குடி அளவிற்கு, படுவான்கரைப் பகுதிகளை மினி சிங்கப்பூர் முதலாக மாற்ற இயலாது. காரணம் இவர்கள் முழுக்க தமது அரசியல் இருப்பைத் தக்கவைப்பதுடன், தமது அரசியற்காலங்களில் அனுபவிக்கும் அரசியல் சுகபோகங்களுக்காகவுமே வாழ்கின்றனர். இதனால் மீண்டும் பாதிக்கப்படும் சமூகமாக தமிழச் சமூகமே இருந்துவருகின்றது.

பொதுவாக நோக்குமிடத்து, இன்று தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளையும் வன்முறையின்றி பேச்சுவார்த்தை மூலமும், இணக்கப்பாட்டுடனும், சமாதானமாகவும் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்பதே தமிழ்க் கட்சிகள் உட்பட தமிழ் பேசும் மக்கள் அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

இவ்வெதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு தமிழ்மக்களின் ஏகோபித்த கட்சியான கூட்டமைப்பு முன்னின்று உழைக்க வேண்டும். அதாவது, வடக்கு கிழக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களையும், 1983ம் ஆண்டு இனக்கலவரத்தின்போது இடம்பெயர்ந்து தமிழகம் சென்ற அனைத்து தமிழ் மக்களையும் மீண்டும் தங்கள் சொந்த இடங்களில் குடியேற்றி அவர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். இலங்கையில் வாழும் ஏனைய இன மக்களாகிய சிங்களவர், முஸ்லிம்கள், மலாயர் போன்ற பல்வேறு இன, மத குழுக்களுடன் நல்லுறவை பேணுவதோடு இலங்கைவாழ் அனைத்து மக்களும் சமமாகவும் அவர்களுடைய ஜனநாயக, மனிதாபிமான சகல அடிப்படை உரிமைகளையும் அனுபவிக்க உத்தரவாதமளிக்க வேண்டும்.

## நக்கீரர்


நீண்டகாலமாக சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சகல தமிழ் அரசியல் கைதிகள் பரிதாபமான நிலையை கருத்திற்கொண்டு அவர்கள் நிபந்தனையின்றி விரைவில் விடுதலைசெய்யப்பட வேண்டும் என்பதோடு அவர்களின் எதிர்கால வாழ்வாதாரப் பிரச்சினையையும் கருத்திற்கொண்டு அதற்கான நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டும். போரினால் பாதிக்கப்பட்டு பல வழிகளாலும் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் விதவைகளுக்கும், மற்றும் அவயங்களை இழந்து இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் அனைத்துத் தரப்பினருக்கும் அவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளைக் கருத்திற் கொண்டு நிரந்தர வருமானத்தை பெற்றுக்கொள்ளக்கூடிய செயற்திட்டங்களை உருவாக்கி அவர்களின் வாழ்வை மேம்படுத்த வேண்டுமென அரசாங்கத்தை வலியுறுத்தவேண்டும். அத்துடன் இவர்களுக்கு கூப்பன் வழங்கி இலவசமாக அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக்கொள்ளவும், நியாயமான விலையிலோ, மானிய அடிப்படையிலோ வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கில் வாழும் மீனவர்களின் நீண்டகாலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சம்மந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தி அவர்களுக்கு ஒரு நிரந்தர தீர்வினைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக தமிழக மீனவர்களும் இதில் சம்பந்தப்பட்டிருப்பதால் இந்த விடயத்தை இராஜதந்திர ரீதியிலும், சாணக்கியத்துடனும் செயற்பட்டு ஒரு நிரந்தர தீர்வினை பெற்றுக்கொடுக்க இரு தரப்பினரும் முன்வர வேண்டும்.

பட்டதாரிகள், படித்த இளைஞர் யுவதிகளுக்கு அவர்களின் தகுதிக்கேற்ற வேலை வாய்ப்பை உறுதிப்படுத்தி அவர்களின் விரக்தியான மன நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் அத்துடன் வேலை வாய்ப்புக்களை பெற முடியாதவர்கள் சுய தொழிலை மேற்கொள்ள பொருளாதார நிதியுதவிகளை அரசாங்கத்திடம் பெற்று தொழிற்பேட்டைகளை நிறுவி அதன் மூலம் தொழில் வாய்ப்புக்களை வழங்குதல் பிரதேச அபிவிருத்திக்கு முதற்படியாகும். கூட்டமைப்பினர் தங்களுக்குள் உள்ள மோதல் போக்குகளை கைவிட்டு மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் தீவிர கவனம் எடுக்க வேண்டும். குறிப்பாக வைப்பிலுள்ள நிதிகளை, பன்முகப்படுத்த பட்ட நிதிவரவுகளை சரியாக பயன்படுத்தி, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட, ஏனையவிதங்களால் வாழ்வாதாரத்தை கொண்டுசெல்ல முடியாமல் உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த திட்டங்களை மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழத் தேசியக் கூட்டமைப்பு தமக்கு தமிழ் மக்களின் பிரச்சினை சம்மந்தமாக ஒரு பாரிய பொறுப்பு இருப்பதை உணர்ந்து, தன்னிச்சையாக ஒரு குறிப்பிட்ட கட்சியினை மட்டும் முதன்மைப்படுத்தி செயற்படுவதை தவிர்த்து அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடி ஒரு நிரந்தர தீர்வினைப் பெற்றுத்தர முன்னின்று செயற்பட வேண்டும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பூர்வீகத்தை திரிபுபடுத்தி அந்த பெயரை உச்சரித்து, தமிழ் மக்களையும் ஏமாற்றி தங்கள் சுயநல அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்களே. தனியார் காணிகளை உரியவர்களிடம் கையளிப்பது மட்டுமன்றி இராணுவத்தால் பெருமளவு கையப்படுத்தப்பட்டுள்ள காணிகள் தேவைக்கேற்ப மக்களிடம் கையளிக்கப்பட வேண்டும் அத்துடன் இராணுவம் கையகப்படுத்திய பொது மக்களின் காணிகளை மீண்டும் அவர்களிடமே கையளிக்க அரசிற்கு உரிய அழுத்தங்கள் வழங்கப்படவேண்டும்

14 ஆம் பக்கம் பார்க்க....



# சிங்கள மேலாண்மையற்ற சுயாட்சியே எமக்கு அவசியம்

## வடக்கு மாகாண முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன் தமிழ்த்தந்திக்கு விசேட பேட்டி

**கேள்வி: வடக்கு மாகாணசபையின் அதிகாரங்கள் எவை? இன்னும் என்ன அதிகாரங்கள் வேண்டும்?**

**பதில்:** அரசியல் யாப்பின் ஒன்பதாவது அட்டவணையின் பட்டியல் 1ன் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்கள் சம்பந்தமாக சட்டம் இயற்றும் அதிகாரம் 13ஆவது திருத்தச்சட்டம் உறுப்புரை 154(G)(1) மூலம் வழங்கப்பட்டுள்ளது. உறுப்புரை 154(C) ன் கீழ் மேற்கூறிய பட்டியல் 1ன் விடயங்கள் சம்மந்தமான நிறைவேற்று அதிகாரம் ஆளுநரைச் சார்ந்துள்ளது. (உறுப்புரை 154(F)(7) பார்க்க), உறுப்புரை 154(F)(6) ன் படி மந்திரிகள் குழாம் உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து மாகாணசபைக்கு பதில் கூற வேண்டியவர்கள் ஆவார்கள். வந்துறல்(devolution) வேறு; மத்தியால் கொடுத்துறல் (decentralisation)வேறு. ஆகவே இன்னும் என்ன அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்கும் போது கொடுத்துறலின் கீழ் மத்தி மேலும் எவற்றைத் தர வேண்டும் என்று கேட்பது போல் இருக்கின்றது. தரப்பட்ட அதிகாரங்களிலேயே ஆளுநரின் நிறைவேற்று அதிகாரம் பொதிந்துள்ளது. அத்துடன் தரப்பட்ட அதிகாரங்களைக் கூட மத்திய அரசாங்கம் எப்போதும் எந்நிலையிலும் திரும்பப் பெற்றுக்கொள்ள முடியும். எனவே முழுமையான வந்துறல் அதிகாரங்கள் மத்தியால் திரும்பப்பெறாதவாறு எமக்கு எமது மாகாணத்தை நாமே பரிபாலிக்க எமக்கு சுயாட்சி வழங்கப்படவேண்டும். மேலும் மேலும் மத்தி எமக்கு அதிகாரங்களைத் தர முன்வந்தாலும் தாம் அவற்றைத் திருப்பி எடுக்க அதிகாரம் வைத்துக் கொண்டு தந்தால் எம்மை நாம் பரிபாலித்தல் மத்தியின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருக்கும். எம்மைக் கட்டுப்படுத்தி தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவே மத்தி விரும்புகின்றது. மத்தியின் பெரும்பான்மை அங்கத்தவர்கள் ஒரு இனத்தையும் எமது மாகாண மக்கள் இன்னோர் இனத்தையும் சேர்ந்தவர்களாக இருப்பதால் இந்தக் கட்டுப்படுத்தலானது இனரீதியில் நடைபெறுகிறது என்பதை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். சிங்கள மேலாண்மையற்ற சிறப்புறு சுயாட்சியே எமக்கு அவசியம். சிங்களவர் வந்தேறு குடிகளே என்று கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன அண்மையில் கூறிய பின் எமது கோரிக்கை நியாயமானது என்று உங்களுக்குப் புரிந்திருக்கும் என்று நம்புகின்றேன்.

**கேள்வி: இந்தியா - இலங்கை ஒப்பந்தப்படி இணைந்த வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு இருந்த அதிகாரங்கள் எவை?**

**பதில்:** ஒப்பந்தப்படி வடகிழக்கு இணைந்திருந்தது. தற்போது அது இல்லை. மாகாண அரசாங்க அதிபர்கள், மாவட்ட செயலாளர்கள், கிராம சேவையாளர்கள் மாகாணத்தின் அதிகாரத்தின் கீழ் இருந்தார்கள். தற்போது அவர்கள் 1992ன் பின்னர் மத்தியின் அதிகாரத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளார்கள். மற்றும் முதல்க் கேள்விக்கான பதிலில் கூறிய அதிகாரங்கள் தொடர்ந்து மாகாணங்களுக்கு இருக்கின்றன. ஆனால் அவை ஆளுநரின் கட்டுப்பாட்டில் உள்ளன. மேலும் மட்டுப்படுத்தப்பட்ட பொலிஸ், காணி அதிகாரங்கள் ஒப்பந்தப்படியும் 13வது திருத்தச் சட்டத்தின் படியும் எமக்கிருந்தும் அவற்றை நடைமுறைப்படுத்த மத்தி முன்வரவில்லை.

**கேள்வி: இந்திய மாநிலங்கள் அனைத்திற்கும் ஒரே அதிகாரங்கள் உள்ளனவா? குறிப்பாக தமிழ் நாட்டுக்கு இருக்கும் அதிகாரங்களில் எவை எமது மாகாணங்களிற்குத் தேவைப்பாடு உடையதாக இருக்கின்றன?**

**பதில்:** இந்திய மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஒப்பாகவே எமது மாகாணங்களுக்கும் அதிகாரங்கள்; வழங்கப் போவதாக இருந்தது. ஆனால் அவற்றைக் கிடைக்க விடவில்லை அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவர்கள். அங்கு மாகாண ஆளுநரின் உரித்துக்கள் பெரிதும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இங்கு அப்படியல்ல. எமது முன்னைய ஆளுநர்கள் அரங்கில் நுழைந்து தாமே மக்கள் பிரதிநிதிகளின் அதிகாரங்களைப் பாவித்தார்கள். உதாரணத்திற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாம் பதவியில் இருக்கும் போதே முன்னைய ஆளுநர் தாம் மக்கள் சந்திப்பில் ஈடுபட்டு எமது அலுவலர்;களைக்; கொண்டு தமது அரசியல் ரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டார். நாம் கோருவது சம;டி அடிப்படையிலான அதிகாரங்கள். இந்திய அரசியல் யாப்பு தோற்றம் அளவிலான சம;டியையே பிரதிபலிக்கின்றது. அது சம;டி அமைப்பல்ல. ஆகவே அங்கிருப்பதை இங்கு கொண்டு வருவதானால் மத்தியில் இருக்கும் சிங்கள மேலாதிக்கம் தொடர்ந்து எம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கும்.

**கேள்வி: அமெரிக்க மாகாணங்களுக்கு உள்ள அதிகாரங்களுக்கும் இந்திய மாநிலங்களுக்கு உள்ள அதிகாரங்களுக்கும் எவ்வகையான வேறுபாடுகள் உண்டு?**

**பதில்:** அவற்றை நான் ஒப்பிட்டுப் பார்க்கவில்லை. எனினும் அமெரிக்க அரசியல் யாப்பு சமஷ்டி (Federa) முறையில் ஆனது. இந்திய அரசியல் யாப்பு தோற்றம் அளவிலேயே சமஷ்டி போன்றது (Quasi Federal). எமக்கு முழுமையான சம;டி தேவையானது. ஏனெனில் எமது வடகிழக்கு மாகாணங்கள் மற்றைய மாகாணங்களில் இருந்து பலவாக வேறுபட்டன. மதங்கள், மொழி, கலாச்சாரம், பாரம்பரியம், நில அமைப்பு, தட்ப வெப்ப நிலை, மண்ணியல் போன்ற பலவற்றில் நாம் இங்கு வேறுபட்டுள்ளோம். பெரும்பான்மையர் என்ற ஒரே காரணத்தால் தென்னவர் அரச அதிகாரங்களைத் தம் வசம் வைத்திருந்தால் கூடிய விரைவில் வடகிழக்கை சிங்கள பௌத்த இடங்களாக மாற்றிவிடுவார்கள். அந்த செயற்திட்டம் தற்போதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

**கேள்வி: அமெரிக்க மாகாண அதிகாரங்கள் இலங்கையின் மாகாண அதிகாரங்கள்; இரண்டுக்கும் வேறுபாடு என்ன?**

**பதில்:** நான் முன்னர் கூறியது போன்று அமெரிக்க மாகாணங்கள் சமஷ்டி அடிப்படையிலான போதுமான அளவு தன்னாட்சி சுதந்திரத்தைப் பெற்றுள்ளன. இங்கு அப்படி அல்ல. எம்மை எல்லா விதத்திலும் மத்தி கட்டுப்படுத்தி வருகின்றது. எம்மை எம் சார்பில் செயற்படவிடாது தடுத்து வருகின்றது.

**கேள்வி: வடக்கு மாகாணத்திற்கான அதிகாரங்கள் இவற்றுடன் ஒப்பிடும் போது எந்தளவில் உள்ளன?**

**பதில்:** எம்மை மத்தி கட்டுப்படுத்தி வருகின்றது. நாம் செயற்பட முடியாமல் தடைகளைப் போட்டு வருகின்றது. மற்ற நாடுகளில் காணப்படும் மாகாண அதிகாரங்கள் எவையும் எமக்கில்லை. உதாரணத்திற்கு முதலமைச்சர் நிதியத்தை எடுத்துக் கொள்வோம். இந் நிதியம் ஊவா, சப்ரகமுவ மாகாணங்களிலும் மற்ற மாகாணங்கள் சிலவற்றிலும் இருந்து வந்துள்ளன. அவற்றை அண்மையில் நிறுத்தி எமக்கும் அதனைத் தராது விட்டுள்ளன தொடர்ந்து வந்த மத்திய அரசாங்கங்கள்.

அவ்வளவுக்கும் நான் நிதியைப் பரிபாலிக்கும் ஆளுநர் சபையில் வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் ஒரு பிரதிநிதியையும் உள்ளடக்கியிருந்தேன். ஆகவே எம்மிடம் வரும் வெளிநாட்டுப் பணம் பற்றி அவர் அறிய வாய்ப்பிருந்தது. கணக்காளர் நாயகம் எமது நிதியம் பற்றி போதுமான அளவு விசாரித்துக் கணக்காய்வு செய்ய இடமளிக்கப்பட்டிருந்தது. அப்படி இருந்தும் எனது ஐந்து வருட காலத்தில் அந்த நிதியம் சம்பந்தமான சட்டத்திற்கு ஆளுநரின் ஒப்புதல் தரப்படவில்லை. காரணம் தமிழர் பற்றிய அச்சம், வெறுப்பு, அசூயை என்று நான் நினைக்கின்றேன். வெளிநாட்டுத் தமிழர்கள் வடகிழக்கை பொருளாதார ரீதியாக முன்னேற்றி விடுவார்கள் என்ற பயம். எம்மைத் தம் பிடியில் வைத்திருக்கவே மத்தி எத்தனிக்கின்றது. அதற்கேற்ப எமது அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

**கேள்வி: தற்பொழுது தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வில் மாகாணங்களுக்கான அதிகாரங்கள் போதுமானதாக இருக்கின்றனவா?**

**பதில்:** தற்போதைய உத்தேச அரசியல் யாப்பின் முதல் வரைவு எனக்கு அனுப்பப்படவில்லை. எனினும் ஒற்றையாட்சியின் கீழ் எந்த அதிகாரங்கள் எமக்குத் தரப்பட்டாலும் அவை மத்தியால் மீளப் பெறப்படும் சாத்தியக் கூறுகள் என்றென்றும் இருக்கின்றன. திருப்பி அவற்றைப் பெற முடியாது என்று யாப்பில் கூறப்பட்டிருப்பினும் ஒற்றையாட்சி என்ற வட்டத்துக்குள்ளாகவே இவை கூறப்பட்டுள்ளதால் உச்ச நீதிமன்றங்கள் அவற்றைத் திரும்பவும் கையேற்கும் படியான அதிகாரத்தை மத்திக்கு அளிக்கும் சாத்தியக்கூறுகள் அதிகம். அதுவும் பெரும்பான்மையினர் தீர்ப்பு எழுதும் போது சுயாட்சி உரித்து தமிழர்க்கு உண்டு என்பதை எப்பொழுதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதே யதார்த்தம்.

**கேள்வி: வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான அதிகாரங்களைப் பெறுவதற்கு முட்டுகட்டையாக இருந்த காரணிகள் எவை?**

**பதில்:** சிங்கள அரசியல்த் தலைவர்களின் பயம், வெறுப்பு, அசூயை, ஆணவம் என்பன. கடந்த நூறு வருடங்களில் இவற்றைக் காண முடிந்துள்ளது. தமிழ் மக்களுக்குத்; தனித்து வாழ, சுயமாக செயற்பட, தன்னிறைவு பெற்றுக்கொள்ள எந்த விதத்திலும் இடமளிக்கக்கூடாது என்றவாறே சிங்கள அரசியல்த் தலைவர்கள் கடந்த நூறு வருடங்களில் செயலாற்றி வந்துள்ளார்கள். அதற்கான தடைகளை அவர்கள் ஏற்படுத்தியும் வந்துள்ளார்கள். உதாரணத்திற்கு சிங்களம் மட்டும் சட்டம் வந்த போது வடகிழக்கில் தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கலாம். ஏன் என்றால் 1956ல் வடக்கு கிழக்கில் சிங்களவர்கள் பிரசன்னம் மிக மிகக் குறைவாக இருந்தது. மேலும் வடகிழக்கில் காணி பங்கிடும் போது அந்தந்த மாவட்ட மக்களுக்கு அவர்கள் மாவட்ட காணிகளுக்காக விண்ணப்பம் செய்யும் முதலுரிமை கொடுத்திருக்கலாம். குற்றங்களில் ஈடுபட்ட சிங்கள முன்னைய குற்றவாளிகளை எங்கிருந்தோ கொண்டுவர வேண்டிய அவசியம் இருக்கவில்லை. இவையாவும் திட்டமிட்டு செய்யப்பட்டு வந்த, வரும் நடவடிக்கைகள்.

# பொலிஸாரின் கழுகுப் பார்வைக்குள் பாதாள உலக குழுக்கள்

பாதாளக் குழு தலைவனான மாகந்துர மதூஷின் செயற்பாடுகள் காரணமாக இலங்கை பொலிஸார் நிலைகுலைந்து போயுள்ளனர். நிகழ்கால பாதாளத் தலைமையை மதூஷே வெற்றி கொண்டிருந்தான் .

இவனுக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கையை கூட விடுக்க முடியாமல் சர்வதேச பொலிஸார் திண்டாடுகின்றனர். எவ்வளவு பெரிய குற்றவாளியாக இவன் இனங்காணப்பட்டிருந்தாலும் நம் நாட்டு நீதிமன்றத்தில் குற்றவாளியென இவனுக்கெதிராக எந்வொரு வழக்கும் பதிவு செய்யப்படவில்லை.

தனது தலைமைத்துவத்தின் கீழ் அவன் ஏனையவர்களையே குற்றங்களில் ஈடுபட வைப்பான். எக்காரணம் கொண்டும் அவ்வாறான செயல்களுக்கு அவன் இரங்கமாட்டான்.

தனது சகாக்களைக் கொண்டே எல்லாக் காரியங்களையும் நிறைவேற்றிக் கொள்வான் . அதனால் எந்தவொரு முறைப்பாடும் இவன் மீது சுமத்தப்படுவதில்லை என்றே கூறவேண்டும்.

இதற்கு சிறந்த உதாரணமாக டெனி ஹித்கெட்டியவின் கொலையை குறிப்பிடலாம் . டெனியை கொலை செய்வதே தனது எதிர்பார்ப்பு என்ற போதிலும் அவனை கொலை செய்வதற்காக தனது சகாக்களையே மதூஷ் பயன்படுத்திக்கொண்டான்.

டெனி ஹித்கெட்டியவின் கொலையுடன் தொடர்புடைய துப்பாக்கி தாரியான கெமாண்டர் நிஷ்ஷங்க , மினுவாங்கொடை பிரதேசத்திலுள்ள இறப்பர் தோட்டம் ஒன்றுக்குள் வைத்து பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தின் பின்னர் இறந்துபோனார்.

கொஸ்மல்லியின் கொலையும் இவ்வாறான பின்புலத்தைக் கொண்ட ஒரு செயலாகும். இதுவும் மாகந்துர மதூஷின் திட்டப்படியே நடைபெற்ற கொலையொன்றாகும்.

கொஸ் மல்லியை வெடி வைத்து கொன்றுவிட்டு உடம்பிலிருந்து தலையை வேறாக்கியது ஒரு கும்பல். அவ்வாறு வேறாக்கப்பட்ட தலையை மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு கொழும்புக்குச் சென்றது இன்னொரு கும்பலாகும்.

இறுதியாக அந்த தலையை புதுக்கடை நீதிமன்றம் அருகில் போட்டுச் சென்றது இன்னொரு கும்பலாகும். இந்தக் குழுக்களிலுள்ள ஒவ்வொருவரும் இன்னொருவைரைப் பற்றி அறியாதமையே இங்கு விஷேட அம்சமாகும்.

எவ்வாறாயினும் மதூஷக்கு எதிராக தேசிய பொலிஸார் ஊடாக நீல எச்சரிக்கை ஒன்றை விடுத்துக்கொள்ள பொலிஸாரால் இயலுமாகிப் போனது.

இருப்பினும் சிவப்பு எச்சரிக்கையைப் போன்று நீல எச்சரிக்கை பிரபலமில்லை என்ற போதும் மதூஷை கைது செய்வது கனவுப்போலவே இலங்கை பொலிஸாருக்கு காணப்பட்டது.

மதூஷ் டுபாயில் மறைந்து வாழ்வதாக புலனாய்வுப் பிரிவினர் உறுதி செய்துகொண்டாலும் எந்த நகரத்தில் வாழ்ந்து வருகிறான் என்பதை உறுதியாக அவர்களால் தீர்மானிக்கமுடியவில்லை.

தனது எதிராளிகளைத் தொடர்ந்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு அச்சுறுத்தி வந்த காரணத்தால் எதிர்த்தரப்பு பாதாளத் தலைமைகள் மதூஷ் மீது அதிக கோபத்துடனேயே காணப்பட்டனர்.

இந்தக் கோபத்தின் ஒரு அங்கமாக பொலிஸ் விசேட அதிரடிப்படை ஒன்றியத்துக்கும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவிற்கும் அதிக பணச்செலவில் கொண்டாடப்படவிருக்கும் பிறந்தநாள் விழாவொன்று பற்றி புலனாய்வு தகவல் கிடைக்கப்பெற்றிருந்தது.

மதூஷ் தனது கறுப்பு பணம் மூலம் கோடிக் கணக்கான ரூபா செலவில் தனது பிள்ளையின் பிறந்தநாளை கொண்டாட வேண்டி டுபாயிலுள்ள 6 நட்சத்திர ஹோட்டலொன்றை பதிவு செய்திருக்கிறான் எனும் தகவலே கிடைக்கப்பெற்றிருந்தது.

இந்த விழாவுக்கு மதூஷ் தயாரானது தனது இரண்டாவது மனைவியின் ஆண் பிள்ளையின் 4 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடுவதற்காகும்.

இவள் ஹெரோயின் வியாபாரியான மஹரகம கலுதுஷாரவுடனேயே முதல் திருமணம் செய்துக்கொண்டிருந்தாள் . அந்த திருமணத்திலும் அவளுக்கு குழந்தைகள் இருக்கின்றன. இவன் மதூஷின் நண்பனாவான். 2012 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தின் போது இறந்துபோனான்.

பின்னர் கலுதுஷாரவின் மனைவியான திலினியை பார்த்துக்கொண்டது மதூஷே. மதூஷின் முதல் மனைவி இன்னும் மாகந்துர பிரதேசத்தில் உள்ள அவளின் வீட்டிலேயே இருக்கின்றாள்.

அவள் மாத்தறை வைத்தியசாலையில் சேவை புரிந்த ஒருவராவாள். மதூஷ் இங்கிருந்து தப்பிச்சென்ற 2015 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதிவரை திலினி மற்றும் மதூஷவுக்கிடையில் நீண்ட நாள் தொடர்பு இருந்து வந்துள்ளது.

2017 மே மாதம் பிலியந்தலைப் பிரதேசத்தில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் நியோமால் ரங்கஜீவ உள்ளிட்ட குழுவினரை இலக்கு வைத்து மதூஷின் கட்டளைக்கிணங்க துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சம்பவம் திலினியின் கூற்றுப்படியே நடந்தேறியது.

இந்தச் சம்பவம் இடம்பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முன்னரே மதூஷ் திலினியை டுபாய்க்கு வரவழைத்துக்கொண்டான் .

அங்கு வைத்தே மதூஷிடம் தனது கணவர் கொலை செய்யப்பட காரணமான நியோமால் ரங்கஜீவவை கொலை செய்ய வேண்டுமென கட்டளையிட்டாள்.

இந்தத் தடவையும் திலினியின் வேண்டுகோளுக்கிணங்கவே 6 நட்சத்திர ஹோட்டலில் தனது மகனின் பிறந்தநாளை கொண்டாட நடவடிக்கை மேற்கொண்டான்.

இந்த விழாவில் பாடல் பாடும் பொருட்டு பிரசித்த பாடகரான அமல் பெரேரா மற்றும் அவரது மகனான இளவயதுப் பாடகர் நதீமால் பெரேரா என்போர் மதூஷவால் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த விழாவுக்கு இவர்களைப் போன்றே பிரசித்தமான நடிகரான ரயன் வென்ரொயனும் மதூஷவால் அழைக்கப்பட்டிருந்தார்.

இந்த நடிகர் பிரசித்திப்பெற்றது தெவனி இனிம நாடகத்தில் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் பாத்திரத்துக்கு லயனல் சந்துன் என்ற பெயரில் உயிரூட்டியதன் மூலமேயாகும்.

பிறந்தாள் விழாவுக்கு தினமொன்றை ஒதுக்கிக் கொண்ட மதூஷ் இரு பாடகர்களுக்கும் நடிகருக்கும் விமான பயணச்சீட்டை அனுப்பிவைத்தான்.

நம்நாட்டு சுதந்திரத் தினமான கடந்த 4 ஆம் திகதி இரவு டுபாயிலுள்ள ஆறு நட்சத்திர ஹோட்டலுக்கு மதூஷவால் அழைக்கப்பட்ட 25 பேர் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு ஒன்று கூடியிருந்தனர்.

மதூஷவின் அழைப்பிதழ் கிடைக்கப்பெற்றவர்களில் இரு பொலிஸார் மூன்று சிறைச்சாலை அதிகாரிகள் இரு பிரதேச அரசியல்வாதிகளும் அடங்கியிருந்ததாக அங்கிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களில் கூறப்படுகிறது.

மேலும் இவர்களுள் ஒருவர் இராஜதந்திர கடவுச்சீட்டை வைத்திருப்பவர் என்பதும் விசேட அம்சமாகும். கூடியிருந்தோர் பிறந்தநாள் பாடல் பாட மதூஷவின் மகன் பிறந்தநாள் கேக்கை வெட்டினான்.

அவனுக்காகவே மிகவும் உயர்ந்த விலையில் இந்த கேக் தயாரிக்கப்பட்டிருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் அமல் மற்றும் நதீமாலின் இன்னிசை நிகழ்ச்சியையும் வருகைத் தந்தோர் கண்டுகளித்தனர்.

தனது நண்பர்களுக்கு பகிர்ந்தளிக்கவென 20 கிராம் கொக்கெய்ன் , ஹெரோயின் மற்றும் ஒரு தொகை கஞ்சாவை மதூஷ் கொண்டுவந்திருந்தான். இந்த விழாவுக்கு அழைக்கப்பட்டவர்களில் கம்புறுபிட்டிய பிரதேச மீன் வியாபாரியொருவர் , அதே பிரதேசத்தைச் சேர்ந்த வாகன விநியோக வியாபாரியொருவர் மற்றும் அப்பிரதேச சபை தொழிலாளர்கள் இருந்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் சிறையதிகாரிகள் மூவரில் ஒருவர் கம்புறுபிட்டியைச் சேர்ந்தவராவார். அவர் விளக்கமறியலில் புலனாய்வுப் பிரிவில் சேவை செய்துகொண்டிருந்த போது சேவையிலிருந்து நீக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது ஆகும்.

அவர் இறுதியாக களுத்துறை விளக்கமறியலிலேயே சேவை செய்துள்ளார். அவர் இதுவரை வாகன விபத்தொன்றின் காரணமாக காயமடைந்து ஊன்றுகோல் உதவியுடனேயே வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மதுபான போத்தல்கள் , போதைப்பொருள் பாவனை என்பவற்றோடு பிறந்தநாள் கொண்டாட்டம் வெற்றிகரமாகவே கொண்டாடப்பட்டது.

இந்த சந்தர்ப்பத்தில் பொலிஸ் உளவாளி ஒருவர் அந்த ஹோட்டலுக்குள் உளவு பார்க்கும் பொருட்டு ஈடுபட்டிருந்தார். பிறந்தநாள் விழா கொண்டாட்டம் நள்ளிரவு 12 மணிக்கு பின்னரே உச்சம் தொட்டது.

கிட்டார் இசையோடு சேர்ந்து எல்லோரும் ஆடிப்பாடி மகிழ்ந்தனர். இந்த சந்தர்ப்பத்தில் பாதாளத் தலைவன் சமயங்கை கொலை செய்த சம்பவத்தின் பிரதான சந்தேக நபரான அங்கொட லொக்கா சிகரெட் புகைப்பதற்காக ஹோட்டலுக்குள் இருந்து வெளியே வந்தான்.

சிகரெட்டை புகைத்துக்கொண்டு அங்கொட லொக்கா சற்று தூரம் முன்னுக்குச் செல்லும் போது டுபாய் இரகசியப் பொலிஸ் அதிகாரிகள் ஆறு நட்சத்திர ஹோட்டலில் விழா இடம்பெற்ற பகுதியை சுற்றிவளைத்தனர்.

அங்கொட லொக்கா உள்ளிட்ட விழாவில் பங்குபற்றியிருந்த மதூஷ் அடங்கிய அனைவரையும் பொலிஸ் கைது செய்தனர் . அதுமட்டுமன்றி அவர்களிடம் காணப்பட்ட போதைப்பொருளையும் கைப்பற்றியர்.

மதூஷ் உள்ளிட்ட அவனின் நெருங்கியவர்களை முழங்காலிடச் செய்த டுபாய் இரகசியப் பொலிஸார் எல்லோரையும் தீவிரமாக சோதனை செய்தனர்.

அதில் மதூஷிடம் காணப்பட்ட விமான கடவுச்சீட்டு போலியானது என அம்பலமாகியது. மேலதிக விசாரணைகளுக்காக இவர்கள் டுபாய் அல் ரபா பொலிஸாரிடம் ஒப்படைக்க அந்நாட்டு இரகசியப் பொலிஸார் தீர்மானித்தனர்.

இவர்கள் கொக்கெய்ன் , ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருட்களை பாவித்திருந்தனரா என்பதை பரிசோதிக்கவென அவர்களின் இரத்த மாதிரிகளைப் பெறஅந்நாட்டு பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டனர்.

போதைப்பொருட்களை உடைமையில் வைத்திருப்பது மற்றும் அவற்றை நுகர்வது அந்நாட்டு சட்டத்திற்கேற்ப கடும் தண்டனை வழங்கப்படக் கூடிய குற்றங்களாகும்.

எப்படியிருப்பினும் இரத்த மாதிரிகள் பரிசோதனை அறிக்கை கிடைப்பதற்கு தாமதங்கள் ஏற்பட்டன. மதூஷை சுற்றிவளைக்கவென மேற்கொள்ளப்பட்ட திட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது பொலிஸ் விசேட அதிரடிப்படையின் நிறைவேற்று அதிகாரியான பொலிஸ் மா அதிபர் எம்.ஆர். லதீப் ஆவார்.

அவர் தனது பதவியிலிருந்து விலகிய கடந்த 5 ஆம் திகதியே மதூஷை சுற்றிவளைக்க முடியுமாகிப்போனமை அவரின் கடமை நாட்களில் அவர் செய்த விசேட வேலைத்திட்டமாகக் கருதப்படுகிறது.

09 ஆம் பக்கம் பார்க்க....

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்.மாநகரரை கட்டியெழுப்பாமல் துரையப்பாவின் பெயரை நீக்குவதால் என்ன நன்மைகள் ஏற்படும்?

**அமெரிக்காவிலிருந்து எம்.ரூபன்**



வடக்கு, கிழக்கில் யுத்தம் இடம்பெற்ற நகரங்களில் மிகவும் மோசமான அழிவுகளை சந்தித்தது யாழ்.நகரமே. இங்குள்ள ஒல்லாந்தர் கோட்டையில் இராணுவ முகாம் இயங்கியதால் அங்கிருந்து ஏவப்பட்ட எறிகணைகள் நகரின் பல இடங்களில் விழுந்து வெடித்த பல சம்பவங்களை இன்றும் அந்த மக்கள் மறந்துவிடமுடியாது.இதனால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள்,படுகாயங்கள்,சொத்து அழிவுகள் சொல்ல முடியாதவை.அதுமட்டுமன்றி கோட்டையை சூழவுள்ள பகுதிகளில் போராளிகளின் இருப்பிடங்கள் எனக்கூறி நடாத்தப்பட்ட வான் தாக்குதல்களால் ஏற்பட்ட அழிவுகள் வேறு. இன்றும் சேதமடைந்துள்ள கட்டங்களை காணலாம்.1991 செப்டம்பர் கோட்டையை விட்டு இராணுவம் வெளியேறி,மண்டைதீவு முகாமில் இயங்கியபோதும் நகரின் கரையோரப்பகுதிகளை நோக்கி 1995 வரை தாக்குதல்களை மேற்கொண்டனர். இதிலும் பல அழிவுகள்.

1996 படையினர் யாழ்.நகரை கைப்பற்றிய பின்னர், இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியேறியதும் யாழ்.மாநகர சபைக்கான தேர்தல் சந்திரிகா அரசால் பலத்த பாதுகாப்புடன் நடாத்தப்பட்டு, தமிழர் விடுதலைக்கூட்டணியின் மேயர் திருமதி சரோஜினி யோகேஸ்வரன் தெரிவானார். சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக மாநகரின் நிர்வாகம் உட்பட சகல பணிகளும் யுத்த சூழலால் பாதிக்கப்பட்டிருந்தன.யாழ்.மாநகரை மீளக்கட்டி எழுப்புவதே என் பணி அதற்காக தான் பாடுபடுவேன் என்றும்,ஏனைய உறுப்பினர்கள் கட்சி அரசியல் பாராது ஒத்துழைக்குமாறும் அவர் பதவி ஏற்ற பின்னர் தெரிவித்தார்.

யுத்தத்தால் சேதமான கழிவு வாய்க்கால்களால் நிலவும் சுகாதார சீர்கேட்டால் காணப்படும் நுளம்பு பெருக்கத்தை ஒழிக்க முதல் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தையும் அவர் மிக முக்கியமாக வலியுறுத்தியதுடன் யாழ்.மாநகரசபையை மீண்டும் பழைய இடத்தில் சுப்பிரமணியம் பூங்காவுக்கு அருகில் இயங்க வைக்கவேண்டும் எனவும் கூறியிருந்தார். அவரின் மறைவுக்கு பின்னர் வந்த மேயர்களும் யாழ்.மாநகர பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு வன்னி யுத்த சூழல் தடையாகிவிட்டது எனக்கூறலாம். ஆனால் இன்று நிலைமை வழமைக்கு திரும்பி,ஏ 9 பாதையும் திறக்கப்பட்டுவிட்டது.

யுத்தம் முடிந்த பின்னர் நல்லாட்சி ஆட்சியில் யாழ்.மாநகர சபைத்தேர்தல் நடைபெற்றது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பிடம் மாநகர சபையின் ஆட்சி வந்துள்ளது. தேர்தல் பிரசாரத்தின்போது நகரில் பல அபிவிருத்தி பணிகளை செய்வதாக பல்வேறு வாக்குறுதிகளை அள்ளி வீசினர். ஆனால்,பதவி ஏற்றபின் தமிழ்க்காங்கரஸ் உறுப்பினர் மணிவண்ணன்,ஈ.பி.டி.பி உறுப்பினர் குகேந்திரன் ஆகியோரை சபையில் இருந்து நீக்க நீதிமன்றம் வரையும் சென்ற சம்பவங்கள். கட்சி பேதமின்றி மாநகரை கட்டி எழுப்ப வேண்டும். விட்டுக்கொடுப்பு, புரிந்துணர்வு,பண்பாடு இவற்றை கடைப்பிடித்து செயற்பட்டால் பல முன்னேற்றங்களை காணலாம் என பல சமூக அமைப்புகள் கூறிவருகின்றன.

### ஆளுநரிடம் மாநகரசபையின் ஊழல் குறித்து புகார்

வடமாகாண புதிய ஆளுநரிடம் ஈழமக்கள் ஜனநாய கட்சியினர் மாநகர சபையின் ஊழல் குறித்து நேரில் புகார் தெரிவித்துள்ளனர். அதைவிட, முதல்வர் (மேயர்) வெளிநாடு செல்ல 2 கோடி ரூபா ஒதுக்கல்,போன்ற பல விடயங்கள் ஊடகங்களில் வருகின்றன. எத்தனையோ பணிகளை செய்ய வேண்டியவர் கள் இன்று ஏதோ எல்லாம் செய்வதாக நகர வாழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். உதாரணமாக,திலீபன் நினைவு இடத்துக்கு வேலி அமைக்க நிதி ஒதுக்கீடு. இவை எல்லாம் இன்று தேவையா.சிலரின் உயரிழப்புக்கு காரணமான 'கேபிள்' பிரச்சினையை நீதிமன்றம் வரையும் சென்று தடுத்ததற்கு முதலில் மேயரை மக்கள் பாராட்டுகின்றனர். இப்படியான பல வேலைகளை செய்ய வேண்டும் என மக்கள் கூறுகின்றனர்.

### 'துரோகி' என்ற பெயரை அறிமுகம் செய்தவர்கள் தமிழரசு கட்சியினர்

தமிழ்க்காங்கிரஸில் இருந்து செல்வநாயகம்,வன்னியசிங்கம் பொன்றவர்கள் வெளியேறிய பின்னர் தமிழரசுக்கட்சியை ஆரம்பித்தபோது, தமழ்க்காங்கிரஸின் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தை முதலில் 'துரோகி'என்றார்கள். பிரதமர் டீ.எஸ்.சேனநாயக்கா அரசில் பொன்னம்பலம் அமைச்சரானதும், அவர் தமிழரைக்காட்டிக்கொடுத்துவிட்டார், உரிமைகளை கைவிட்டுவிட்டு, அபிவிருத்தியை நாடி நிற்கிறார், அதனால் அவர் தமிழனத்தின்'துரோகி'என்று கூறினார்கள்.'துரோகி' என்றால் ஒருவர்,அல்லது இருவருடன் நண்பனானவன், அவர்களின் எதிரியிடன் சேர்ந்துகொள்வதே அதன் சரியான கருத்து. ஆனால், இன்று 'துரோகி' எனப்படுபவர்கள் யார்.யார் என்பதை கண்டுபிடிக்கமுடியவில்லை.அன்று பொன்னம்பலம் செய்ததையே இன்று தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரும் செய்கின்றனர்.பிரதமரை,அமைச்சர்களை வரவேற்பது,அபிவிருத்தியை செய்வது.

### சுதந்திரக்கட்சியின் அமைச்சர் குமாரசூரியர் 'துரோகி'

1970 ஆம் ஆண்டு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசில் தபால்,தந்தி தொடர்புகள் அமைச்சராக பொறியலாளரான செல்லையா குமாரசூரியர் நியமிக்கப்பட்டார். இதனால்,வடக்கே வருகின்ற அமைச்சர்களுக்கு கறுப்புக்கொடி எதிர்ப்பை தமிழரசார் காட்ட தடைகளாகிவிட்டன. அதன் காரணமாக அவரையும் தமிழினத்தின் 'துரோகி', என்றும்,வடக்கே அபிவிருத்தி என்ற பெயரில் எமது உரிமைகளை பெறுவதற்கு இவர் தடையாக உள்ளார் என்றனர்.

1970 பொதுத்தேர்தலில் நல்லூர் தொகுதியில் தமிழ்க்காங்கிரஸ் கட்சியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற சீ.அருளம்பலம் யாழ்.மாவட்ட அரசியல் அதிகாரியாக சிறிமாவோ அரசால் நியமிக்கப்பட்டார்.நல்லூர் தொகுதியின் தமிழரசு எம்.பியான டாக்டர் ஈ.எம.வி.நாகநாதன் படுதோல்வி. இதுவும் தமிழரசு கட்சிக்கு அருளம்பலம் மீது கோபம். அத்துடன் அருளம்பலம் வடக்கே வரும் அன்றைய அமைச்சர்களை வரவேற்றதுடன்,அபிவிருத்தி கூட்டங்களிலும் நிகழ்வுகளிலும் கலந்துகொண்டார்.அதனால் அவரையும் தமிழினத்தின் 'துரோகி' என்றனர்.அதேபோலவே மட்டக்கப்பு இரண்டாவது எம்.பியான இராஜன் செல்வநாயகம் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.அவர் சுயேச்சையாக போட்டியிட்டவர். அவரும் 'துரோகி'.

### யாழ் மாநகர மேயர் அல்பிறட் துரையப்பா 'துரோகி'

இதேவேளை வடக்கில் சுதந்திரக்கட்சி கிளைகளும் திறக்கப்பட்டு,அமைப்பாளர்களும் நியமிக்கப்பட்டனர்.வேலைவாய்ப்பு மற்றும் பல தேவைகளுக்கு மக்கள் சுதந்திரக்கட்சி அலுவலகங்களை நாடினார்கள்.இந்த அமைப்பாளர்களையும் தமிழரசுக்கட்சியிறனர் 'துரோகிகள்' என்றனர். இந்த பின்னணியில்தான் யாழ்.மாநகர மேயர் அல்பிறட் தங்கராஜா துரையப்பா சுதந்திரக்கட்சி அமைப்பாளராக நியமிக்கப்பட்டார்.பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா யாழ்.வந்தபோது தமிழரசார் எதிர்க்க துரையப்பா வரவேற்றார்.அவருக்கு செல்வாக்கும் அதிகரித்தது. இதனால் அவரும் 'துரோகி'யானார்.

துரையப்பாவை பாராட்டிய தமிழரசுக்கட்சி

1960 பங்குனி,ஆடி மாதங்களில் இடம்பெற்ற பொதுத்தேர்தல்களில் யாழ்ப்பாணம் தொகுதியில் சுயேச்சையாக போட்டியிட்டு துரையப்பா வெற்றிபெற்தால், அவரை தமிழரசு கட்சியினர் பாராட்டினார்கள்.ஏனெனில்.ஜீ.ஜீ.பொன்னம்பலத்தை தோற்கடித்துவிட்டதால்.தமிழரசாருக்கு பொன்னம்பலம் வரக்கூடாது என்பது கொள்கை.பாராளுமன்றத்திலும் துரையப்பாவை பல சிங்கள தலைவர்கள் ஆச்சரியத்துடன் பார்த்து பாராட்டினர்.'பொன்னம்பலத்தைவெற்றிகொண்ட இளைஞன்', என்றனர்.

தமிழரசின் சத்தியாக்கிரகப்போராட்டம் யாழ்.கச்சேரி முன்பாக இடம்பெற்றபோது துரையப்பா அதில் பங்குபற்றாவிட்டாலும்,தனது ஆதரவாளர்களுடன் அங்கு சென்று தொண்டர்களுடன் உரையாடி ஆறுதல் கூறியிருந்தார்.தமிழரசு எம்.பிமார் கைதாகி பனாகொட இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததையும் கண்டித்தவர். அவர்களை விடுதலை செய்யுமாறும் அரசிடம் கோரிக்கை விடுத்தவர்.அப்போது அவர் சுதந்திரக் கட்சியில் இணையாமல் சுயேச்சையாகவே செயற்பட்டார். யாழ்.நகரை அபிவிருத்தி செய்ய அயராது உழைத்தார். இன்றும் அவருக்கு யாழ்ப்பாணத்தில் ஒரு மதிப்பும்,மரியாதையும் உள்ளது.

### யாழ்.விளையாட்டரங்கின் பெயரை மாற்றலாமா

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கின் பெயரை, 'துரையப்பாவின்' பெயரை நீக்கிவிட்டு,யாழ்.விளையாட்டரங்கு என்று மாற்றுமாறு மாநகர சபையின் பிரதி மேயர் ஈசன் கோரிக்கை விடுத்துள்ளார். தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் ரெலோ சார்பில் போட்டியிட்டு தெரிவானவர். இந்த விளையாட்டரங்கை முன்பு பொலிஸ் மைதானம், கோட்டை மைதானம் என்றே அழைப்பர். பல்வேறு விளையாட்டு போட்டிகள்,வைபவங்கள்,பல அரசியல் கட்சிகளின் கூட்டங்கள், வண்டில் சவாரிகள் என பல இங்குதான் நடைபெற்று வந்தன.1974 இல் இதனை மேயர் துரையப்பா,பொலிசாரிடம் இருந்து பெற்று யாழ்.நகரின் விளையாட்டரங்காக மாற்றினார்.அதன் பின் அவரின் பெயரும் சூட்டப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் ஒரு விளையாட்டரங்கை ஏற்படுத்துமாறு முதலில் யாழ்.எம்.பியான ஜீ.ஜீ.பொன்னம்பலம் அன்றைய ஐ.தே.க.

14 ஆம் பக்கம் பார்க்க....





எந்நாளும் உறுதியான பாதுகாப்பு !

நாடு முழுவதும் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் மக்கள் வங்கியின் சுயவங்கிச்சேவை பிரிவு (Self Banking Unit) புதிய தொழில்நுட்பம் மற்றும் தொடர் பரிசோதனை ஆகியவற்றினை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக அதிகூடிய நம்பிக்கை மற்றும் பாதுகாப்பை கொண்டிருக்கிறது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மீண்டுமொருமுறை ISO/IEC 27001:2013 தரச்சான்றிதழ் பெற்றுக்கொண்ட முதலாவது ஒரேயொரு அரச வங்கி மக்கள் வங்கியென பிரசித்திபெற்றது நம்பிக்கை மற்றும் ரகசியத்தன்மை ஆகியவற்றை முறையாக கைக்கொள்வதனாலேயாகும்.

நீங்களும் மக்கள் வங்கியின் சுயவங்கிச்சேவையுடன் (SBU) இணைந்து இலகுவான சுதந்திர சேவையை அனுபவியுங்கள்.

PEOPLE'S BANK
The Bank of the People

1961 PEOPLE'S BANK CALL CENTRE
www.peoplesbank.lk
AA+ (lka) Fitch Rating, AA Brand Finance Rating

# ஆபத்தின் விளிம்பில் தமிழர் சமூகம்

நாட்டில் ஏற்படுகின்ற ஆட்சி மாற்றத்தின் பயனாக எவ்வித நன்மைகளுமின்றி தொடர்ந்து பேரினவாதக் கெடுபிடிகளுக்குள் சிக்குண்டு தவிக்கும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள், தங்களது காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை தேடி அலைந்து, இறுதியில் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை கண்டுபிடியுங்கள் அவர்களைப் பற்றி எங்களுக்கு அறியத்தாருங்கள் என்பவற்றை வலியுத்தி பாரிய உண்ணாவிரத போராட்டத்தை கடந்த வருடங்கள் முதலாக அண்மைக்காலங்கள் வரை வட கிழக்குப் பிரதேசங்களில் மேற்கொண்டு வருகின்றனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் வெளிநாடு சென்றிருப்பார்கள் அல்லது இறந்திருப்பார்கள் என கடந்த வருடத்தில் நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட கருத்தானது, பாதிக்கப்பட்ட உறவுகளை இழந்த எமது மக்களை மிகவும் வேதனைக்கு உள்ளாக்கி இருந்தது. இது இன்றுவரையிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேதனையையே அழித்துக் கொண்டிருக்கின்றது. இது ஒரு நாட்டின் பிரதமர் கூறக்கூடிய கருத்து அல்ல எனவும் பல்வேறு சர்ச்சைகள் மேற்கிளம்பியுள்ளன. பிரதமர் இந்த நாட்டு மக்கள் அனைவரையும் நேசிக்க வேண்டும். பிரதமரின் இந்த கருத்து நாட்டில் நல்லாட்சி நடைபெறுகிறதா? வெளிநாடுகளுக்கு சென்றிருப்பார்கள் என்றால் பிரதமரா அனுப்பி வைத்தார்? என்ற கேள்விகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது என தமிழ் மக்கள் உட்பட தமிழ்த் தலைமைகள் தெரிவித்து வருகின்றனர்.

இவ்வாறான கருத்துக்கள் அரசிடம் இருந்து வீசப்பட்ட நிலையில்தான் உண்ணாவிரதமாக கூடியிருந்தவர்கள் தாம் முறையாக ஏமாற்றப்பட்டதை உணர்ந்தார்கள். பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த போராட்டம். தோல்வி அடைந்த மனநிலையுடனும், முடிவுக்கு வந்து ஏமாற்றப்பட்ட உணர்வுடனும் அங்கிருந்த பாதிக்கப்பட்ட மக்கள் கூட்டம் மெல்ல நகர்ந்தமை நாம் அறிந்த ஒரு விடயமே. ஆனால் தங்களின் வீதிப் போராட்டங்களால் தான் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கலாம் என்ற நம்பிக்கையில் இன்றுவரையும் போராடிவருகின்றனர்.

யுத்தத்திற்கு பின்னர் பாதிக்கப்பட்டவர்களுக்காக, பாதிக்கப்பட்டவர்கள் மாத்திரம் போராடி வந்த நிலை மாறி பாதிக்கப்பட்டவர்களுக்காக பொதுமக்கள் போராடும் சந்தர்ப்பத்தை தடுத்து நிறுத்தி இனியொரு போராட்டத்திற்கு யாரையும் வர வேண்டாம் என அவர்களது நடவடிக்கைகள். அமைந்திருந்ததாக அரசியல் ஆய்வாளர்கள் கூறி வருகின்றனர். இதில் குறிப்பிடப்பட வேண்டிய விடயம் என்னவெனில் நல்லாட்சி அரியணை ஏறிய நாள் தொடக்கம் அரசியல் கைதிகளை சிறையில் இருந்து மீட்போம், காணாமல் போனவர்

> **மக்கள் அநீதிக்குள்ளாக்கப்படும் போது, அவர்களின் குரல் ஓங்கி நிற்கும் போது நாட்டு மக்களை காக்கும் அரசியல்வாதிகள் எனப்படுவோர் தமது பதவிகளை தக்கவைத்துக் கொள்ளும் நோக்கிலேயே காலத்தை மிகச் சாமர்த்தியமாக நகர்த்துகின்றனர். இதுவே இன்றைய இலங்கையின் அரசியல்வாதிகளில் கணிசமானோரின் நடவடிக்கையாக அமைந்துள்ளது. இதனால் சில அரசியல்வாதிகள் மக்களது பிரச்சினைகள் தமக்கு எவ்வித இலாபத்தையும் பெற்றுத் தராமையால், அவர்களைப் புறந்தள்ளி செயற்படுகின்றனர்**

களை கண்டுபிடித்து தருவோம், நிரந்தரத் தீர்வை பெற்றுத் தருவோம், இனங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தை பேணுவோம் என வீர வசனம் கூறி வாக்குகளை பெற்று, அதன் பயனாக இன்று எதிர்கட்சி தலைவர் உள்ளிட்ட பல பாரை ஆளுகின்ற பதவிகளை அனுபவிப்போர் இதை கண்டு கொள்ளவே இல்லை என்பதே ஆகும்.

அந்தவகையில் மக்கள் அநீதிக்குள்ளாக்கப்படும்போது, அவர்களின் குரல் ஓங்கி நிற்கும் போது நாட்டு மக்களை காக்கும் அரசியல்வாதிகள் எனப்படுவோர் தமது பதவிகளை தக்கவைத்துக் கொள்ளும் நோக்கிலேயே காலத்தை மிகச் சாமர்த்தியமாக நகர்த்துகின்றனர். இதுவே இன்றைய இலங்கையின் அரசியல்வாதிகளில் கணிசமானோரின் நடவடிக்கையாக அமைந்துள்ளது. மக்களது பிரச்சினைகள் தமக்கு எவ்வித இலாபத்தையும் பெற்றுத் தராமையால், இதனை புறந்தள்ளி செயற்படுகின்றனர். ஆனால் தேர்தல் காலங்களில் மாத்திரம் மக்களை கடவுளாக எண்ணி நினைத்த வரத்தை பொய்யான வாக்குறுதிகளை வழங்கி பெற்றுக்கொள்வதில் தமது சாமர்த்தியத்தை வெளிப்படுத்துகின்றனர். அவர்களின் போலியான பகட்டான வாக்குறுதிகளை நம்பி மக்களும் ஏமாந்த வரலாறுகளே அதிகம். இதனை இன்று வடக்கு கிழக்கு மற்றும் மலையகம் போன்ற பகுதிகளில் இடம்பெற்று வரும் போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் முதலியவை எடுத்தியம்புகின்றன.

**சரணியா சுப்ரமணியம்**

இதுபோன்ற நிகழ்வுகள் நமது கண்முன் நமது நாட்டிலேயே இடம்பெற்றுவருகின்ற வேளையில், தமது இனம் சாராத வெளிநாட்டில் நடக்கும் நிகழ்வு போன்று அதனை நினைத்தே இவர்கள் பாராமுகமாக இருந்தனர் என்று வேதனை கலந்து கேலி பண்ணத் தோன்றுகின்றது. இதுமாத்திரமின்றி இதற்கு முன்னரும் தமிழ் மக்களின் தலைவர் , எதிர்க்கட்சித் தலைவர் என தற்போது பெருமையாகக் கூறிக்கொள்ளும் இரா.சம்பந்தன் தமிழ் மக்களின் முள்ளிவாய்க்கால் நினைவு நாள், மாவீரர் தினம், எழுகதமிழ் போன்ற நிகழ்வுகளுடன் இணைந்த இவ்வாறான தமிழர் போராட்டங்களையும் கண்டுகொள்வதில்லை என்பதும் மக்கள் மத்தியில் பாரிய சந்தேகங்களையும் அத்துடன் இவ்விடத்தில் தமிழ் மக்களின் தலைவர் என்பதை மறந்து செயற்படுகின்றாரா என்று கேட்கத் தோன்றுகின்றது.

அவர்; தமிழ் மக்கள் கூட்டிணைந்த நினைவு நாள், எழுச்சிகள், போராட்டங்கள் போன்று எந்த நிகழ்விற்கும் பங்கெடுத்து கொள்ளாதவர் என்றால் அதனை கேட்பதில் அர்த்தமில்லை. ஆனால் பல்வேறு அரச திறப்பு விழாக்களிலும் அரச தலைவர்கள் பங்குபற்றும் நிகழ்வுகளில் மட்டும் கலந்து சிறப்பிப்பதுமே வியத்தகு விந்தையாய் கேள்விகளை தொடுத்து நிற்கின்றது. இந்த போராட்டத்தை ஒழுங்கு படுத்தியவர்கள் கடும் விமர்சனத்துக்குரியவர்கள் என்ற விமர்சனம் கூறப்பட்டபோதிலும் நோக்கம் நல்லதாக இருந்ததனால் இவர்களால் நேரடியாக பாதிக்கப்பட்டவர்கள் கூட அவற்றை மறந்து இந்த போராட்டங்களில் தங்களையும் இணைத்துக் கொண்டு செல்கின்றமை மக்கள் தெளிவடைந்துள்ளார்கள் என்பதை காட்டுவதாக அரசியல் விற்பனர்கள் கூறிவருகின்றனர்.

எது எப்படி இருப்பினும் காலம் காலமாக தமிழ் மக்களின் உணர்வுகளை கொச்சைப்படுத்தி நாடகமாடுபவர்களை இனங்கண்டு அதற்கேற்றாற்போல் நடப்பதே அடுத்த தலைமுறையை சரியான பாதையில் இட்டுச் செல்லும் என்பதையே மீண்டுமொருமுறை தமிழ் சமூகம் போராட்டங்களால் உணர்த்தி வருகின்;றது. தமிழர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ள இந்நிலையில் மட்டக்களப்பைச் சேர்ந்த பார் ஆளுகின்ற உறுப்பினர்களின் ஆசைப்பிரவேசங்களும் அதிகார மோகமும் தலைக்கேறி செயற்படுவதால் மட்டு மண் பிறிதோர் இனம் சூறையாடும் நிலைக்கு தள்ளப்பட்டு வருகின்றமை மற்றுமொரு பாரிய பிரச்சினையாக காணப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தை பொறுத்தமட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்று தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் முஸ்லிம்களில் மூன்றுமாக உள்ளனர். அதில் இரண்டு பேர் அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர்களாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் பதவி வகிக்கின்றனர். 75 வீதம் தமிழினத்தோர் நில ஆளுமை கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் 25 வீத இஸ்லாமியர்களின் ஆதிக்கத்தால் மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் நிலம் பறிபோகும் ஆபத்து உள்ளது. இது பிரதான ஆட்சி அதிகாரத்தில் உள்ள தமிழ்த் தலைமைகளுக்கு விளங்குமா என்பது புரியாது. ஆவர்கள் தான் உண்டு என் அதிகாரம் இழக்கப்படாமல் இருந்தால் போதும் என்ற மனோநிலையில் மக்கள் பிரதிநிதிகள் என்பதை மறந்து செயற்பட்டு வருவதாகவே புத்திஜீவிகள் உட்பட மக்கள் கவலை வெளியிட்டு வருகின்றனர்.

நமது கூட்டமைப்பால் தெரிவான மூன்று உறுப்பினர்களும் ஒருமித்து முடிவு எடுக்க முடியாதவர்களாக திண்டாடுகின்றனர். அவர்களுக்குள்ளே நான் தான் கல்விமான் புத்திஜீவி, கூடிய விருப்பு நானே பெற்றவன் எனவே இவற்றுக்கு பொருத்தமானவன் நான், அவர் இல்லை நானே சீனியர் பெரியவர், அரசியல் அனுபவம் பெற்றவன் என மற்றவரும் தமக்குள்ளே பதவிக்காக சண்டை போட்டு வருகின்றனர். இதனால் பல்வேறு சலுகைகளையும் அபிவிருத்திகளையும் இழந்து நிற்பது மக்கள் என்பதை உணரத் தவறுகின்றனர். மூன்று பேரும் இணைந்து ஒருவரைக் தெரிவு செய்யக் கூடிய பண்பு கூட இவர்கள் இடத்தில் காண முடியவில்லை. எவ்விடத்திலும் குரல் எழுப்பி பேசாமலேயே காரியத்தை சாதிக்கும் மக்கள் பிரதிநிதிகளாக பிற அரசியல் தலைவர்கள் இருப்பார்கள். இவர்கள் தங்களது பதவிக்காக சண்டை பிடித்து அரசியல் வாழ்வைக் கழிப்பார்கள் .மட்டக்களப்பு அரசியலின் எதிர்காலம் இப்படியே செல்கின்ற நிலையில் எமது தாத்தா பாட்டி பூட்டன் வாழ்ந்த எம்மண்ணையும் இழந்து நிற்கின்ற நிலை வெகு தொலைவில் இல்லை என்றே கூறவேண்டியுள்ளது.

# அடையாள அரசியலில் இலங்கை

டொனமூர் அரசியல் திட்டம் நடைமுறையிலிருந்தாலும் அவ்வரசியல் திட்டத்தின் போதாமைகள் குறித்தும் அது திருத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் இலங்கை அரசியல் தலைவர்களினால் தொடர்ச்சியாக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்தன. இக் கோரிக்கைகளினைத் தொடர்ந்து பிரித்தானிய அரசு ஒரு பிரகடனத்தை வெளியிட்டது. அப்பிரகடனம் போரை அடுத்து நடத்தப்படும் அரசியல் திட்டச் சீர்திருத்தப் பரீசீலனை அதிகாரத்தை இலங்கைக்கு முடியின் அரசாணையின் கீழ், முழுமையான பொறுப்பாட்சி அதிகாரத்தை வழங்கும் என்றும், அப்பொறுப்பாட்சியானது உள்ர் சிவில் நிர்வாக அதிகாரத்தைக் கொண்டிருக்கும் என்றும் குறிப்பிட்டது. இலங்கையின் பாதுகாப்பும் வெளிநாட்டு விவகாரங்களும் பிரித்தானிய அரசின் அதிகாரத்தின் கீழ், அதன் ஆலோசனைப்படி நடத்த ஒழுங்குகள் செய்யப்படும். இடைக்காலத்தில் மந்திரிமார் முழுமையான ஒரு அரசியல் திட்டத்துக்கான பிரேரணைகளை முன்வைக்கலாம். ஆனால் அத்தகைய அரசியல் திட்ட வரைவு மேற்சொன்ன பிரகடனத்தோடு ஒத்துப்போவதாக இருக்க வேண்டும். மேலும் அரசாங்க சபை அங்கத்தவர்களின் பங்கினரின் சம்மதத்தை அது பெற்றதாகவும் இருத்தல் வேண்டும் எனக் குறிப்பிட்டது. ( அம்பலவாணர் சிவராஜா)

இதற்கிணங்க மந்திரிமார் அரசியல் திட்ட நகல் ஒன்றை தயார் செய்து 1944ம் ஆண்டு பெப்ரவரியில் குடியேற்ற நாட்டு மந்திரிக்கு அனுப்பிவைத்தனர். பிரித்தானய அரசு அதே ஆண்டு டிசம்பரில் சோல்பரி பிரபுவைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவை இலங்கையின் யாப்புத் சீர்திருத்தத்துக்காக அனுப்பிவைத்தது. இக்குழுவினர் 1945ம் ஆண்டு வரை இலங்கையில் தங்கியிருந்து பல்வேறுபட்ட குழுக்களையும் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடி இலங்கைக்குப் பொருத்தமானதொரு யாப்பினை தயாரிக்கின்ற முயற்சியில் ஈடுபட்டனர்.

ஏற்கனவே டொனமூர் அரசியல் திட்டத்தில் இனவாரிப் பிரதிநிதித்துவம் கோரி தோல்வியடைந்த ஜி.ஜி.பொன்னம்பலம் போன்ற தலைவர்கள் இம்முறை அந்தக் கோரிக்கையின் தோல்வியினைப் படிப்பினையாகக் கொண்டு தமிழர்களுக்குரிய அரசியல் உரிமையினைப் பெற்றுக் கொடுப்பதற்கான வழிவகைகளை வகுத்திருக்க வேண்டும். ஆகக் குறைந்தது டொனமூர் அரசியல் திட்டத்தின் மூலம் சிறுபான்மையினரின் அரசியல் உரிமைகளை பெரும்பான்மையினர் எவ்வாறு உதாசீனப்படுத்தி செயற்பட்டார்கள் என்பதைப் பட்டியலிட்டு சிறுபான்மையினருக்கு பொருத்தமான எல்லோராலும் எற்றுக்கொள்ளக்கூடிய யதார்த்தபூர்வமான ஒரு அரசியல் திட்டத்தை முன்வைத்திருக்க வேண்டும்.

இதனை அவர்கள் மேற்கொள்ளாதமைக்குக் காரணம் சிங்களத் தலைவர்களால் சமயோசிதமாக வழங்கப்பட்ட சலுகைகளைப் பெற்று சுகபோகங்களை அனுபவித்துவித்தமையினால் குறைகளை எடுத்துக்காட்டுவதற்குரிய தார்மீகத்தினை இழந்திருந்தமையினாலாகும். இருந்த போதிலும் திரு.சின்னத்துரை அவர்களும் எம்.கணபதிப்பிள்ளை (யுடட ஊநலடழண யுடிழசபைடியெட ஐணட யடிவையவெள யுளளழஉயைவழைணஇ துய ககயெ) அவர்களும் தமிழ் பிரதேசத்துக்கு சம;டி அரசியல் அமைப்புமுறை வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்திருந்தனர். இவாகளுடைய இந்த தூரநோக்கிலான கோரிக்கையினை தமிழர்களிடத்தில் கதாநாயகத் தன்மைபெற்றிருந்த ஜி.ஜி.பொன்னம்பலம் போன்ற தலைவர்கள் பொருட்படுத்தாமல் அதிக பிரதிநிதித்துவத்தினைப் பெறுவதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளையும் பொருளாதார முன்னேற்றத்தினையும் அடையலாம் என தமிழ் மக்களை நம்பவைத்து 50:50 எனும் கோரிக்கையினை நடைமுறைச் சாத்தியமான கோரிக்கையாக பிரித்தானிய அரசிடம் முன்வைத்தனர்.

**கலாநிதி சு.சிவரெத்தினம்**

இக்கோரிக்கைக்கு மகாதேவா, செல்வநாயகம், நாகநாதன், போன்றவர்கள் பக்கபலமாக இருந்தனர். அத்துடன் மலேய முஸ்லீம் பிரதிநிதியான ரி.பி.ஜாயா, இந்திய தமிழ்ப் பிரதிநிதியான கே.நடேச ஐயர், இவர்களை விட பறங்கிய, ஐரோப்பியப் பிரதிநிதிகளும் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களுடைய கோரிக்கைக்கு ஆதரவினை வழங்கினர். ஆயினும் சிறுபான்மையினருக்கான 50 வீத பிரதிநிதித்துவத்தை விகிதாசார அடிப்படையில் முஸ்லீம்களுக்கு வழங்க மறுத்தமையினால் முஸ்லீம் லிக் தனது ஆதரவினை வழங்கவில்லை. மொத்த சனத்தொகையில் 75 வீதமாக இருக்கும் சிங்கள மக்களுக்கு 50 வீதமான பிரதிநிதித்துவத்தை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்த ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் சிறுபான்மையினருக்கான 50 வீதத்தில் மற்ற சிறுபான்மையினருக்கு விகிதாசார அடிப்படையில் வழங்க மறுத்திருப்பது அவருடைய அரசியல் நேர்மையீனத்தக்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டாகும்.

இருந்த போதும் அன்றைய முக்கிய சிங்களத் தலைவராயிருந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா அவர்கள் 50:50 கோரிக்கைக்குப் பதிலாக 60:40 என்ற பிரதிநிதித்துவம் தொடர்பாக பேசுவதற்கு முன்வந்த போதும் ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். அப்போது தேசாதிபதியாக இருந்த சேர்.அன்றூ கல்டிகொட் 50:50 கோரிக்கையினை ஏற்றுக்கொள்ளாதவராகவே இருந்தார்.

அ.மகாதேவா 50:50 கோரிக்கையினை ஆரம்பத்தில் ஆதரித்திருந்தபோதிலும் அக்கோரிக்கையின் நியாயப்பாடின்மையைப் புரிந்து கொண்டு 60:40 எனும் கொள்கையினை முன்னிறுத்திச் செயற்பட்டார்.

அப்போது சிங்கள மக்களின் முக்கிய தலைவராக இருந்த டி.எஸ். சேனநாயக்கா அவர்கள் சேர்.ஐவர் ஜெனிங்ஸ் அவர்களுடைய உதவியினைப் பெற்று மிகவும் புத்திசாலித்தனமாக செயற்பட்டார். சேர்.ஐவர் ஜெனிங்ஸ் பிரித்தானிய அரசியல் யாப்பில் ஆழ்ந்த அறிவும் புலமையும் பெற்றிருந்ததோடு பிரித்தானிய ஆட்சியாளர்களின் நம்பிக்கைக்குரியவருமாக இருந்தார். இவர் யுனிவசிற்றி கொலிஜ் அதிபராகவும் அதன் பின் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராகவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரிடமே டி.எஸ்.சேனநாயக்கா சிறுபான்மையினரின் உரிமைகளை உள்ளடக்கக்கூடிய வெஸ்ற்மினிஸ்ரர் பாராளுமன்ற முன்னுதாரணத்தினைப் பின்பற்றி அரசியல் யாப்பினை வரையும் பொறுப்பினை ஒப்படைத்திருந்தார். இவரால் வரையப்பட்ட திட்டம் 'மந்திரிகள் நகல் திட்டம்' என அழைக்கப்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் சோல்பரி ஆணைக்குழுவினரிடம் மூன்றுவிதமான அரசியல் திட்டங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

1. டி.எஸ். சேனநாயக்காவினுடைய முயற்சியினால் சேர்.ஐவர் ஜெனிங்ஸ் அவர்களினால் தயாரிக்கப்பட்ட 'மந்திரிகள் நகல் திட்டம்'

2. ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களைத் தலைவராகக் கொண்ட அவரால் அகில இலங்கை தமிழ் காங்கிரசினால் தயாரிக்கப்பட்ட 50:50 எனும் பிரதிநிதித்துவத்தினை அடிப்படையாகக் கொண்ட அரசியல் திட்டம்.

**பகுதி 12**

3. மகாதேவா குழுவினரால் தயாரிக்கப்பட்ட 60:40 எனும் பிரதிநிதித்துவத்தினை அடிப்படையாகக் கொண்ட அரசியல் திட்டம்.

சோல்பரி ஆணைக்குழுவினர் அகில இலங்கை தமிழ் காங்கிரசினால் தயாரிக்கப்பட்ட அரசியல் திட்டம் 12 வாக்குகளை மட்டுமே பெற்றிருந்ததால் அதனை நிராகரித்தனர். இது போன்றே மகாதேவா அவர்களினால் தயாரிக்கப்பட்ட திட்டத்தினையும் நிராகரித்தனர். சட்டசபையில் 2௴3 பெரும்பான்மையினைப் பெற்றிருந்த மந்திரிகள் நகல் திட்டத்தினை ஏற்று அதனை சீர்திருத்தி சமர்ப்பித்தனர்.

இதில் கவனிக்கத்தக்க விடயம் சிங்கள மகாசபையை ஆரம்பித்த எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்காவோ அல்லது தொழிற்சங்க வாதியாக இருந்து சிங்கள இனவாதம் பேசிய ஏ.ஈ.குணசிங்காவோ எந்தவிதமான அரசியல் திட்டங்களையும் தயாரிக்கவும் இல்லை. சோல்பரிக்குழுவினரை சந்திக்கவும் இல்லை. இது டி.எஸ்.சேனநாயக்காவுக்கு தகுந்த புறச் சூழ்நிலையினை வழங்கியிருந்தது என்பதேயாகும்.

ஆனால் தமிழர்கள் அகவயரீதியாகவும் புறவயரீதியாகவும் முரண்பட்ட சூழ்நிலைகளுடனேயே சோல்பரிக்குழுவினரை எதிர்கொண்டிருக்கின்றார்கள். இந்த முரண்பாடுகளுடன்தான் ஏற்றுக்கொள்ளமுடியாத 50:50 எனும் கோரிக்கைக்கு ஆதரவு தேடி ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் பிரித்தானியா சென்றிருந்தார். அப்போது சோல்பரி அரசியல் திட்டம் அரசாங்க சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. அதனை ஆதரித்து டி.எஸ்.சேனநாயக்கா பின்வருமாறு உரையாற்றினார்.

எமது நோக்கங்களின் நேர்மையை எந்த நியாயமான மனிதனும் சந்தேகிக்க மாட்டான். சிறுபான்மையினருக்கு அவர்களுக்குக் கிடைக்க வேண்டியதிலும் பார்க்க அதிக பங்கு கிடைக்கக்கூடிய திட்டம் ஒன்றைத் தயாரித்தோம். அவர்களுக்குப் பாதகம் விளைவிக்கும் சட்டங்கள் இயற்ற முடியாத ஒழுங்குகளைச் செய்துள்ளோம். கவர்னர் ஜெனரல் பக்கச் சார்பற்ற வகையில் நடப்பார் என்று சிறுபான்மையினர் கருதுவதால், அவரிடம் முக்கிய அதிகாரங்களைக் கொடுத்தோம். தமக்குப் பாதுகாப்பளிப்பதற்குத் தேவை எனச் சிறுபான்மையினர் கோரிய சுதந்திரமான அரசாங்க சேவைக் கமினையும் கொடுக்க முடிவுசெய்துள்ளோம். (மேற்கோள்.த.சபாரெத்தினம்) என மிக நம்பகமான உரையொன்றினை அற்றியிருந்தார்.

இத்திட்டம் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது 51 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 3பேர் எதிராகவும் வாக்களித்தனர். ஆதரித்து வாக்களித்தவர்களில் 5 பேர் தமிழர், 3 பேர் முஸ்லீம்கள், 4 பேர் ஐரோப்பியர்கள், ஒருவர் பறங்கியர். எதிர்த்து வாக்களித்தவர்களில் ஒருவர் சிங்களவர், இரண்டு பேர் இந்தியத் தமிழர். ஆதரித்து வாக்களித்தவர்களில் முக்கியமானவர் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் கோரிக்கைக்கு பக்கபலமாக இருந்த திரு.அ.மகாதேவா ஆவார். அரசாங்க சபையில் இருந்த தமிழ்பிரதிநிதிகளே 50:50 கோரிக்கையினை ஏற்காதநிலையில் பிரித்தானிய அரசும் ஜி.ஜி.யின் கோரிக்கையினை மிக இலகுவாக புறந்தள்ளிவிட்டது. 50:50 நிராகரிக்கப்பட்டால் மாற்றுவழியாக எதை முன்வைப்பது என்பது தொடர்பாகவும் தமிழர்கள் தலைசிறந்த அறிவாளிகள் எனக் கருதிய இந்த அறிவாளிகளிடம் இருக்கவில்லை.

தமிழ் காங்கிரசில் இருந்து பிரிந்து தமிழரசுக் கட்சியை ஆரம்பித்ததன் பின் நடந்த முதலாவது பொதுக்கூட்டத்தில் தந்தை செல்வநாயகம் 50:50 கோரிக்கை தொடர்பாக பின்வருமாறு உரையாற்றினார். தமிழ்த் தலைவர்கள் இதுகால வரை ஸ்திரமற்ற எதிர்மறைக்கொள்கையையே பின்பற்றி வந்தனர். குறைந்த விகிதாசாரத்தையுடைய சிறுபான்மை மக்களுக்கு கூடிய விகிதாசாரப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்று கோரினார். நாங்கள் சிங்களவராகப் பிறந்திருந்தால் அக்கோரிக்கைக்கு இணங்கியிருப்போமா? நான் நிச்சயமாக இணங்கியிருக்கமாட்டேன். தமிழர்கள் இந்த நாட்டில் பெரும்பான்மையினராக இருந்து சிங்களவர் சிறுபான்மையினராக இருந்து சிங்களவர்கள் எமது தலைவர்கள் கோரிய ஐம்பதுக்கைம்பதைக் கோரியிருந்தால் நாங்கள் அதற்கு இணங்கியிருப்போமா? நிச்சயமாக இணங்கியிருக்கமாட்டோம். ஐம்பதுக்கைம்பது நியாயமான கோரிக்கையுமல்ல. நடைமுறைப்படுத்தத்தக்க கோரிக்கையுமல்ல. அப்போதைய தமிழ் தலைவர்கள் நடைமுறைக்கொத்த மாற்றுத் திட்டத்தை முன்வைத்திருந்தார்களானால் பிரிட்டி; அரசு அதை ஆதரவுடன் பரீசீலித்திருக்கும் (மேற்கோள்.த.சபாரெத்தினம்)

இவ்வாறு யதார்த்தபூர்வமாக உரையாற்றிய எஸ்.ஜே.வி.செல்வநாயம் அவர்கள்தான் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களது 50:50 கோரிக்கைக்கு பக்கபலமாக இருந்ததோடு

14 ஆம் பக்கம் பார்க்க....

# ஆட்சியில் இருக்கும் அரசு தமிழ் மக்களின் கண்ணீருக்கு விடைகூறுமா?

முனையூரான்

பிறந்த மண்ணில் வாழுகின்ற உரிமை ஒவ்வொருக்கும் இருக்கின்றது. அதே மண்ணில் இனங்களுக்கு சமமாக வாழவேண்டிய உரிமையும், இனங்களை சமமாக பார்க்க வேண்டியதும் ஆள்பவர்களின் கடமையாகும். இலங்கை நாட்டிலே தற்கால சூழலில் பெரும்பான்மையாக வாழுகின்றவர்களாக சிங்களமக்களும், சிறுபான்மை இனத்தினராக தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய இனத்தவர்களும் வாழுகின்ற அதேவேளை, ஆளுகின்ற வர்க்கத்தினராக சிங்களமக்கள் இருந்து கொண்டிருக்கின்றனர். ஆளுகையில், சமபங்கீடுகள், உரிமைகள் ஊடாக நாட்டில் உள்ள மக்களை வழிநடாத்தமையினால், மூன்று தசாப்த யுத்தம் இலங்கைத் தீவிலே நடந்தேறியிருக்கின்றது. இதனால் ஏற்பட்ட இழப்புக்கள் பாரதூரம் என்பதுடன், யுத்தத்தின் போது ஏற்பட்ட இழப்புக்கள் மற்றும் அநீதியான செயற்பாடுகளுக்கு நீதிகேட்டு போராடத் தொடங்கிய போராட்டமும் ஒரு தசாப்தத்தினை எட்டவுள்ளது.

மீள் நிகழாமை உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்பது பாதிக்கப்பட்ட மக்களின் மிகப்பெரியதான வேண்டுகோளும், கோரிக்கையுமாகும். ஆழமான, அழுத்தமான இக்கருத்துக்கான அங்கீகாரம் முற்று முழுதாக கடந்த ஆட்சி காலத்தில் கிடைக்கவில்லையென்பது பாதிக்கப்பட்ட மக்களின் கருத்து, அதேபோன்று தற்போதைய ஆட்சியிலும் கிடைக்கவில்லை, கிடைக்குமென்ற நம்பிக்கை வலுவிழந்திருக்கின்றது. என்ற கருத்தும் பாதிப்புக்குள்ளான மக்கள் மத்தியில் எழுந்திருக்கின்றது. எழுகைக்கு காரணம், உண்மை, நீதி கண்டறியப்படாமை, சிறுபான்மையினரின் கோரிக்கைகள் இழுத்தடிப்பு போன்றவையே என்பதும் விரக்தியுற்ற சமூகத்தின் வசனங்களாகவிருக்கின்றன.

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அர



ளுக்கமைய காணாமல் போனோரை கண்டறியும் அலுவலகத்தின் ஊடாக நியாயமான தீர்வுகள் அவர்களுக்கு வழங்கப்பட நடவடிக்கை எடுத்திருப்பதாக கூறியிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கதான விடயமாகவுள்ளது.

பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து ஆட்களைப் பாதுகாக்கும் சர்வதேச சமவாய சட்டமூலமும் நாடாளுமன்றத்தில் 37மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்திற்கு எதிரணியினர் எதிர்ப்பு தெரிவித்திருந்த நிலையிலும் சபாநாயகர் கருஜயசூரிய குறித்த சட்டமூலத்திற்கு கையொப்பமிட்டிருந்தார்.

காணி தொடர்பிலான விடயத்திலும், தற்போதைய அரசு விரைவு செயற்பாட்டினை முன்னெடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டினை பாதிக்கப்பட்ட சமூகத்தினர் கூறிவருகின்றனர். அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு பாதிக்கப்பட்ட தமிழ் சமூகத்தினர் கூறிய வருகின்றதான சூழலில், அரசியல் கைதிகள் என்று யாரும் இல்லை என்ற கருத்தை சாங்கம் நாட்டினைப் பொறுப்பேற்று நான்கு வருடங்கள் நிறைவுபெற்றிருக்கின்றன. இக்கால சூழலில் பாதிக்கப்பட்ட சமூகத்தினால் தொடர்ச்சியாக கேட்கப்பட்டுவருகின்ற, இறுதி யுத்தத்திலே இழைக்கப்பட்ட அநீதிக்கான நீதி, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமற் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான தீர்க்கமான முடிவு, படையினரினால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணி விடுவிப்பு, நாட்டிலே வாழுகின்ற பெரும்பான்மை சமூகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது போன்றதான சம உரிமைகளை வலியுறுத்தியதான கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் இழுதடிப்பினை தற்போதைய அரசாங்கமும் செய்து வருகின்றது. என்பதனை தமிழ் தரப்பினர் தொடர்ச்சியாக கூறிவருகின்றனர்.

இக்கருத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில், ஐக்கிய நாடுகளின் விசேட ஆணையாளர் பப்லோ டிகிரீப் கருத்தொன்றினை ஜெனிவாவில் முன்வைத்திருந்தார். இலங்கையில் அனைத்து சமூகத்தினரிலும் பாதிக்கப்பட்ட மக்கள் உள்ளனர். 10 வருடங்களுக்கு ஒரு முறை, ஏதோ ஒரு வகையில் இடம்பெறுகின்ற வன்முறைகளினால் சமூகங்கள் பாதிக்கப்படுகின்றன. இலங்கையில் பொறுப்புக்கூறல் பொறிமுறையானது அரசியலமயமாக்கப்பட்டுள்ளது. காணாமல்போனோர் விடயம், காணி விடயம், தடுத்து வைத்தல், சித்திரவதைகள், வன்முறைகள், சிவில் சமூகம் மீதான கண்காணிப்பு பாதிக்கப்பட்ட மக்களை கண்காணித்தல் போன்ற விடயங்களில் அதிகமானவை தீர்க்கப்படாமலே உள்ளதாக அவர் குறிப்பிட்டிருந்த கருத்தும், பாதிக்கப்பட்ட சமூகமும் கூறிநிற்கின்ற கருத்தும் ஒன்றாகிருக்கின்றன.

காணாமற் ஆக்கப்பட்டோர் விடயம் தொடர்பில் தற்போதைய ஆட்சியாளர்கள் தொடர்ச்சியான இழுத்தடிப்பினை செய்து கொண்டு வருகின்றனர் என்ற குற்றச்சாட்டினை தமது உறவுகளை காணாமற் தேடும் மக்கள் கூறிக்கொண்டிருக்கின்றனர். இதனை காணாமற் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான அலுவலக சட்டமூலம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டமையும், இருபது மாதங்களுக்கு பின்பு அதற்கான அலுவலர்கள் தெரிவு இடம்பெற்றமையும் தெளிவாக உதாரணம் காட்டி நிற்பதாக பாதிக்கப்பட்ட சமூகத்தினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஜெனிவா கூட்டத்தொடரில், பாதிக்கப்பட்ட சமூகத்தின் சார்பில் ஜயனி தியாகராசா என்ற பெண் மனித உரிமைப் பேரவையில் கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட சமூகம் என்ற அடிப்படையிலும், பாதிக்கப்பட்டவர்களில் ஒருத்தி என்ற நிலையிலும் இருந்து கொண்டு கருத்தொன்றினை முன்வைத்திருந்தார். இலங்கையின் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்சவின் கீழ் பணியாற்றிய ஒரு குழுவே எனது சகோதரர் ஜெகன் தியாகராசா உள்ளிட்ட 11பேரை கடத்தியது. குறிப்பாக 2008 ஆம் ஆண்டு செப்டெம்பர் 17 ஆம் திகதி இலங்கை கடற்படையின் அதிகாரி சம்பத் முனசிங்கவினால் எனது சகோதரர் கடத்தப்பட்டார். என்ற கருத்தினை குறிப்பிட்டதுடன், இதுபோன்ற காணாமற் ஆக்கப்பட்டோருக்கான நீதியை பெற்றுத்தருமாறு குறிப்பிட்டிருந்தமையும் இக்காலச்சூழலில் எடுத்துக்காட்டத்தக்கது.

அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது, காணாமற் ஆக்கப்பட்டோர் சார்பில் சிலர் ஜனாதிபதியுடன் கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தனர். இதன்போது, உள்நாட்டு, வெளிநாட்டு சட்டதிட்டங்களுக்கமைய ... ஆட்சியாளர்கள் முன்வைத்து வருகின்றனர். ஆனால் தமது உறவுகள், எப்போது விடுதலையாகி வருவார்கள் என்ற ஏக்கத்துடனும், எதிர்பார்ப்புடனும் காத்துக்கொண்டிருக்கின்றனர்.

குழந்தைகள் மீது, கருணை காட்டும் நாட்டின் அதிபர், அழைத்த குழந்தைகளின் வீட்டுக்கும் சென்று மகிழ்ந்த ஜனாதிபதி, பலகுழந்தைகளின் கண்துடைப்பார் என்ற நம்பிக்க பலரிடத்திலும் காணப்பட்டன, காணப்படுகின்றன. கடந்த மூன்று தசாப்த யுத்தத்திலே பாதிக்கப்பட்டு, அங்கங்களை இழந்து, உறவினர்களைத்தேடி இன்றும் உடலெங்கோ, மனமெங்கோ என்று தெரியாமல் வாடிக் கொண்டிருக்கும் உறவுகள் அனைவருக்கும் சிறந்த தீர்வுகளை விரைந்து எடுக்க வேண்டுமென்பதே மக்கள் அனைவரின் விருப்பாகும்.

## பொலிஸா...

06 ஆம் பக்கத் தொடர்ச்சி

பாதாளம் மற்றும் போதைப்பொருள் மாபியாக்களை முற்றாக நம்நாட்டில் இல்லாதொழிக்கும் செயற்றிட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு மேலும் ஒருவருட காலத்துக்கு லதீபின் சேவையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சரவையின் ஒப்புதலோடு நீடித்தார். அதன்படி சேவை நீடிப்பு கடிதத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்றதிகாரிக்கு அனுப்பிவைத்தார்.

இருப்பினும் இந்த விசாரணை இன்னும் முடிவுக்கு வரவில்லை. நம்நாட்டு பாதுகாப்புப் பிரிவினர் அடுத்த இலக்காகக் காணப்பட்டது, பாதாளக் குழுத் தலைவன் மதூஷ் உட்பட அவனது குழவினரை இங்கு கொண்டு வருவதாகும்.

மதூஷ் இல்லாமல் கைது செய்யப்பட்ட 25 பேரில் பிரபல பாதாளக் குழு உறுப்பினர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுள் கஞ்சிபான இம்ரான் , கொலெஸ்வத்த தினுக , சீதுவ திமுது, தலல்ல சஞ்ஜே, இப்லிபுள்ளபலம் அஜ்மி , அமில , என்டா , மாளிகாவத்த பைசர் , ஜலிபர் சியாம் ஆகியோர் உள்ளடங்குகின்றனர். இவர்களுள் பிரபல பாதாளக் குழுத் தலைவன் கஞ்சிபான இம்ரானாவான்.

கடந்த காலங்களில் கொழும்பு பிரதேசத்தை பீதிக்குள்ளாக்கிய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இம்ரானே மூலமே மேற்கொள்ளப்பட்டன.

கொழும்பில் இடம்பெற்ற பல்வேறு கொலைச் சம்பவங்களில் 15 சம்பவங்களுக்கு பொறுப்பாளி இம்ரான் மொஹமட் இம்ரான் நஜியா மொஹமட் என அழைக்கப்பட்டவனுக்கு ‘கஞ்சிபான்’ என்ற பெயர் வர இரு காரணங்கள் உண்டு.

ஒன்று பாதாளக் குழுச் செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட முன்னரே அவன் மாளிகாவத்த பிரதேசத்தில் முஸ்லிம் பள்ளிவாசலுக்கு அருகாமையில் கஞ்சி விற்பனை செய்து கொண்டிருந்தான்.

அதனால் ‘கஞ்சிபான’என்ற பெயர் ஏற்பட்டது. மற்றையது பள்ளிவாசலில் நோன்பு காலத்தில் கஞ்சி கொடுக்கும் போது சிறிய வயதென்பதால் வரிசையில் நிற்காது முன்னுக்குச் சென்று கஞ்சியை வாங்கி விடுவானாம். இதன் காரணமாகவும் கஞ்சிபான என்ற பெயர் ஏற்பட்டது எனக் கூறுகிறார்கள்.

பிரதான ஹெரோயின் வியாபாரியான மொஹமட் சித்திக்கின் வாகனச் சாரதியாக செற்பட்ட கஞ்சிபான இம்ரான் 2015 ஆம் ஆண்டில் மதூஷ் தலைமறைவாக வாழ்ந்துவரும் டுபாய்க்கு தப்பிச் சென்றிருந்தான். மதூஷம் இம்ரானும் மாளிகாவத்தையில் நடைபெற்றிருந்த திருமண வீடொன்றிலேயே அறிமுகமாகியிருந்தார்கள். அந்தச் சந்திப்பும் 2015 ஆம் ஆண்டிலேயே இடம்பெற்றிருந்தது.

அந்த திருமண விழாவில் வைத்து இவர்களிருவரையும் சுற்றிவளைக்க பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகள் திட்டமிட்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது.

டுபாய்க்கு தப்பிச்சென்ற கஞ்சிபானவுக்கு அவனது மனைவி இன்னொருவருடன் கள்ளத்தொடர்பு வைத்திருப்பதாக தகவல் கிடைக்கப்பெறுகிறது. அத்தகவல் கிடைக்கப்பெற்றதும் தனது ஆட்களை அனுப்பி தனது மனைவியை வெடிவைத்து கொன்றுவிட்டான்.

மொஹமட் முஸம்மில் சித்தி ரினேவிஷா என்ற அப்பெண்ணை, தற்போது டுபாயில் கைது செய்யப்பட்டு புல்லபலம் அஜ்மி மற்றும் மாளிகாவத்த பைசர் ஆகியோரே சுட்டுக்கொண்டனர்.

இச்சம்பவம் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி மாளிகாவத்தை பிரதேசத்தில் இடம்பெற்றது. இதே ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் திகதி நிவிஷ என்பவரை இம்ரானின் வேண்டுகோளுக்கமைய புல்லபலம் அஜ்மியே கொலை செய்தான்.

மதூஷக்கு எதிராக செயற்பட்ட பாதாளத் தலைவனான சமயங் கும்பலில் இருந்த அசித என்பவரை இலக்கு வைத்து பொரளை , கொட்டார பிரதேசத்தில் வைத்து கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி துப்பாக்கி சூடு மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவம் ஜலிபர் சியாம் மற்றும் மாளிகாவத்த பைசர் ஆகியோராலேயே மேற்கொள்ளப்பட்டது. மேலும் மதூஷ் மூலம் டுபாயிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஹெரோயின் வியாபாரத்தை மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் அதற்கு எதிராக இருந்தவர்களை கொலை செய்யும் பொறுப்பை கஞ்சிபான இம்ரான் பொறுப்பேற்றுக் கொண்டான்.

டுபாயில் கைது செய்யப்பட்ட குழுவினரின் இங்கிருக்கும் வீடுகளை பரிசோதனை செய்யும் செயற்றிட்டத்தை பொலிஸ் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர்.

அதற்கிணங்க கடந்த 7 ஆம் திகதி மாலை வேளையில் பாடகர் அமல் பெரேரா வசித்துவந்த சில வீடுகள் மற்றும் நடிகர் ரயன் வென்ரொயனின் வீடும் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் மூலம் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன.

இதில் அமல் பெரேராவின் வீட்டிலிருந்து இரு கொக்கெய்ன் பொதிகளும் ரயனின் வீட்டிலிருந்து டிஜிட்டல் தராசுகள் இரண்டும் மற்றும் சந்தேகத்துக்கிடமாகக் காணப்பட்ட ஆழம் கொண்ட பயணப்பையொன்றும் கைப்பற்றப்பட்டன.

மேலும் இவர்களிருவரினதும் சகோதரர்களிடம் வாக்குமூலம் பெற்றுக்கொண்டு அவர்களை பிணையில் விடுவிக்க நடவடிக்கை மேற்கொண்டனர்.

அவ்வாறே மதூஷின் முதல் மனைவி வசிக்கும் கும்புறுபிட்டிய வீடும் கடந்த 8 ஆம் திகதி விசேட பொலிஸ் குழுவொன்றால் பரிசோதனை செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் டுபாயில் கைதுசெய்யப்பட்ட ஜங்கா என்பவனின் மாத்தறை கந்தரவில் அமைந்துள்ள வீடும் விசேட பொலிஸ் குழவொன்றினால் பரிசோதனை செய்யப்பட்டதில் அங்கிருந்து மறைத்து வைக்கப்பட்டிருந்த 18 இராணுவச் சீருடைகளும் ரி56 ரக துப்பாக்கி ரவைகள் 23 ம் கண்டுபிடிக்கப்பட்டன.

ஒருசேர கைதுசெய்யப்பட்ட மேற்படி பாதாளக் குழுவினரால் மேற்கொண்டு என்ன நடக்கப்போகிறது என்று தெரியாமல் பொதுமக்கள் அதிக பயத்துடனும் சந்தேகத்துடனும் காலத்தை கழித்து வருகின்றனர் என்பதே நிதர்சனமாகும்.



# பொறுப்பற்ற சில பதிப்பகத்தினரால் சீரழியும் நமது இலவசக் கல்வி

இலவசக்கல்வி சுதந்திரத்திற்கு முன்னிருந்தே நாட்டில் இருந்துவந்த போதிலும் 1960ஆம் ஆண்டிற்குப் பிறகு நாடுமுழுவதும் இலவசக் கல்வியின் முழுமையான வடிவத்தை மாணவர்கள் அனுபவிக்கலாயினர். இருப்பினும் இந்த இலவசக் கல்விக்கு வித்தாக அமைகின்ற இலவசப் பாடநூல்கள், மதிய உணவு, சீருடை, காலணி என்று ஒவ்வொரு அரசும் கல்வியின் சீர்பாட்டினை மேற்கொள்வதற்கு அனைத்தையும் இலவசமாக வழங்கி வருவதுடன், மாகாணங்களும், மத்திய கல்வியமைச்சும், தேசிய கல்வி நிறுவகம் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு கல்வியோடு சம்பந்தப்பட்ட நிறுவனங்களும், அமைப்புக்களும் இலவசமாக நூல்கள் மற்றும் வெளியீடுகளை வெளியிட்டு வழங்கியும் வருகின்றன. இவ்வாறான வெளியீடுகளில் அநேகமானவை உரிய முறையிலான அங்கீகாரங்களுடன் நடைபெற்று வந்தபோதிலும் இலங்கையைப் பொறுத்தளவில் பல ஆயிரக்கணக்கான பதிப்பாளர்கள் பல்வேறுபட்ட நூல்களை வெளியிட்டு வருகின்றனர்.

குறிப்பாக இலங்கையின் கல்வித்துறை சார்ந்த விடயங்களில் அதுவும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகள் தொடர்பான வினாக்களும், தேசிய கல்வி நிறுவகம் பிரசுரிக்கின்ற ஆசிரியர்களுக்கான வழிகாட்டி நூல்கள், பாடநூல்கள் போன்றவற்றைப் பின்பற்றி பலரும் பதிவுடனும், பதிவின்றியும் அனுமதியுடனும், அனுமதியின்றியும் ஆயிரக்கணக்கான தமிழ் சிங்கள, ஆங்கில மொழிகளில் மாணவர்களின் மேலும் வாசிப்பு, பயிற்சி போன்றவற்றை மேம்படுத்தி பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் நோக்கில் பெற்றோரையும், மாணவர்களையும் கவர்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றமை நாம் அறிந்ததே. ஆனால் இத்தொழில் துறையானது சேவைத் தொழிலிலிருந்து பணம் உழைக்கும் ஒரு தொழிலாக மாத்திரமன்றி தரமற்ற நூல்களும் மிகக்கவர்ச்சியான அட்டைகளுடன், மாணவர்களின் உரிய வயதை, அறிவை மீறிய வகையில் அச்சடித்து விநியோகிப்பதன் ஊடாக சந்தை வாய்ப்பினை சரியான முறையில் பயன்படுத்தி சிலர் அதிக இலாபம் ஈட்டிவருகின்றனர். அதன்காரணமாக பிழையான முறையில் மாணவர்களும், பெற்றோர்களும், ஏன் பல ஆசிரியர்களும் இதன் மயக்கத்தில் விழுந்து ஆசிரியர் கைந்நூலை ஒதுக்கிவைத்துவிட்டு இவ்வாறான நூல்களை வகுப்பறையில் கொண்டுவந்து கற்பிக்கின்ற கேவலமான ஒரு நடைமுறை அண்மைய காலங்களில் ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

பதிப்பகத்தினை நடாத்துவில் பல தரமான நிறுவனங்கள் நமது நாட்டில் காணப்பட்ட போதிலும் சில தனிப்பட்டவர்கள் எவ்விதமான கல்வியறிவும் அற்றவர்களால் நடாத்தப்படுவதன் காரணமாக மாணவர்கள் பிழையான முறையில் வழிநடாதப்படுகின்றனரா என்கிற ஐயம் சில பாடநூல்களைப் பார்க்கிறபோது ஏற்பட்டதாக பல ஆசிரியர்கள் தமது நண்பர்களிடையே பேசியதை அறிய முடிகிறது. காரணம் சில ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன், அவர்களிடமிருந்து குறைந்தளவு பணத்தைக் கொடுத்து ஏமாற்றி இலட்சக் கணக்கில் பணம் சம்பாதிப்பதை தொழிலாக கொண்டிருக்கின்ற நிலைமை காரணமாக இலவசக் கல்வியின் நிலை சீரழிந்து செல்வதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. அண்மையில் ஒரு பதிப்பகத்தின் நூல் ஒன்றை பார்த்தபோது அந்த பதிப்பகத்தாருக்கோ, அதனை எழுதிக்கொடுத்தவருக்கோ போதியளவாக அறிவற்றதன்மையை அந்நூலில் அவதானிக்க முடிந்தது. குறித்த நிறுவனம், குறித்த ஆசிரியர் ஊடாக ஆசிரியர் கைந்நூல் தேசிய கல்வி நிறுவகத்தினால் வெளிவருவதற்கு முன்னரே சந்தையில் காணப்படாத அந்த புதிய பாடத்திட்டத்தினை கொண்டிருந்த நிலையில் சந்தையில் காணப்பட்ட கேள்வியை அடிப்படையாகக் கொண்டு குறித்த நூல் வெளியாகியிருந்தது. இவ்வாறான நூல்களை மாணவர்கள், பெற்றோர்கள் அதிகூடிய பணத்தினைக் கொடுத்து கொள்வனவு செய்வதையும் காணமுடிந்தது. இதில் மிகவும் வருந்தத்தக்கதான விடயம் என்னவென்றால் அந்நூலை பல ஆசிரியர்களும் கொள்வனவு செய்து தங்களுடைய வகுப்பறையில் பயன்படுத்துகின்றனர் என்பதுதான் அந்த விடயமாகும்.

ஆசிரியர்களுக்கான வழிகாட்டிகளை அரசு பல நூறு இலட்சங்களை செலவு செய்து அச்சடித்து, பயிற்றுவித்து இலவசமாக நாடுமுழுவதிலுமுள்ள பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு வழங்கி வந்தபோதிலும் அதனை ஒரு புறமாக தள்ளிவைத்துவிட்டு யாரோ ஒருவர் எழுத கல்வியறிவற்ற அல்லது இது தொடர்பான எவ்விதமான முன்னறிவும் அற்ற சில பதிப்பகத்தார் வெளியிட்ட அந்நூலை அரசின் கொள்கைக்கு ஏற்ப பிரசுரித்துள்ளதுபோல நினைத்து அதனை பயன்படுத்துகின்ற கேவலமும் பாடசாலைகளில் காணப்படுவதன் காரணமாகத்தான் என்னவோ இன்று அநேகமான பெற்றோர்களுக்கு பாடசாலைக் கல்வியில் அதிக அக்கரையற்று இருப்பதும் இதுபோன்ற செயற்பாடுகளும் ஒரு காரணியாக அமையலாம் எனக் கூறுப்படுகின்றது. தனியார் கல்விக் கூடங்களில் சிலவேளை சிறப்பான முறையில் பாடங்களை நடாத்துவதன் ஊடாக சுதந்திரமான முறையில் சிறந்த கல்வியை பெறலாம் என்கிற உண்மை காரணமாகத்தான் என்னவோ அதிகமான பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளை தனியார் கல்வி நிலைங்களுக்கு அனுப்பி அதில் அதிக அக்கரை செலுத்தி வருகின்றனர்.

இதில் இன்னுமொரு விசேடம் என்னவென்றால் இவ்வாறு மாலைவேளைகளில் தனியார் கல்வி நிலையங்களில் கற்பிக்கின்ற தரமான ஆசிரியர்களுடைய பல நூல்கள் மேலே கூறப்பட்ட பதிப்பகத்தினராலோ, நிறுவனங்களாலோ பதிப்பக்கப்படுவதில்லை. காரணம் அவர்கள் அதிக விலையில் அதனை விற்று இலாபமீட்டுவதும், விடயம் தெரியாதவர்களுக்கு வழங்கப்படக் கூடாது என்பதற்காகவும்தான் என்றும் கூறுகின்றனர். உண்மைதான். இவ்வாறான பதிப்பகத்தினரால் வெளியிடப்படுகின்ற தமது பாடநூல்கள் ஊடாக அதனை விற்று சம்பாதிக்கின்ற நிலையைத் தவிர்த்து தானே அதனை முன்னின்று பதிப்புச் செய்து அல்லது நகல்பிரதியெடுத்து குறைந்த விலையில் வழங்கி வருகின்ற ஒரு நிலைமையும் காணப்படுகின்றமை கண்கூடு.

**தந்திமகன்**

அதுமாத்திரமன்றி தரமான ஆசிரியர்களை ஏமாற்றி தரமானவற்றை பெற்றுக்கொண்டு ஒரு நூலுக்குரிய குறித்த ஒருதொகைப் பணத்தை வழங்கிவிட்டு பின்னால் வருகின்ற ஒவ்வொரு வருடமும் பல ஆயிரக்கணக்கான நூல்களை அந்த உரிய ஆசிரியரின் பெயரைப் பயன்படுத்தி தொடராக பதிப்பிட்டு வருகின்ற செயற்பாடுகளும் தற்காலத்தில் அதுவும் பெரிய நகரங்களில் காணப்படுகின்றமை குறிப்பான விடயமாகும். எழுத்துரிமையை குறிப்பிட்ட ஒரு தொகைப் பணத்திற்கு பெற்றுக்கொண்டு உரிய ஆசிரியரை ஏமாற்றி விற்க முடியவில்லை, பணம் தருகின்றார்கள் இல்லை, பணம் அறவிட முடியாதுள்ளது என்கிற பல பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்னிலைப்படுத்தி அவர்களை ஏமாற்றிவிட்டு அவர்களின் கண்களில் மண் தூவிட்டு மீண்டும் மீண்டும் பதிப்பிக்கும் வழக்கமும் மேலே நான் கூறிய சில தனிப்பட்ட தரமற்ற பதிப்பகத்தினரால் மேற்கொள்ளப்படுவதாகவும் அறிய முடிகிறது. இதன் காரணமாக கஷ்டப்பட்டு இரவுபகல் பாராது கண்விழித்து எழுதிய உண்மையாக ஆசிரியருக்குக் கிடைக்கின்ற பலனோ மிகமிகச் சொற்பமே என்கிற மனவேதனையை கூறுகின்ற ஆசிரியர்களும் பாடசாலைகளில் காணப்படுகின்றனர்.

இதுபோன்ற ஏமாற்றுவேலைகளில் பலர் ஈடுபட்டு வருகின்றனமை ஆச்சரியமான விடயமாகும். இவ்வாறான ஒருசிலர் தலைநகரங்களில் இருந்து கொண்டு பெரியளவில் விளம்பரம் செய்துகொண்டு ஏதோ அவர்கள்தான் மாணவர்களுக்கான தரமான நூல்களை வெளியிடுவதான மாயை ஏற்படுத்தி மிகவும் கவர்ச்சியான முறையில் பங்கு தரப்படும் அல்லது வீதங்கள் தரப்படும் என்கிற பொய்யான வாக்குறுதிகளை வழங்கி அதனை வாங்கி தன் வகுப்பறையில் கற்பிக்கின்ற ஒரு கேவலமான நிலையையும் தாண்டி, முக்கியமான பொறுப்புக்களில் இருக்கின்றவர்களைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு அவர்களிடம் பண ஆசையை கொடுத்து நாடுமுழுவதும் பெயர் வரும், மதிப்புவரும், பணம் வரும், புகழ் கிடைக்கும் என்கிற வார்த்தைகளை நம்பி அந்த பாதாளத்திற்குள் விழுந்து விடுகின்றனர். பின்னர் எத்தனை பிரதிகள் அடிக்கிறார் என்பதையெல்லாம் அறியாத கிராமத்தில் அல்லது தூரப்பிரதேசத்தில் வாழ்கின்ற இந்த ஆசிரியர், உயர்பதவியில் இருக்கின்றவரால் அறிய முடியாமல் தருவதைப் பெற்றுக்கொண்டு அம்போவன அமர்ந்து விடுகின்றனர். இறுதியில் அதிக இலாபமீட்டுக்கின்ற போலித்தமான பதிப்பகத்தான் தன்னை உயர்த்திக் கொண்டு உலாவுவதை அறிய முடிகிறபோது கவலையாக இருக்கிறது.

எனவேதான் இது தொடர்பில் உரிய நிறுவனம், உரிய அமைப்புக்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பதிப்பகங்களின் நம்பகத்தன்மைகள் தொடர்பாக திடீர் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். உரிய நியமங்களுக்கு ஏற்ப பதிப்பீடுகள் நடைபெறுகிறதா? பதிப்பகத்தாரின் நம்பகத்தன்மை, பதிப்பாளருக்கும், உரிய ஆசிரியருக்குமிடையிலான ஒப்பந்தங்கள், ஒப்பந்தத்தை மீறினால் எடுக்கக்கூடிய சட்ட நடவடிக்கைகள், உரிய பதிப்புக்கள் ஆசிரியர் கைந்நூலைவிட மேம்பட்டுக் காணப்படுகின்றதா? உரிய வயது மட்ட மாணவர்களுக்குப் பொருத்தமானதா? போன்ற பலவிடயங்களை அவதானிக்க வேண்டியது இது தொடர்பான அமைப்பினரின் கடமையுமாகும். இதனை சரியான முறையில் நிறைவேற்றாததன் நிமித்தம் தடியெடுத்தவர்கள் எல்லோருமே வேட்டைக்காரர்கள்போல இப்போது பெரியயவிலான விளம்பரங்களைக் கொடுத்துக்கொண்டு கல்வியை சீரழிக்கின்றனர். அல்லது இலவசக் கல்வியின் தார்ப்பரியத்தினை பிழையாக வழிநடாத்துகின்றனர் என்பதுதான் நமது கவலையாகும்.

சில காலங்களுக்கு முன்னர் இந்தியாவில் சட்டவிரோதமாக முறையில் பாடநூல்களை வெளியிட்ட ஒரு பதிப்பகம் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளதை அறியக் கூடியதாக இருந்தது. அதாவது, சட்டவிரோதமாக 11ம் வகுப்பு பாடநூல்கள், உரைகளை வெளியிட்ட அந்த பதிப்பகத்தின் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டிருந்தது. பாடசாலைக் கல்வித்துறை பணியகம் அளித்த புகாரின் பேரில் அப்பதிப்பகம் மீது வழக்குப் பதிவினை மேற்கொண்டனர். இதனை அறிவுசார் சொத்துரிமை கழகத்தின் அமுலாக்காப் பிரிவு வழக்குப்பதிவு செய்து அதனை விசாரித்தும் இருந்தனர். எனவேதான், இலங்கையிலும் அதற்கான சட்ட வரைபுகள் காணப்படுகின்றன. அதனை சரியான முறையில் பயன்படுத்தி இவ்வாறு இலவசக் கல்வியை சீரழித்து அதனை பணக்கல்வியாக மாற்றுகின்ற ஒருசிலர் இத்துறையினுள் உட்புகுந்து தரமான கல்வியை தரமற்றதாக்கும் பணியில் ஈடுபடுகின்றனர். அவர்களை இனங்கண்டு அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுத்து அவர்களின் பதிப்பக உரிமத்தை இரத்துச் செய்வதன் மூலம் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் தேசிய கல்வி நிறுவகம், கல்வியமைச்சின் ஊடாக பிரிசுரமாக பதிப்புக்கள்மீது அதிக அக்கரை கொண்டு தேடலுள்ள ஆசிரியர்களாக மாற்றுவதற்கு உதவியாக அமையும் என்பதில் எவ்விதமான ஐயமுமில்லை.

# வடமாகாண முஸ்லிம்கள் பொருளாதார அபிவிருத்தியில் பல சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்

மனிதன் உயிர் வாழ்வதற்கு பொருளாதாரமும் ஒரு காரணியாகும். இந்த வகையில் ஒரு நாட்டின் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றம் என்பன பொருளாதாரத்தின்படியே தீர்மாணிக்கப்படுகின்றது. பொருளாதார அல்லது பணவசதிகள் இல்லாது போனால் ஒரு மனிதனால் உயிர் வாழ முடியாது. இந்த வகையில் பணத்தை அவன் ஏதோ ஒருவகையில் பெற்றுக் கொள்வதன் மூலமே அவன் பட்டினியற்ற வாழ்வை கொண்டு செல்ல முடியும்.

இந்த வகையில் ஒரு மனிதனின் வாழ்வைத் தீர்மாணிக்கும் சக்தியாக பொருளாதாரம் காணப்படுகின்றது. இந்தப் பொருளாதாரம் முடங்கிப்போனால் அவர்களின் வாழ்வியல் என்பது கேள்விக் குறியாகிவிடும் என்பதில் ஐயமில்லை. இலங்கையை எடுத்துக் கொண்டால் இங்கு பல்லின, பல்சமுக, பல்சமய மக்கள் வாழ்கின்றனர். இந்த மக்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் தத்தமது வாழ்வியலை பிரச்சினைகள் இன்றி கொண்டு செல்வதற்கு பொருளாதார வசதிகளே தீர்மாணிக்கின்றன எனலாம். சமுகம் என்ற வகையில் இலங்கையில் வடமாகாண முஸ்லிம்களின் பொருளாதார விடயங்கள் என்பது தற்போதைய நிலையில் பாரியளவில் வீழ்ச்சிப் போக்கில் செல்வதனையே அறிய முடிகின்றது. காரணம் இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள இன ரீதியிலான தாக்கங்கள் என்றே கூறலாம்.

கடந்த மூன்று தஸாப்தங்கள் இந்த நாட்டில் புரையோடியிருந்த யத்த சூழ் நிலை காரணமாக குறிப்பாக வடமாகாண மக்கள் பல்வேறுபட்ட இன்னல்களையும், துன்பங்களையும் அனுபவித்துவிட்டனர். தமிழ், முஸ்லிம் என்ற பாகுபாடின்றி வடக்கில் இன நல்லுறவுடன் வாழ்ந்த வடமாகாண முஸ்லிம்களை தமது தாயக பூமியில் இருந்து 1990ஆம் ஆண்டு ஒட்டு மொத்தமாக விடுதலைப் புலிகளால் விரட்டியதன் காரணமாக அவர்கள் அகதிகளாக்கப்பட்டனர். இவ்வாறு அகதிகளாக்கப்பட்டு பல்வேறு துன்பங்களுடன் பொருளாதார ரீதியாக முழுமையாக இழப்புக்களை எதிர் கொண்டவர்களாக வடமாகாண முஸ்லிம்கள் காணப்படுகின்றனர். கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டு அதாவது யுத்த வெற்றிக்குப் பின்னர் ஒரு தஸாப்த காலம் கடந்துள்ள நிலையிலும் வடமாகாண முஸ்லிம்கள் தமது இழப்புக்களில் இருந்து மீட்சி பெறவில்லை என்பதே யதார்த்தமான உண்மையாகும்.

அரசியல், பொருளாதார ரீதியாக பல சவால்களை வடமாகாண முஸ்லிம்கள் எதிர் கொள்ள வேண்டியுள்ளது. யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் இவர்கள் விடயத்தில் அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சாசனத்தின்படி இதுவரை எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்க வில்லை. இவர்களின் வாழ்வாதார விடயங்கள் பாரிய சிக்கல் நிலைமைகளுக்கு உள்ளாகி இருக்கின்றது எனலாம்.

வடமாகாண முஸ்லிம் குடும்பங்கள் ஒவ்வொன்றும் பல இலட்சம் தொடக்கம் பலகோடி ரூபா வரையான சொத்து இழப்புக்களை இழந்துள்ளனர். குறிப்பாக வீடுகள், வர்த்தக ஸ்தாபனங்கள், தொழிற்சாலைகள், விவசாய நிலங்களும் அதன் இழப்புக்கள், கால் நடை இழப்புக்கள், உடமைகள், வாகனங்கள், பண ரீதியிலான இழப்புக்கள் என இழப்புக்களின் விபரங்களைக் குறிப்பிடலாம். இவ்வாறு ஒட்டுமொத்தமாக அணைத்தையுமே இழந்து இன்றுவரை சரியான வரையறைகளின் பிரகாரம் அவர்கள் மீள்குடியமர்த்தப்படாது அரையும் குறையுமாக ஒருசிலர் எந்த வித அடிப்படை வசதிகளுமின்றி மீள் குடியேறியும் மேலும் பலர் இன்று வரை அகதிகளாக இருந்து வருவதும் கவலைக்குரிய விடயமாகும்.

யுத்த வெற்றிக்குப் பின்னர் மக்கள் இன்னும் அந்த வடுக்களில் இருந்து வெளிவர முடியாது திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். காரணம் இவர்களுக்கான பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட வில்லை. பொருளாதார அபிவிருத்தி என்பது கேள்விக் குறியாகவே இருக்கின்றது. பொருளாதாரத்தால் கட்டியெழுப்பப்பட வேண்டிய பாதிக்கப்பட்ட மக்களின் இடைவெளி குறைக்கப் படாதுள்ளமையானது பல பிரச்சினைகளுக்கு வழிசமைத்து வருகின்றதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. இந்தப் பொருளாதார இடைவெளியை நிவர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பை அரசாங்கம் விரைவாக கவனத்திற் கொள்ள வேண்டும் என்பதே இங்கு முக்கியமாகும்.

**சத்தார் எம் ஜாவித்**

இன்று வடமானாணத்தில் அரசாங்கம் பல்வேறுபட்ட அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டாலும் அது முஸ்லிம்கள் விடயத்தில் எட்டாக் கணியாகவே இருந்து வருகின்றது. காரணம் அங்கும் இன ரீதியிலான பாகுபாடுகள் தற்போதும் இருந்து வருகின்றன. யுத்த வெற்றிக்குப் பின்னர் வடமாகாணத்தின் அபிவிருத்தி மீள் குடியேற்றம் என்பன வற்றிற்கு பல கோடி ரூபாய்களை அரசாங்கம் ஒதுக்கியிருந்தும் அதனை வடமாகாண சபை சரியான முறையில் மேற்கொள்ள வில்லை. தேவையானவர்களுக்கு அவர்களின் தேவைகள் இனங்காணப்பட்டு நிவர்த்தி செய்யப்பட வில்லை. அதிகமான நிதி மீண்டும் அரசுக்க திரும்பிச் சென்றதையும் அரசியல் வாதிகளும், பாராளுமன்ற உறுப்பினர்களும் அடிக்கடி தெரிவித்து வருவதை ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகின்றது.

வடமாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம்களுக்கு அரசு வழங்கிய நிதியினை வடமாகாண சபை வழங்க வில்லை, வீடமைப்புத் திட்டங்களை ஏற்படுத்திக் கொடுக்க வில்லை. தொழில் துறைகளுக்கான உதவிகள் உரிய முறையில் வழங்கப்பட வில்லை, வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட வில்லை போன்ற பல விடயங்களை சுட்டிக் காட்டலாம். இவ்வாறு விட்ட பிழகைளுக்கு யார் பொறுப்புக் கூறுவது? போன்ற விடயங்கள் இன்று பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் காப்படும் சந்தேகங்களாகும். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் என்ற அடிப்படையில் வடக்கில் வாழ்ந்த அனைவருக்கும் உதவிகளும், இழப்பீடுகளும் வழங்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை. என்றாலும் முஸ்லிம்கள் விடயத்தில் பாகுபாடு பாட்டப்பட்டுள்ளமை இன ஒற்றுமைக்கு குந்தகத்தை ஏற்படுத்தும் ஒன்றாகவும் பார்க்கப்படுகின்றது.

இதேவேளை யுத்த வெற்றிக்குப் பின்னரான காலத்தில் இலங்கை வாழ் முஸ்லிம்கள் மீது இனவாத தாக்குதல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டதன் காணரமாக நாடளாவிய ரீதியில் முஸ்லிம்கள் மீதான பொய்யான வெறுப்புப் பிரச்சாரங்களும், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் முஸ்லிம்களின் உடமைகள், வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைகள் என அணைத்தும் இலக்கு வைக்கப்பட்டு சூறையாடியும், தீயிட்டும், அடித் நொறிக்கியும் சேதமாக்கப்பட்டு வரும் நிலைமைகள் முஸ்லிம்களை பொருளாதார ரீதியாக பின்னடைய வைக்கும் விடயங்களாகவும் காணப்படுகின்றது. யுத்த இழப்புக்களுக்கு அப்பால் இனவாத செயற்பாடுகளாலும் முஸ்லிம்கள் பல கோடிகளை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருக்கின்றனர்.

முக்கியமாக இனவாத செயற்பாடுகளால் அச்சம் கொண்ட பல முஸ்லிம்கள் தமது சொந்த தொழிற் துறைகளை விட்டுவிட வேண்டிய நிலைக்கு பின்தள்ளப்பட்டுள்ளனர். அத்துடன் இழந்த இழப்புக்கள்கூட சரியான முறையில் வழங்கப்படாது புறக்கணிக்கப்பட்டு வரும் விடயங்களும் முஸ்லிம் சமுகத்தினை கவலை கொள்ளச் செய்துள்ளது.

முன்னைய காலங்களில் இலங்கையில் வர்த்தகத் துறையில் முதன்மை வாய்ந்தவர்களாக முஸ்லிம்களே காணப்பட்டுள்ளர். இதன் காரணமாக நாட்டின் பொருளாதார அபிவிருத்தி நல்லதோர் முன்னேற்றத்தைக் கண்டிருந்தது எனலாம். இன்றைய காலங்களில் இனங்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள ஒற்றுமையற்ற தன்மைகளும், குழப்ப நிலைமைகளும், யுத்தக் காரணங்களும் முஸ்லிம்களை அதிகம் பாதித்து பொருளாதார வீழ்ச்சிக்கு வித்திட்டுள்ளது எனலாம்.

எனவே பாதிக்கப்பட்ட வடமாகாண முஸ்லிம்கள் உள்ளிட்ட நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகள் காரணமாக பாதிக்கப்பட்ட சகல முஸ்லிம்களினதும் இழப்புக்களை சரியான முறையில் அளவிட்டு அவர்களுக்கான இழப்பீடுகளை வழங்கி அவர்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய விடயத்தில் அரசாங்கம் அதீத கவனஞ் செலுத்தி தமது நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலமே பாதிப்புக்குள்ளானவர்கள் நிவாரணம் பெறுவர் என்பதுடன் ஏனைய சமுகங்களுடன் சரிசமனாக இந்த நட்டில் வாழும் ஒரு சமாதான சூழல் ஏற்படும் எனலாம்.

தேர்தல்களை எதிர்கொள்வதற்காக தம்மைப் பலப்படுத்திக் கொள்ளத் தொடங்கியுள்ள தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் மத்தியில், இப்போது, சர்ச்சைகளும், விரிசல்களும் கூட அதிகரிக்கத் தொடங்கியிருக்கின்றன.

இது, தமிழ் மக்கள் மத்தியில் தமிழ்த் தேசிய அரசியலின் எதிர்காலம் பற்றிய கவலைகளை அதிகரிக்கச் செய்திருக்கிறது.

மக்கள் முன்னணி, விக்னேஸ்வரனின் பக்கத்தில் இருந்து ஒதுங்கிக் கொள்ள ஆரம்பித்தது.

இரண்டு கட்சிகளையும் எப்படியாவது இழுத்துப் பிடித்து, அடுத்த தேர்தல்களில் ஒரே வண்டியில் பூட்டி விடலாம் என்று கனவு கண்டு கொண்டிருந்த விக்னேஸ்வரனுக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ் அண்மையில் நடத்திய மாநாடு அதிர்ச்சியான விளைவையே கொடுத்திருக்கிறது.

திரகுமார், சுரேஸ் பிரேமச்சந்திரன், கடைசியாக விக்னேஸ்வரன் என்று மூன்று தரப்புகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு சென்ற போதும், அதே ஒற்றுமையை தமிழ் மக்கள் வலியுறுத்தினர். ஆனால் அதனை அவர்கள் யாரும் செவிமடுக்கவில்லை.

இப்போது குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை என்று நியாயப்படுத்திக் கொண்டிருக்கிறார் விக்னேஸ்வரன்.

அழுத்தி அழுத்தி அவர் கூறி வந்தார்.

அது , மாத்திரமன்றி, தமிழ் மக்கள் கூட்டணியை அறிவிப்பதற்கு முன்னர் தமது கட்சியின் செயலாளர் கஜேந்திரனுடன் நடத்திய பேச்சுக்களின் போது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் தாம் கூட்டுச் சேரக் கூடாது என்று இந்தியா விரும்புகிறது என்பதை விக்னேஸ்வரன் தெரியப்படுத்தினார் என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருந்தார்.

# வலிமையடையுமா தமிழ் தேசியம்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றான- வலுவான ஒரு தலைமைத்துவத்தை உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்த தரப்புகள் இப்போது, தமக்குள் முரண்பட்டுக் கொண்டு இரண்டாக பிளவுபட்டு நிற்கின்ற சூழல் ஏற்பட்டிருக்கிறது.

சி.வி.விக்னேஸ்வரனை மையப்படுத்திய மாற்றுத் தலைமையை உருவாக்குவதற்கு ஆரம்பத்தில் இருந்தே முயற்சித்து வந்த ஈ.பி.ஆர்.எல்.எவ்.வுக்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையில் தோன்றிய விரிசல் தான் இதற்குக் காரணம். இந்த விரிசல் இப்போது இன்னும் அதிகமாகி விட்டது. தமிழ் மக்கள் கூட்டணி என்ற தனிக்கட்சியை விக்னேஸ்வரன் உருவாக்கியதை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விரும்பவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றான ஒரு தரப்பாக தம்மைக் கட்டியெழுப்பும் கனவுக்கு அது பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால், விக்னேஸ்வரன் ஒரு கட்சியை உருவாக்குவது ஆபத்தானது என்றே கஜேந்திரகுமார் தரப்பு கருதியது. அதனால் தான், தமிழ் மக்கள் கூட்டணியின் ஆரம்ப கூட்டத்தில் கூட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பங்கேற்கவில்லை. ஆனாலும், தேர்தல் ஒன்று வரும்போது, விக்னேஸ்வரனின் கட்சியுடன் இணைந்து போட்டியிடக் கூடிய சாத்தியங்கள் அதிகமாகவே இருந்தன.

ஆனால், இப்போதைய நிலையில், தமிழ் மக்கள் கூட்டணியுடன் இணைந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போட்டியிடும் வாய்ப்புகள் குறைந்து கொண்டு வருவதாகவே தெரிகிறது.

இதற்கு முக்கியமான காரணம் ஈ.பி.ஆர்.எல்.எவ். உள்ளூராட்சித் தேர்தலில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டு விட்டு, கடைசி நேரத்தில் ஆனந்தசங்கரியின் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து கொண்டது ஈ.பி.ஆர்.எல்.எவ். தம்மை நம்ப வைத்து கழுத்தறுத்து விட்டார் சுரேஷ் பிரேமச்சந்திரன் என்பது கஜேந்திரகுமாரின் முடிவு. சுரேஷ் பிரேமச்சந்திரனின் இந்த முடிவுக்குப் பின்னால், இந்தியா இருக்கலாம் என்ற கருத்தையும் அவர் முன்வைத்திருக்கிறார்.

தமிழ் மக்கள் கூட்டணியுடன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஒட்டிக்கொண்ட பின்னர், தமிழ்த் தேசிய

யாழ்ப்பாணத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ் நடத்திய பிராந்திய மாநாட்டில், விக்னேஸ்வரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார். அதில் ஈ.பி.ஆர்.எல்.எவ் வுக்கும் தனக்கும் எந்தளவுக்கு நெருக்கம் உள்ளது என்று வேறு நெகிழ்ச்சியாக உரையாற்றியிருந்தார்.

அந்த நிகழ்வில் விநியோகிக்கப்பட்ட ஒரு வரலாற்று ஆவண இதழ், விடுதலைப்புலிகளின் படுகொலைகளை விரிவாகப் பட்டியலிட்டிருந்தது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான அரசியலை தாம் முன்னெடுக்கவில்லை என்று ஈ.பி.ஆர்.எல்.எவ் நியாயப்படுத்தியிருந்தாலும், அவர்களின் இந்த ஆவணப்பதிவு, அரசியலில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஊடகப் பரப்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ் கடுமையான எதிர்வினைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த ஆண்டியைப் போல முடிந்திருக்கிறது கதை.

1988-90இற்கு இடைப்பட்ட காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ், இந்திய அமைதிப்படையுடன் இணைந்து எந்தளவுக்கு அடாவடித்தனங்களில் ஈடுபட்டது என்பதை தோலுரிக்கும் வகையில் ஏராளமான கட்டுரைகள், பதிவுகள் இணையங்களிலும், சமூக ஊடகங்களிலும் பரவிக் கொண்டிருக்கின்றன.

விடுதலைப் புலிகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைத்துக் கொள்ளப்பட்ட பின்னர், ஈ.பி.ஆர்.எல்.எவ்.வின், தரத்தை யாரும் பரிசோதித்துப் பார்க்க முயற்சிக்கவில்லை. புலிகளின் படுகொலைகளை அடையாளப்படுத்தி அரசியல் நடத்த முயன்ற பின்னரே, ஈபிஆர்எல்எவ்வுக்கு இந்தச் சோதனை வந்திருக்கிறது. இந்தச் சூழலை ஈ.பி.ஆர்.எல்.எவ் நிச்சயமாக எதிர்பார்த்திருக்காது. விக்னேஸ்வரனும் எதிர்பார்த்திருக்கமாட்டார்.

எதிர்வினைகள் வரத் தொடங்கியதும், விக்னேஸ்வரன் தனது வழக்கமான கேள்வி- பதில் அறிக்கையில், ஈ.பி.ஆர்.எல்.எவ் நிகழ்வில் பங்கேற்றது சரியே என்ற வாதத்தை முன்வைத்திருந்தார்.

அனைத்துத் தரப்புகளையும் அரவணைத்துச் செல்ல வேண்டும் என்ற பிரபாகரனின் வழியையே தான் பின்பற்றுவதாகவும், அதில் கூறியிருந்த அவர் குற்றம்பார்க்கின் சுற்றம் இல்லை என்று பழமொழியை வேறு துணைக்கு அழைத்திருந்தார்.

தமிழர் தரப்புக்குள் ஒற்றுமை முக்கியம். கஜேந்

விக்னேஸ்வரன் அந்த அறிக்கையில் ஈ.பி.ஆர்.எல்.எவ் மேடையில் தான் ஏறியதை சரியானதே என்று கூறியது, அவரது உரிமை. விருப்பம். ஆனால், அந்த அறிக்கையில் ஒரு வசனத்தைச் சேர்க்கப் போய் வில்லங்கத்தில் சிக்கியிருக்கிறார்.

கஜேந்திரகுமார் சற்று இறங்கி வந்தால், அவரது மேடையிலும் ஏறுவதற்கு நான் தயார் என்று அவர் குறிப்பிட்டது தான் சிக்கலை இன்னும் தீவிரப்படுத்தியிருக்கிறது. விடுதலைப் புலிகளைப் படுகொலையாளர்களாக ஈ.பி.ஆர்.எல்.எவ் வெளியிட்ட ஆவணம் தொடர்பாக, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோ , கஜேந்திரகுமார் பொன்னம்பலமோ எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.

இப்படி ஒரு ஆவணத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டிருந்தால் அதற்கு எதிராக ஒரு ஊடகச் சந்திப்பை கஜேந்திரகுமாரோ, கஜேந்திரனோ விழுந்தடித்துக் கொண்டு நடத்தியிருந்திருப்பார்கள். துரோகிகள் என்று பட்டம் கட்டியிருப்பார்கள். ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆவணத்தைப் பற்றி அவர்கள் அமைதி காத்துக் கொண்டிருக்க, விக்னேஸ்வரன் தேவையின்றி அந்த விவகாரத்துக்குள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை இழுத்து வந்தார். இது அந்தக் கட்சியினரை கொதிப்படைய வைத்திருக்கிறது. தேர்தல் கூட்டுகளுக்காக கொள்கைகளை விட்டுக்கொடுத்து இறங்கி வரமாட்டோம் என்று அதற்குப் பதிலடியைக் கொடுத்திருக்கிறார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் மணிவண்ணன். விக்னேஸ்வரனின் கருத்துக்கு, கஜேந்திரகுமார் இன்னமும் பதிலளிக்கவில்லை. ஆனாலும், தனது கட்சியினரை வைத்து பதிலளிக்கச் செய்திருக்கிறார். கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தைப் பொறுத்தவரையில், சில அனுமானங்கள், சந்தேகங்களை வைத்திருக்கிறார். அதில் ஒன்று சுரேஸ் பிரேமச்சந்திரனை இந்தியாவே ஆட்டுவிக்கிறது என்பது. இன்னொன்று, தங்களுடன் விக்னேஸ்வரன் அரசியல் ரீதியாக இணைந்து செயற்படுவதை இந்தியா விரும்பவில்லை அல்லது தடுக்கிறது என்பது. பல்வேறு செவ்விகளில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்தக் கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

சுரேஸ் பிரேமச்சந்திரன் இந்தியாவுக்குச் சென்ற பின்னர் தான், உள்ளூராட்சித் தேர்தலில் ஆனந்தசங்கரியின் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தார் என்பதை

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தீவிரப் போக்கை இந்தியா விரும்பவில்லை என்று காட்டிக் கொள்வதை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்பு தமக்கான ஒரு தனித்துவ அடையாளமாக - பலமாக - பிரசாரமாக- முன்னெடுப்பதாகத் தோன்றுகிறது.

இந்தியாவுக்கு நெருக்கமான தரப்புகளுடன் இணைந்து கூட்டணி அமைக்கும் போது, தமது குரல் அல்லது நலன் அடிபட்டுப் போய் விடுமோ என்ற பயமும் அவர்களுக்கு இருக்கலாம்.

ஏற்கனவே இருக்கின்ற செல்வாக்கை இன்னும் வலுப்படுத்தினால், மாற்றுத் தரப்பாக தாம் உயர்ந்து விடலாம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கணக்குப் போடுகிறது. இந்தச் சூழலில் தான், விரிசலை இன்னமும் அதிகப்படுத்தி விட்டிருக்கிறது ஈ.பி.ஆர்.எல்.எவ். இது அந்தக் கட்சிக்கு சாதகமானது. வேட்புமனுக்களில் அதிக இடங்களைப் பிடிக்கலாம், தமிழ் மக்கள் கூட்டணியில் உள்ள பிரபல மற்றவர்களுக்குப் பதிலாக, தமது கட்சியில் உள்ள பிரபலமானவர்களை போட்டியில் நிறுத்துவதால் வாய்ப்புகள் அதிகம் கிடைக்கும் என்றும் ஈபிஆர்எல் எவ் திட்டமிட்டிருக்கலாம்.

அதற்கு அப்பாற்பட்ட நோக்கங்களும், அவர்களிடம் இருக்காது என்று கருத முடியாது.


இந்த நெருக்கடியினால் விக்னேஸ்வரனின் தலைமையில் ஒரு அணியாகவும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு அணியாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றொரு அணியாகவும் போட்டியிடக் கூடிய சூழலே தோன்றி வருகிறது.

இந்த நிலை ஆபத்தானது. உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகள் மும்முனைப் போட்டியை நடத்தி, பேரினவாதக் கட்சிகள் தலைதூக்கவே வழிவகுத்துக் கொடுத்தன. மாகாணசபைத் தேர்தலிலும், அடுத்த பாராளுமன்றத் தேர்தலிலும், தமிழ்த் தேசியக் கட்சிகள் மூன்று பிரிவுகளாக போட்டியில் குதித்தால், குரங்கு அப்பத்தை பங்கிட்ட கதையாகத் தான் முடியும்.

தமிழர்களின் தலைவிதியை அத்தகையதொரு நிலையை நோக்கித் தான், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் கொண்டு சென்று கொண்டிருக்கின்றன.

இப்படியானதொரு நிலையில், மூன்று பேருக்கும் வேண்டாம் என்று தெற்கின் பக்கம் தமிழர்களின் வாக்குகள் திரும்பினால் நிலைமை என்னவாகும் ?





# கருணா வின்சென்ட்; ஈழத்து ஓவிய மரபின் தொடர்ச்சி

கலைகளில் அவள் ஓவியம் என்பது பிரபலமான திரைப்படப் பாடல் வரி.

ஓவியக் கலைக்கு கவிஞர் கண்ணதாசன் கொடுத்த சிறப்பு அது. மனிதக் கண்கள் பார்க்கத் தொடங்கும்போதே ஓவியமும் இணைந்து விடுகிறது.

அவள்தான் எனக்கு முதல் ஓவியம் என்பதுதான் கவிஞரின் கற்பனையாக இருக்கலாம்.

பொதுவாகவே கலைகளுக்கு இதுதானென்று ஒரு வரலாற்றைத் தீர்மானிக்க முடியாது. மனித சமூகத்தின் ஆரம்பகால வளர்ச்சியோடு அவை ஒவ்வொரு கட்டடத்தில் ஒவ்வொரு ரூபத்தில் இணைந்திருக்கின்றன.

கூத்து, இசை, நாடகம் என்பன எப்போது ஆரம்பித்தன என்று சொல்லமுடியாது. ஓவியம் என்பது குழந்தைக்கு சந்திரனைக் காட்டி உணவு தீத்துவதிலிருந்து ஆரம்பிக்கின்றது. தூரத்தில் தெரியும் மாட்டைக்காட்டி ஆட்டைக் காட்டி உணவூட்டுவதிலிருந்து தொடங்குகிறது. சந்திரனைக்காட்டி 'உம்மாண்டி' என்பதோ அல்லது அவ்வைப்பாட்டி என்பதோ எதுவானாலும் குழந்தைக்கு அங்கு நவீன ஓவியம் தொடக்கிவிடப்படுகிறது.

நவீன ஓவியம்

17 ஆம் நூற்றாண்டில் வந்த காமராப்பெட்டி மரபு வழியாக வந்த ஓவியர்களின் வயிற்றில் நெருப்பைக் கொட்டத்தொடங்கியது.

மரபுவழி வந்த ஓவியர்கள் தமது ஓவியங்களில் வரையறுக்கப்பட்ட

பரிணாமம், இணக்கப்பாடு , சமநிலை,அமைவு , நிறச் சேர்க்கை போன்ற பல அம்சங்களை மரபு ரீதியான ஓவியர்கள் வரையறுத்தனர். வித்தியாசமான அபூர்வமான கலைத்தன்மைவாய்ந்தவர்களாக இருந்தனர்.

அரசர்களையும் , இராணிகளையும் , நிலச்சுவாந்தர்களையும் பண்ணையார்களையும் அவர்களின் பாரியார்களையும் நீண்ட நேரம் இருத்தி வைத்து படம் வரைந்து அதற்கான பண்டத்தைப் பெற்று வந்த மரபு வழி ஓவியர்களுக்கு நொடிப் பொழுதில் விமபத்தைப் பிரதிசெய்யும் 'கமரா' பெருஞ் சோதனையாயிற்று.

ஓவியம் பற்றிய முரணான கருத்தமைவுகள் தோன்றத்தொடங்கின. மரபு ஓவியத்திலிருந்து நவீன ஓவியம் ஆரம்பமாயிற்று. மனபதிவுவாதம் என்ற கொள்கை உருவாயிற்று. நவீன ஓவியம் மரபு ஓவியத்திற்கு முன்னதாகவே மாந்த்ரீகம் போன்ற விடயங்களில் பயன்பாட்டில் இருந்தது. எனினும் நவீன ஓவியங்கள் என்பவை விவேகம் சார்ந்தவையாக அமைந்தமை எனவும் முன்பு இருந்தவை மாந்திரீகங்களுக்கு பயன்பட்டவை எனவும் கருதப்பட்டது.



### யாழ்ப்பாணமும் மேற்கு ஓவியமும்

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் ஓவியத்திற்கு என்று ஒரு மரபு இருக்கவில்லை. மேற்கத்தைய பாணி ஓவியங்கள் பாடசாலைகள் மூலம் ஊட்டப்பட்டது. ஆங்கிலேயர் தமது விட்ட்டோரிய தத்ரூபப் பாணி ஓவியங்களை அறிமுகம் செய்தனர்.

யாழ் ஓவிய வரலாற்றில் எம்மாற் குறித்துச் சொல்லக் கூடிய ஒருவர் ஓவியப் பாடக் கல்வியதிகாரி எஸ் ஆர் கனகசபை அவர்கள். குகீஓ அவர்கள் இரட்டுத்துணியில் 'ஆயில் பெயிண்ட்'(எண்ணெய் வண்ண) ஓவியங்களை முதன்முதல் ஆரம்பித்த ஒருவர். இது மேற்கத்தையப் பணியாகும்.

மாற்கு மாஸ்டர், எஸ் ஆர் கனகசபை அவர்கள் தான் மேற்கத்தியப்பாணியை எம்மிடத்தில் அறிமுகம்செய்தவர் எனவும் அதனை அன்று பலர் பின்பற்றுவதாகவும் தனியே ஒரு ஓவிய இன்ஸ்பெக்டராக இருக்காமல் பல விடயங்களைத் தேடி அறிந்த ஒருவர் அவர் என்றும் எஸ் ஆர் கே பற்றிச் சொல்வார். எஸ் ஆர் கனகசபையின் பணி இலங்கை ஓவிய வரலாற்றில் முக்கியம்பெற்ற 43 குழுவினருடன் தொடர்புடையது.

எஸ்.ஆர்.கே ஆரம்பித்த வின்சர் ஓவியக் கழகத்தின் பணியும் எமது ஓவிய வரலாற்றில் முக்கியமானது.

1938 மார்ச்சில் கோப்பாயில் தொடக்கப்பட்ட வின்ஸர் ஆட்கிளப்பில், எஸ்.ஆர்.கே.யின் வழிகாட்டலில் ஓவியப்பயிற்சிகளில் ஈடுபட்ட இராசையா, எம்.எஸ்.கந்தையா. கே. கனகசபாபதி, ஐ, நடராசா, க. இராசரத்தினம் என்போர் பின்னாளில் புகழ்பெற்ற ஓவியர்களாகப் பரிணமித்தனர். ஓவியரும் நாடகத் தயாரிப்பாளருமான சானா வும் வின்ஸர் ஆட்கிளப்புடன் .தொடர்புடையவராயிருந்தவராவார்.

நாம் இன்று காணும் நவாலியூர்ச் சோமசுந்தரப்புலவரின் படம் அமரர் எஸ் ஆர் கே யினால் வரையப்பட்ட படமாகும்.

### மாற்குவும் அவர் விழுதுகளும்

எஸ் ஆர் கே யின் மறைவின் பின்னர் ஓவியர் மாற்குவுடன் இணைந்து சிலரால் ஆரம்பிக்கப்பட்டது விடுமுறைக்கால ஓவியக் கழகமாகும். நியூசீலாந்தில் வதியும் ஓவியர் அற்புதசிங்கம் இங்கு ஒரு வர்த்தக ஓவியராகவும் அரங்க அமைப்பு ஓவியராகவும் பணியாற்றுபவர்.

இந்த விடுமுறைக்கு கழகத்தில் பயின்ற இவருடன் ரமணி ,செல்வநாதன் , தங்கராஜா , புகழேந்தி , ஞானமலர் , பேபி ஆகியோரும் வேறு சிலரும் பயின்றுள்ளனர். விசாகப்பெருமாள் , சுவாம்பிள்ளை ஆகியோர் ஆசிரியர்களாக இங்கு பணிபுரிந்துள்ளார்கள்.



நவீன ஓவியத்தை எங்களுக்கு அறிமுகம் செய்ததில் மாற்கு மாஸ்டருக்கும் விடுமுறைக்கால ஓவியக் கழகத்திற்கும் பெரும் பங்கு உண்டு .

மாற்கு மாஸ்டர் ஹாட்லிக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் கரவெட்டி சயன்ஸ் சென்ரரிலும் ஓவிய வகுப்பினை நடத்திவந்தார். நானும் அங்கு அவரது மாணவராகச் சேர்ந்து சுமார் ஒரு வருடத்துக்கும் மேலாக படிக்க முடிந்ததை இங்கு குறித்தல் பொருத்தமாகும்.

உயர்தரக் கல்வி ,வேலைவாய்ப்புகள் என்பவற்றின் வாழ்வியல் சூழலின் வகிபாகங்களினால் இந்த வகுப்பும் முடிவுக்கு வந்தது. அவரது மாணவர்களின் ஓவியங்களை கண்காட்சிகளாக நடத்துவது அவரது ஊக்குவிப்பில் ஒன்று.

என்னைப் பொறுத்தவரையில் எனது தொலைக்காட்சி நெறியாள்கைக்கு அமைப்பிலிருந்து ண்டணிஞண் ண்னுடூனுஞிஞடிணிண ,காடசித் தெரிவு ,வண்ணச் சேர்க்கை என்பவற்றில் மாற்குவின் பயிற்சி என் ஆளுமையில் பக்கத்துணையாக இருந்தது.

மாற்கு மாஸ்டரின் மாணவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாக அருந்ததி , வாசுகி , நிர்மலா, வைதேகி போன்றோர் தொடர்ந்தும் தமது ஆற்றலை வெளிப்படுத்தி நின்றவர்கள். பல்கலைக் கழகம் வரை அதனைத் தொடர்ந்தவர்களும் இவர்களில் அடங்குவர்.

80களில் உச்சம் பெற்ற ஈழத்தமிழோவிய வரலாறு பின்னர் கோட்டு முறைச் சித்திர வகையில் இளையவர்களைக் கவர்ந்தது. 80 களின் பின்னர் கைலாசநாதன் ,நிலாந்தன் சனாதனன் போன்றவர்கள் குறிக்கத் தகுந்தவர்களாகின்றனர். இவர்களது ஓவியங்கள் மேற்குறித்த நவீன பாணிகளினின்றும் வித்தியாசமானவையாகின.

கணினியின் வருகை

கணினியின் வருகை அதில் ஆர்வம் கொண்ட இளையவர்களின் ஓவிய ஆளுமை நவீன ஓவியத்தில் புதுமையையும் அறிவார்ந்த மட்டத்தையும் தோற்றுவித்தது. இணையங்களின் வருகையினால் ஓவியங்கள் மீதான பார்வையாளர்களின் ரசனை மட்டத்தை மேவக்கூடிய வகையில் எம்மவர்கள் சிலர் இந்த ஓவிய முறையிலும் தங்கள் ஆற்றலை வெளிப்படுத்தினர்.

ஊடகங்கள்

நவீன ஓவியங்களை வெகுசன ஊடகங்கள் ஊக்குவிக்காமை எம்மத்தியில் அவை வீச்சான வளர்ச்சியை அடைய முடியவில்லை.சில சஞ்சிகைகள் மட்டுமே முக்கியத்துவம் கொடுத்தன. யேசுராசாவின் அலை , உமாவரதராஜனின் வியூகம் , மூன்றாவது கண் போன்றன குறிப்பிடத்தக்கவை . சரிநிகர் ,திசை ஆகிய பத்திரிகைகளைத் தவிர தேசிய வார இதழ்களில் தினக்குரல் 90 களில் நவீன ஓவியங்களை உள்வாங்கியது. மக்களின் ரசனைக்கு முன்னர் ஊடகங்களின் பொறுப்பாளர்களுக்கும் ஆசிரிய பீடத்திலுள்ளவர்களின் நவீன ஓவியம் தொடர்பான ரசனையும் புரிதலும் ஈழத்து தமிழோவிய வளர்ச்சியில் முக்கிய மானதொன்றாயிற்று.

மேற்கின் பாணி இந்தியாவிலும் மட்டுமல்ல சீனாவிலும் ஓவியர்களிடத்தில் கலந்து கொண்டது. அதுபோலவே நவீன ஓவியங்களும் தென் இந்திய சஞ்சிகைகளில் பிரவேசிக்க எமது வாசகர்களின் புரிதலுடன் எங்களது வார இதழ்களிலும் அது படிப்படியாக அரங்கேறியது.

### வர்த்தக ஓவியம்

இதே வேளை வர்த்தக ஓவியங்கள் என்று ஒரு புதிய கலைவடிவத்தின் தோற்றம் ஓவியத்தின் அடுத்த பரிமாணமாகியது .

சிங்கள ஓவியர்கள் பற்றியவிவரணமான 'டெலிதுட' (டெலி -தூரிகை) என்ற தொடர் தொலைக்காட்சி விவரண நிகழ்ச்சிக்கு நான் தயாரிப்பு உதவியாளனாக (ஓவியத்தில் ஆர்வமுள்ளவனாக இருந்தமையால் அதன் நெறியாளர் காமினி அபேய்கோன் -(இவரும் இலங்கையின் சிறந்த ஓவியர்களில் ஒருவர்)- எனது விருப்பத்தின் பேரில் என்னையும் தமது தயாரிப்புப் பணியில் இணைத்துக்கொண்டார். அதன்போது பல ஓவியர்களுடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது.

சிலர் தாம் ரமணி மாஸ்டருடன் கற்றதாகவும் ரமணி ஒரு சிறந்த ஓவியர் ஆனால் அவர் வர்த்தக ஓவியத்துக்குள் தம்மை இணைத்துக்கொண்டுவிட்டார் என்று சொல்வார்கள். சிங்களத்தில் உள்ள சிலரின் பெயர்களை சொல்லி அவர்களை போல என்பார்கள்.

மரபு , நவீன ஓவியங்களின் அப்பால் - வர்த்தக ஓவியம் என்று ஒன்று இவற்றுக்குச் சமாந்தரமாக கோடு போடத்தொடங்கியது .

### கருணாவும் ஓவியமும்

மனித வரலாற்றுடன் இணைந்த ஓவியமும் சிற்பமும் மதங்களுடன் இணைந்தவை . சித்தன்ன வாசல்,குகை ஓவியங்களும் ஆசீவக இந்தியாவின் துறவிகளுடையது என்றும் சைன சமயத்தினருடையது என்றும் இருவேறுபட்ட கருத்துகள் கொண்டவை .அஜந்தா ஓவியங்களைப் போன்று தனிச்சிறப்பு மிக்க இந்த ஓவியங்கள் சுமார் 1000 - 1200 ஆண்டு பழமையானவை.

கத்தோலிக்க மதத்திலும் ஓவியங்களும் சிற்பங்களும் நன்கு பிணைந்தவை. விபரங்கள் இங்கு அவசியமில்லை. இங்கு ஆலயச் சுருபங்களும் , ஆலயத்திலுள்ள படங்களும் , கிறிஸ்துவின் திருப்பாட்டினைக் காட்டும் 14 தலங்களும், ஆலயப் பத்திருப்புகளும் , சாளரக் கண்ணாடிகளின் வண்ணங்களும் ஓவியமாய் அவை சொல்லும் தகவலும் கத்தோலிக்க ஆலயங்களில்முக்கியமானவை.

என் அன்புக்குரிய கருணா எனது நெருங்கிய உறவினர். அயலவர். அதனால் (தான்) எனது ஊரவர்.

எமது கரவெட்டி அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலிகளில் திருப்பலிப் பீட உதவிப்பையனாகவும் (Alter Boy)



திருச் சிலுவைபாதை என்ற நிகழ்வு கிறிஸ்துவின் திருப்பாட்டு நாட்களில் ஆலயத்தில் நடைபெறும்போது 14 தல ங்களிலும் ஒவ்வொரு தலத்தை நோக்கி அசைகையில் சிலுவையை ஏந்திச் செல்லும் பையன்களில் ஒருவராகவும்

இருந்த நாட்கள் நான் அவரை நினைக்கும் போது வண்ண அலைகளாய் வருவதுண்டு. ஒழுங்காக ஆலயப்பணிகளில் சிறுவயதில் ஈடுபடுவதில் ஆர்வம் மிக்க அவர் மிகவும் பக்தியான கத்தோலிக்கக் குடும்பத்தில் பிறந்தவர் அவர்.அவருடைய தந்தையார் வின்சென்ட் பருத்தித்துறை கலட்டி ரோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் அதிபராக பணியாற்றியவர். கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் செயலாளராக (வாக்காளர்களின் அமோக ஆதரவுடன்) நீண்டகாலம் பணியாற்றியவர். கரவெட்டியில் பல கத்தோலிக்க நாடகங்களை மேடையேற்றியவர். அண்மையில் பருத்தித்துறையில் வட்டாரக் கல்வியாதிகாரியாகப் பணியாற்றிய திருதுரைசாமி அவர்களை சந்தித்தேன். அவுஸ்திரேலியாவிலிருந்து தமது சகோதரியின் மரணச்சடங்கில்

கலந்துகொள்ள அவர் வந்திருந்தார். எனது தந்தையரின் நண்பர் அவர் என்ற வகையில் அவரிடம் என்னை அறிமுகம் செய்தபொழுது 'அப்பா போய்விட்டாரா என்ற கேள்விக்கு அடுத்த கேள்வியாக 'வின்சென்ட் மாஸ்டர் போய்விட்டாரா ?' என்று கேட்டார். (இவரும் 'போவதற்கு' விசா எடுத்த நிலையிலேயே காணப்பட்டார்) கல்விப் பணியிலும் கலைத்துறையிலும் நிருவாகத் திறமையிலும் முதன்மை பெற்ற ஒருவர் அமரர் வின்சென்ட்

கருணாவின் ஓவியங்களின் நிருமாணங்களிலும்

அப்பாத்திரங்களின் நெறிப்படுத்தலிலும் வின்சென்ட் மாஸ்டரின் நாடக இயக்குகையைக் காண்கிறேன். தாய் ரெஜினா ரீச்சர் பாடசாலையில் கதை சொல்வதற்கு மட்டுமன்றி எதனை விளக்குதற்கும் கரும் பலகையில் பட பட வெனப் படம் வரைந்து விளக்கும் ஆளுமை மிக்கவர்.

கருணா எனது தங்கையுடன் படித்தவர். மிகவும் அமைதியானவர்.(அப்போ) . சிறு வயதில் பாடசாலையில் அந்த நாட்களிலேயே ஓவியவேளைகளில் மட்டுமல்ல 'கைப்பணி' எனப்படும் hand work இலும் தாமாகவே புதுமையாகச் செய்துவருவார் என நாம் அறிந்துள்ளோம். அக்காலத்தில் வகுப்பு 1 இலிருந்து 5 வரை கைவேலை, ஓவியம், சங்கீதம் என்பன முக்கிய பாடங்கள் . எனது சகோதரி என்னை உதவியாகக் கொண்டு கைவேலைப் பொருட்கள் செய்து கொண்டு போவாள். 'கருணா என்ன கொண்டுவருமோ தெரியாது'என்ற எதிர்பார்ப்பு அவளிடம் இருக்கும்.

எனது தாயார் கருணாவின் சங்கீத ஆசிரியர் . கருணாவுக்கு சங்கீதத்திற்கு 10 (நூறுக்கு) புள்ளிகள் இட்டுவிட்டுவந்து 'ரெஜினா (கருணாவின் அம்மா) என்ன நினைக்குமோ தெரியாது கவலைப்படுவதை நான் கண்டுள்ளேன். ஆனால் எங்களது குடும்ப உறவில் என் தாயாரின் சிறந்த ஆலோசனைக்குரிய நண்பியாக கருணாவின் தாயார் இருந்துள்ளார்.

கருணாவின் தாய்மாமன் மரியநாயகம் கரவெட்டியில் மட்டுமல்ல ஈழத்தின் புகழ்மிக்க ஓவியர்களில் ஒருவர். நீர் வண்ணங்களில் அவர் வரைந்த 'காகமும் வடையும்', நரியும் திராட்சைப் பழமும் 'சிங்கமும் முயலும்' எனது வீட்டில் இருந்த ஓவியங்கள்.

எஸ்.எம்.வரதராஜன்
நியூசீலாந்து

கேட்ட தாலாட்டு இசைக்குப்பிறகு நான் பார்த்த ஓவியங்கள் அவை என்பேன். இன்றைக்கும் அவை என் மனதில் நினைவில் உள்ளன. எனது ஓவிய ஆர்வத்தை அவை ஊட்டியிருக்கலாம்.

ஊரிலும் தனிப்பட்ட முறையில் ஓவியப்பயிற்சியை மரியநாயகம் மாணவர்களுக்கு வழங்கியுள்ளார். வன்னியிலும் கனடாவிலும் அவரது தூரிகை கண்காட்சி வரை நீண்டுள்ளது.

மாற்கு மாஸ்டரின் ஓவியங்கள் கறுப்பையும் சிவப்பையும் அதிகமாக் கொண்டவை. அவர் வாழ்ந்த மண்,சூழல், உணர்வுகளின் மோதல்கள் யாவும் அவரின் வண்ணங்களில் பிரதிபலித்தன. ஓவியத்தில் கருமை என்பது வீரம், கிளர்ச்சி, உறுதி, வீரியம் என்பவற்றின் வெளிப்பாடு ஆகும் . பனைமரத்தின் கறுப்பு உறுதியின் அடையாளம் எனப்படும்.

கருணாவின் ஓவியங்களில் நான் பார்த்த அளவில் பசுமையை மலிந்து காண்கிறேன். கருணாவின் வீடு அமைந்த சூழல் கரவெட்டியில் நெல்லியடி என்ற நகரத்தின் தாழ்வாரம் எனலாம். பெரிய தோட்டத்தின் கரையோரமாக இது அமைந்துள்ளது. நெல்லியடியிலிருந்து மாலீசந்நதி வரைக்கும் ( அன்று) இத்தோட்டம் உள்ளதால் பெரிய தோட்டம் எனப்பட்டது. கருணாவின் வீட்டுக்குப் போவதானால் பச்சைப்பசேலென்ற மிளகாய், புகையிலை ,உருளைக்கிழங்கு செடிகளையும் மாடுகள் சுழற்றும் சூத்திரக் கிணறு , கிணற்றைக் காவல் காக்கும் காவலனான துலா, பூவரசு மரம்கொண்ட ஆடுகால் என்பனவற்றைத் தினமும் தாண்டுதல் வேண்டும். தோட்டத்தின் வரம்பும் பாதையும் செம்மஞ்சள் கலந்த மண் நிறம். கருணாவும் அவரின் குடும்பமும் இவற்றைத்தாண்டித்தான் அந்தோனியார் கோவிலுக்கு வரவேண்டும். கருணாவும் அவரது அம்மாவும் திரு இருதயக் கல்லூரிக்கு வரவேண்டும். அது கருணாவின் துளிர்ப்பருவக் காலம்.

மறுபுறத்தில் நெல்லியடி லக்ஸ்மி திரையரங்கினூடாக வரும் ஒழுங்கை இவர்களின் பிரதான பாதை. இந்த ஒழுங்கையில் தினமும் படக்கதை வசனம் கேட்கும் இளசுகள் ''சைக்கிளில் '' ஒரு காலையும் மறு காலை நிலத்திலும் வைத்து நிற்பதை அந்த ஒழுங்கையைத் தாண்டியவர்கள் இன்றும் மறக்க முடியாது. சைக்கிள் பழகுபவர்களை மறக்க முடியாது. நானும் பழகியிருக்கிறேன். லக்ஸ்மி தியேட்டர் ஒழுங்கையும் பெரிய தோட்டமும் அக்காலக் கரவெட்டிக் காதலர்களின் குறு நேரச் சந்திப்பிற்கான பாதுகாப்புப் பிரதேசம். பல கடிதங்கள் அரங்கேறிய ஒழுங்கை அது. சில கடிதங்கள் அரங்கேற்றத்துடன் மட்டும் முற்றுப்பெற்றிருக்கலாம். நெல்லியடியிலிருந்து லக்ஸ்மித் தியேட்டர் ஒழுங்கையினூடாக வந்து பெரிய தோட்டத்தில் ஏறி அதனூடாக கொடிகாமம் பிரதான வீதியைத் தாண்டுவது விரைவான பயணத்திற்காக.

இவற்றைத் தாண்டுபவர்கள் அக்காலத்தில் கண்ட காட்சிகள் கருணாவின் ஓவியங்களில் பதிவாகியுள்ளன. இவை அவரது மனபதிவாக இருக்கலாம். வான் கோ , போல் சிகன் போன்ற ஓவியர்கள் தாம் பார்த்தவற்றை அப்படியே வரையாமல் சிலமாற்றங்களை ஏற்படுத்தி பிற்காலத்தில் சுதந்திரமாக வரைந்துள்ளனர்.

என்னவோ எதுவோ பார்த்ததை பின்னர் வரைந்தாலும் அலலது பார்த்துத்தான் வரைந்தாலும்

அவற்றுக்கான இலக்கண வரம்புகளை விட்டு விலகாமல் இருக்கும்போதே அவை ஓவியத்திற்கான பண்பைப் பெறுகின்றன.

மாற்கு மாஸ்டரிடம் நான் ஓவியம் பயிலச்சென்றபொழுது அவர் முதலில் என்னை இயல்பாக வரையச் சொல்லி எனது ஓவியத் திறமையை படம்பிடித்தார். அதன் பின்னர் முறையாக ஒரு மனிதனை அவன் அங்கங்களை வரைவதற்கான பயிற்சிகளைத் தந்தார். அது தொடர்ந்து நவீன ஓவியங்களை நாம் தேடும், சுவைக்கும் இயல்பினையும் எமது சுயமான கோடுகளையும் வர்ணத் தேடல்களையும் நம்முள் உருவாக்கின .

கருணாவின் ஓவியங்களில் அவருக்கான கோடுகளையும் வண்ணங்களையும் தேடும் சுயத்தினைக் காணமுடிகிறது.

திரைப்படம் ஒன்றிக்கு எவ்வளவுக்கு பின்னணி இசை 'ரீ ரெக்கோர்டிங்கில்' தேவையில்லையோ அதுபோலவே ஓவியங்களிலும் தேவையற்ற கோடுகளின் தேவையென்பது அவசியமற்றது என்பதை கருணாவின் படங்களில் காணமுடிகிறது.

14 ஆம் பக்கம் பார்க்க....

# போதைப் பாவனையும் இன்றைய இளைஞர் சமுதாயமும்

போதைப் பொருள் பாவனை நாடளாவிய மட்டத்தில் மோசமாக அதிகரித்து வரும் நிலையில் அதனை ஒழிப்பதற்கான கடும் நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்து வருகின்றது. இருந்தபோதிலும் நாளாந்தம் போதைப்பொருள் பாவனை குறித்த செய்திகள் வந்தவண்ணமே இருக்கின்றன.

உலகளாவிய ரீதியில் 15-64 வயதுக்கு இடைப்பட்ட 243 மில்லியன் மக்கள் போதைக்கு அடிமையாகி வருகின்றனர். இவர்களுல் 80% ஆண்களும் 20% பெண்களும் அடங்குவர். கடந்த மூன்றாண்டு காலமாக 6 லட்சம் பேர் போதைவஸ்து பாவனை காரணமாக உயிரிழந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை வெளியிட்டுள்ளது.

உலக நாடுகள் எல்லாம் போதைப் பொருள் கடத்தலுக்கு எதிராகக் கடுமையான சட்டங்களைக் கொண்டு வந்து கட்டுப்படுத்தி வருகின்றன. ஆனால் ஹெரோயின், கஞ்சா போன்ற பொருட்களை விற்பதும் பிற நாடுகளுக்கு கடத்துவதும் இன்று வரையிலும் பெரும் இலாபம் தரும் தொழிலாக தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

உலகளாவியரீதியில் அதிகரித்துவரும் போதைப்பபொருள் பாவனையினை கட்டுப்படுத்தும் வகையில் 1987 ஆம் ஆண்டு ஜூன் 26 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையினால் போதைப் பொருள் ஒழிப்பு மற்றும் சட்ட விரோத கடத்தல் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை ஒவ்வொரு ஆண்டும் உலக நாடுகளில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது

தொழிற்பாடு, குருதியுறைதலிற்கு அவசியமான பதார்தங்களின் தொகுப்பு என்பன இடம்பெறுதல் தடைப்படும். குடற்புண்கள், இரத்தவாந்தி, இரத்தவயிற்றுப்போக்கு, சதை அழற்சி என்பன ஏற்படலாம். உடலில் நச்சுப்பதார்தங்களின் சேர்க்கையால் இவ் நச்சுப்பதார்தங்களே பல தொகுதிகளில் அல்லது உடலுறுப்புக்களில் புற்றுநோயைத் தோற்றுவிக்கலாம். பலவீனமான இதயம் மற்றும் குருதிச் சுற்றோட்டத் தொகுதியால் இதயத்தாக்கு மற்றும் உயர் குருதியழுத்தத்திற்கு உட்படுதல். மூளை மற்றும் சுற்றியல் நரம்புகளில் தற்காலிக மற்றும் நிரந்தர பாதிப்புக்கள். பலவீனமான நீர்ப்பீடனத் தொகுதியும் உடற்சுகாதாரம் குறைந்த நிலையும் பலவிதமான தொற்றுநோய்களிற்கு உட்படுத்தும் ஆண்குறி விறைப்பின்மை மலட்டுத் தன்மை போன்ற பாரிய பாலியல் ரீதியான பிரச்சனைகளிற்கு இட்டுச்செல்லல்.

இன்றைய இளைஞர்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனை அதிகரித்த வண்ணமே காணப்படுகின்றது. பாடசாலை மாணவர்கள் முதல் பெரியவர்கள் வரை போதை பொருளுக்கு அடிமையாகி கொண்டே உள்ளனர். சாராயம் மற்றும் போதை மருத்துகள் உட்கொள்வதால் போதை மயக்கத்தில் ஆழ்த்தி அவர்களுடைய விழிப் புணர்வை தொலைப்பது மட்டுமன்றி உடல் நலத்தை கெடுத்து அவர்களை அழித்து விடுகிறது.போதை பொருள் பாவனையால் இன்றைய இளைஞர்கள் சீரழிந்து கொண்டே செல்கின்றனர்.

என்பவற்றுக்கு மது, போதைவஸ்து, சிகரெட் தான் தீர்வாகும் என தவறான நம்பிக்கையை கொண்டுள்ளனர்.குடிப்பதால் உடலுக்கு சக்தியும் தெம்பும் உற்சாகமும் நல்ல தூக்கமும் கிடைக்கின்றது என நினைக்கிறார்கள். நிச்சயமாக இல்லை. குடிப்பழக்கத்தால் உடல் சக்தி குன்றிஇ உடல் உறுப்புக்கள் பழுதடைந்துஇ குடி நோயாளி ஆகின்றோம்.குடியில் மயக்கம் மட்டுமே ஏற்படும் அது தூக்கமல்ல. மூளையில் ஏற்படும் சிந்தனை குறைவு ஏற்பட்டு சமநிலை குறைவுமான தன்மையும் ஏற்படும். கொஞ்சம் குடிப்பதனால் உடல் ஆரோக்கியம் கூடும் நிறைய குடிப்பது தான் உடலை பாதிக்கும். என சிலர் நினைக்கின்றனர்.குடிபான வகைகளில் தன்மை எப்பொழுதுமே பாதிக்கும். மேலும் அளவீடுகளின் அடிப்படையில் நிறுத்தி கொள்ளல் என்பது யதார்த்தத்தில் பெரும்பாலும் தோல்வியுறும் செயற்பாடாகும்.

**சி.திவியா**

பெரும்பாலானோர் கள்ளு உடலுக்கு நல்லது என கூறி அதனை அருந்துகின்றனர். கள்ளு பாவனை ஈரலில் சல கூடு தோன்ற செய்யும். இது கடும் வயிற்று வலியுடன் வெளிவரும். மேலும் ஈரலில் நிரந்தர பாதிப்பினை உருவாக்கும். குடிப்பவர் குடிக்காத போது கைஇகால் நடுங்குமாயின் கொஞ்சம் குடிக்கலாம். இது உண்மையில் ஒரு பாரதூரமான நிலைமையாகும். அப்படியானவர்கள் குடிநோய்க்கு அடிமையான நிலையில் இருக்கிறார்கள்; உடனடியாக வைத்தியசாலைக்கு செல்ல வேண்டும். குடிப்பதனால் நன்றாக வேலை செய்ய முடிகின்றது. நிறைய நண்பர்கள் கிடைக்கிறார்கள்;. இதெல்லாம் ஒரு மாயையாக தான் காணப்படும். இது நிரந்தரமற்ற ஒரு போலி நட்பாக தான் அமையும். எனது கணவர், மகன் கொஞ்சம் குடிப்பார் அவரால் ஒரு சண்டை சச்சரவு சத்தம் போடுதல் எதுவும் இல்லை. வீடு வந்து தூங்கி விடுவார்கள்.இது பொதுவாக மனைவி மார்களால் குடும்ப உறவினர்களால் பெற்றோரால் கூறப்படுவது. 'ஆணைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே', 'வெள்ளம் வருமுன் அணை கட்டுங்கள்'. இழப்பும், சேர்கமும், தடுமாறும் குடும்ப வாழ்நாள் இறுதியில் உங்கள் கண்களுக்கு தான் கண்ணீர்இமறவாதீர்கள்.



மற்றும் சட்ட விரோத கடத்தல் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது.அன்றிலிருந்து இன்று வரை ஒவ்வொரு ஆண்டும் உலக நாடுகளில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஊசி முலம் போதை ஏற்றப்படுகின்றது. ர்ஐஏ நோய் பரவிக் காணப்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

போதைப் பொருள் பாவனையில் இலங்கையில் முதலாம் இடமாக கொழும்பு மாவட்டம் காணப்படுகின்றது. இது 71% ஆக காணப்படுகின்றது. இரண்டாவதாக கம்பஹா மாவட்டம் உள்ளது. இது 22% ஈக காணப்படுகின்றது. மேல் மாகாணமே முதலிடத்தில் காணப்படுகின்றது. 600 000 இற்கு மேற்பட்டவர்கள் கஞ்சா பாவிப்பவர்கள். 1980 ஆம் ஆண்டிற்கு பின்னர் ஹெரொ்யின் எனும் பேர்தைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. புங்குடு தீவு மாணவி வித்தியாவின் வன்புண்ர்வுக்கு காரணமும் இந்த போதைப் பொருள் தான்.வவுனியாவில் ஹரிஸ்ணவி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதும் போதைப் பொருள் பாவிக்கப்பட்டவர்களாலே தான். போதை வஸ்துக்கு அடிமையானவர்கள் 50% திருமணமாகாத இளைஞர்களாவர். ஜபல் கலைகழகம், உயர்தர, சாதாரணதர மாணவர்களாவர். 45% திருமணமானவர்கள். இதில் 50% இல் 69% ஆனவர்கள் பாடசாலை மாணவர்கள். இது சுகாதார அமைச்சின் அறிக்கை. யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் வடமாகாணம் போதைப் பொருள் பாவனையால் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்றது.

காச நோய், இருதய நோய், நீரிழிவு நோய், புற்று நோய்கள், தொற்றா நோய்கள், போன்றவற்றுக்கு ஒரு காரணமாவும் அமைகின்றன. சிறுநீரகம் இழக்கப்படுவதற்கு முக்கிய காரணம் கசிப்பு. போதையினால் ஏற்படுகின்ற விளைவுகள் பல்வேறுபட்ட உயிரிழப்புகளுக்கு காரணமாகிறது.

பல்வேறுபட்ட நோய்களுக்கு காரணமாகின்றது. மகிழ்ச்சியை மறைத்தல், வறுமை, குடும்ப பிரச்சனைகள், பிள்ளைகளது கல்வி நிலை பாதிக்கப்படுதல், சுகாதார சீர்கேடுகள் ஏற்படுதல், பாரிய வீதி விபத்துகளுக்கு காரணமாக விளங்குதல், பாரிய குற்றச் செயல்களுக்கு முதற் காரணமாக விளங்குவது கொலை, கற்பழிப்பு, கொள்ளை. இதன் பின்னணியில் உள்ளவர்கள் கைது செய்யப்பட வேண்டும்.

ஆகவே மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் இறுக்கமான முடிவுகளை ஏற்படுத்த வேண்டும் - வீதி பாடகங்கள், துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள் முலம் விழிப்புணர்வை ஏற்படுத்தல். மது பாவனையை குறைக்க முற்படும் திணைக்களங்களாக இலங்கை பொலீஸ் திணைக்களம், பொலீஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவு, மது வரித் திணைக்களம், சிறைச்சாலைகள், சுங்கவரித் திணைக்களங்கள், அரச திணைக்களங்கள் காணப்படுகின்றன. போதைப் பொருள் பாவனையை தடுப்பதற்கு வழிகளாக பாவனையின் பாதிப்புக்களை நன்கறிந்து கொள்ளல்இ தான் பாவனை செய்வதில்லை என சபதம் எடுத்தல் வேண்டும்.இவிழிப்புணர்வை பல மட்டங்களிலும் ஏற்படுத்தல் வேண்டும்.

மாற்றீடான நல்ல பல பொழுது போக்கு மற்றும் கேளிக்கைகளை வளர்த்துக் கொள்ளல், பாவனையால் வரும் வீண் விரயத்தை உணர்ந்து அதற்குரிய செலவை சேமிப்பாக மாற்றுதல், வீடுகளில் நடைபெறும் விசேட தினங்களில் பாவனையை குறைத்து தவிர்த்து நல்ர விடயங்களில் செலவழித்தல், பாவனையாளரை தலைமைப்பதவியில் அமர்த்தி பொறுப்புணர்வை ஏற்படுத்தல். பாவனைக்கு வற்புறுத்தப்படும் பட்சத்தில் வேண்டாம் இல்லை என சொல்ல பழகுதல்.என்பனவாகும்.

இன்றைய இளைஞர்கள் குடியுடன் கூடிய குடும்ப வன்முறைகள் மற்றும் கலாச்சார சீரழிவுகளிலிருந்தும் எமது சமுகத்தை பாதுகாப்பதற்கு போதை வஸ்துக்களை குறைப்பதற்கான வழிவகைகளை மேற் கொள்ள வேண்டும். குடி நேபயிலிருந்து மீட்டெடுக்க வைத்தியசாலைகளில் நட்பு நிலையம், உளநல பிரிவு அது சார்;ந்துள்ள ஏனைய துறைகளுடன் கை கோர்த்து செயற்பட்டு வருகிறது. எனவே போதையற்ற வாழ்க்கையின் மகிமையை அறிந்து எமது சமுதாயத்தை இளைஞர்கள் வளர்சி பாதையில் இட்டுச் செல்ல வேண்டும்.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் அதிகார சபையை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை.

சட்டபூர்வமாக ஸ்தாபிக்கும் வரை இடைக்கால கட்டுப்பாட்டு சபை அமைப்பு.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பது தொடர்பிலான இடைக்கால கட்டுப்பாட்டு சபையொன்றை நிறுவுவதற்கு ஜனாதிபதி கௌரவ மைத்ரிபால சிறிசேன அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

போதைப்பொருளுக்கு எதிரான சட்ட திட்டங்கள் மற்றும் சுற்றிவளைப்புகளின் ஊடாக முன்னெடுத்துச் செல்லப்படும் போதைப்பொருள் தடுப்பு வேலைத்திட்டங்களுடன், போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான முறையான வேலைத்திட்டமொன்றின் அவசியத்தை உணர்ந்த ஜனாதிபதி அவர்கள், போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான அதிகார சபையை நிறுவுவதில் போதைப்பொருள் பாவனையை குறைக்கமுடியும் என்பது எனது கருத்தாகும் ஆலோசனைகளுர நம்ன அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

எமது நாகரிகம் வளர்ச்சி பாதையில் செல்கின்ற அதே தருணத்தில் தொன்று தொட்டு விளங்கி வரும் சில தீய பழக்கங்கள் தொடர்ந்தும் நலிவடையாமல் வலிமை பெற்றுச் செல்கின்றது. மது, போதைவஸ்து மற்றும் சிகரெட் பாவனை இன்று ஆறு தொடக்கம் அறுபது வரை வேரூன்றி நிற்பது கவலைக்குரிய விடயமே! எமது நாட்டை பொறுத்தவரையில் தவறணைகளிலும் பேரங்காடிகளிலும் மதுவிற்காக ஏங்கி நிற்கும் நீண்ட வரிசைகளைப் பார்க்கும் போது எத்துணை இப் பழக்கவழக்கங்கள் எமது கலாச்சாரத்துடன் வேரூன்றி விட்டது என்பது புலப்படும்.வன்முறை மிக்க குடும்ப, சமூக பிரச்சனைகளின் தூண்டியாக மதுபாவனை அமைந்திருப்பது நாம் அனைவரும் வேதனையுடன் அவதானிக்கும் ஒரு விடயமாகும். ஊட்டசத்துக்களோ விற்றமின்களோ எதுவுமற்ற திரவத்தை உற்சாகம் தரும் பானமாக களைப்பையும் உடல்வலியையும் தீர்க்கும் நிவாரணியாக அற்புத சக்தியாக எண்ணி மதுவில் கட்டுண்டு இருக்கிறார்கள். இன்று சிறியவர, பெரியவர் வேறுபாடின்றி பெரும்பாலானோர் தமது ஆரோக்கியமான வாழ்கையையும், இன்பமான மகிழ்ச்சியான குடும்பங்களையும் குடும்ப கட்டுமானங்களையும் தொலைத்து கடனாளியாகவும் நோயாளியாகவும் அலைந்து திரிகின்றனர்.அவர் தம் கெடுதலும் அன்றி வருங்கால சந்ததியினரையும் இந்த பாழாங்கிணற்றில் இழுத்து விடுவது மிகவும் வேதனைக்குரிய செயலாகும். ஒரு வித ஆர்வ கோளாறுகளால் கெட்ட நண்பர்களாலும் எண்ணங்களாலும் மூடிகளில் ஆரம்பிக்கும் இவர்கள் போத்தல்களை மூடத் தெரியாது திணறுகிறார்கள்.

இன்றைய இளைஞர்கள் மத்தியில் போதைப் பொருள் பாவனை அதிகரித்த வண்ணமே காணப் படுகின்றது. பாடசாலை மாணவர்கள் முதல் பெரியவர்கள் வரை போதை பொருளுக்கு அடிமையாகி கொண்டே உள்ளனர். சாராயம் மற்றும் போதை மருத்துகள் உட்கொள்வதால் போதை மயக்கத்தில் ஆழ்த்தி அவர்களுடைய விழிப் புணர்வை தொலைப்பது மட்டுமன்றி உடல் நலத்தை கெடுத்து அவர்களை அழித்து விடுகிறது.போதை பொருள் பாவனையால் இன்றைய இளைஞர்கள் சீரழிந்து கொண்டே செல்கின்றனர்.
இன்றைய கால கட்டத்தில் ஒருவர் போதை வஸ்து பாவிக்காமல் இருந்தால் அவரை இச் சமூகமும் ஏளனமாக பார்க்கின்றது. மது, போதை வஸ்து மற்றும் சிகரெட்டினால் உச்சி முதல் உள்ளங்கால் வரை உடலின் அனேக தொகுதிகளை பாதிப்புக் குள்ளாக்குகின்றது. ஈரல் நிரந்தர பாதிப்பிற்குள்ளாவதால் உடலின் புரதத்தொகுப்பு, நஞ்சகற்றல்

இன்றைய கால கட்டத்தில் ஒருவர் போதை வஸ்து பாவிக்காமல் இருந்தால் அவரை இச் சமூகமும் ஏளனமாக பார்க்கின்றது. மது, போதை வஸ்து மற்றும் சிகரெட்டினால் உச்சி முதல் உள்ளங்கால் வரை உடலின் அனேக தொகுதிகளை பாதிப்புக் குள்ளாக்குகின்றது. ஈரல் நிரந்தர பாதிப்பிற்குள்ளாவதால் உடலின் புரதத்தொகுப்பு, நஞ்சகற்றல் தொழிற்பாடு, குருதியுறைதலிற்கு அவசியமான பதார்தங்களின் தொகுப்பு என்பன இடம்பெறுதல் தடைப்படும். குடற்புண்கள், இரத்தவாந்தி, இரத்தவயிற்றுப்போக்கு, சதை அழற்சி என்பன ஏற்படலாம். உடலில் நச்சுப்பதார்தங்களின் சேர்க்கையால் இவ் நச்சுப்பதார்தங்களே பல தொகுதிகளில் அல்லது உடலுறுப்புக்களில் புற்றுநோயைத் தோற்றுவிக்கலாம். பலவீனமான இதயம் மற்றும் குருதிச் சுற்றோட்டத் தொகுதியால் இதயத்தாக்கு மற்றும் உயர் குருதியழுத்தத்திற்கு உட்படுதல். மூளை மற்றும் சுற்றியல் நரம்புகளில் தற்காலிக மற்றும் நிரந்தர பாதிப்புக்கள். பலவீனமான நீர்ப்பீடனத் தொகுதியும் உடற்சுகாதாரம் குறைந்த நிலையும் பலவிதமான தொற்றுநோய்களிற்கு உட்படுத்தும் ஆண்குறி விறைப்பின்மை மலட்டுத் தன்மை போன்ற பாரிய பாலியல் ரீதியான பிரச்சனைகளிற்கு இட்டுச்செல்லல்.

இன்றைய இளைஞர்கள் இதனால் ஏற்படும் விளைவுகளை பற்றி கொஞ்சம் கூட கவலை கொள்ளாமல் இதனை ஒரு கலாச்சாரமாக மாற்றிக் கொண்டு வருகிறார்கள்.இதனால் மதுவிற்கு அடிமையாதல், மற்றவர்களிடம் இருந்து ஒதுங்கியிருத்தல், உளச்சோர்வுக்குள்ளாகல் பதகளிப்புக்குள்ளாகல் நித்திரையின்மை உளமாய நோய்களுக்குள்ளாகல் வலிப்பு ஏற்படுதல் போன்ற உளரீதியான பாதிப்புக்குள்ளாகின்றனர். இதனால் குடும்பத்தில் வன்முறைகள்சி, றுவர் துஷ்பிரயோகங்கள், குடும்பத்தில் நிம்மதியின்மை, பொருளாதார வீழ்ச்சி மற்றும் கடன் தொல்லை, தற்கொலை, கொலை முயற்சி, பிள்ளைகளின் பராமரிப்பு பிரச்சனைகள், விபத்துக்கள் என்பன இடம்பெறுகின்றன.

இப் பழக்கவழக்கங்கள் விசேட தினங்களில் வீடுகளில் மது பரிமாறப்படுதல், விளம்பரங்கள், திரைப்படங்களை பார்வையிடுதல், மதுவின் விளைவுகள் பற்றி தவறான நம்பிக்கை எண்ணங்களை கொண்டிருத்தல், நண்பர்கள் வற்புறுத்துதல், பிரபலங்களின் தவறான எடுத்துக்காட்டு, மேலைத்தேய நாகரிகத்தின் மோகம் என்பனவற்றால் தூண்டப்படுகின்றன. சிலர் உடல் அலுப்பு / நோ, மனச்சோர்வு, பதகளிப்பு, கோபம், குற்றவுணர்வு, தனிமை, தாழ்வு மனப்பான்மை, உறவுச்சிக்கல்கள்

ஒவ்வொருவரும் சிறுமூடியில் ஆரம்பித்து தான் போத்தல் வரை பழக்கப்படுத்தி கொள்கின்றனர். ஆண்கள் தான் குடித்து சீரழிகின்றார்கள் என்றால் இன்று பெண்களும் சிறுவர்களும் கூட குடிக்கு அடிமையாகி கொண்டு இருக்கிறார்கள்.

இவர்கள் சமூகத்தில் இருந்து ஒதுங்குவதற்கான அறிகுறிகளாக கை, கால் நடுக்கம், காலையிலேயே குடிக்கத் தொடங்குதல், ஓங்காளம், நித்திரையின்மை, மாயப்புலனுணர்வு, வியர்வை, பயம் என்பனவாகும். வலிப்பு மற்றும் மாறாட்டக்குணம் உடையவர்கள் அவசர மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தல் அவசியம். இந்நிலையை உதாசீனம் செய்தல் உயிரை கூட மாய்த்து விடலாம். ஓடியாடி சிரித்து மகிழும் வயதில் குடி சிகரெட் கஞ்சா என இன்றைய இளைஞர்கள் மூலையில் முடங்கி கிடக்கிறார்கள்.கல்வி கற்க வேண்டிய வயதில் சாதிக்க வேண்டிய வயதில் இளைஞர்கள் போதை வஸ்துக்களுக்கு அடிமையாகி கொண்டிருப்பது கவலைக்குரிய விடயமாகும். இளைஞர்கள் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்குபவர்களாக இருக்க வேண்டும். ஆனால் இன்றைய இளைஞர்கள் குடித்து குடித்து சமுதாயத்தை சீரழித்து கொண்டு இருக்கிறார்கள்.இளைஞர்கள் இவ்வாறு குடித்து சீரழிவதால் அவர்களுடைய குடும்பமும் நிம்மதி சந்தோசம் எல்லாவற்றையும் இழந்து நிர்கதியற்ற நிலையில் வாழ்ந்து வருகின்றன. இளைஞர்கள் மதுவுக்கு அடிமையாகுவதால் பெரும்பாலானோர்கள் சில சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபடுகின்றனர்.குடிப்பதற்கு பணம் இல்லாவிட்டால் கடன் வாங்குதல், களவெடுத்தல், வீட்டில் உள்ள பொருட்களை விற்று குடித்தல் இவ்வாறான செயற்பாடுகளால் குடும்பங்களுக்கிடையே அடிக்கடி சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன.

உலகளாவிய ரீதியில் 15-64 வயதுக்கு இடைப்பட்ட 243 மில்லியன் மக்கள் போதைக்கு அடிமையாகி வருகின்றனர். 80% ஆண்கள் 20% பெண்கள் போதைக்கு அடிமையாகி வருகின்றனர். கடந்த மூன்றாண்டு காலமாக 6 லட்சம் பேர் உயிரிழந்ததாக ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை சமர்ப்பத்துள்ளது. உலகளாவிய பரவி வரும் போதைப்ண;பாருள் பாவனையினை கட்டுப்படுத்தும் வகையில் 1987ம் ஆண்டு ஆனி 26ம் திகதி ஐக்கிய நாடுகள் சபையினால் போதைப் பொருள் ஒழிப்பு

# ட்ரம்பால் ஏன் முடியவில்லை?

மேற்கொள்ளாத முதல் அதிபர் அதிலும் குடியரசுக் கட்சியின் அதிபர் அவர் மட்டுமல்ல. பல அதிபர்கள் உண்டு. ஆனால், ஆபிரகாம் லிங்கன் அதிபராக இருந்தபோது நில மானியங்களை வழங்கி, கண்டங்களுக்கு இடையிலான ரயில் பாதையை உருவாக்கினார். தியடோர் ரூஸ்வெல்ட், பனாமா கால்வாய் வெட்டினார். ஐஸன்ஹோவரோ அமெரிக்க மாநிலங்களுக்கு இடையில் நெடுஞ்சாலைகளை அமைத்தார்.

அதிபர் டிரம்ப் இப்போது கட்ட விரும்பும் ‘சுவர்’ வித்தியாசமானது; அவரால் கட்ட முடியாது என்பதற்காக மட்டுமல்ல இதற்கு முந்தைய அதிபர்கள் மேற்கொண்ட கட்டுமானங்கள் அனைத்துமே மக்களை ஒன்று சேர்க்கவும் அவர்களுக்கும் நாட்டுக்கும் பயன்தரவும் உதவின. அமெரிக்காவையும் மெக்ஸிகோவையும் பிரிக்க டிரம்ப் கட்ட விரும்பும் பிரம்மாண்டமான மதில் சுவர் அமெரிக்கர்களையும் மெக்ஸிகர்களையும் மட்டுமல்ல, அமெரிக்கர்களுக்குள்ளேயேகூட பிளவை ஏற்படுத்திவிடும். இது அச்சத்தை ஏற்படுத்தக் கூடிய கட்டுமானம், இதில் மக்களுக்கு எதிர்காலமில்லை.

### வெற்றுப் பேச்சுகள்

அதிபராகப் பதவி வகித்த இத்தனை ஆண்டுகளில் டிரம்ப் ஏன் எதையும் கட்டவில்லை? அரசியல் பிரச்சாரத்துக்காகவும் தேர்தல் ஆதாயத்துக்காகவும் பொதுமக்கள் வரிப் பணத்தில் எதையாவது உருவாக்கி, அதில் தன்னுடைய பெயரைப் பொறித்துவிட வேண்டும் என்ற விருப்பம் உள்ளவர்தான் டிரம்ப். 2016 அதிபர் தேர்தல் பிரச்சாரத்தின்போது சுவர் கட்டுவதைப் பற்றி மட்டும் அவர் பேசவில்லை, அமெரிக்காவின் அடித்தளக் கட்டுமானத்தையே பேரளவில் உருவாக்கப் போவதாகக் கூறியிருந்தார்.

மாதங்கள் பல உருண்டோடியும் செயலற்ற நிலையிலேயே அவர் தொடர்கிறார். ஓராண்டுக்கு முன்னால்கூட அமெரிக்க வரலாற்றிலேயே இதுவரை இருந்திராத வகையில் மிகப் பெரிய, மிகத் துணிச்சலான அடித்தளக் கட்டுமானத்தில் முதலீடு செய்யப்போவதாக அறிவித்தார். ஆனால், எதுவும் நடக்கவில்லை.

### செயலற்ற தன்மை

நொறுங்கிக்கொண்டிருக்கும் நெடுஞ்சாலைகள், பாலங்கள், தண்ணீர்க் குழாய்கள் போன்றவற்றை நீக்கிவிட்டு, புதிதாக உருவாக்க ஏன் டிரம்பால் முடியவில்லை அல்லது விரும்பவில்லை என்ற கேள்வி எழுகிறது. அடித்தளக் கட்டமைப்பில் அதிகம் முதலீடு செய்யப்படுவதைத்தான் மக்கள் விரும்புகிறார்கள். பொது

கண்ணோட்டமும் மாறிவிடும்.

மேலும், இரண்டு ஆண்டுகளுக்கு அடித்தளக் கட்டமைப்பு தொடர்பாக வெறும் பேச்சுதான் தொடரும், செயல் எதுவும் இருக்காது என்றே தோன்றுகிறது, ஏன் இந்த செயலற்ற தன்மை?

இதற்கு முக்கியக் காரணம் நிதிதான் என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர்; அடித்தளக் கட்டுமானங்களுக்கு எப்படிச் செலவிடுவது என்பதில் குடியரசு, ஜனநாயகக் கட்சிகளுக்கு இடையில் கருத்தொற்றுமை ஏற்பட்டால்தான் நிதியை ஒதுக்க முடியும். ஆனால், இது நம்பும்படியாக இல்லை. 2017 நிதிநிலை அறிக்கையில் 2 லட்சம் கோடி டாலர்கள் மதிப்புக்கு வரிச் சலுகை அளித்தது டிரம்பின் குடியரசுக் கட்சி. மக்கள் அந்தப் பணத்தை அப்படியே தொழில் துறையில் முதலீடு செய்வார்கள், அது உற்பத்தியையும் வேலைவாய்ப்பையும் உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அப்படி எதுவும் நிகழ்ந்ததாகச் சுவடே இல்லை. இப்படியொரு சலுகையை ஏன் வழங்கினோம் என்று அரசும் வருத்தப்படவில்லை!

### மேம்போக்கான பார்வை

தாங்கள் விரும்பும் பொருட்களை வாங்க, கடன் வாங்குவது குறித்து குடியரசுக் கட்சியினர் கவலைப்படுவதே கிடையாது. நிதிப் பற்றாக்குறை குறித்த அச்சம் அதீதமானது என்பது ஜனநாயகக் கட்சியின் மூத்த தலைவர்களின் கருத்து. எனவே, அடித்தளக் கட்டமைப்புக்காகக் கடன் வாங்கிச் செலவு செய்வதற்குக்கூட அவர்கள் ஆதரவு தருவார்கள்.

சுருக்கமாகச் சொன்னால், பணம் இல்லை என்பதால் அடித்தளக் கட்டமைப்புகளில் செலவு செய்ய முடியாமல் போய்விடவில்லை. உண்மையான தடை டிரம்ப், அவருடைய அதிகாரிகள், அவருடைய கட்சி ஆகியவைதாம். அமெரிக்காவுக்குத் தேவைப்படும் பொது முதலீட்டுக்காகச் செலவிட அவர்கள் தயாராக இல்லை. அவர்கள் எதையும் உருவாக்க மாட்டார்கள்.

டிரம்ப் அரசில் உள்ள அதிகாரிகள், வெவ்வேறு அடித்தளக் கட்டமைப்புத் திட்டங்களை முன்வைக் கிறார்கள், ஆனால், எல்லாமே‘மேம்போக்கான யோசனைகள்’தான். அவற்றில் பொது முதலீட்டுக்கு அதிக வாய்ப்புகளும் கிடையாது. அதேசமயம், பொதுப் பணத்தை எடுத்து தனியார் முதலீட்டுக்கு உதவும் திட்டங்களில் செலவிடுவதிலேயே அதிகாரிகள் ஆர்வமாக இருக்கின்றனர். ஏன் கட்டுமானங்களில் செலவிட விரும்புவதில்லை? செலவு அதிகரித்துவிடாமல் கட்டுப்ப



களுக்கான முதலீடு என்றால், மாற்றுக் கட்சியாக இருந்தாலும் ஜனநாயகக் கட்சியினர் ஆதரவு தெரிவிப்பார்கள். ‘சலுகைசார் முதலாளித்துவத்தை’ ஆதரிக்கும் எண்ணம் குடியரசுக் கட்சியினருக்கு இருப்பதால், பொது முதலீடு முக்கியத்துவம் பெறவில்லை என்பதே உண்மை.

டிரம்ப் மட்டுமல்ல, குடியரசுக் கட்சியைச் சேர்ந்த இதர நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொது முதலீட்டுத் திட்டம் என்றால் ஆர்வம் காட்டுவதில்லை. டிரம்பின் பதவிக் காலத்து முதலிரண்டு ஆண்டுகள் இப்படியே அவரை மிரட்டி, பொது முதலீட்டுக்கு நிதி ஒதுக்காமல் பார்த்துக்கொண்டனர். பிறகு, அதற்கு போலியான காரணங்களையும் கண்டுபிடித்துக் கூறலாயினர்.

### தண்டிக்கப்படும் மக்கள்

நவீன காலமாக இருந்தாலும், பழமைவாத அரசியல் சிந்தனையாளர்கள் பொது நன்மைக்காக அரசு செலவுசெய்வதை வெறுக்கிறார்கள். அதனால், அமெரிக்கர்களின் வாழ்க்கைத் தரம் உயரும் என்றாலும் வேண்டாம் என்கிறார்கள். மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் விதத்தில் அரசின் செலவுகள் அமைந்தால் நிர்வாகத்தில் அரசுக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பு

அதிகரித்துவிடும். தான் சார்ந்துள்ள குடியரசுக் கட்சி, அரசின் தலையீடு மிகக் குறைவாகவே இருக்க வேண்டும் என்று விரும்புவதை டிரம்ப் முழுதாக ஏற்கவில்லை; ஆயினும் அவரிடமுள்ள ‘குறைந்த செயலாற்றலானது’ மக்களுக்கு உதவுவதைவிட - அவர்களைத் தண்டிப்பதிலேயே செலவாகிக் கொண்டிருக்கிறது.

அப்படியானால், அமெரிக்காவை யார்தான் புதுப்பித்து உருவாக்குவார்கள்? டிரம்புக்கும் அவருடைய கட்சிக்கும் வாய்ப்பு தரப்பட்டது. அவர்கள் அதன்படி செயல்பட மறுத்துவிட்டதால் அடுத்த வாய்ப்பு ஜனநாயகக் கட்சிக்குத்தான் தரப்பட வேண்டும். அவர்கள் புதிதாக அறிவித்துள்ள ‘பசுமை செயல்திட்டம்’ போதிய விவரங்களுடன் இல்லை என்றாலும், பொது நலனில் அக்கறை கொண்ட பொது முதலீட்டை அதுதான் புதுப்பிக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

என்னுடைய கணிப்பும் விருப்பமும் அதுவே 2021-ல் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர் அதிபராகப் பதவியேற்றால், அடித்தளக் கட்டமைப்புகளுக்குச் செலவிட நிதியை ஒரு தடையாகவே கருதமாட்டார்கள்; சுகாதாரச் சீர்திருத்தத்துக்கும் அதிக நிதி தேவைப்படும். வட்டி வீதம் குறைவாக இருக்கும் நேரத்தில் கடன் வாங்கி பொதுத் திட்டங்களில் முதலீடு செய்வது நல்ல கொள்கையாகவே இருக்கும். அடித்தளக் கட்டுமானங்களை உருவாக்கியாக வேண்டும், உருவாக்குவோம், நிச்சயம் உருவாக்குவோம் என்று நம்புவோம்.

# வெறுப்பாகும் ஐ.டி.மோகம்

‘ஹைஹ ஃபை-யா வாழணும்னா ஐ.டி.துறைக்குத்தானே போகணும். அதான் என் லட்சியம்’ என்று பெருமையாக சொல்லும் தலைமுறையினரைப் பெரு மிதத்தோடு பார்த்தோம். இதற்காக, பல முன்னணி நிறுவனங்களைத்தான் டார்கெட் செய்தார்கள். தகவல் தொழில் நுட்பம் என்று அழைக்கப்படும் ஐடி துறையில் அப்படி என்ன இருக்கு? ஆறு இலக்க சம்பளம், வெளிநாட்டுப்பயணம், சொகுசான வாழ்க்கை என அனைத்துமே உண்டு. திறமைமிக்க பட்டதாரிகளை வேலை வேலை என்று அலைய விடாமல், படிக்கும் போதே முன்னணி கல்லூரிகளுக்கு வந்து அள்ளிச் சென்றன முன்னணி நிறுவனங்கள். இப்போதும் இவை தொடரத்தான் செய்கின்றன. ஆனாலும் ஐ.டி. மோகம் குறைந்து வருவதாகவே சொல்கிறார்கள் இன்றைய இளைஞர்கள்.

ஏன் இப்படி? எதனால் இவ்விதம்? கொஞ்சம் விரிவாகவேப் பார்ப்போமா?

### மோகம் அதிகரிக்க காரணம்

ஐ.டி. பணியில் அலைச்சல் இல்லை. கடினமான உடல் உழைப்பு இல்லை. வியர்க்க விறுவிறுக்க வேலை செய்ய வேண்டியதில்லை. வெயிலில் பைக்கை எடுத்துக்கொண்டு சுற்றவேண்டியதில்லை. ஏஸிக்கு கீழே உட்கார்ந்து வேலை பார்க்கலாம். வீட்டிலிருந்து ஆஃபீஸுக்கு செல்ல கேப்- வசதி உண்டு. இரட்டிப்பு சம்பளத்துடன்



வெளிநாடு செல்லும் வாய்ப்பும் கிடைக்கலாம்.

அப்போதைய குடும்பத்தலைவருக்கு, அதாவது அப்பாக்களுக்கு, நான் இவ்வளவு சம்பாதிக்கிறேன் என்று கௌரவமாய் சொல்லிக் கொள்ளவே 15 லிருந்து 20 வருடங்கள் தேவைப்பட்டது. ஆனால் அதற்கும் அதிகமான சம்பளத்தை ஐடி துறை முதல் மாதமே மகன்களுக்கும் மகள்களுக்கும் வழங்கியது. தந்தையின் ஒரு வருட சம்பளத்தை ஒரே மாதத்தில் ஈட்டிய பிள்ளைகளின் எண்ணிக்கையும் உண்டு. வாரத்தில் ஐந்து நாள் வேலை. இரண்டு நாள் விடுமுறை என்று சொல்லியபோது பள்ளிக் குழந்தைகள் போல் கொண்டாடினார்கள்.

பழைய வீட்டை சரி செய்யவும், டூ வீலர் லோனும் கேட்டு அலைந்த தந்தைக்கு முன்பு, முன்னணி பெருநகரங்களில் அடுக்குமாடி குடியிருப்பில் ஒரு வீட்டுக்கும், விலை உயர்ந்த காருக்கும் நாங்களே லோன் தருகிறோம் என்று வங்கிகள் தேடி வந்தன. இப்போதும் வந்துகொண்டிருக்கின்றன.

ஷாப்பிங் போவதற்கு பணம் தேவையில்லை. கிரெடிட் கார்டு போதும் என்றும் வழிகாட்டின வங்கிகள். அதுவரை 70 ஆயிரம் ரூபாயில் பைக் என்று வாய் பிளந்தவர்கள் அசால்ட்டாக 2 லட்ச ரூபாயில் பைக் வாங்கினார்கள். ஐடி துறையில் நுழைந்தவர்கள் அடுத்த வருடமே வங்கிகளின் உபயோகத்தோடு... பொருளாதாரரீதியாக வளமிக்க செல்வாக்கோடு உறவினர்களால் பார்க்கப்பட்டார்கள். இப்படித்தான் ஐ.டி. துறையில் இருப்பவர்களைப் பார்த்து ஐடி மோகத் தில் ஊறினார்கள் இளைஞர்கள் பலரும். இது 6 வருடங்களுக்கு முந்தைய நிலை.

### ஐ.டி. வேலைல சேரு; கொண்டாடு!

புதிய வேலை, புதிய நட்பு வட்டம், குடும்பத்தில் உயர்ந்திருக்கும் பொருளா தாரம்,. பார்க்கும் பொருளெல்லாம் வாங்கும் அளவுக்கு பணப்புழக்கம் எல்லாமே மனதில் மகிழ்ச்சியை அதிகப்படுத்தின. சினிமாவில் மட்டுமே பார்த்த

16 ஆம் பக்கம் பார்க்க....

## அடையாள...

08 ஆம் பக்கத் தொடர்ச்சி

திரு.பொன்னம்பலத்துடன் இணைந்து சோல்பரி ஆணைக்குழுவினரிடம் அக் கோரிக்கையினை முன் வைத்து சாட்சியமளித்தும் இருந்தார்கள். அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதும் அது அது நடைமுறைக்கு உதவாத ஒரு திட்டம் என செல்வநாயகம் அவர்கள் கூறுவது அவருடைய அரசியல் நேர்மையீனத்தை அல்லது தமது தவறை சுயவிமர்சனம் செய்யாத நிலையினைக் காட்டுகின்றது.

தமிழ் உயர் வர்க்கத்தினர் எப்போதும் மற்றவர்களை விட தாம்தான் அறிவாளிகள் திறன்மிகுந்தவர்கள் என்ற கற்பனை மிகுதியில் வாழ்ந்துகொண்டு தமது ஆதிக்க மனோபாவத்தை நிலைநாட்டுவதில் அக்கறையாக இருக்கிறார்களே தவிர சந்தர்ப்பத்துக்கு ஏற்ப அகப் புறச் சூழ்நிலைகளை கையாண்டு தமிழர்களுக்கு கிடைக்கவேண்டிய அரசியல் உரிமைகளை பெற்றுக்கொடுப்பதில் எப்போதும் தவறிழைத்தே வந்திருக்கிறார்கள் என்பதற்கு சோல்பரிக் குழுவினர் விடயத்தில் அவர்கள் நடந்து கொண்டமையும் ஓர் உதாரணமாகும்.

தொடரும்

## கருணா...

12 ஆம் பக்கத் தொடர்ச்சி

கருணாவும் தமது ஓவியத்தில் தெளிவான அளவான மெல்லிய குறுகிய கோடுகளை கவனமெடுத்து வரைந்துள்ளார்.

கருணாவும் டிஜிட்டலும்

தொழில்சார் ஆளணி முறைகளில் தவிர்க்கப் படமுடியாத தேவைகளினால் டிஜிட்டல் வடிவ அமைப்பாளர்களின் நுழைவு இதழியற் துறையில் 90 களின் பின்னர் இலங்கையில் ஆரம்பித்தது.

கணினி வடிவ அமைப்பு சற்றுத் தெரிந்தவர்கள் எல்லோரும் டிஜிட்டல் வடிவமைப்பாளர் ஆக பத்திரிகைகளில் நுழைந்தனர்.

தடி எடுத்தவன் எல்லாரும் தண்டக்காரனாவது என்பது டிஜிட்டல் வடிவமைப்புத் துறையிலும் வந்தது.

இதனால் டிஜிட்டல் துறையின் வருகை ஓவியத் துறையை வீழ்த்திவிடுமோ என்ற அச்சம் 90 களில் ஓவியத்துறையில் ஏற்பட்டத் தொடங்கியது.

இயல்பாகவே திறமை வாய்ந்த ஓவியர்களும் இந்த டிஜிட்டல் முறையினால் சோம்பேறிகளாகி தமது ஆளுமையை இழப்பார்களோ என்ற விமர்சனக்கருத்துகளும் வந்தன.

கருணாவின் வளர்ச்சி இதற்கு நல்ல உதாரணம் என்பதை அவர் 1998 இல் வரைந்த ஒரு அட்டைப் படம் மூலம் புரிந்து கொள்ளலாம்.

மூத்த வானொலி தொலைக்காட்சி மற்றும் நாடக இயக்குனர் திரு பி விக்னேஸ்வரன் எழுதி 1998 இல் கனடாவில் வெளியிட்டிருந்த வானொலி நாடாகமான ‘‘வாழ்ந்து பார்க்கலாம் ’’ என்கிற புத்தகத்தின் அட்டைப்படத்தை டிஜிட்டல் மூலம் வரைந்த கருணாவிடம் தொடர்ந்தும் டிஜிட்டல் தனது ஆட்டத்தைக் காட்டமுடியவில்லை என்பதை அண்மைக் காலமாக அவர் வரைந்த ஓவியங்கள் காட்டுகின்றன.

கருணா போன்ற இயற்கையான ஆளுமை கொண்ட ஓவியர்களிடம் டிஜிட்டல் செல்லும்போது அவர்களது ஓவியம் டிஜிட்டலை வெல்லும் என்ற நம்பிக்கையை கருணா எமக்குத் தந்துள்ளார்.

கருணாவின் இந்த அடி ஈழத்து ஓவிய பாரம்பரியத்தின் தொடர்ச்சியின் பரிமாணம் மட்டுமல்ல ! பரிணாமமுமே!

## யுத்தத்தால்..

07 ஆம் பக்கத் தொடர்ச்சி

அரசின் விளையாட்டுத்துறை அமைச்சர் வீ.ஏ.சுகததாசவிடம் 1965 இல் கோரிக்கை விடுத்ததார்.பின் 1970 இல் சுதந்திரக்கட்சி அரசின் விளையாட்டுத் துறை அமைச்சரான கே.பி.இரட்நாயக்காவிடம் யாழ்.உதைபந்தாட்ட சங்கத்தின் சார்பில் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட் தந்தை மதுரநாயகம் அடிகள் கோரிக்கை விடுத்தார். மதுரநாயகம் அடிகள் அனுராதபுரம் சென்.ஜோசப் கல்லூரி அதிபராக முன்னர பணியாற்றயதால் அந்த தொகுதி எம்.பியான இரட்நாயக்காவுடன் நன்கு அறிமுகமானவர்.அத்துடன் அவர் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியின் பழைய மாணவனுமாவார்.ஆனால்,அன்றைய அரசியல் சூழலால் இந்த முயற்சி நடைபெறவில்லை.

பழையவற்றை கிண்டாமல் ஒற்றுமைப் பட்டு செயற்படுமாறு முன்னாள் முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார். ஆனால்,ரெலோ இயக்கத்தின் பிரதி மேயர் துரையப்பாவை புலிகள் படுகொலை செய்த சம்பவத்தால் ‘துரோகி’அவரின் பெயரை நீக்க கோருகின்றார். அப்படியானால் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட யாழ் அரச அதிபர் பஞ்சலிங்கம்,முல்லைத்தீவு அரச அதிபர் ஞானச்சந்திரன்,யாழ்.சென்.ஜோண்ஸ் கல்லூரி அதிபரான ஆனந்தராஜா,மத்திய கல்லூரி அதிபர் இராசதுரை போன்றவர்களின் படங்களையும் அகற்றுமாறு ஒரு தீர்மானத்தை நாளை கொண்டுவரலாம். படுகொலை செய்யப்பட்ட மேயர் சரோஜினியின் படத்தையும் அகற்ற கோரலாம்.

கொழும்பு மாநகர மேயர் வீ.ஏ.சுகததாசவின் பெயரில்,முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் பெயரில்,முன்னாள் ஜனாதிதிபதி மகிந்த ராஜபக்ச போன்றவர்களின் பெயர்களில் விளையாட்டரங்குகள் உள்ளன.எனவே ரெலோ இயக்கத்தின் பிரதி மேயர் கொண்டுவரும் இவ்வாறான வீண் பிரேரணைகளை கைவிட்டுவிட்டு நகரை அபிவிருத்தி செய்யக்கூடிய நல்ல,பிரயோசனமான பிரேரணைகளை முன் வைத்து யாழ்.மாநகர சபை செயற்படவேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும்.அப்போதுதான் அடுத்த முறையும் மக்கள் உங்களை மீண்டும் தெரிவுசெய்து அனுப்புவார்கள்.இன்று அரசுக்கு ஆதரவளித்து செயற்படும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் அரசிடம் இருந்து பல உதவிகளை பெற்று யாழ் மாநகரை கட்டி எழுப்பவேண்டும்.

## கூட்டமைப்பும்...

05 ஆம் பக்கத் தொடர்ச்சி

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, வாழைச்சேனை காகித ஆலை, சுற்றுலாத்துறை, ஆனையிறவு உப்பளம் போன்றவற்றை மீண்டும் இயங்கச்செய்து; குறித்த பிரதேச இளைஞர் யுவதிகளுக்கான வேலை வாய்ப்பினை வழங்குவதற்கு அரசாங்கத்தை வலியுறுத்த தமிழ்க் கூட்டமைப்பு ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். பொலிஸ், நிர்வாகச்சேவை போன்றவற்றுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் போது குறைந்தபட்சம் மூவின மக்களின் விகிதாசாரத்துக்கு ஏற்றவாறு அவர்களுக்கு நியமனங்கள் வழங்குமாறு அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது. சரியோ பிழையோ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்பட்டவர்கள் அனைவரும் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்களாவர். அவர்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் வாழ்க்கையை கொண்டு நடத்துகின்றனர். நாட்டில் சில அசம்பாவிதங்கள் நடக்கின்ற வேளைகளில் சந்தேகத்தின் பேரில் இவ்வாறனவர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்படுவது உடனடியாக நிறுத்தப்படுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

எனவே மக்கள் பிரதிநிதிகளாகிய அனைவரும் வாக்களித்து உங்களை உயர் பதவிக்குக் கொண்டு வந்த மக்களின் சேவைகளை மறந்து, அவர்களை புறக்கணித்து செயற்படாமல் முழு அர்ப்பணிப்புடன் மக்களுக்கான சேவைகளைச் செய்வதற்கு முன்வருமிடத்தேதான் எமது நாட்டை ஏனைய நாடுகளுக்கு முன்னுதாரணமாக திகழவைக்க முடியும்.

# முடிவுக்கு வந்த 13 ஆண்டு பகை



தமிழக அரசியல் களம் நாடாளுமன்றத் தேர்தலால் சூடுபிடித்துள்ளது. காட்சிகள் மாறிக்கொண்டிருக்கின்றன. யாருக்கு எவ்வளவு? யார் பக்கம் யார்? என்ற எதிர்பார்ப்புகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. கூட்டணி அமைப்பது குறித்து பேச்சுவார்த்தைகள் கட்சிகளிடையே நடந்துகொண்டிருந்தாலும், முதன்முதலில் கூட்டணி குறித்து அதிகாரபூர்வ அறிவிப்பை வெளியிட்டது என்னமோ அ.தி.மு.க தான். கடந்த 19-ம் தேதி பாட்டாளி மக்கள் கட்சிக்கு 7 தொகுதிகளை ஒதுக்கீடு செய்து ஒப்பந்தம் கையெழுத்தானது. இருகட்சிகளைச் சேர்ந்தவர்களும் இணைந்து இந்த அறிவிப்பை அதிகாரபூர்வமாக வெளியிட்டனர்.

அறிவிப்பைத் தொடர்ந்து தன் வீட்டுக்கு அழைத்து ராமதாஸ் மற்றும் அன்புமணிக்கு தேநீர் விருந்து கொடுத்தார் முதல்வர். பதிலுக்கு எடப்பாடி பழனிசாமி உள்ளிட்டோரை விருந்துக்கு வருமாறு தைலாபுரத்துக்கு அழைப்பு விடுத்தார் ராமதாஸ். அதன்படி நேற்று மாலை 6-மணிக்குச் சென்னையிலிருந்து தைலாபுர தோட்டத்துக்குப் புறப்பட்டார் எடப்பாடி பழனிசாமி. துணை முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் மதுரையிலிருந்து வரவே, மேல்மருவத்தூர் அருகே இருவரும் இணைந்துகொண்டனர். அங்கிருந்து புறப்பட்டுச் சென்ற அவர்களுக்கு திண்டிவனம் சிக்னல் அருகே வரவேற்பு கொடுத்தார் அமைச்சர் சி.வி.சண்முகம். பின் அங்கிருந்து புறப்பட தயாரான அமைச்சரிடம் . 'நீங்க வாங்க பாத்துக்கலாம். வண்டில ஏறுங்க மொத' என்றபடி அவரை அழைத்து வண்டியில் ஏற்றினார் முதல்வர். தயக்கத்துடன் வண்டியில் ஏறியுள்ளார் சி.வி.சண்முகம். எடப்பாடியும் அவரும் ஒரே வண்டியில் பயணிக்க, வண்டி தைலாபுரத்தை நோக்கி வேகமெடுத்தது.



சரியாக 9:05 மணி அளவில் தைலாபுரத்துக்குள் ஜே.சி.டி பிரபாகரன் கார் உள்ளே நுழைந்தது. தொடர்ந்து ஈ.பி.எஸ் மற்றும் ஓ.பி.எஸ் கார்கள் வரிசையாக உள்ளே வந்தன. அப்போது ராமதாஸ் குடும்பத்துக்கு கோகுலா இந்திரா உறவினர் என்பதால் முன்னதாகவே அவர் வீட்டில் இருந்தார். ராமதாஸும் அவரும் சேர்ந்து எடப்பாடி மற்றும் பன்னீர்செல்வம் உள்ளிட்டோரை வரவேற்றனர். உள்ளே சென்றதும் ஓ.பி.எஸ்,'பாரம்பர்யமான வீடு மாதிரி நல்ல கலைநயத்தோட இருக்கு' என்று பாராட்டினார். இதையடுத்து, அன்புமணி ராமதாஸ், சி.வி.சண்முகத்துக்குப் பொன்னாடை போர்த்தினார். சி.வி.சண்முகத்துக்கும் பா.ம.கவுக்கும் ஏழாம் பொருத்தம்தான். காரணம் 2006-ம் ஆண்டு சட்டப் பேரவை தேர்தலின்போது, அ.தி.மு.க வேட்பாளர் சி.வி.சண்முகத்தை எதிர்த்து பா.ம.க சார்பில் போட்டியிட்டவர் கருணாநிதி.

பா.ம.கவுக்கும் அ.தி.மு.கவுக்கும் இடையே ஏற்பட்ட மோதலின் எதிரொலியாக சி.வி சண்முகத்தின் வீட்டுக்குள் புகுந்த சிலர், அவர் மீது தாக்குதலில் ஈடுபட்டது. அப்போது சி.வி.சண்முகம் எதிர்பாராத விதமாகத் தப்பித்துவிட, அவரது உறவினர் முருகானந்தம் என்பவர் படுகொலை செய்யப்பட்டார். தன்னைக் கொலை செய்யத் திட்டமிட்டது பா.ம.க தான் எனச் சாடியிருந்தார் சண்முகம். இதனால் இருவருக்கும் 13 ஆண்டுகளாகப் பகை இருந்து வந்தது. இப்படியிருந்த சூழலில் நேற்றைக்கு சி.வி.சண்முகம் விருந்துக்குச் சென்றதும், அவருக்கு அன்புமணி பொன்னாடை போர்த்தியதும் வியப்பாகவே பார்க்கப்படுகிறது. பொன்னாடை போர்த்தியபின், வீட்டின் அருமை, பெருமைகளை ராமதாஸ் விளக்கினார். வீட்டிலிருந்த தன் குடும்பத்தாரை அறிமுகப்படுத்தினார்.

முன்னதாக அன்புமணியும், ராமதாஸும் முதல்வர் வீட்டுக்குத் தேநீர் விருந்துக்காகச் சென்றபோது முதல்வர் தன் மனைவி மற்றும் மகனை அறிமுகப்படுத்தியிருந்தது நினைவிருக்கும். தொடர்ந்து சைவம், அசைவம் உள்ளிட்ட 50 வகையான உணவு வகைகள் விருந்துக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கோவா மால்குவா, லிட்ஜி ஸ்வீட் உள்ளிட்ட இனிப்பு வகைகள் முதல்வருக்காக பிரேத்யேகமாக கொண்டுவரப்பட்டதாக ராமதாஸ் கூறியிருந்தார். விருந்து முடிந்த பின், அரைமணிநேரம் வீட்டின் கதவுகள் அடைக்கப்பட்டன. இருதரப்பினரும் எந்தெந்த தொகுதிகளில் போட்டியிடலாம் என்பது குறித்து பேசினர். பின் அங்கிருந்து 10 மணிக்கு புறப்பட்டுச் சென்றனர். எடப்பாடிதான் தைலாபுர தோட்டத்துக்கு வந்த முதல் முதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் பொற்காலத்திற்கு திரும்புமா குஜராத்?

அடிப்படை மனித உரிமைகளில் கருத்துச் சுதந்திரமும் ஒன்று என்று நம்புகிறேன். அரசுக்குக் கட்டுப்பட்ட, உணர்ச்சியற்ற மனிதனாக இருக்க விரும்பவில்லை; சுதந்திர மனிதனாக இருக்க விரும்புகிறேன். அதனால்தான் பதவி விலகுகிறேன் - ஹேமந்த்குமார் ஷா, அகமதாபாத் எச்.கே. கல்லூரியின் முன்னாள் முதல்வர்.

குஜராத் சட்டப் பேரவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரான ஜிக்னேஷ் மேவானி, தான் முன்னர் படித்த எச்.கே. கலைக் கல்லூரியில் கடந்த வாரம் ஒரு நிகழ்ச்சியில் பேச முடியாமல் தடுக்கப்பட்டார். அக்கல்லூரியின் முதல்வர்தான் அவரைப் பேச அழைத்திருந்தார். அந்த அழைப்பை ரத்து செய்துவிடுமாறு கல்லூரியின் அறங்காவலர்கள் முதல்வருக்கு நெருக்குதல் தந்தனர். அந்த அறங்காவலர்களை இந்துத்துவா ஆதரவாளர்கள் அச்சுறுத்தியிருந்தனர். நிகழ்ச்சியை ரத்துசெய்ய நேர்ந்ததைக் கண்டித்து கல்லூரியின் முதல்வரும் துணை முதல்வரும் தங்களுடைய பதவியை ராஜிநாமா செய்துவிட்டனர். 'குஜராத்தின் சிறந்த மரபுகளுக்கு நீங்கள் இருவரும் உற்ற பிரதிநிதிகள்; சர்தார் வல்லபபாய் படேல், மகாத்மா காந்தி, அம்சா மேத்தா உங்களுடைய செயல்களால் பெருமையடைந்திருப்பார்கள்' என்று அவர்களைப் பாராட்டி வாழ்த்து தெரிவித்திருந்தேன்.

### மகளிர் உரிமை பேசியவர்

யார் இந்த அம்சா மேத்தா? அம்சா மேத்தாவை இப்போது குஜராத்திலேயே மறந்துவிட்டார்கள் என்றுதான் கூற வேண்டும். லண்டனில் பயிற்சிபெற்ற மருத்துவரான டாக்டர் ஜீவராஜ் மேத்தாவும் அவருடைய மனைவி அம்சா மேத்தாவும் தேசப்பற்று மிக்க இணையர்கள். காந்திக்கு மருத்துவராக இருந்த ஜீவராஜ் மேத்தா, சுதந்திரப் போராட்டத்தின்போது சில முறை கைது செய்யப்பட்டார். சமூகத்திலும் அரசியலிலும் பாலினச் சமத்துவம் வேண்டும் என்று பாடுபட்ட அம்சா மேத்தா, அனைத்திந்திய மகளிர் மாநாடுகளில் தீவிரமாகப் பங்கெடுத்து வந்தார். அரசியல் சட்டத்தை வகுப்பதற்காக நியமிக்கப்பட்ட நிர்ணய சபையில் இடம்பெற்ற ஒரு சில மகளிரில் அவரும் ஒருவர். ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியப் பிரதிநிதியாகப் பேச அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறார்.

அரசியல் சட்ட நிர்ணய சபை தன்னுடைய பணியை 1949-ல் பூர்த்திசெய்ததும், பரோடாவில் உள்ள 'மகாராஜா சாயாஜி ராவ் பல்கலைக்கழக' (எம்எஸ் பல்கலைக் கழகம்) முதல் துணைவேந்தராகப் பதவி ஏற்றார் அம்சா மேத்தா. அமெரிக்கா, பிரிட்டன்கூட பல்கலைக்கழகத் துணைவேந்தராக ஒரு பெண்ணை நியமிப்பதுபற்றி அந்த நாளில் சிந்திக்கவில்லை! காந்தி மறைந்து ஓராண்டுகூட ஆகாததால் அவருடைய சிந்தனைகள் செல்வாக்கு செலுத்திய காலம் அது. இந்தியாவின் - ஏன் உலகின் - பிற பகுதிகளில் சிந்தித்திராத பல புதுமைகள் பரோடா நகரிலும் குஜராத்திலும் சாத்தியமானவையாக இருந்தன.

அம்சா மேத்தாவின் தலைமையில் எம்எஸ் பல்கலைக்கழகத்தில் அறிவியல், கலைப் பாடப் பிரிவுகள் மிகுந்த தரத்துடன் உருவாக்கப்பட்டன. பல்கலைக்கழகங்களைத் தரவரிசைப்படுத்தும் முறை அன்றைக்கு இருந்திருந்தால் பம்பாய், கல்கத்தா, மதறாஸ் பல்கலைக்கழகங்களுக்கு இணையாக பரோடா எம்எஸ் பல்கலைக்கழகமும் இடம்பெற்றிருக்கும். புதிய பல்கலைக்கழகத்துக்குத் தேவைப்பட்ட பேராசிரியர்களையும் துறைத் தலைவர்களையும் நாடு முழுவதும் தேடி, சிறந்தவர்களாகப் பார்த்து நியமித்தார். அம்சா மேத்தாவின் நடைமுறையை அகமதாபாத் பல்கலைக்கழகத்திலும் அப்படியே பின்பற்றினர். விக்ரம் சாராபாய் போன்ற அறக் கொடையாளர்கள், தேசிய அளவில் பேசப்படும் கல்விப் பிரிவுகளை ஏற்படுத்தினர். ஆடை வடிவமைப்புக்கான தேசியக் கழகம், இந்திய நிர்வாகவியல் கழகம், இயற்பியல் ஆய்வு ஆராயச்சிக்கூடம் ஆகியவை அவ்வாறு உருவானவை.

### காணாமல்போன பாரம்பரியம்

நாற்பதாண்டுகளுக்கு முன்னால் நான் குஜராத்துக்குச் சென்றபோது, அங்கு அறிஞர்களும் எழுத்தாளர்களும் ஆய்வாளர்களும் கலைஞர்களும் மரியாதையுடன் வரவேற்கப்பட்டனர். அம்சா மேத்தாவும் விக்ரம் சாராபாயும் உருவாக்கிய பாரம்பரியம் உயிர்ப்புடன் இருந்த காலம் அது.

சமீப ஆண்டுகளாக அறிவார்ந்த சமூகத்தவர்கள் செயல்படுவதற்கான இடம் குஜராத்தில் குறுகி வருகிறது. சுதந்திர உணர்வுள்ள அறிவுஜீவிகள், அரசியலுக்கும் தொழிலுக்கும் இடையூறாகச் செயல்படுகின்றனர் என்ற உணர்வு அச்சமூகத்தில் பரவியுள்ளது. அலையலையாக நடந்த வகுப்பு, சாதிக் கலவரங்கள் மக்களிடையே அச்ச உணர்வையும் பாதுகாப்பற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளன. இது சுதந்திரமான ஆராய்ச்சிகளுக்கும் ஆழ்ந்த கல்விக்கும் உற்ற சூழ்நிலை அல்ல. நரேந்திர மோடி குஜராத்தின் முதலமைச்சராகப் பதவியேற்பதற்கு முன்னதாகவே இச்சூழல் ஏற்பட்டுவிட்டது. ஆனால், அவர் முதலமைச்சராக இருந்த 13 ஆண்டுகளில் இது தீவிரம் பெற்றது.

குஜராத்தில் புதிதாகத் திறக்கப்பட்ட தனியார் பல்கலைக்கழகத்தில் எனக்குப் பேராசிரியர் பதவி தரப்பட்டபோது, நான் அந்த வாய்ப்பை ஏற்றேன். நவீன குஜராத்தின் வரலாற்றை எழுதியவன் என்ற வகையில், காந்தி தன்னுடைய 'சொந்த வீடு' என்று அழைத்த அகமதாபாதில் உள்ள கல்வி நிலையம் என்பதாலும், எதிர்காலத்தில் சகஜ நிலைமை ஏற்பட்டுவிடும் என்ற நம்பிக்கையாலும் அந்தப் பதவியை ஏற்க சம்மதம் தெரிவித்தேன்.

ஆனால், அந்தப் பொறுப்பை என்னால் ஏற்க முடியாமல் போனது, செல்வாக்கு மிக்க புதுடெல்லி அரசியல்வாதிகள் சிலர் பல்கலைக்கழகத்தின் அறங்காவலர்களை அழைத்து, என்னைப் பணியில் அமர்த்தக் கூடாது என்று எச்சரித்தனர். அகமதாபாத் நகர ஏபிவிபி கிளையைச் சேர்ந்த சிலரும் மிரட்டியுள்ளனர். குஜராத்தில் என்னால் வசிக்கவோ, கற்றுத்தரவோதான் முடியாது, ஆனால், நண்பர்களையும் உடன் பணிபுரிந்தவர்களையும் சந்திக்க முடியும். அகமதாபாத் நகரில் உள்ள மிகவும் பிரபலமான காந்திய அமைப்பு என்னை உரையாற்ற அழைத்தபோது, அழைப்பை ஏற்றுக்கொண்டேன். தன்னுடைய சொந்த ஊர் என்று காந்தியே அறிவித்த அகமதாபாதில் பேசும் வாய்ப்பை ஒப்புக்கொண்டேன்.

மார்ச் 3-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை அந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 'மகாத்மா காந்தி - மக்கள் தொடர்பாளர்' என்ற தலைப்பில் பேச முடிவெடுத்திருந்தேன். இப்போதைய மத்திய அரசு தொடர்பாக, காட்டமாக எதையும் பேசாமல் தவிர்த்துவிடுமாறு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் பிப்ரவரி 11-ல் எனக்கு மின்னஞ்சல் அனுப்பினர். மகாத்மா காந்தி, அவருடைய வாழ்க்கை, அவர் விட்டுச் சென்ற பாரம்பரியம் தொடர்பாகத்தான் பேசுவேன், இப்போதைய அரசியல்வாதிகள் குறித்தோ அரசு குறித்தோ பேச மாட்டேன் என்று பதில் அனுப்பினேன்.

இருந்தாலும் பிப்ரவரி 13-ல் அகமதாபாதிலிருந்து என்னைத் தொடர்புகொண்டவர்கள்,'இப்போதைய சூழலில் கருத்தரங்கை நடத்த முடியாமலிருக்கிறது' என்று தொலைபேசி வாயிலாகத் தெரிவித்தனர். ஏன் என்று அவர்களிடம் விவரம் கேட்கவில்லை. எச்.கே. கலைக் கல்லூரியில் நடந்த சம்பவங்களின் விளைவுதான் இது என்பதைப் புரிந்துகொண்டேன்.

மாற்றம் வரும்

ஜிக்னேஷ் மேவானிக்கும் எனக்கும் வயது, தொழில், சமூகப் பின்னணி, கருத்தியல் சார்பு ஆகியவற்றில் வேறுபாடுகள் உண்டு. 'இப்போதைய மத்திய அரசை விமர்சிப்பவர்கள்' என்பது மட்டுமே எங்களிருவருக்கும் உள்ள ஒரே ஒற்றுமை. தான் படித்த கல்லூரியில் அம்பேத்கரின் வாழ்க்கை, மரபு ஆகியவை பற்றி மட்டுமே பேசவிருந்தார் ஜிக்னேஷ் மேவானி. நானும் அகமதாபாதில் காந்திஜியின் வாழ்க்கை, மரபு பற்றியே பேசத் திட்டமிட்டிருந்தேன். இருப்பினும் இருவருக்கும் விடுத்த அழைப்புகள் விலக்கிக்கொள்ளப்பட்டுவிட்டன.

இதனால்தான், கருத்துச் சுதந்திரத்துக்கு ஆதரவாக எச்.கே. கல்லூரியின் முதல்வரும் துணை முதல்வரும் பதவி விலகியதற்காக, தன்னெழுச்சி பெற்றுப் பாராட்டினேன். அவர்களுடைய செயல் காந்தி, படேல், அம்சா மேத்தா காலத்திய, பழைய - மேன்மையான குஜராத்தை நினைவுபடுத்தியது. திறந்த மனதோடு இருந்த குஜராத் மீண்டும் பழைய நிலைக்கு வரும் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. எதேச்சாதிகாரிகளும் எதேச்சாதிகார ஆட்சிகளும் மாறக்கூடியவை, நிரந்தரமானவை அல்ல. சுதந்திரத்துக்கு ஏங்கும் மனித உணர்வுகள் நிரந்தரமானவை. நரேந்திர மோடியும் அமித் ஷாவும் ஆதிக்கம் பெறுவதற்கு முன்னால் ஒரு குஜராத் இருந்தது; அவர்களுடைய பிடி தளர்ந்ததும் சுதந்திரமான, பழைய குஜராத் மீட்சிபெறும். அதைப் பார்க்கவும் அங்கே பேசவும் நாளை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

**தமிழில்: சாரி**

# விஜயகாந்த் யார் பக்கம்?

அதிமுக - பாஜக கூட்டணியில் தே.மு.தி.க. இணையும் என்கிற எதிர்பார்ப்பில் இருந்ததால் தேமுதிகவை திமுக கூட்டணிக்குள் கொண்டு வரும் யோசனை ஸ்டாலினுக்கு இருக்கவில்லை. பாமகவிடம் மட்டுமே ரகசியப் பேச்சுவார்த்தை நடத்தியபடி இருந்தனர். பேரங்கள் படியாத நிலையில் அதிமுக பக்கம் தாவியது பாமக. அதிமுக கூட்டணியில் பாமக இணைந்ததை அடுத்து தமிழக அரசியலில் பெரும் பரபரப்பு உருவானது.



பாஜகவும் அக்கூட்டணியில் இணைந்ததை அடுத்து அதிமுக கூட்டணிதான் வலிமையானது என்கிற தோற்றம் உருவானது. மேலும், அதிமுக கூட்டணியில் தேமுதிகவை கொண்டு வர விஜயகாந்தை சந்தித்து பேசியது பாஜக தலைமை. விஜயகாந்தின் உடல்நலன் கருதி அவரை சிரமப்படுத்துவதை தவிர்த்து பிரேமலதாவிடமும், சுதீசிடம் பேச்சுவார்த்தை நடத்தினார் பாஜக மூத்த தலைவர் பியூஸ் கோயல்.

அப்போது பல்வேறு புள்ளிவிபரங்களைச் சுட்டிக்காட்டி விட்டு தங்களுக்கான டிமாண்ட்டை முன்வைத்த பிரேமலாதா, 'பாமகவை விட அதிக வலிமை கொண்ட கட்சி தேமுதிக. அவர்களுக்கு வட தமிழகத்தில் மட்டும்தான் கட்டமைப்பு உள்ளது. ஆனா, தேமுதிகவுக்கு தமிழகம் முழுவதும் வலிமையான கட்டமைப்பு இருக்கிறது. அதனால், 8 லோக்சபா சீட்டும், ஒரு ராஜ்ய சபா சீட்டும் வேண்டும். பாமகவிற்கு தேர்தல் நிதி தந்தது போல எங்களுக்கும் 500 சி தரப்பட வேண்டும்'' என கோரிக்கை வைத்தார்.

அதை கேட்டு மிரண்டு போனார் பியூஸ்கோயல். அங்கிருந்தபடியே அமைச்சர் தங்கமணியை தொடர்பு கொண்டு விவாதித்துவிட்டு, 'அதிமுக தரப்பில் 3 சீட்டுகள் மட்டுமே ஒதுக்க முடியும் என சொல்கின்றனர். ராஜ்யசபா சீட் கிடையாது. அதற்கு பதிலாக உள்ளாட்சி தேர்தலில் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்'என தெரிவித்திருக்கிறார்.

இதனை ஏற்க மறுத்த பிரேமலதாவும் சுதீசும் இறுதியாக, '8 சீட்டிலிருந்து ஒன்றை குறத்துக் கொள்கிறோம். 7 சீட்டும், 500 சி யும் எனில் ஓ.கே.! அதே சமயம் , அதிமுக மேடைகளில் ஏறமாட்டோம். இடைத்தேர்தல் தொகுதியில் அதிமுகவுக்காக பிரச்சாரம் செய்யமாட்டோம். பாஜகவுடன் தான் எங்களுக்கு கூட்டணி' என கறாராக தெரிவித்திருக்கிறார்கள். இதில், பியுஸ்கோயலுக்கே உடன்பாடில்லை. உடனே, தேமுதிக தலைமையின் விருப்பத்தை அதிமுக தலைமைக்கு பியூஸ்கோயல் தெரிவித்த போது, ' போகாதா ஊருக்கு வழி கேட்கிறார்கள். அவர்களது டிமான்டுகளை ஏற்பது சாத்தியமல்ல. தேமுதிகவை விட்டுவிடுவோம்' என அழுத்தமாக தெரிவித்துவிட்டார் எடப்பாடி.

இந்த நிலையில்தான், 'உங்களின் எதிர்பார்ப்பு மிரட்சியாக இருக்கிறது. 3 சீட் என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். தேர்தல் செலவுகளை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். மற்றபடி உங்கள் முடிவு என சுதீசிடம் கூறிவிட்டு கிளம்பிவிட்டார் பியூஸ் கோயல். இதனால் அப் செட்டானார் பிரேமலதா. அப்போது, திமுக கூட்டணி குறித்து யோசித்தனர். திமுகவின் மனநிலையை அறிந்துகொள்ள திருநாவுக்கரசை அழைத்தார் சுதிஷ். அதன்பேரிலேயே விஜயகாந்தின் உடல்நலத்தை விசாரிப்பதற்காக சென்றார் திருநாவுக்கரசர்.



விஜயகாந்தை சந்தித்துவிட்டு திரும்பிய திருநாவுக்கரசர், சந்திப்பின் விபரங்களை திமுக தலைமைக்கு தெரியப்படுத்தியிருக்கிறார். இதனைத் தொடர்ந்து , கட்சியின் மூத்த தலைவர்களிடம்

16 ஆம் பக்கம் பார்க்க....



# உடற்பயிற்சியின் முக்கியத்துவம்

எமது வாழ்வில் உடற் பயிற்சி என்பது மிகவும் இன்றியமையாதது என்பது நாம் அனைவரும் அறிந்த விடயமே. ஆனால் நாம் ஏன்இ எதற்காக உடற் பயிற்சி செய்ய வேண்டும் என்பதன் சரியான காரணத்தை பலர் அறியாமல் இருக்கின்றோம். இன்று உடற் பயிற்சி என்பது உடல் எடையைக் குறைப்பதற்கான பயிற்சி என்று மட்டும் எண்ணியே பலர் செய்து கொண்டிருப்பது கண்கூடு. உடற் பயிற்சி என்பது உடலுக்கு மட்டுமான பயிற்சி அல்ல. உடற் பயிற்சி உடலினுடையதும், உள்ளத்தினதும் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கான பயிற்சி. உடற் பயிற்சி உடல் எடையை குறைப்பதற்கு மட்டுமல்லஇ உடலில் பல நோய்கள் வராமல் தடுப்பதற்கான பயிற்சி. உடலை கட்டமைப்பு ரீதியிலும், தொழிற்பாட்டு ரீதியிலும் பலப்படுத்துவதற்கான பயிற்சி. இவ்வாறு பலவிதமாக உடற்பயிற்சியையும் அதன் முக்கியத்துவத்தையும் பற்றி கூறிக்கொண்டே போகலாம்.

உடற் பயிற்சி மூலம் பல அநுகூலங்கள் எமது உடலுக்கு கிடைக்கிறது. அவற்றில் சிலவற்றை பார்ப்போம்.

உடற் பயிற்சியானது உடலின் சக்தியின்(நு நெசபல) அளவை அதிகரிக்கின்றது. உடற் பயிற்சியானது உடலின் உறுதியை அதிகரிக்கின்றது. மனித வன்கூட்டுத் தொகுதியின் தாங்கும் தன்மையை அதிகரிக்கின்றது. என்பு, தசைகளை பலம் பொருந்தியதாக மாற்ற உதவுகிறது.

உடற் பயிற்சி எமது உடலின் நிறையை உயரத்துக்கேற்ற விதத்தில் பேண உதவுகிறது.

மனித உடலில் காணப்படுகின்ற உடலுக்கு தீங்கான கொழுப்புக்களின் அளவை குறைத்து எனப்படும் உடலுக்கு நன்மை பயக்கின்ற இலிப்பிட்டுக்களின் அளவை அதிகரிக்க உதவுகிறது. உடற் பயிற்சி செய்யும்போது நாம் உண்ணும் உணவின் மூலம் கிடைக்கின்ற மேலதிகமான கலோரி(சக்தியின் அளவு) பாவனைக்கு உட்படுத்தப்படுகிறது. இதன் மூலம் தேவையற்ற கொழுப்புக்கள் உடலில் தேக்கமடைவதும் இ குருதியை கொண்டு செல்லுகின்ற நாடிகளில் ஏற்படுத்தப்படும் கொலஸ்ரோல் படிவு உருவாதலும் தடுக்கப்படுகிறது.

உடற் பயிற்சி இதயத் தொழிற்பாட்டை சீராகப் பேண உதவுகிறது. உடற் பயிற்சி மூலம் இதயத் தசைகள் வலுடைவதால் உயர் குருதியமுக்கம்இ மாரடைப்புஇதயம் சம்பந்தமான நோய்கள் வருவதற்கான வாய்ப்புக்கள் குறைக்கப்படுகிறது.

உடற் பயிற்சி மூளையின் சுறுசுறுப்பை அதிகரிக்கின்றது. உடற் பயிற்சி மூலம் மூளைக்கு செல்லுகின்ற இரத்த ஓட்டத்தின் அளவு அதிகரிப்பதால் மூளையின் ஆரோக்கியத்துக்கு; தேவையான ஒட்சிசன் மற்றும் போசணைப் பதார்த்தங்களின் விநியோகம் துரிதமாக அதிகரிக்கின்றது. இதனால் மூளையின் கலங்கள் புத்துயிர்ப்படைந்து சுறுசுறுப்பாக செயற்படுகின்றது.

உடற் பயிற்சி சில ஓமோன்களின் சுரப்பை துரிதப்படுத்துவதால் ஞாபக சக்திஇ கற்கும் ஆற்றல் போன்றன அதிகரிக்கின்றது. அத்தோடு இத்தகைய ஓமோன்கள் யுடணநடிடஅநசள னளை நயளந போன்ற கிரகித்தலுடன் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படாமலும் தடுக்கின்றது.

வழமையான உடற் பயிற்சி வகை நீரிழிவு நோய் வராமல் தடுக்கின்றது. வழக்கமான உடற் பயிற்சி குருதிக் குளுக்கோசு மட்டத்தை சீர்செய்வதால் இது நீரிழிவு நோய் வராமல் தடுக்க உதவுகிறது. அத்துடன் பூடிநளவைல எனப்படும் அதிக உடல்பருமன் உடைய தோற்றமும் வராமல் இருக்க உடற்பயிற்சி உதவுகிறது.

உடற் பயிற்சி எமது உடலின் நோய் எதிர்ப்பு சக்தி, நிர்ப்பீடணத் தொகுதியின் தொழிற்பாட்டை அதிகரிக்கின்றது. இது உடலினுள் புகும் தீங்கான பக்டீரியாக்கள்இ வைரஸ்கள் போன்றவற்றுக்கு எதிராக பிறபொருளெதிரிகளை(யுவெடிடிழனநைள) உருவாக்கி அவற்றை ஓரிடப்படுத்தி அழிக்கும் செயற்பாட்டை ஊக்குவிக்கிறது.

உடற் பயிற்சி சிலவகையான புற்றுநோய்களின் விருத்தியைக் குறைப்பதில் உதவுகிறது. சிலவகையான குடல்புற்றுநோய்இ சில நுரையீரல் புற்று நோய் வராமல் தடுக்கவும் உடற் பயிற்சி உதவி புரிகிறது.

நிம்மதியான உறக்கத்திற்கு உதவுகிறது. இன்று பலர் நித்திரைக் குழப்பத்தால் பல்வேறு வியாதிகளுக்கும் மன நோய்களுக்கும் உள்ளாகி வருகிறார்கள். உடற் பயிற்சியின் மூலம் சில ஓமோன்கள் சிறப்பாகத் தொழிற்படுவதால் நித்திரை என்பது சுலபமாகவே வருகிறது. நித்திரையின்மைக்கு பல தேவையற்ற மாத்திரைகளைப் பாவித்து உடம்பைக் கெடுத்துக் கொள்ள வேண்டிய தேவையில்லை. உடற்பயிற்சி இதற்கு சிறப்பான மருந்தாகும்.

உடற் பயிற்சி சில மன நோய்களை குணப்படுத்த உதவுகிறது. உடற் பயிற்சி உடலுக்கும்இ உள்ளத்துக்கும் மகிழ்ச்சியையும்இ புத்துணர்ச்சியையும் ஏற்படுத்துவதால் இது பல மன நோய்களை குணப்படுத்த உதவுகிறது. இது மனவழுத்தத்திற்குகாரணமான ஓமோன்களின் சுரப்புக்களைக் கட்டுப்படுத்தி மனதிற்கு ஆறுதல் அளிக்கிறது.

உடற் பயிற்சி விரைவாக முதுமைத் தோற்றம் அடைவதைக் கட்டுப்படுத்துகிறது. இது உடலின் ஓர்சீர்த்திட நிலையைப் பேணும் தொகுதியின் சிறப்பான தொழிற்பாட்டால் கலங்கள் விரைவாக வயதாவது குறைக்கப்படுகிறது.

மூட்டுக்கள்இ தசைகள் போன்றவற்றின் நெகிழும் தன்மையை அதிகரிக்கின்றது.

எனவே சரியான உடற் பயிற்சிகளை ஒரு இயன் மருத்துவரோடு கலந்தாலோசித்து உங்களினுடைய உடலின் தன்மைக்;கு ஏற்ப பொருத்தமான கால இடைவெளிகளில் பின்பற்றி நோயற்ற ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வீராக.

# ஆபத்தாகும் அசைவ உணவுகள்

நான் சுத்தமான அசைவப் பிரியன். ஒடுவது நடப்பது... மிதப்பது... என ஏதாவது ஒன்று எனக்கு இருந்தே ஆக வேண்டும் என்று சொல்லும் அளவுக்கு அசைவ உணவுகளை விரும்புபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

வீட்டில் சமைத்தாலும் விதவிதமான அசைவ உணவுகளை அன்றாடம் வீட்டிற்கே வரவழைத்து உண்ணும் அளவுக்கு அசைவப் பிரியர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். வீதிக்கு நான்கு கடைகளில் பிரியாணிக்கு சிக்கன் 65 இலவசமாகவும், தள்ளு வண்டியில் பிளேட் பிரியாணி 50 ரூபாய் என்றும் படித்துவிட்டு கடக்கும் போதும் மனம் மயங்கித்தான் போகிறது.

5 வருடங்களுக்கு முன்பு சென்னை தள்ளுவண்டிக் கடைகளில் பிரியாணியில் காக்கா கறி என்று பரபரப்பானது. சமீபத்தில் உணவகங்களில் பிரியாணிக்கு ஆட்டுக்கறிக்கு பதிலாக நாய்க்கறி பயன்படுத்துவதாக சர்ச்சை கிளம்பி அசைவ பிரியர்களின் வயிற்றில் கறியைக் கலக்கியது.

தற்போது கடல் உணவிலும் உடலுக்கு கெடுதல் விளைவிக்கும் பிராய்லர் மீன் சர்ச்சை கிளம்பியுள்ளது. வெளியில் செய்யப்படும் அசைவ உணவுகள் தரமானவையா என்று ஆராய்ச்சி செய்வது இருக்கட்டும். ஆனால் உடல் உழைப்பு குறைந்துவிட்ட இந்தக் காலகட்டத்தில் வயிற்றின் செரிமானச் சுமையை அதிகரித்து பாதிப்பை உண்டாக்கும் அசைவ உணவுகளில் கட்டுப்பாடு தேவை என்று மருத்துவர்கள் எச்சரித்து வருகின்றனர்.

முந்தைய தலைமுறையில் அசைவ உணவு என்பது ஆட்டுக்கறி, நாட்டுக்கோழி, வயல் நண்டு, ஏரி மீன், கடல் உணவுகளான மீன், இறா, நண்டு என பரவலாக இருந்தது. அசைவ நாட்டம் கொண்டவர்கள் அதிகபட்சம் வான்கோழி, காடை, கௌதாரி போன்றவற்றைச் சாப்பிட்டார்கள். அசைவம் என்றால் கிரேவியும், குழம்பும், வறுவலும், தலைக்கறியும், ரத்தப் பொறியலும், வறுவலும், சுறாப்புட்டும் தாண்டி அதிகபட்சமாக மெனக்கெட்டு செய்யப்படும் உணவாக சிக்கன் 65 மற்றும் பிரியாணி மட்டுமே இருந்தது. மசாலாக்களை மையஅரைத்து, அதிக அளவு மிளகு சேர்த்து, செக்கில் ஆட்டிய எண்ணெயில் சுவைக்கான கலப்பின்றி காரஞ்சாரமாய் சாப்பிட்டால் சளி, இருமல் காணாமல் போய்விடும் என்று பாட்டிக்களும் அம்மாக்களும் மணக்கமணக்கச் சமைத்துப் போட்டார்கள்.

அசைவ உணவுகளுக்காகவே நாட்டுக்கோழிகளை வீட்டில் வளர்த்தவர்களும் உண்டு. உடல் ஆரோக்கியம் குறைந்தால் கூட கோழி அடிச்சு மிளகு போட்டு குழம்பு வெச்சு சாப்பிட்டா சரியாகிடும் என்று அசைவத்தை ஆரோக்கியமாக சமைத்தார்கள். நாட்டுக்கோழி முட்டைகளை பச்சையாகவே குழந்தைகளை குடிக்கவைத்தார்கள். பிராய்லர் கோழிகள் என்பதெல்லாம் மருந்துக்கும் கிடையாது.

குளங்களிலும், ஏரிகளிலும் இருக்கும் மீனை உயிருடன் பிடித்து குழம்பு வைத்தார்கள். வயலில் தென்படும் நண்டுகள் உரலில் இடிக்கப்பட்டு ரசமாக்கப்பட்டன. வாரம் ஒருமுறை மட்டுமே அசைவ உணவுகளை அவசியமாக்கி வந்தார்கள். ஆண்கள் வெளியிலும் பெண்கள் வீட்டிலும் குழந் தைகள் திண்ணையிலும் என ஓடிக்கொண்டே இருந்தார்கள். அவர்களது கடின உழைப்பு, செரிமா னத்தை சிறப்பாக வேலை செய்ய வைத்தது. குறிப்பாக ஆடுகள் பசுமையான இலைதழைகளையும், கோழிகள் சத்துமிக்க நவதானியங்களையும் உண்டு வளர்ந்து சத்துக்களை நமக்குக் கொடுத்தது.

ஓய்வு நேரத்தில், விடுமுறை நாளில் மட்டுமே அசைவம் சாப்பிட வேண்டிய நிலை இப்போது மாறிவிட்டது. சைவ உணவகங்களை விட அதிக எண்ணிக்கையில் அசைவ உணவகங்கள் இயங்குகின்றன. மேலும் வீட்டில் சமைக்கப்படும் அசைவ உணவுகளை விட தினுசு தினுசாய் கண்ணைக் கவரும் வகையில் வேகவைக்காமல் அடுப்பில் சுட்டு, எண்ணெயில் பொறித்து, கலரை நிரப்பும் அசைவங்கள் ஆச்சரியப்படுத்துகின்றன. நாக்கில் எச்சில் ஊறவைக்கின்றன.

மட்டன் கட்லெட், மட்டன் கோலா உருண்டை, மட்டன் சாப்ஸ், சப்பாத்தி மட்டன் ரோல், மட்டன் கபாப், மட்டன் உப்புக்கறி, மட்டன் பப்ஸ் (இவையெல்லாம் பட்ஜெட்டுக்கு மிஞ்சிய விலை என்பதால் மேல் மட்ட நடுத்தர மக்களுக்கானது) பெப்பர் சிக்கன், முந்திரி சிக்கன் குருமா, க்ரில்டு சிக்கன், ரோஸ்டட் சிக்கன், சிக்கன் க்ராவ் (இதன் விலை பட்ஜெட்டுக்குள் ஏறத்தாழ கட்டுப்படும் என்பதால் அனைத்து அசைவப் பிரியர்களுக்கும் ஏற்றது) சிக்கன் லெக் பீஸ், சிக்கன் பக்கோடா என 100க்கும் மேற்பட்ட அசைவ வகைகள் அஜினோமோட்டோ சுவைக்கூட்டும் கெமிக்கல் சேர்த்து சுவையூட்டப்பட்டு புதிய பெயருடன் வலம் வந்து அசைவப் பிரியர்களை கவர்கின்றன. எனவே வீட்டில் செய்யப்படும் அசைவ உணவுக்காக காத்திருக்கத் தேவையில்லாமல் சுகாதாரம் பற்றிய கவலையு மில்லாமல் வெளியில் வயிறு முட்ட உண்கின்றனர்.

மட்டன், நாட்டுக்கோழி மாதம் இருமுறை என்பதே பட்ஜெட்டுக்குள் பற்றாக் குறைதான் என்பதால் குறைந்த விலையான பிராய்லர் கோழி தவறாமல் வாரம் ஒருமுறையாவது வீட்டில் கொதிக்கிறது. பிராய்லர் கோழியின் உபயம் நாக்குக்கு உண்டாக்கும் சுவை மட்டுமே. பெண் குழந்தைகளுக்கு பிராய்லர் கோழியால் சமைத்த உணவை அதிகம் கொடுத்தால் ஹார்மோன் மாற்றம் ஏற்பட்டு குழந்தைப்பருவத்திலேயே (8 முதல் 11) பூப்பெய்தும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர் என்கிறார்கள் மருத்துவர்கள். இதைத்தொடர்ந்து சில குழந்தைகளுக்கு சீரற்ற மாதவிடாய் பிரச்சினைகள், அதிக உதிரப்போக்கு கூட ஏற்படுகின்றன.ஊசி மூலம் பெரிதாக்கப்படும் பிராய்லர் கோழியால் என்ன சத்து கிடைத்து விடப் போகிறது. சத்தான ஆகாரங்கள் மனித இனத்துக்கே கேள்விக்குறியாக இருக்கும் போது, ஆடுகள் இலைதழையின்றி பேப்பர் உண்பதை கண்கூடாக பார்க்கிறோம். கடல் உணவுகள் உடலுக்கு நன்மை தரும் என்றாலும் தற்போது மீனைப் பதப்படுத்துவதற்கான முறைகளும், நாட்டு மீன்கள் குறைந்து வருவதால் புதிதாகக் கிளம்பியிருக்கும் பிராய்லர் வகை மீன்களும், கடலில் கண்ணுக்குத் தெரியாமல் கலக்கும் ரசாயனங்களை சாப்பிடும் மீன்களை உண்ணுவதாலும் உடலுக்கு கேடு மட்டுமே தருகின்றன என்பதை மறுக்க முடியாது.

வெப்பம் மிக்க இறைச்சியை மேலும் மின்சார உபயத்தால் சூடாக்கும் போது அதன் வெப்பம் உடல் நிலையை மேலும் பாதிக்கிறது. தினம் ஒரு அசைவ உணவு அல்லது அசைவத்தை அதிகம் சாப்பிடுபவர் களுக்கு மலச்சிக்கல், உடல் பருமன், இதய நோய், அதிக ரத்த அழுத்தம், கல்லீரல் பாதிப்பு, பித்தப்பையில் கல் (செரிமான பிரச்சினை), தாமதமான செரிமானம் என உடலில் உள்ள பெரும்பாலான பாதிப்புகள் விரைவாக ஏற்படுகிறது.

கடும் உடல் உழைப்பால் எளிதாக சாத்தியமாகும் செரிமானம், இன்றைக்கு எகிடுதகிடாகிப் போனது. வீட்டின் தலைவாசலை தாண்டியதும் டூ வீலர், ஃபோர் வீலரின் உபயோகமில்லாமல் கால்கள் ஒத்துழைக்காதவர்களுக்கு அதிலும் அசைவ பிரியர்களுக்கு எப்படி சாத்தியமாகும். கடின உழைப்பாளிகளுக்கு அசைவ உணவு ஒன்றும் செய்யாது என்றாலும் அதிலும் அளவு தேவை.

தற் போது வரும் சமையல் எண்ணெயில் உடலுக்கு ஒவ்வாத கலப்பும் சிறிதளவு இணைந்துள்ளது எனும் போது எண்ணெயில் பொறித்த அசைவ உணவுகள், அரை வேக்காடு இறைச்சி, உடல் ஆரோக்கியத்தை நிச்சயம் சீர் குலைக்கும் என மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன. போதாக்குறைக்கு நிறமூட்டியும், சுவைக்குச் சேர்க்கும் செயற்கையூட்டிகளும் இணைந்து உடலுக்குள் கொசுறு பிரச்சினைகளையும் ஏற்படுத்துகின்றன.

அசைவ உணவுகளை முற்றிலும் தவிர்த்தால் நல்லது. (குறிப்பாக பிராய்லர் சிக்கன்) என்றாலும் அசைவப் பிரியர்கள் எச்சரிக்கையோடு தகுந்த இடைவெளியில் தரமான முறையில் தயாரிக்கப்பட்ட உணவை வீட்டிலேயே சமைத்து சாப்பிடுவது நல்லது என்பதே மருத்துவர்களின் ஆலோசனை.

## விஜய...

15 ஆம் பக்கத் தொடர்ச்சி

விவாதித்திருக்கிறார் ஸ்டாலின். அந்த விவாதத்தில் , 'தேமுதிகவை நம் பக்கம் கொண்டு வரலாம்' என பலரும் கருத்துக்களை வெளிப்படுத்திய நிலையில், விஜயகாந்தை சந்தித்து உடல் நலம் விசாரித்தார் ஸ்டாலின்.

விஜயகாந்துடனான ஸ்டாலினின் சந்திப்பு அதிமுக தரப்புக்கு கிலியை உருவாக்கியிருக்கிறது. இந்த சந்திப்பு குறித்து தேமுதிக தரப்பில் விசாரித்தபோது, 'கூட்டணி குறித்து இந்த சந்திப்பில் விவாதிக்கப்பட்டது. அதிமுக கூட்டணியில் பாமகவுக்கு 7 லோக்சபா ஒதுக்கியிருப்பதால் அதே எண்ணிக்கையை கேட்டுள்ளோம். திமுக தரப்பில் 4 சீட்டுக்கு ஓகே சொல்லியிருக்கிறார்கள். அதேசமயம், காங்கிரஸ் தலைமையிடம் பேசிவிட்டு இறுதி முடிவை தெரிவிப்பதாக சொல்லியிருக்கிறார் ஸ்டாலின். ஒரு வேளை , காங்கிரஸுக்கு ஒதுக்கப்பட்ட 10 சீட்டில் ஓரிரு சீட்டுகளை விட்டுத்தருமாறு கேட்டு அதனையும் சேர்த்து எங்களுக்கு தரலாம் என திமுக திட்டமிடுவதாக தெரிகிறது' என்கின்றனர்.

இதற்கிடையே, தேமுதிகவை வளைக்க திமுக எடுத்து வரும் முயற்சியில் அதிர்ச்சியைடைந்திருக்கும் எடப்பாடி, தற்போது 5 சீட்டுகள் தருகிறோம் என தேமுதிக தலைமைக்கு தகவல் அனுப்பியபடி இருக்கிறார்.

## வெறுப்பாகும்...

14 ஆம் பக்கத் தொடர்ச்சி

டிஸ் கொதே கிளப்கள் நண்பர்களோடு கொண்டாட்டம் போட பிடித்த இடமானது.

பெண்கள், புகைப்பிடிக்கவும், மதுஅருந்தவும் செய்வதையும் உச்சக்கட்டமாக டேட்டிங் கலாசாரத்தையும் விழிகள் விரியப் பார்த்தார்கள். கையில் பணம் புரளும் போது ஆண் பெண் நட்பு வட்டத்தில் அளவு மீறினாலும் தவறில்லை என்னும் மனோபாவம் ஒரு சிலருக்கு உண்டானது. வெளிநாட்டு வேலை வாய்ப்பு வரும் போது கடுமையான நிபந்தனைகளே இருந்தாலும் பறக்கும் ஆசையே இறுதியில் ஜெயித்தது.

### அலுப்பு சலிப்பு

வாரத்தில் இரண்டு நாள் விடுமுறை என்றாலும் விடுமுறைக்கேற்ற வேலையை ஐந்து நாட்களிலேயே முடித்துக் கொடுக்க வேண்டும் எனும் அழுத்தத்தில் தொடங்குகிறது முதல் மன உளைச்சல். அலுவலகத்தில் நுழையும் போதே செல்ஃபோனுக்கும் அவர்களுக்குமான தொடர்பு துண்டிக்கப்படுகிறது. அவசியத்துக்கு தொடர்பு கொள்வது கூட சிரமமாக இருக்கிறதே என்று மனம் எரிச்சலடைய வைக்கிறது.

பெரும்பாலும் நைட் ஷிப்ட் வேலையே என்பதால் உணவு மற்றும் தூக்கம் சுழற்சி முறையில் பாதிப்புகள் ஏற்படுகின்றன. இயற்கையை மீறிய இச்செயல் தொடரும் போது உடல் ஒத்துழைக்க மறுக்கிறது. ஒருபுறம் உடல் ஆரோக்கியத்தில் குறைபாடு.. மறுபுறம் வேலைச்சுமை எனும் சூழ்நிலையில் வேறு வேலை தேடுவோம் என்றால் செழிப்பான வாழ்க்கையும், வரிசைக் கட்டி நிற்கும் லோன்களும் அவர்களை பயமுறுத்துகின்றன. அதனால் எத்தனை பிரச்சினைகள் இருந்தாலும் வேலையில் தவறு நேரக்கூடாது என்ற எண்ணம் அதிக பேருக்கு இன்னும் இன்னுமான மன உளைச்சலை ஏற்படுத்துகின்றன. விளைவு திருவிழாவில் காணாமல் போன குழந்தை போல, எல்லா இடங்களிலும் மலங்க மலங்க விழித்து, வெறித்துக் கொண்டிருக்கிறார்கள் என்கிறார்கள் உளவியல் நிபுணர்கள்.

### குடும்ப வாழ்க்கையில் சிக்கல்?

ஐடி துறையில் வேலை செய்யும் பிள்ளைகளின் பெற்றோர் பாடு ரொம்பவே திண்டாட்டம் தான். ஒரே துறையில் இருந்தாலும் பையனை விட மூன்று மடங்கு வருமானம் ஈட்டும் பெண்ணைக் கொடுக்க தயங்குவார்கள். சரி எப்படியிருந்தால் என்ன? இருவரும் ஒரே துறையில் இருக்கிறார்களே. வயதும் பொருந்தி வரு கிறதே என்று திருமணம் முடித்தால் கணவன் பகல் வேலை பணி முடிந்து இரவு வரும் போது இரவு நேரப் பணிக்கு மனைவி சென்று கொண்டிருப்பாள். இருவரும் ஹலோ சொல்லிக்கொள்ள கூட நேரம் இருக்காது.

படித்து முடித்ததும் வேலைக்கு வந்து விட்டோமோ கொஞ்ச நாள் ஹேப்பியாக இருக்கலாமே. கடனையும் அடைத்து விட்டு பிறகு குழந்தை பெற்றுக்கொள்ளலாம் என்று குழந்தைப் பிறப்பை தள்ளிப்போட்டு, தம்பதியர் பலரும் இன்று குழந்தையின்மை சிகிச்சையில் வரிசை கட்டி நிற்கிறார்கள்.

### மன உளைச்சல், குடைச்சல்

பொருளாதாரத்தை முன்னிறுத்தி பல்வேறு கனவுகளுடன் ஐ.டி. துறையில் கால்பதிக்கும் சிலருக்கே வாழ்க்கை இனிக்கிறது. திட்டமிட்டு வெளிநாடு சென்று பணிபுரிந்தாலும் குறிப்பிட்ட வருடத்தில் வாழ்க்கையின் தரத்தை உயர்த்திக் கொள்பவர்களும் ஐடி துறையில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஒரு சில ஐடி நிர்வாகத்தில் சம்பளம் குறைக்கப்பட்டு வருகின்றன. மேலும் ஆட் குறைப்பு நடவடிக்கையும் மேற்கொள்வதால் தாங்கள் வாங்கிய வங்கிக் கடன்களை அடைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தினால் குடும்பத்துடன் ஒட்டாமல் சிலர் மன இறுக்கத்தோடு வேலை செய்கிறார்கள். ஐ.டி.துறை என்பது பன்னாட்டு தொழில் வேலை சட்டதிட்டங்களுடன் இருப்பதால், தொழிலாளர்களுக்கான நலம் சார்ந்து இருப்பதில்லை என்று வேலையை இழந்த இளைஞர்கள் பலர் குமுறுகிறார்கள்.

சமீபகாலமாக பட்டதாரிகளிடம் ஐடி மோகம் குறைந்துவருகிறது. முன்னணி நிறுவனங்கள் என்றால் சரி இல்லையென்றால் வேறு துறைக்கு மாறலாம் என்ற மனநிலைக்கு மாறிக்கொண்டிருக்கிறார்கள்.

ஐடி துறையில் பணி நிரந்தரமின்மை, மிகக் குறைந்த சம்பளம் என்றாகிவிட்ட இப்போதைய சூழலை உணர்ந்து, இன்றைய தலைமுறையினர் , பொறியியல் பட்டதாரிகளாக இருந்தாலும் எட்டாம் வகுப்புக்கு தகுதி வாய்ந்த அரசு வேலைக்கும் விண்ணப்பிக்கத் தொடங்கிவிட்டார்கள். ஐடி மோகம் குறைந்து வருவதற்கு இதையே உதாரணமாக சொல்லலாம்.

'தென்னை மரத்தில் தேள் கொட்டினால், பனை மரத்தில் நெறிக் கட்டிக் கொள்ளும்' என்பது எதற்குப் பொருந்துகிறதோ இல்லையோ அமெரிக்காவின் தும்மலுக்கு இங்கே நம்மூர் ஐடி இளைஞர்கள், மருந்து தேடும் பரிதாபம் ஒரு பக்கம் கடன், இஎம்ஐ, கிரெடிட் கார்டு பயன்பாடு என்று சிக்கித்திணறுவது இன்னொரு பக்கம் ஒழுக்கம் - ஒழுக்க மீறல் பற்றிய குழப்பங்களுக்குள் காலந் தள்ளவேண்டிய பட்டிமன்ற நிலை இன்னொருபக்கம் என்று இளைஞர்களையும் யுவதிகளையும் இந்த ஐடி சிஸ்டம் வரவர ரொம்பவே அலைக்கழிப்பதாகச் சொல்லிப் புலம்புகிறார்கள் என்று தெரிவிக்கிறார்கள் உளவியல் நிபுணர்கள்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 24.02.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.

# மட்டு. மாவட்ட மீனவர்கள் எதிர்காலத்தில் வறுமையில் வாடும் ஆபத்தை தடுப்பதுடன், இயற்கை வளங்களையும் பாதுகாக்கவும்

**க.விஜயரெத்தினம்**

மட்டு. மாவட்ட மீனவர்கள் எதிர்காலத்தில் வறுமையில் வாடும் ஆபத்தை தடுப்பதுடன், இயற்கை வளங்களையும் பாதுகாக்கவும்-இரா.துரைரெட்ணம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீன்பிடித்தொழிலை வாழ்வாதாரமாக மீனவர்கள் எதிர்காலத்தில் வறுமையில் வாடும் ஆபத்தை தடுக்கவும், மீன்பிடி இயற்கை வளங்களை பாதுகாக்கவும் அனைவரும் முன்னின்று செயற்பட வேண்டுமென முன்னாள் கிழக்கு மாகாண சபை சிரேஸ்ட உறுப்பினரும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முக்கியஸ்தருமான இரா. துரைரெத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மீன்பிடித்துறை அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாவிகள், கடல், குளங்கள், ஏனைய நீர் தேக்கங்கள் போன்றவற்றில் அண்ணளவாக பல்லாயிரக்கணக்கான முழுநேர மீனவர்களும், பகுதிநேர மீனவர்களும் மீன்பிடித் தொழிலை செய்து வருகின்றனர்.

மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வருடா வருடம் தென்னிலங்கைப் பகுதியிலிருந்து வரும் வெள்ளம், மழை நீரால் கரையோரம் குறைந்தது 15க்கு மேற்பட்ட முகத்துவாரம் ஊடாக கடலுக்கு நீர் செல்லுவது வழக்கமாகும். இதன் காரணமாக வருடாவருடம் இம் மாவட்டத்தில் வெள்ளப் பாதிப்பு ஏற்படுவது இயற்கையே. இம் மீனவர்களுக்கு மத்திய, மாகாண அரசுகள், ஏனைய நிதி நிறுவனங்கள் சிறப்பான முறையில் பலதேவைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் வெருகல் இருந்து துறைநீலாவணை வரையான கடற்கரை பிரதேசங்களில் பல்லாயிரக்கணக்கான இழப்புக்களை உயிர்சேதம், பொருட்சேதங்களை சந்தித்தது வரலாற்றில் மறக்க முடியாத சம்பவமாகும்.

இச் சுனாமி ஊடாக மீன்பிடி கட்டிடங்கள், மீன்பிடி உபகரணங்கள் பல இடங்களில் தேவைக்கு அதிகமாக வழங்கப்பட்ட சம்பவங்களும் உண்டு. இதேவேளை மாவட்டத்திலுள்ள அரசாங்க அதிபர், பிரதேசசெயலாளர்கள், கிராம சேவையாளர்கள்,மாவட்ட மீன்பிடித் திணைக்கள அதிகாரிகள் (மத்திய, மாகாண அரசு) ஏனைய நிதி நிறுவனங்கள் போன்றோரின் அயராத ஒத்துழைப்பின் காரணமாக, நல்ல திட்டங்கள் காரணமாக ஓரளவிற்கு மீனவர்கள் துன்பத்திலிருந்து விடுபட்டு வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். திணைக்கள அதிகாரிகளின் சரியான ஒத்துழைப்பே முன்னேற்றத்திற்கு காரணங்களாகும்.

மாவட்டத்திலுள்ள மீனவர்களுக்கு 2001ம் ஆண்டு ஜனவரிமாதம் 15ம் திகதி வெளிவந்ததை மீன்பிடி அமைச்சின் 1167°⁄₃ஆம் இலக்க வர்த்தமானியை முழுமையாக அமுல்படுத்துவதுடன், 400ற்கு மேற்பட்ட மீன்பிடி படகுகளை தரித்து நிறுத்துவதற்கு இறங்குதுறை அமைத்தல், ஐஸ் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை மீண்டும் ஆரம்பித்தல், மீனவர்கள் பயன்படுத்தும் கரையோரங்களை வேறு தேவைக்கு பயன்படுத்தாமல் தடுத்தல், அனுமதியற்ற மீன்பிடியை தடுத்தல், அனுமதியற்ற மீன்பிடியை கட்டுப்படுத்த கடற்படை, பொலிசாரிடம் ஒப்படைத்தல், மீன்பிடிச் சங்கங்களை புனருத்தாரணம் செய்து வலுவான மீன்பிடி சமாசத்தை கட்டியொழுப்பி சரியான வேலைத்திட்டங்களை முன்வைத்தல் உளளிட் பல்வேறு வேலைத் திட்டங்கள் விரைவில முன்னெடுக்கப்பட வேண்டும்.

மேலும் திணைக்களங்களுக்குத் தேவையான வளங்களை அமைச்சு, மாகாண சபை பகிர்ந்தளிப்பதோடு, ஆள்பற்றாக் குறையையும் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாவட்டத்தில் வருடம் தோறும் இயற்கை மாற்றம் ஏற்படுவதன் காரணமாக கடல் பகுதியிலும் வாவிகள், குளங்களில் மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதில்லை. இக்கால கட்டத்தில் மீனவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

வாவி, குளங்களில் இயற்கை சூழலுக்கு உட்பட்ட 15வகைக்கு மேற்பட்ட மீன் இனங்கள் அழிந்து விட்டன. இதை பாதுகாப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மாவட்டத்தில் வாவி, குளங்கள், கடல் போன்றவற்றில் மீன் இனங்கள், இறால் வகைகள் உற்பத்தியாகும் இடங்களையும், இயற்கைச் சூழலையும் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல்.



மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அமுல்படுத்த விரைவாக நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் இம் மாவட்டம் மீன்பிடியில் இருந்து விடுபட்டு மீனவர்கள் வறுமையில் வாட வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

## புதிய கொங்ரீட் வீதிகள் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டன

**மூதூர் நிருபர்**

துரித கிராமிய வசந்தம்- 2020 திட்டத்தின் ஊடாக கொங்கிரீட் வீதிகளாக நிர்மாணிக்கப்பட்ட கிண்ணியா மதீனா நகர் மையவாடி வீதி,அண்ணல்நகர் மூன்றாது குறுக்கு வீதி ஆகியன திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், கல்வி அமைச்சின் கண்காணிப்பு பாராளுமண்ற உறுப்பினருமான கௌரவ இம்றான் மகரூப் அவர்களினால் மக்கள் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிண்ணியா நகர பிதா கௌரவ நளீம்,பிரதேச சபை பிரதி தவிசாளர் கௌரவ பாசித்,நகரசபை உறுப்பினர் கௌரவ ரிஸ்வி,பிரதேச சபை உறுப்பினர் கௌரவ தௌபீக், குச்செவெளி பிரதேச சபை உறுப்பினர் கௌரவ இம்ஜாத் முன்னாள் கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் சுபார் கான் நகரசபை வேட்பாளர்களான பாயிஸ்,கால்தீன்,பிரதேச சபை வேட்பாளர் பைசர்,அஜ்மல் அப்பகுதி ஐக்கிய தேசிய கட்சி முக்கியஸ்தர்கள் உட்பட பொதுமக்கள்,இளைஞர்கள் பலரும் கலந்துகொண்டதோடு பாராளுமன்ற உறுப்பினர் இம்றான் மகரூப் அவர்களுக்கு பலகோடி நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றனர்.




## ஜனவரியில் ராஜினமா; அதற்குள் அனைத்து அதிகாரங்களையும் பயன்படுத்துவேன்

**சீலாமுனை நிருபர்**



எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு பன்னிரெண்டு வைத்தியர்களை நியமிப்பதாக கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டாவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

கிழக்கு மாகாணத்திலுள்ள சகல மாகாண வைத்தியசாலைகளிலும் நிறைய குறைபாடுகள் காணப்படுகின்றது. ஆளணிப்பற்றாக்குறை மாத்திரமல்ல. பௌதீகப்பற்றாக் குறையும் காணப்படுகின்றது. இவற்றை நிவர்த்தி செய்யக்கூடிய பல முயற்சிகளை நான் மேற்கொண்டு வருகின்றேன்.

மாகாணம் குறிப்பிட்ட நிதியும், குறிப்பிட்ட அதிகாரங்களுடனும் கொண்ட சபை. அதிகமான நிதி, ஆளணிகளை மத்திய அரசு வைத்திருக்கின்றது. மத்திய அரசுடன் உறவைப்பேணி சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் பேசி முடியுமானளவு விரைவாக கிழக்கு மாகாணத்திலுள்ள சகல நிருவாக ரீதியான பிரச்சனைகள், இன ரீதியான முரண்பாடுகள், கல்வி, சுகாதாரம் சகல துறைகளிலும் இருக்கின்ற சகல பிரச்சனைகளையும் முடியுமான வரை தீர்த்து வைக்க வேண்டுமென்று செயற்பட்டு வருகின்றேன். எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு 12 வைத்தியர்களை நியமிப்பதற்கு சுகாதார அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது. அத்தோடு, மகப்பேற்று வைத்திய நிபுணர் இல்லாது காணப்படுகின்றது. இவற்றை நிவர்த்தி செய்ய ஒய்வு பெற்ற வைத்தியரை மீள நியமித்து அவருக்கான சம்பளத்தினை கிழக்கு மாகாண சபை வழங்க முடிவு செய்துள்ளது.

கிழக்கு மாகாண வைத்தியசாலையில் மகப்பேற்று வைத்திய நிபுணர் இல்லாது காணப்படுகின்றது. கொழும்பு வைத்தியசாலைகளில் மேலதிகமான வைத்தியர்களை வைத்துள்ளனர். சுகாதார அமைச்சு தர முடியாதென்றால் கிழக்கு மாகாணம் மகப்பேற்று வைத்திய நிபுணர் இல்லாது இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கின்றனர்.

அத்தோடு, கிழக்கு மாகாணம் கல்வியில் ஒன்பதாவது இடத்திலுள்ளது என்னவென்று பார்த்தால், கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்ப பாடங்களில் மாணவர்களின் சித்தி குறைவாகவே காணப்படுகின்றது. குறித்த பாடத்திற்கு ஆசிரியர் குறைவாகவே காணப்படுகின்றனர். இவற்றினை மத்திய அரசாங்கம் வழங்குவதில்லை. எதிர்வரும் ஏப்ரல் 5ம் திகதிக்கு முன்னர் கிழக்கு மாகாணத்தில் ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பம் உட்பட்ட ஏனைய பாடங்களுக்கு மாகாணத்திலுள்ள உயர் தரம் படித்த தகுதியான மாணவர்களைக் கொண்டு நிரப்புவதற்கு தீர்மானம் எடுத்துள்ளோம். கிழக்கு மாகாணத்தில் ஐந்து வலயங்கள் ஆசிரியர் பற்றாக்குறையால் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. இவற்றினை நிவர்த்தி செய்ய பல முனைப்புக்களை நான் மேற்கொண்டு வருகின்றேன்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 10ம் திகதி எனது பதவியை இராஜினாமாச்செய்வேன். அதற்குள் 13வது சரத்தின் கீழ் வழங்கியுள்ள அதிகாரங்கள் அனைத்தையும் நூறு வீதம் பயன்படுத்தி பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டுமென்று எதிர்பார்க்கின்றேன் என்றார்.






RUN to Beat Cancer in Srilanka organization UK மற்றும் CANE அமைப்பின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் ஆகியவற்றின் பங்களிப்புடன் எகுநூ அமைப்பின் ஏற்பாட்டில் மாபெரும் இலவச மருத்துவ முகாம் தி/மூ/கிளிவெட்டி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இதில் புற்றுநோய்க்கான விழிப்புணர்வு, பரிசோதனை, கண் பரிசோதனை, பற்சிகிச்சை, தோல் நோய் சிகிச்சை, பொதுவான சிகிச்சை, குருதி அழுத்தப் பரிசோதனை, நீரிழிவுப் பரிசோதனை போன்ற பல மருத்துவ சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அது மட்டுமல்லாமல் சமூக சேவைகள் திணைக்களத்தினால் இலவச பஸ் போக்குவரத்தும் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்ததோடு நடமாடும் சேவையும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விசேட வைத்திய நிபுணர் ரி.சிவகுமார், புற்றுநோய் சிகிச்சை நிபுணர் சசிகலா பரமகுலசிங்கம் உட்பட 10க்கும் மேற்பட்ட வைத்தியர்களும் ஊழியர்களும் கலந்துகொண்டு மக்களுக்கான சேவையை இலவசமாக வழங்கியிருந்தனர். அத்துடன் திருகோணமலை விஜய் நற்பணிமன்ற உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பாடசாலை மாணவர்களும் இந்நிகழ்வு சிறப்பாக இடம்பெற உதவியிருந்தனர். நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

படம்: சேனையூர் நிருபர்

# உதயபுரத்தில் கருமாரி அம்மன் ஆலய மாசிமக யாகத்தில் நடந்த அற்புதம்

**பெரியகல்லாறு நிருபர்**

பெரியகல்லாறு உதயபுரத்தில்; வேம்புமரத்தின் கீழ் அமைக்கப்பட்ட எளிமையான ஆலயத்தில் இருந்து அருள் பாலிக்கும் கருமாரி அம்மனின் அற்புதங்கள் நாளுக்கு நாள்அதிகரித்துவருவதாக அம்மன் பக்தர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த செவ்வாயன்று நடைபெற்ற மாசிமக நான்காவது ஆண்டு பெருவிழாவை முன்னிட்டு யாகம் நடாத்தவதற்கு ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில்பாண்டிருப்பைச் சேர்ந்த நாகேஸ்வரன் குருக்கள் (கல்முனை அரசடி பிள்ளையார் ஆலயம்)முதற் தடவையாக திடீரென வருகை தந்தார்.

ஆலய நிர்வாகிகள் வேறு ஒரு குருக்களை மட்டக்களப்ணீல் இருந்து ஒழுங்கு பண்ணியிருந்தவேளையில். தங்களுக்கு அறிமுகமில்லாத அந்த குருக்கள் வேம்பு மரத்தையும் ஆலயத்தையும்சுற்றிப்பார்த்துவிட்டு அம்மன் எனக்கு கட்டளை பிறப்பித்த ஆலயம் இதுதான் என்பதைஉறுதிப்படுத்திக் கொண்டார்.

எனது ஆலயத்தில் நடைபெற இருக்கும் யாகத்திற்கு 21 மூலிகைகளை கொண்டுபோய் சேர்க்க வேண்டும் என அம்மன் பணித்தார். மூலிகைகளின் பெயர்களை கூறும்படி கேட்க அவை உன்னிடம் வந்து சேரும் என கூறி மறைந்துள்ளார்.

இரண்டு நாட்களில் அந்த மூலிகைப் பொதி தான் பூஜை செய்யும் ஆலயத்தில்காணப்பட்டதாகவும் இதை அம்மன்தான் அனுப்பியள்ளாட என்பதை உணர்ந்து, அவற்றை உலர்த்தி கொண்டு வந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அம்மன் வாக்கு கொடுத்த 21 மூலிகைகளோடு வந்திருக்கின்றேன் என்று கூறி மூலிகைகள் கையளித்தார். அத்துடன் வேம்பு மரத்தில்தான் இருப்பதாகவும் அதன் கீழ் நெய்விளக்கேற்றுமாறும் கூறியுள்ளார் என தெரிவித்தார். (குறித்த மரத்தில் பெரிய





கருநாகமும்,வெண்நாகமும் இருக்கும் படங்கள் ஆலய பொறுப்பாளர்கள் வசம் இருப்பதைக்காணக் கூடியதாக இருந்தது.) அத்துடன் அம்மரத்தில் இரு கண்களுக்கான அடையாளமும்காணப்படுகின்றது.)

பின்னர் குறித்த ஐயா பூஜை நேரத்தில் குடும்பத்தாருடன் வநது நெய்விளக்கேற்றி அம்மனின்கோரிக்கையை பூர்த்தி செய்த மகிழ்ச்சியில் காணப்பட்டார்.

மட்டக்களப்பில் இருந்த வந்த ஐயா யாகம் வளர்த்தார். அவ்வேளை யாக தீயில் அம்மன்திருவருவம் மற்றும் சிவன், முருகப் பெருமான் மயிலுடனும் காட்சி தந்ததாக பக்தர்கள்தெரிவிக்கின்றனர். சிலர் இதை காணொளியிலும் பதிவு செய்துள்ளதையும் காணக் கூடியதாகஇருந்தது. (இணைக்கப்பட்டுள்ள கடைசிப் படங்களை உற்று நோக்கினால் ஓரளவு தெரியும்கைதொலைபேசி படங்கள் என்பதால் தெளிவ குறைவு) பூஜையின்போது வயது பேதமின்றி பலபெண்கள் உருவேறி ஆடவும் செய்தனர்.

மிகவம் சக்திமிக்க ஆலயமாக வளர்ந்துவரும் இவ்வாலயத்தின் உரிமையாளரும் அம்மனின்சக்தி பெற்றவருமானவர் (பெண்), அம்மன் அருளால் பக்தர்களின் குறைகள் மற்றும் நோய்கள்தீர்த்துவைப்பதிலும் முன்னிலை வகிக்கின்றார். தீர்வு கிடைத்தவர்களின் கைபட எழுதிய சுயபதிவேட்டையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

இம்மாதம் 3ந் திகதி குறித்த நாகம் தீண்டி உயிர் ஊசலாடிக் கொண்டிருந்த பெரியகல்லாறு மக்கள் வங்கி வீதியைச் சேர்ந்த திருமதி உதயகுமாரன் விமலேஸ்வரி (52) நாகம் தீண்டி தான்மறுபிறவி எடுத்த மெய்சிலிர்க்கவைக்கும் கதையை எம்மிடம் தெரிவித்தார்.

நள்ளிரவு நெருங்கும் நேரம். நான் நல்ல உறக்கத்தில் இருந்தபோது காலில் ஏதோ் கொத்தியது போன்ற உணர்வு. திடுக்கிட்டு விழித்து காலைப் பார்த்தபோது காலின் அருகருகே 3 இடங்களில்இருந்து இரத்தம் பொசிந்து கொண்டிருந்தது. தாங்கமடியாத வலி. உடல் நீலமாக மாறிக்கொண்டிருந்தது. உணர்விழந்து வருவதை உணர்ந்தேன். உடனே என்னை இந்த ஆலயத்திற்கே கொண்டுவந்தார்கள்.

ஆலய அம்மா என்காலில் வாய்வைத்து விஷத்தை உறிஞ்சி எடுத்து வாயால் துப்பினார். இவ்வேளை நான் முற்றாக உணர்விழந்துவிட்டேன். இறுதியில் ஆலய அம்மாவும் உணர்விழந்துவிட்டதாக பின்னர் அறிந்தேன். சிறிது நேரத்தில் நான் உணர்வு பெற்றேன். ஆலய அம்மாஆபத்தான காரியம் என தெரிந்தும் என்னைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கோடு தனதுஉயிரைத் துச்சமாக மதித்து எனக்கு உயிர் பிச்சை அளித்ததை என் வாழ்நாளில் ஒருபோதும்மறக்க முடியாது. இதன் மூலம் கருமாரியம்மனின் அருளையும் மகிமையையும் நேரடியாகஎன்னால் உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருந்தது என அவர் தனது அனுபவத்தை நேரடியாகஎம்மிடம் மெய்சிலிர்க்க பகிர்ந்து கொண்டார். இதற்கு முன்னரும் இதேபோல் அரவம் தீண்டியவர்களை ஆலய அம்மா காப்பாற்றியள்ளார் என்பதை சுய பதிவேட்டில்சம்பந்தப்படடவர்கள் பதிந்துள்ளதை காணக் கூடியதாக இருந்தது.

அகந்தை கொண்டு அழிவின் விழிம்பில் இருக்கும் மனித குலம், அம்மனின் அருளாள்ஆட்கொள்ளப்பட வேண்டும் என்பதே எமது பிரார்த்தனை.




# கிண்ணியாவின் திண்மக் கழிவு முகாமைத்துவம் அதன் உற்பத்திகளும்

**ஹஸ்பர் ஏ ஹலீம்**

கிண்ணியா 9 .5டுட்2 பரப்பளவு கொண்டது மக்கள் சனத்தொகை 41160 , குடும்பங்கள் 10914 அண்ணளவாக காணப்படுகின்றது.

அரச காரியாலயங்கள் 12 ,பெரிய மார்க்கெட் 5 ,வைத்தியசாலை 4 ,பாடசாலைகள் 25 மேல் ஹோட்டல் 250 மேல்.

அதிகம் கழிவு சேரும் இடங்களாக வீடுகள் மீன் மார்க்கெட் இறைச்சி மார்க்கெட் மாட்டுத்தொழுவம் உணவகங்கள் போன்ற இடங்களில் அதிக கழிவுகள் சேர்கின்றன.

கழிவுகளின் வகைகளாக உக்கக்கூடிய தாவர விலங்கு பகுதிகள் ,பிளாத்திக்கு, பொலித்தீன் ,போத்தல்கள், வீட்டுக் கழிவுகள்

கிண்ணியாவின் சனத்தொகைக்கு ஏற்ப ஒரு நாளைக்கு 27000 - 30000 கிலோ கழிவுகள் சேர்கின்றன .

ஒரு நபர் கிண்ணியாவில் 1-1.5 கிலோ திண்ம கழிவுகளை தலா ஒரு நாளைக்கு வெளியேற்றுகின்றார்.

அதனடிப்படையில் ஒரு நாளைக்கு ஒருவர் வருமானத்திலிருந்து சுமார் 30 -50 ரூபா வரை திண்மக்கழிவாக வீண் ஆக்குகின்றார்.

எனவே கிண்ணியாவிலிருந்து ஒரு நாளைக்கு திண்மக்கழிவாக வெளியேற்றப்படும் பணத்தின் அளவு 41106★20-30=10 -20 லட்சம் செலவாகும்.

இத்திட்டத்தின் நோக்கம் இழக்கப்படுகின்றன பணத்தினை மீள் சுழற்சிமூலம் மீண்டும் கிண்ணியாவுக்கு பணத்தைச் சேர்ப்பதாகும். இது தொடர்பான திட்டத்தை கிண்ணியா நகர சபையின் உறுப்பினர் ஏ.எம்.எம்.அனீஸ் தவிசாளரிடம் கையளித்துள்ளார்.

குறித்த திட்டங்கள் தொடர்பான விபரங்களை நகர சபையின் தவிசாளரிடம் இன்று புதன் கிழமை கையளித்துள்ளார்.

இத்திட்டத்தினை மிக வேகமாகவும் நுணுக்கமாகவும் செய்ய நவீன இயந்திரத்தின் மூலம் அரைத்து சிறு சிறு பகுதிகளாக உடனடியாக கூட்டெருவாகவும்,பிளாத்திக்கு ஏற்றுமதிக்கும் பயன்படுத்தலாம்.

இதன் மூலம் கழிவுகள் மொத்தமாக சேர்ந்து குப்பைமேடுகள் உருவாவதை ஒவ்வொரு நாளும் தடுத்துக்கொள்ளலாம்.

இயந்திரத்தின் மூலம் ஒரு நாளைக்கு 12 -18 ஆயிரம் கிலோ குப்பைகளை அரைத்து ஒரே நாளில் அகற்றலாம்.

இதில் தனித்தனியாக உக்கக்கூடிய, கழிவுகள் ,பிளாக்குகள் , போதல்கள்,வைத்தியசாலை கழிவுகள், அரைத்து வெளியேற்றுவதுடன் ஒப்பந்தக்காரர்கள் வாங்குவதற்கு தயார் நிலையில் உள்ளனர்.

இத்திட்டத்தை இலகுவாக சமூகத்தில் நடைமுறைப்படுத்த கழிவுகளை மக்களிடமிருந்து தனியாக பிரித்தெடுத்து ஒரு கிலோ கழிவினை 2-5ரூபாயாக மக்களிடமிருந்து வாங்கலாம்.

பாடசாலைகளிலும் இதற்கென தனியான சேகரிக்கும் பகுதியை உருவாக்கி அதனை நிருத்து எடுத்து மாணவர்களுக்கு வருட இறுதியில் ஊக்குவிப்பு பாடசாலை உபகரணங்கள் வழங்கலாம். மாணவர்கள் நல்ல பழக்க வழக்கங்களுக்கு மாறுவார்கள்

நகரசபையில் ஒவ்வொரு மாதமும் திண்மக் கழிவுகள் சேகரிப்புக்காக செலவிடப்படும் பணம் எரிபொருளுக்கு 11 1573.80 லட்சமும் வாகன முகாமைத்துவத்திற்கு 3-5 மொத்தமாக 4-6 லட்சம் மாதம் செலவழிக்கப்படுகின்றது.

இத்திட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் போது கழிவுகளின் உற்பத்தியின் மூலம் பெறப்படும் வருமானத்துடன் சேர்த்து செலவிடப்படும் தொகையை மிச்சப்படுத்தலாம்.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாக

1.20-40 புதிய வேலைவாய்ப்புகள்.

2. கழிவுகளை உற்பத்திகள் ஆக்கி விற்பனை செய்வதன் மூலம் நகரசபைக்கு மாதம் 15-20 லட்சம் வருமானம்.

3. தூய க்ரீன் சிட்டியாக கிண்ணியாவை மாற்றலாம், சுற்றுலா தலமாக மாறும்.

4. மக்கள் கூளங்களை சபைக்கு விற்பனை செய்வதால் டெங்கு பிரச்சினை தீரும், மக்களுக்கு ஒரு வருமானமாகும் தொழிலாக மாறும்.

5. குப்பைகளை வீதிகளில் காணப்படுகின்றது நகரசபை அகற்றவில்லை என்ற பிரச்சினையை பூஜ்ஜியமாக 0 கொண்டு வரலாம்.

6. சேதன விவசாயம் ,நஞ்சற்ற உணவு, வீட்டுத்தோட்டம் ,வீடுகளை அழகுபடுத்தல் என்பவற்றை மேற்கொள்ளலாம்.

7. குப்பை மேடு ஒன்று காணப்படாததால் யானைகள் ஏற்படும் தொல்லைகளை பாதிப்புகளை குறைக்கலாம்.

இத்திட்டம் நகரசபைத் தவிசாளர், உறுப்பினர்கள்,செயலாளர் பூரண ஒத்துழைப்போடு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இயந்திர வசதி இன்மையால் மிக மந்தகதியில் நடைபெறுவதுடன் இயந்திரத்தை பெற்று இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது இன்னும் ஓரிரு மாதங்களில் கிண்ணியாவில் மிகப்பெரிய மாற்றத்தை எதிர்பார்க்கலாம்.

இத்திட்டத்தை நவீனமயப்படுத்த 10 லட்சம் ரூபாய் மட்டும் போதுமானது என எதிர்பார்க்கப்படுகிறது என மேலும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் மக்களை தொடர்ச்சியாக ஏமாற்ற முடியாது

**கல்லடி நிருபர்**

தமிழ் மக்களை தொடர்ச்சியாக ஏமாற்றிவரும் மகிந்தராஜபக்ஸ மொட்டைக்காட்டி தமிழ் மக்களை ஏமாற்றமுடியாது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கான தீர்வினையெல்லாம் கிடப்பில் போட்டவர் மொட்டை மலரவைக்கவேண்டும் என்பதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆதரவினைக்கோரி நாடகம் ஒன்றை அரங்கேற்ற முனைவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழர்களுக்கு துன்பம் ஏற்படுவதற்கு ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணிலும் ஒரு காரணமாக இருக்கின்றபோதிலும் அவர் சிறிது உணர்திருக்கின்றார்.மகிந்தராஜபக்ஸ உணராததை ரணில் விக்ரமசிங்க உணர்ந்திருக்கின்றார்.

ராஜபக்ஸ சர்வாதிகார போக்கில் ஆட்சியை கைப்பற்றலாம் என சிந்திக்கின்றார்.ரணில் விக்ரமசிங்க ஜனநாயகத்தின் மூலம் ஆட்சியைபெற சிந்திப்பதாகவும் அதனால்தான் ரணில் விக்ரமசிங்கவுக்கு தாம் ஆதரவு வழங்கியுள்ளதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

மகிந்த ஆட்சிக்காலத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களினால் எதனையும் செய்யமுடியாத நிலையிருந்ததாகவும் இன்று பல்வேறு நிதியொதுக்கீடுகளும் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வழங்கப்பட்டு முன்னெடுக்கப்படுவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பார் வீதியில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

மகிந்த ராஜபக்ச தலைமையிலான மொட்டுக் கட்சி எதிர்காலத்தில் தாங்களே ஆட்சியமைக்கப்போவதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை பெற்று தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வினை வழங்குவோம் எனவும் கூறுகின்றனர். உண்மையில் இவர்கள் நினைத்திருந்தால் 2009ஆம் ஆண்டு யுத்தம் மௌனித்ததன் பின்னர் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுகின்ற நடவடிக்கையை மேற்கொண்டிருக்கலாம்.

ஏனென்றால் யுத்தத்தை நடத்தியவர் மகிந்த ராஜபக்ச அவர்களாவார். அவரோடு இணைந்து செயற்பட்டவர்கள் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் மகிந்த அவர்களின் சகோதரர்களான பசில், கோத்தபாய போன்றோராவர். யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்துவிட்டதாக மார்தட்டிக் கொண்ட இவர்கள் நினைத்திருந்தால் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தொரு நியாயமான தீர்வினை வழங்கி தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்த்திருக்கலாம்.

உண்மையில் இங்கு நடந்த யுத்தத்தை மற்றொரு நாட்டின் மீது தனது படையை அனுப்பி மேற்கொள்ளப்பட்ட ஒரு போராகவே மகிந்த அவர்கள் கருதினார். ஒரு நாட்டிற்குள்ளேயே அந்த நாட்டின் தேசிய இனங்கள் உரிமைக்காக போராடுகின்ற சந்தர்ப்பத்தை கிளர்ச்சியாகவே கொள்ள முடியும். அது போராகக் கொள்ள முடியாது. ஆனால் மகிந்த ராஜபக்ச அவர்கள் அவ்வாறு கருதவில்லை. அதனால் தான் அவர் 2009ஆம் ஆண்டு மேமாதம் 17ஆம் திகதி இந்த நாட்டை மீட்டுவிட்டதாக நிலத்தை முத்தமிட்டார்.

இந்தியாவில் இந்திரா காந்தி அவர்களின் ஆட்சிக் காலத்தில் பொற்கோயில் பிரச்சினை ஏற்பட்டது. சீக்கியர்களுக்கு எதிராக இந்திய இராணுவம் போரை நடத்தியது. அந்தப் போரிலே சீக்கியர்கள் பலர் அழிக்கப்பட்டனர். வெற்றி பெற்ற இந்திய இராணுவம் அப்போதிருந்த இந்திய பிரதமரை அணுகி வெற்றி விழாவை கொண்டாட கோரியபோது இந்திரா காந்தி அவர்கள் துரதிஷ்டவசமாக எங்களது மக்களை நாங்களே அழித்திருக்கின்றோம்,இது வெட்கப்படவேண்டிய விடயம், பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களை கவரும் வகையில் நாங்கள் செயற்படவேண்டுமே தவிர வெற்றிவிழாவாக கொண்டாட முடியாது என பதிலளித்தார். ஒரு நாட்டின் உண்மையான அரசியல் தலைவர் அவ்வாறே கருதவேண்டும்.

இந்த நாட்டின் ஒரு தேசிய இனத்தின் மீது போர் தொடுத்து பலரை அழித்திருக்கின்றோம். அப்படியிருக்கையில் அந்த மக்களின் மனங்களை கவரும் வகையில் செயற்திட்டங்களை முன்னெடுத்திருக்க வேண்டும். மாறாக சர்வதேச நாடுகளின் உதவியுடன் பாரிய இன அழிப்பை மேற்கொண்டுவிட்டு தனது அட்சிக்காலம தொட்டு இன்றுவரை எந்தவொரு நியாயமான தீர்வையும் வழங்காத மகிந்த ராஜபக்சவும் அவருடைய சகோதரர்களும் இப்போது மொட்டு ஆட்சியை ஏற்படுத்துவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தங்களோடு இணைந்து செயற்படவேண்டுமெனவும் அவர்களுடன் பேசி தீர்வை வழங்குவோம் என்று கூறுவது போலியான சந்தர்ப்பவாத நடவடிக்கையாகும்.

மகிந்த ராஜபக்ச அவர்கள ஜனாதிபதி; ஓக்டோபர் மாதம் 26ஆம் திகதி ஏற்படுத்திய புரட்சியினால் போலிப்பிரதமராக உருவானபோது எங்களுடைய தலைவர் சம்பந்தன் அவர்கள் அவரை சென்று சந்தித்து தமிழ் மக்களின் நியாயமான தீர்வு பற்றி பேசியிருந்தார். ஆனால் அவை எதற்கும் அவர் சாதகமானதொரு பதிலை வழங்கவில்லை. அவர் சிங்கள கடும்போக்காளராக தன்னை காட்டிக்கொண்டார். அப்படிப்பட்டவர் இனி எவ்வாறு தீர்வினை வழங்க முடியும்.

2009ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை தன்னுடைய கைகளில் ஆட்சியை வைத்திருந்தபோது கிட்டத்தட்ட 18தடவைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவருடன் பேச்சுவார்த்தை நடத்தியது. நியாயமானதொரு தீர்வினை பேச்சுவார்த்தை மூலம் அணுகி பெற முயற்சித்தது. அந்தப் பேச்சுவார்த்தைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒதுக்கிவிட்டு அவர்களாகவே விலகிச் சென்றார்கள். அன்று அவ்வாறு ஏமாற்றியவர்களே இன்று மொட்டாக மலர்ந்திருக்கின்றார்கள். மொட்டு சிங்கள தீவிரவாத கட்சியாக இருக்கின்றது. இந்த நாட்டின் தேசிய இனம் தமிழினம் என்பதை ஏற்றுகொள்ள தவறுகின்ற கட்சியாக இருக்கின்றது. அண்மையில் நவசமாஜக் கட்சியின் தலைவர் அவர்கள் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் தமிழர்கள் தான் என்பதையும் அதனை ஆதாரபூர்வமாக தன்னால் நிரூபிக்க முடியும் என்பதையும் உறுதியாகக் கூறியிருக்கின்றார். இது மிகப்பெரிய விடயமாகும். இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் தமிழர்கள் என்பதை ஒரு சிங்களக் கட்சியின் தலைவர் ஏற்றுக்கொள்கின்ற நிலை தோன்றியிருக்கின்றது.

மகிந்த ராஜபக்ச அவர்கள் ஜனாதிபதியாக இருந்தபோது தமிழ் மக்களுக்கு 13 பிளஸ் இனை தீர்வாக வழங்குவேன் என சர்வதேச நாடுகளுக்கு கூறியிருந்தார்.ஆனால் அதை அவர் செய்யவில்லை. பல ஆணைக்குழுக்களை ஏற்படுத்தினார் அந்த ஆணைக்குழுக்கள் வழங்கிய அறிக்கைகளையெல்லாம் கிடப்பில்போட்டார்.அவர் தமிழ் மக்களையும் தமிழ் அரசியல் தலைவர்களையும் ஏமாற்றும்செயற்பாடுகளையே செய்துவந்தார்.

# ஓட்டோ சங்கங்கள் யாவும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டும்; தவறும் பட்சத்தில் இலவச வண்டிச் சேவையை மிக விரைவில் ஆரம்பிப்போம்

**சீலாமுனை நிருபர்**

மட்டக்களப்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட ஓட்டோ சங்கங்கள் யாவும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டும் அவ்வாறு வராமல் சட்டத்துக்கு முரணாகச் செயற்படுமாக இருந்தால் அதனை மாநகரசபை முழுமையாகப் பெறுப்பெடுத்து நகரத்துக்குள் இலவச முச்சக்கர வண்டிச் சேவையை மிக விரைவில் ஆரம்பிக்குப்படும் என மட்டக்களப்பு மாநகர மேயர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர மேயர் மட்டக்களப்பு முச்சக்கர வண்டிச் சாரதிகள் நலன்புரிச் சங்கத்துக்கு எதிராகச் செயற்படுவதாகத் தெரிவித்து அச்சங்கத்தினரால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குள் ஓட்டோ சாரதிகள் பலர் நியாயமாக நடந்துகொண்டாலும் சிலரது செயற்பாடுகள் முறைப்பாட்டுக்குரியதாகவே காணப்படுகின்றன. இதனால் ஓட்டோ சங்கங்களுடன் கலந்துரையாடல் ஒன்றுக்கு எழுத்து மூலம் அறிவித்தல் விடுத்ததாகவும் அதில் ஓட்டோ சாரதிகள் 7 பேர் மாத்திமே கலந்துகொண்டிருந்தனர்.

ஓட்டோ சங்கச் சாரதிகள் அனைவருடனும் கலந்துரையாட வேண்டும் என்பதற்காக பகிரங்க அறிவித்தல் ஒ'ன்றினை விடுக்கப்பட்டதாகவும், அவர்களுடனான சந்திப்பு கடந்த 19ஆம் திகதி இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் இவ்வாறான சந்திப்புக்கள் இடம்பெறுகின்றபோது வருபவர்களின் பெயர்கள் பதிவு செய்யப்படுவது ஒரு வழக்கமாக இருந்து வருகின்ற விடயமாகும்.

ஓட்டோ சங்கம் என்று செல்லுபவர்களாகிய நாங்கள் எவ்வித பதிவுகளையும் செய்யாமல்தான் கலந்துரையாடலுக்கு உள்வருவோம் எனத் தெரிவித்தனர். அன்றைய தினம் பதிவு செய்தர்கள் மாத்திரம் உள் நுழைய ஏனையவர்கள் வெளியில் நிற்கக்கூடிய வகையில் அக்கூட்டம் நடைபெற்றதாகவும் மேயர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், அனைத்து ஓட்டோ சாரதிகளும் தமது வியாபார நடவடிக்கை தொடர்பில் மாநகரசபையில் பதியப்படவேண்டுமென சில விதிமுறைகளை விதித்தாகவும் ஆனால் இதுவரை எந்தவொரு ஓட்டோ சாரதிகளும் அவ்வாறு பதியவில்லை எனவும் இது பாரிய சட்டவிரோதமான செயற்பாடு எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், மாநகரசபை நியதிச் சட்டத்தை அமுல்படுத்தும் போது, அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் அதனை அனுசரித்துப் போகவேண்டுமெனவும் வெறுமனமே அரசியல் நடத்துவதற்காக, சட்டத்தை அமுலாக்காதே என்று சொல்வதற்கு அரசியல்வாதிகளுக்கு அருகதையில்லை எனவும் அவர் சாடினார்.

























காரைதீவில் அமைந்துள்ள குழந்தை இயேசு கிறிஸ்தவ புனித ஆலய வருடாந்த திருவிழா உற்சவத்தின் திருச்சொரூப பவனி இடம்பெற்றது. ஆலயத்தில் விசேட ஆராதனை பூஜைகள் இடம்பெறுவதையும் திருச்சொரூபம் வீதியுலா வருவதையும் கலந்துகொண்ட மக்களின் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம்

படம்: காரைதீவு நிருபர்

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனான கலந்துரையாடல்





**கல்லடி நிருபர்**

பயங்கரவாதத் தடைச் சட்டமும் வேண்டாம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் வேண்டாம் நடைமுறையிலுள்ள குற்றவியல் சட்டங்களே போதுமானவை எனும் தொனிப்பொருளிலான பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்குப் பதிலாக கொணரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் குறைபாடுகள் மற்றும் அதன் பாதக தன்மைகள் தொடர்பிலான கலந்துரையாடல் நிகழ்வு (18) இன்றைய தினம் மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் மட்டக்களப்பு அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமான இணையம் அமைப்பின் தலைவர் ச.சிவயோகநாதன் தலைமையில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமான இணையம் மற்றும் கரிதாஸ் எகெட் நிறுவனத்தின் பல்சமய ஒன்றியம் உட்பட மட்டக்களப்பு மாவட்ட பெண்கள் செயற்பாட்டு வலையமைப்பு ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், பிரதிமுதல்வர் உட்பட மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், பிரதித் தவிசாளர்கள், உறுப்பினர்கள், சர்வமதப் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர் ருக்கி பெனான்டோ, இணைச் செயற்பாட்டாளர் சட்டத்தரணி சுவஸ்திகா அருளிங்கம் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் இணையம் அமைப்பினால் பல்வேறு தரப்பினருடன் பல்வேறுபட்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தின் சர்வமதத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள் என பலதரப்பட்டவர்களுடனான கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு தற்போது உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளுடன் இக்கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் பாதகநிலைமைகள் பல தெளிவுபடுத்தப்பட்டது. அத்துடன் உள்ளூராட்சி மன்றங்களில் இப்பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பிலான பிரேரணை கொண்டுவரப்பட்டு அச்சட்டத்தை எதிர்ப்பதற்கான வெளிப்படுத்தல்கள் பகிரங்கமாக சர்வதேசத்திற்கும் எமது நாட்டு அரசுக்கும் தெரியப்படுத்தும் வகையில் அமைய வேண்டும் என ஏற்பாட்டுக் குழுவினால் வலியுறுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இச்சட்டத்தின் பாதக தன்மைகளை உணர்ந்து இதனை நிராகரிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அனைத்து சபைகளினூடாகவும் மேற்கொள்வதற்கு தாம் தயாராக இருப்பதாக அனைத்து சபைகளில் சார்பில் தெரிவிப்பதாக இதன் போது மட்டக்களப்பு மாநகரசபை முதல்வரால் தெரிவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.




## இடைநடுவில் கைவிடப்பட்டு பாழடைந்து காணப்படும் வீடுகளைப் பூர்த்தி செய்து கொடுக்க அமைச்சருக்கு மகஜர்

**சீலாமுனை நிருபர்**

அம்பாறை, காரைதீவு சிறி சித்தானைக் குட்டி புரத்திலுள்ள கண்ணகி கிராமத்தில் கட்டிமுடிக்கப்படாமல் பாழடைந்த நிலையில் காணப்படும் வீடுகளைப் பூர்த்தி செய்து கொடுக்குமாறு கோரிய மகஜரை வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அமைச்சர் சஜித் பிரேமதாஸவுக்கு அனுப்பிவைத்துள்ளதாக காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் ஆ.பூபாலரட்ணம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு, காரைதீவு வடக்கு எல்லையில், கண்ணகி அம்மன் ஆலய நிர்வாகத்தால் காணிகள் வழங்கப்பட்டு, அமைச்சர் தயா கமகேயின் சிபாரிசில், இவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்டது. இதன் மூலம் வீட்டு நிர்மாண பணிகளை ஆரம்பிக்கப்பட்டன.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட மேற்படி வீடுகளை அவர்களினால் முழுமையாக கட்டி முடிப்பதற்கு வேறு நிதி இவர்களிடம் இல்லாததால், நிர்மாண பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்ட நிலைமையிலுள்ளது.

எனவே, பாதிக்கப்பட்டுள்ள இம்மக்களுக்குத் தங்கள் அமைச்சால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற புதிய வீடமைப்புத் திட்டத்தின் கீழ், வீடுகளை புனரமைத்து கொடுக்கவேண்டும் என்று அம்மகஜரில் குறிப்பிட்டு அனுப்பி வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

குறித்த மகஜரின் பிரதிகள், கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவீந்திரன் கோடீஸ்வரன் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.







மட்டக்களப்பு சைவமங்கையர் கழகமும்,இந்து மகளீர் மன்றமும் மற்றும் லீயோ கழகமும் இணைந்து 'வளமான விவசாயத்தின் மூலம் வலுவான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவோம்' எனும் தொனிப்பொருளில் விவசாயக் கருத்தரங்கை சைவமங்கையர் கழகத்தின் தலைவர் திருமதி. திலகவதி ஹரிதாஸ் தலைமையில் கல்லடி துளசி மண்டபத்தில் நடாத்தப்பட்டது.விவசாய போதனாசிரியர் திருமதி.மதுமிதா தினேஷ் வீட்டுத்தோட்டம் பற்றி விளக்கத்தை தெரிவிப்பதையும்,கலந்துகொண்டவர்களுக்கு பயிர் விதைகள்,மற்றும் கற்றாளைச் செடிகள் வழங்கி வைப்பதையும் படத்தில் காணலாம்.

படம்: க.விஜயரெத்தினம்

# பொய்களினால் மக்கள் செல்வாக்கை கட்டியெழுப்ப முயலும் பைசால் காசீம்

**பைஷல் இஸ்மாயில்**

சுகாதார இராஜாங்க அமைச்சர் பைசால் காசிம் முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பதற்கு முயற்சிக்கிறார். தன்னால் அபிவிருத்தி பணிகளை செய்ய முடியாது என்பதற்காக என் மீது பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தி மக்களின் குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்பித்து கொள்ள நினைக்கிறார். என்று நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம். தாஹிர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் தனது அபிவிருத்திகளுக்குத் தடைகளை ஏற்படுத்தி கொண்டு இருக்கிறார் என்று சுகாதார இராஜாங்க அமைச்சர் பைசால் காசிம் தெரிவித்துக் கொண்டு வருகின்றார். இக்குற்றச்சாட்டு தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

இராஜாங்க அமைச்சர் கடந்த சுமார் 15 வருடங்களாக பாராளுமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் பதவிகளை வகித்து வருகின்றார். தற்போது சுகாதார இராஜாங்க அமைச்சராகவும் இருந்து வருகின்றார். இவர் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட காலம் முதல் இன்று வரை நிந்தவூர் பிரதேசத்திற்கு கொண்டு வந்த பாரிய அபிவிருத்தி பணிகள் எவை என நான் கேட்கின்றேன்.

அவரின் அபிவிருத்திக்கு தடையாக நான் இருந்து கொண்டு இருப்பதாக தெரிவிக்கின்றார். அவர் கொண்டு வந்த எந்த அபிவிருத்திக்கு நான் தடையாக இருந்தேனென்று ஆதாரபூர்வமாக அவரினால் கூறமுடியுமா? என்றும் நான் கேட்கின்றேன்.

நிந்தவூர் பிரதேசத்தின் அபிவிருத்திகளுக்காக அவரினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட எந்த ஒரு நிதியும் திருப்பி அனுப்பப்படவில்லை. அவரால் கொண்டு வந்த எல்லா அபிவிருத்திகளுக்கும் நான் ஒத்துழைப்பு வழங்கியே வந்துள்ளேன். மக்கள் நடமாட்டம் இல்லாததும், குடியிருப்புக்கள் இல்லாததுமான வீதிகளை அவர் அமைக்க முற்பட்ட போது, அதனை மாற்றி மக்கள் பாவனைகளும், குடியிருப்புகளும் அதிகமாக உள்ள வீதிகளையும், இன்று வரையும் குன்றும், குழியுமாக காணப்படுகின்ற எத்தனையோ வீதிகள் உள்ளன. அவற்றை முதன்மைப்படுத்தி அபிவிருத்தி செய்யுமாறு கேட்டிருந்தேன். ஆனால், அவர் அதைத் தவிர்த்து தனக்கு சொந்தமாக அட்டப்பள்ளம் பிரதேசத்தில் காணப்படும் காணிக்கு சுமார் 600 மீட்டர் பாதையொன்றை அமைக்க வேண்டும் என்று அடம் பிடித்தார். அதனையும் கூட நாங்கள் தடுக்கவில்லை. இப்படியான அவருடைய செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி கொண்டு இருக்கும் நிலையில் அபிவிருத்திகளை தடை செய்கின்றேன் என பொய்ப் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருகின்றார்.

நிந்தவூர் பிரதேச மக்கள் அவர் ஒரு இராஜாங்க அமைச்சர் என்ற அடிப்படையில் பல்வேறு அபிவிருத்திகளை செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றார்கள். குறிப்பாக பாடசாலைகளுக்கான கட்டிட வசதிகள், நிந்தவூர் காதி நீதிமன்ற கட்டிடம், பாடசாலைகளில் காணப்படும் தளபாடக் குறைபாடுகள், நிந்தவூர் அல்-அஷ்றக் தேசிய பாடசாலையின் மைதானம் கட்டப்பட்டு இடைநடுவில் கைவிடப்பட்டுள்ள மண்டபத்தை பூர்த்தி செய்து தருமாறும், நிந்தவூரில் பாரிய அழிவினை ஏற்படுத்தி கொண்டு இருக்கும் கடலரிப்பினை தடுக்குமாறும், இன்னும் பல முக்கிய அபிவிருத்திகளைச் செய்து தருமாறும் அமைச்சர் என்ற வகையில் அவரிடம் மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கைகளை விடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

மேலும், நிந்தவூர் பிரதேசத்தில் வேளாண்மைச் செய்கை ஒரு போகத்தில் மாத்திரம்தான் செய்யப்படுகின்றது. கடந்த காலங்களில் இரண்டு போகங்கள் செய்யப்பட்ட நிந்தவூர் பிரதேச வயல்களுக்கு நீர்பாய்ச்சுகின்ற வாய்க்கால்கள், குளங்கள் புனரமைப்பு செய்யப்படாமையினாலேயே இந் நிலை ஏற்பட்டு உள்ளது. இது தொடர்பாகவும் விவசாயிகள் இராஜாங்க அமைச்சரை மூன்றுக்கும் மேற்பட்ட தடவைகள் சந்தித்து இப்பிரச்சினையை தீர்த்து தருமாறு கேட்டுக் கொண்டார்கள். ஆனால், எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. வரட்சியைக் காரணங் காட்டித் தப்பித்து கொள்கின்றார். ஏனைய பிரதேசங்களில் இரண்டு போகங்கள் செய்கை பண்ணப்படுகின்றன. வாய்கால்களும், குளங்களும் உரிய காலத்தில் புனரமைப்பு செய்யப்பட்டிருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்காது.



நிந்தவூர் பிரதான வீதியில் பொது சந்தை ஒன்றினை அமைத்துத்தருவதாக மீன் வியாபார சங்கங்களிடம் பல சுற்று பேச்சுவார்த்தை நடாத்தி இருந்தார். அதன் போது 06 மாத காலத்திற்குள் பொது சந்தை கட்டிதருவதாகவும் வாக்குறுதி அளித்திருந்தார். 06 வருடங்கள் கழிந்த பின்னரும் பொது சந்தை அமைத்து கொடுக்கப்படவில்லை. எமது பிரதேச சபையினாலும் இராஜாங்க அமைச்சரின் ஆலோசனைக்கு ஏற்ப கட்டப்பட்டுள்ள பொது சந்தைக்கு வியாபாரம் செய்வதற்கு சொல்ல வேண்டாமென்று அரசியல் காழ்ப்புணர்ச்சியினால் வியாபாரிகளை தடுத்த வரலாறும் இராஜாங்க அமைச்சருக்கு இருக்கின்றது. தற்போது வியாபாரிகள் ஏமாற்றப்பட்டு வீதியில் நிற்கின்றார்கள்.

நிந்தவூர் பொது மைதானத்தினை அபிவிருத்தி செய்து தருமாறு நிந்தவூர் அனைத்து விளையாட்டு கழகங்களின் சம்மேளனம் இராஜாங்க அமைச்சர் பைசால் காசிமிடம் கேட்டுக்கொண்டது. ஆனால், அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பொது விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்ய முடியாதென்பதாகவே அவரின் நடவடிக்கைகள் அமைந்திருந்தன.

நான் முஸ்லிம் காங்கிரசின் உயர் பீட உறுப்பினராக இருந்த காலத்தில் விளையாட்டு துறை பிரதி அமைச்சராக இருந்த எச்.எம்.எம் ஹரீஸிடம் பொது மைதானத்தை புனரமைப்பதற்க்காக நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு கோரிக்கை விடுத்திருந்தேன். அதற்கு அமைவாக அவர் முதற்கட்டமாக ரூபா 20 இலட்சம் நிதி ஒதுக்கி பார்வையாளர் அரங்கை அமைத்துத் தந்திருந்தார். மீண்டும் ரூபா 30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து இருந்தார். இக்காலத்தில் பிரதேச சபை கலைக்கப்பட்ட சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி அந்நிதிக்கு மண் போடுவதற்காக நிந்தவூர் வெளவாலோடை பிரதேசத்தில் ஆற்றுக்கு அருகாமையில் சிறியதொரு மைதானத்தினை அமைத்து உள்ளார். இந் நிதியை பொது விளையாட்டு மைதானத்திற்கு பயன்படுத்துமாறு விளையாட்டு கழகங்கள் பராளுமன்ற உறுப்பினரான பைசால் காசிமை நேரடியாக சந்தித்து மன்றாட்டமாக கேட்ட போதிலும் அதை அவர் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

தற்பொழுது வெளவாலோடை சிறிய மைதானத்தின் ஓர் ஒரத்தில் பூப்பந்து உள்ளக விளையாட்டு அரங்கு (வெட்மிடன் கோட்) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த பூப்பந்து உள்ளக விளையாட்டு அரங்கின் நிர்மாணிப்பு வேலைகள் பல குறைபாடுகளை கொண்டதாக காணப்படுகின்றன. இக்குறைபாடுகளை கொண்ட நிலையிலேயே பிரதேச சபையின் (2018) தேர்தலுக்கு முன்னதாக பிரதேச சபையின் செயலாளரை வற்புறுத்தி அதனை கையேற்குமாறு பணித்தார். அப்போது இருந்த செயலாளர் இக்குறைபாடுகளை அவ்விடத்திலேயே சுட்டிக் காட்டினார். இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருவதுடன், அக்கட்டடத்தின் காணி உரிமை, அக்கட்டிடத்திற்கான வரைபடம், கட்டிடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியின் மதிப்பீடு, கட்டப்பட்ட காலப்பகுதி உள்ளிட்ட ஆவணங்களோடு ஒப்படைக்குமாறும் கேட்டிருந்தார். ஆனால், இக்குறைபாடுகள் எதனையும் நிவர்த்தி செய்யாமலும், ஆவணங்களை ஒப்படைக்காமல் பூப்பந்து உள்ளக விளையாட்டு அரங்கை பொறுப்பெடுக்குமாறும் இராஜாங்க அமைச்சர் பிரதேச சபையை கேட்டுக்கொள்வது சிறு பிள்ளை தனமான செயலாகும். இக்கட்டிடத்தில் காணப்படும் குறைபாடுகள், பிரச்சினைகள், மோசடி, கட்டிடத்தின் உறுதியற்ற தன்மை என்பவற்றை மூடி மறைப்பதற்காக பிரதேச சபை பொறுப்பெடுக்கவில்லை என்று பலியை போடுகின்றார். இவ்வேலைத் திட்டங்கள் யாவும் நிந்தவூர் பிரதேச செயலகத்தினால் செய்து முடிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

1996ம் ஆண்டு மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களினால் அடிக்கல் வைக்கப்பட்ட நிந்தவூர் கலாசார மண்டப வேலைகள் அவரின் மரணத்தோடு முற்றாக கைவிடப்பட்டிருந்தது. இம்மண்டபத்திற்கு அஷ்ரப் ஞாபகார்த்த மண்டபம் என்று பெயர் சூட்டப்பட்டது. இம்மண்டபத்தினை கட்டி முடித்து தருமாறு நிந்தவூர் பிரதேச முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழு, புத்தி ஜீவிகள் என பலரும் அப்போது பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த எம்.ரி. ஹசன் அலி, பைசால் காசிம் ஆகியோரிடம் கோரிக்கைகளை முன்வைத்தார்கள்.

ஆயினும், மர்ஹூம் அஷ்ரப்பின் கொள்;கையில் மிகுந்த பற்று கொண்ட ஹசன் அலி 2015ம் ஆண்டு ரூபா 1 கோடி நிதியினை ஒதுக்கீடு செய்து இருந்தார். அந்நிதிக்கான வேலைகள் செய்து முடிக்கப்பட்டதன் பின்னர், 2017 ஆம் ஆண்டு வரை எந்தவித நிதி ஒதுக்கீடும் இம் மண்டபத்தின் வேலைகளுக்கு செய்யப்படவில்லை. 2017 ஆம் ஆண்டு அமைச்சர் ரவூப் ஹக்கீமினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டிட வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இச்சந்தர்ப்பத்தில் இராஜாங்க அமைச்சர் பைசால் ஹாசிம் அவர்கள் கட்டிடத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் தவிசாளர் கட்டிடத்தை பொறுப்பேற்க மாட்டார் என தெரிவித்துள்ளார். இக் கட்டிடத்தின் வேலைகளை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தினால் கூட கட்டிட வேலைகள் பூர்த்தி செய்வதற்கு 3 வருடங்களுக்கு மேல் எடுக்கும். இவ்வாறு இருக்கும் நிலையில் சாஸ்திரம் சொல்பவனைப் போல் தவிசாளர் பொறுப்பேற்;கமாட்டார் என்று கூறுகின்றார்;. இவரின் கணிப்பீட்டின்படி அடுத்த பிரதேச சபைத் தேர்தலிலும் அவரின் அணியினர் அடுத்த முறையும் பிரதேச சபையின் அதிகாரத்தினைப் பெற்றுக் கொள்ளமாட்டார்கள் என நினைக்கின்றார். கட்டிடம் முடியும் போது அல்லாஹ்வின் நாட்டப்படி நடக்கும்.

முன்னாள் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவை பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் அழைத்து வந்து நிந்தவூர் அல்-அஷ்றக் தேசிய பாடசாலை மைதானத்தின்; மேற்கு பக்கம் ஒரு கட்டிடத்திற்கு அடிக்கல் வைத்தார். அக்கட்டிடம் அடிக்கல்லோடு நிற்கின்றது. நிந்தவூர் வெளவாலோடை பிரதேசத்தில் மீன்பிடி இறங்குதுறை அமைப்பதற்கு அடிக்கல் ஒன்று வைத்தார். இது கூட அவ்வாறே அடிக்கல் வைத்ததோடு நின்று விட்டது. இவ்வாறு நிந்தவூர் பிரசேத்தின் அபிவிருத்தி தொடர்பாக இராஜாங்க அமைச்சர் பைசால் காசிமின் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டு இருக்கும் நிலையில், அவர் தமது இயலாமையை மறைப்பதற்காக நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எனது அபிவிருத்திக்கு தடையாக இருக்கின்றார். எனது அபிவிருத்தியின் வேகம் 50 வீதத்தினால் குறைவடைந்துவருகின்றது என்று சொல்லிக்கொள்வதில் வெட்கம் இல்லையா என்று கேட்கின்றேன். அவர் சொல்லும் ஐம்பது வீத வீழ்ச்சி என்பது கடந்த பிரதேச சபைத் தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவாகும். இதனால், அவர் மனரீதியாக பாதிக்கப்பட்டுள்ளார். கடந்த பிரதேச சபைத் தேர்தலில் 16750 வாக்குகள் அளிக்கப்பட்டன. இதில், 7900 வாக்குகள் ஐக்கிய தேசிய கட்சிக்கும் (முஸ்லிம் காங்கிரஸிற்கும்), 8850 வாக்குகள் எதிராகவும் அளிக்கப்பட்டன. இதுதான் அவர் கூறிக் கொண்டிருக்கும் ஐம்பது வீத வேகக் குறைபாடாகும். வாய்த்தடுமாற்றத்தினால் அபிவிருத்தி என்று சொல்லிவிட்டார் என நினைக்கின்றேன். அவரொரு பாராளுமன்ற உறுப்பினர், இராஜாங்க அமைச்சர், முஸ்லிம் காங்கிரசின் பிரதி தேசிய அமைப்பாளர், நிந்தவூர் பிரதேச அபிவிருத்தி குழு தலைவர் என்று எல்லா பதவி வழிகளிலும் உயர் நிலையில் இருக்கின்றார். இவ்வாறு அவரின் பதவிகள் இருக்கும் போது சாதாரண தவிசாளராக இருக்கின்ற நான் அவரின் அபிவிருத்தியை தடுப்பதாக கூறுகின்றாரே இதனை ஏற்றுக் கொள்ள முடியுமா? இது அறிவிற்கு பொருந்துவதாக தெரிகின்றதா?

கல்முனையில் நவீன தெரு மின் விளக்குகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன, காரைதீவு - மாவடிப்பள்ளி வீதி, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று ஆகிய ஊர்களின் பிரதான வீதிகளில் நவீன மின்விளக்குகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது போன்று நிந்தவூரில் அமைப்பதாகவும் பல இடங்களில் அவர் கூறி இருந்தார். ஆனால் இதுவும் நடைபெறவில்லை. இதையும் நான்தான் தடுத்தேனா என்று கேட்க விரும்புகின்றேன்.

சுகாதார இராஜாங்க அமைச்சர் பைசால் காசிம் அவர்கள் கடந்த பிரதேச சபைத் தேர்தலில் நிந்தவூரில் இடம்பெற்ற அரசியல் மாற்றத்தினால் தடுமாறிக் கொண்டு இருக்கின்றார். எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலை எவ்வாறு முகம் கொடுப்பது என்பதில் அச்சம் அடைந்து உள்ளார். இதனால், தவிசாளராகிய என் மீது இல்லாத, பொல்லாத குற்றச்சாட்டுக்களை முன்வைத்து, இழந்து நிற்கின்ற மக்கள் செல்வாக்கை சரி செய்யலாமென கனவு காண்கின்றார். இதனால் அவர் மூளைக்கும் நாவுக்கும் தொடர்பு இல்லாமல் பேசுகின்றார். அவரிடம் நாம் விடுக்கின்ற வேண்டுகோள் உண்மையை பேசுங்கள் அல்லாஹ் உதவி செய்வான் என்பதேயாகும்.

மேலும், 2015 ஆம் ஆண்டு பிரதேச சபை கலைக்கப்பட்டது முதல் 2018 ஆம் ஆண்டு பிரதேச சபைத் தேர்தல் நடைபெறும் வரைக்கும் நிந்தவூர் பிரதேச சபையின் முழுக்கட்டுப்பாடும் அவரின் பார்வையிலேயே இருந்தது. அப்போது இவரினால் என்ன அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன. இன்றுபோல் அன்றும் அனைத்துப் பதவிகளையும் வகித்திருந்த இராஜாங்க அமைச்சர், அக்காலப்பகுதியில் அபிவிருத்திகளை செய்யாது இருந்தமைக்கான தடைகள் என்னவென்பதை மக்களே நீங்களே சிந்தியுங்கள்.

அவர் அபிவிருத்திகளை வாயால்தான் செய்வார் என்று மக்கள் நன்கு அறிந்து வைத்துள்ளார்கள். என் மீது வீண்பலிகளை போடுவதே இவரின் இலட்சியமாகும். நான் முஸ்லிம் காங்கிரஸின் நிந்தவூர் பிரதேச சபை தவிசாளராக இருந்த காலத்திலும் இவ்வாறே குற்றச்சாட்டுக்களை முன் வைத்தார். இதனையிட்டு நான் அலட்டிக் கொள்ளவில்லை. மக்களிடம் பொய்யான தகவல்கள் சென்று விடக்கூடாது என்பதற்காக இந்த அறிக்கையினை வெளியிடுகின்றேன் என்றும் தெரிவித்துள்ளார்.




## கிழக்கு மாகாணத்தில் வெளி மாவட்டங்களில் கடமையாற்றும் சகல ஆசிரியர்களுக்கும் இடமாற்றம்

**முள்ளிப்பொத்தானை நிருபர்**

பாடசலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உதவி ஆசிரியர்களையும் ,பட்டதாரி ஆசிரியர்களையும் உள்வாங்குவதற்கு ஆளுநர் உத்தரவு

கிழக்கு மாகாணத்திலே வேறு மாவட்டங்களில் கடமை புரிகின்ற ஆசிரியர்களை சொந்த மாவட்டங்களுக்கு ஏப்ரல் 05 ஆம் திகதி தொடக்கம் இடமாற்றம் வழங்குமாறு ஆளுநர் ஹிஸ்புழ்ழாஹ் உத்தரவுபிறப்பித்துள்ளார்.

மட்டக்களப்பு ஆளுநர் பணிமனையில் இடம்பெற்ற மாகாண கல்வி பணிப்பாளர் ,வலயக்கல்வி பணிப்பாளர்கள்,மேலதிக கல்விப்பணிப்பாளர்கள், ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடலில் இந்த உத்தரவை ஆளுநர் பிறப்பித்தார்.

இந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பங்கள் இன்று முதல் கோரப்படவுள்ளது. அதற்கான விண்ணப்பத்தை பெற்று

இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்பு தங்களது தகவல்களை மாகாண கல்வித்திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கின்ற பட்சத்தில் ஏப்ரல் 05 திகதி தொடக்கம் இடமாற்றங்கள் வழங்கப்படும்.

அத்தோடு இந்த இடமாற்றத்தினால் கிழக்கு மாகாணத்தில் ஏற்படும் 800 ஆசிரிய வெற்றிடத்தை உடனடியாக நிரப்புவதற்காக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களை கோரவுள்ளது .ஏப்ரல் 05 ஆம் திகதி முதல் தொழிற்படும் விதமாக உயர்தரம் சித்தியடைந்து சம்பந்தப்பட்ட பாடங்களில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு பாடசாலைகளில் ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது.

கிழக்கு ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புழ்ழாஹ் அவர்களின் உத்தரவின் பிரகாரம் பொதுச்சேவை ஆணைக்குழு ஒவ்வொரு வலயக்கல்வி பணிப்பாளர் அலுவலகத்திலும் நேர்முக பரீட்சைகளை நடாத்தி பாடசாலைகளுக்கான ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

மேலும் இந்த கலந்துரையாடலில் தந்தையை இழந்த மாணவர்களுக்கு மார்ச் மாதம் முதல் ரூபா 500 கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ள மாணவர்கள் தொடர்பான விபரங்கள் , பாடசாலை தளபாட பற்றாக்குறை, போன்ற விடயங்கள் இன்று ஆளுநர் தலைமையில் கலந்துரையாடப்பட்டது.

மேலும் இக் கலந்துரையாடலில் ஆளுநர் தெரிவிக்கும் பொழுது நாங்கள் கல்வியில் பின்தங்கியுள்ளோம் ,உடனடியாக இந்த மாகாணத்தின் கல்வி முன்னேற்றம் அடைய வேண்டும் . 18 வலயக்கல்வி பணிப்பாளர்களுக்கு மற்றும் பிரதேச கல்வி பணிப்பாளர்களுக்கு புதிய வாகனங்கள் ,தேவையான தளபாடங்கள், வழங்கவுள்ளேன்.

சகல வளங்களும் வழங்கப்படுகின்ற பொழுது இந்த மாகாணத்தின் கல்வித்துறையை முன்னேற்ற வேண்டும். இந்த ஆண்டு முடிவடையும் போது கல்வியில் சிறந்த பெறுபேற்றை பெற்றுதர வேண்டும் என்றும் ஆளுநர் சகல வலயக்கல்வி பணிப்பாளருக்கும் உத்தரவு விடுத்துள்ளார்.

## கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழுக்களின் செயற்பாடுகள் மூலம் சிறுவர்களின் எதிர்காலத்தைஉறுதிப்படுத்திக்கொள்ள முடியும்

**பெரியகல்லாறு நிருபர்**



இன்று சிறுவர்கள் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்த வண்ணம் இருக்கின்றனர். சிறுவர்துஸ்பிரயோகம் தினச் செய்தியாக நாளும் பத்திரகைகளில் வெளிவந்த வண்ணம் இருக்கின்றது.இன்னிலையில் அவர்களின் பாதுகாப்பு நிச்சயமற்றதாக மாறிவருகின்றது. எனவே அதைஉறுதிப்படுத்தும் பாரிய முக்கிய பொறுப்பை கிராம சிறுவர் அபிவிருத்திக் குழுக்களும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

மேற்கண்டவாறு மண்முனை தென் மேற்கு பட்டிப்பளை பிரதேச செயலகத்திற்குட்பட்ட 24 கிராம சேவகர்பிரிவகளிலும் அமைக்கப்பட்ட சிறுவர் அபவிருத்திக் குழுக்களுக்கு உலக தரிசனத்தின்அனுசரணையுடன் காகிதாதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு செயலக மண்டபத்தில் நடைபெற்றபோது,அதற்கு தலைமை தாங்கிப் பேசிய பிரதேச செயலாளர் திருமதி தெட்சணகௌரி தெரிவித்தார். அவர்தொடாந்து பேசுகையில்,

நீங்கள் செயற்திறன் மிக்க குழுக்களாக மாற வேண்டும். நீங்கள் பிரச்சனைகளை இனம் காண்பதற்கும்.அறிக்கையிடுவதற்கும் உரிய தொடர்புகளை மேற்கொள்வதற்கம் காகிதாதிகள் அவசியம். எனவேதான் உங்கள் செயற்திறன்களை திறம்பட மேற்கொள்வதற்காக அனைத்துக் குழுக்களுக்கும் இன்று உலகதரிசன அமைப்பினரால் காகிதாதிகள் வழங்கி வைக்கப்படுகின்றது. எனவே நீங்கள் அவற்றை பயனுள்ளவகையில் பயன்படுத்த வேண்டும்.

சிறவர்கள் உண்மையிலேயே மலர் போன்றவர்கள்.மலர்களுக்கு எவ்வாறு பாதுகாப்பம் பராமரிப்பும்கொடுக்கின்றோமோ, அவ்வளவு அழகாகவும், ஆரோக்கியமாகவும் அப் பூக்கள் மலரும். ஏமக்குஉண்மையான மன மகிழ்ச்சியையும் மன நிறைவையும் ஏற்படுத்தும். இதேபோல்தான் நாமும் அவர்களுக்கு வழங்கும் பாதுகாப்பிலும் பராமரிப்பிலுமதான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றதுஎன்பதை மறந்துவிடலாகாது.

குடும்பங்களைப் பொறுத்தவரையில் பெற்றோரே முதன்மையான பாதுகாவலர்கள். ஆதன் பின்பாடசாலைகள் பிரதான பங்கு வகிக்கின்றது .இதே போல் சமூக மட்டத்தில் இக் குழுக்கள் சிறப்பாகஇயங்கும்போது, கிராமத்தில் உண்மையான சிறுவர் பாதுகாப்பை ஏற்படுத்தி உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

ஏனைய குழுக்கள் பல்வேறு கோக்கங்களோடும், சில தேவைகளுக்காக வம்; சிலவேளை இலாபநோக்கோடும் கூட இயங்கலாம். ஆனால் இக்குழுக்களின் செயற்பாடானது முழுக்க முழுக்க சிறவர்அபிவிருத்தி என்ற இலககை அடைவதற்கே ஆரமபிக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எனவே உங்களின் வினைத்திறன்மிக்க செயற்பாடுகள் மூலம் சிறுவர்களின் எதிர்காலம்ஆத்மதிருப்தி அளிப்பதாகவும்,சமாதானம் சகவாழ்வ நிறைந்ததாகவும்,காணப்படுவதடன், கடவுளின்வெகுமதிக்குரியதாகவும் மாறும். முற்பகல் செய்யின் பிற்பகல் கடவுளின் அருளால் பிரமாத அறவடையும்கிடைப்பது உறுதி.

எனவே நீங்கள் இனம் காணும் பிரச்சனைகளை செயலகத்திற்கு உடனுக்கடன் அறிவிப்பதுடன், பல்வேறுமட்ட திணைக்கள அதிகாரிகளுடன் நல்லுறவை பேணுவதும் முக்கியம்.

சிறுவர்களை கனிவுடன் அணுக வேண்டும். கெட்ட வார்த்தைகளை பயன்படுத்தவோ, ஒப்பீட்டு ரீதியாகஅவர்களை சுட்டிக்காட்டவோ கூடாது. எனவே உங்களின் கையில்தான் சிறவர்களின் எதிர்காலம்ஒப்படைபக்கப்படடிருக்கின்றது என்பதை உணர்ந்து மிகந்த சமூகப் பொறுப்படன் செயலாற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொண்டாட.

இந் நிகழ்வில் மாவட்ட சிறவா உரிமை இணைப்பாளர் வி.குகதாசன், சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்கே. எம்.புவிதரன், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் வி.குகராஸ், உலக தரிசன திட்ட உத்தியோகத்தர்எஸ்.தயாளன் ஆகியோர் கலந்து கொண்டனர். குழுக்களுக்கு காகிதாதிகள் அடங்கிய பொதிகளும்சம்பிரதாயபூர்வமாக வழங்கிவைக்கப்படடது.

## தமிழுக்கு தொண்டாற்றிய 195க்கு மேற்பட்டவர்களின் உருவப்படங்களின் காட்சியுடன் நடந்தேறிய தாய்மொழி தினம்






**படுவான்கரை நிருபர்**

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்தில் தாய்மொழி தின நிகழ்வு நடைபெற்றது.

வித்தியாலயத்தின் அதிபர் சா.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், 195க்கு மேற்பட்ட, தமிழுக்கு தொண்டாற்றிய அறிஞர்களின் உருவப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. மேலும் கி.மு 3ம் நூற்றாண்டில் வழக்கில் இருந்த தமிழ் எழுத்துக்களும், தற்போது வழக்கில் உள்ள தமிழ் எழுத்துக்களும் மண்ணிலும், கருங்கல்லிலும், ஓலைச்சுவடிகளிலும் எழுதப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இதன்போது, அரைநூற்றாண்டுகளுக்கு முன்பு படுவான்கரைப்பிரதேசத்தில் வழக்கில் இருந்த சொல்லாடல்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன. உணவு, தொழில், காவியம், நாட்டார் பாடல், கலை போன்ற துறைகளில் காணப்பட்ட சொல்லாடல்கள் தொடர்பிலே கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இக்கலந்துரையாடலில் அதிகளவான பெண்களும் பங்கெடுத்திருந்தனர்.

பற்றியம் சஞ்சிகையின் மூன்றாவது இதழும் வெளியீடு செய்யப்பட்டது. மாணவர்களின் நிகழ்வுகளும் நடைபெற்றன.

இந்நிகழ்வில், மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர்களான செ.மகேந்திரகுமார், சோ.சுரநுதன், கோட்டக்கல்விப் பணிப்பாளர் ந.தயாசீலன், உதவிக்கல்விப் பணிப்பாளர்களான க.குணசேகரம், ரஞ்சிதமலர் கருணாநிதி, மாவட்ட கலாசார இணைப்பாளர் த.மலர்ச்செல்வன், செயலக கலாசார உத்தியோகத்தர் ந.ருபேசன், ஆசிரிய ஆலோசகர்கள், கோட்ட அதிபர்கள் ஆகியோரும் நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

## முஸ்லிம் விவாக விவாகரத்து சடத்தில் இஸ்லாத்துக்கு மாற்றமான எந்த திருத்தத்துக்கும் இடமளிக்க மாட்டோம்

**மீனோடைக்கட்டு நிருபர்**

முஸ்லிம் விவாக விவாகரத்து சடத்தில் இஸ்லாத்துக்கு மாற்றமான எந்த திருத்தத்துக்கும் முஸ்லிம் எம் பீக்கள் இடமளிக்க மாட்டோம் என்ற அ. இ. மக்கள் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் கருத்து மிகவும் பாராட்டுக்குரியது என உலமா கட்சி தெரிவித்துள்ளதுடன் இது பற்றிய விடயத்தை மிகவும் கவனமாக கையாள வேண்டும் எனக் கோரி உலமா கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் மௌலவியால் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அவரினால் எழுதப்ப்பட்ட கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது

சமகால முஸ்லிம்களின் பிரச்சினை என்பது முஸ்லிம் திருமண சட்டத்தில் திருத்தம் கொண்டு வரும் தேவையல்ல. முஸ்லிம் சமூகம் தனது இருப்பை காத்துக்கொள்ள பாரிய முயற்சிகளை செய்து கொண்டிருக்கும் நிலையில் முஸ்லிம் சமூகத்தின் கவனத்தை திசை திருப்புவதற்கான ஒரு தந்திரமாகவே இக்கோரிக்கையை நாம் பார்க்கிறோம்.

முஸ்லிம் திருமண சட்டத்தை மாற்ற வேண்டும் என இலங்கை முஸ்லிம்கள் கோரிக்கை விடவில்லை. இஸ்லாத்தின் எதிரிகளும் சில ஐரோப்பிய கைப்பொம்மைகளும்தான் இக்கோரிக்கையை முன் வைத்து முஸ்லிம் ஷரீயாவை களங்கப்படுத்த முயல்கின்றன. அதற்கு முஸ்லிம் எம் பீக்கள் துணை போக கூடாது.

முஸ்லிம் திருமண சட்டத்தில் திருத்தம் வேண்டுமென முஸ்லிம் சமூகம் கேட்கவில்லை என்பதை தெளிவு படுத்துவதாயின் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்களின் எவரது மனைவியாவது அல்லது தாயாவது முஸ்லிம் திருமண சட்டத்தை மாற்ற வேண்டும் என ஊடகத்திலோ நீதி மன்றத்திலோ கோரிக்கை விடுத்திருக்கிறார்களா? இல்லை.

முஸ்லிம் எம்பிமார் முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகள் என்பதால் இக்கோரிக்கை அவர்களின் பெண்கள் தரப்பிலிருந்து வரவில்லை என்பதால் ஒட்டு மொத்த முஸ்லிம் சமூக பெண்களின் நிலைப்பாடும் இதுதான் என்பதை புரிய முடியும். வெறும் முஸ்லிம் லேபலில் கூத்தடிக்கும் சில பெண்களின் விருப்பத்துக்காக சட்டத்தில் கை வைக்க இடமளிக்க முடியாது.

எம்மை பொறுத்தவரை காதி மன்றங்களை கட்டி எழுப்புவது அவற்றுக்குரிய பௌதீக வளங்களை கொடுப்பது போன்ற விடயங்களில் அரசு கவனமெடுக்கலாம் என்றே கூறுகிறோம். ஆனால் காதிமார்களாக பெண்களை நியமிப்பது, திருமண வயதை மாற்றுதல் போன்ற இஸ்லாத்துக்கு முரணான திருத்தங்களுக்கு முஸ்லிம் எம்பீக்கள் இடம் கொடுக்க கூடாது என கூறுகின்றோம்.

இன்றைய முஸ்லிம் திருமண சட்டம் என்பது எமது மூதாதையர் தங்களுக்கென தனிக்கட்சிகள் இல்லாத காலத்தில் பெற்றுத்தந்தவையாகும். அவற்றை அமைச்சர் ரிசாத் போன்ற ஆளுமைகள் உள்ள இந்தக்காலத்தில் திருத்தப்பட்டு இருக்கின்ற உரிமைகளையும் இழந்த அவப்பெயர் வேண்டாம் என்று வேண்டுகிறோம்.

முஸ்லிம் திருமண சட்டம் என்பது எவரும் கைவைக்க முடியாத புனிதமான ஒன்றாகவே பார்க்கப்படுகிறது. அதில் கை வைத்து களங்கப்படுத்தினால் எதிர் காலத்தில் இனவாதிகளால் அதில் மேலும் திருத்தங்கள் செய்யப்படுவதற்கும் இறுதியில் முற்றிலும் ஒழிக்கப்படவும் வழியேற்படும்.

ஆகவே முஸ்லிம் திருமண சட்டத்தில் கொண்டு வர வேண்டிய திருத்தம் சம்பந்தமான இரு சாராரின் அறிக்கைகளையும் குப்பையில் தூக்கி போட்டு விட்டு பௌதீக வளங்களை செய்வது நீதி அமைச்சின் கடமை என்பதால் அதனை மட்டும் செய்யும்படி அமைச்சர் ரிசாத் பதியுதீன் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழிகாட்ட வேண்டும் என அள்ளாஹ்வின் பெயரால் கேட்டுக்கொள்கிறோம்.

## ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த கல்விச் சமூகமொன்றை கட்டியெழுப்ப ஒன்றுபடுவோம்

**ஹஸ்பர் ஏ ஹலீம்**




கிண்ணியா அல் அக்ஸா கல்லூரி தேசிய பாடசாலையின் 91 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டும், தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டமையையும் முன்னிட்டு மாபெரும் நடை பவனியானது பாடசாலை பிரதான நுழைவாயிலில் இருந்து ஆரம்பமானது.

கிண்ணியா பிரதான வீதியூடாக ரகுமானியா நகர், துறையடி, மாஞ்சோலை சேனை வீதியூடாக மீண்டும் பாடசாலையை குறித்த பேரணி வந்தடைந்தது.

பாடசாலை பழைய மாணவர் சங்கம் மற்றும் சமூகக் கல்விக்கான வலையமைப்பு தலைமையில் நடை பெற்ற குறித்த பேரணியானது ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த கல்விச் சமூகமொன்றை கட்டியெழுப்ப ஒன்றுபடுவோம் எனும் தொனிப் பொருளில் இடம் பெற்றது.

பழைய மாணவர்கள், ஆசிரியர்கள்,அதிபர் , அரசியல் பிரமுகர்கள் என பல நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்டார்கள்.

இவ் நடை பவணிக்கு பிரதம விருந்தினராக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் துறை முகங்கள் மற்றும் கப்பல் துறை பிரதியமைச்சருமான அப்துல்லா மஹரூப் மற்றும் முன்னால் கிழக்கு மாகாண சபை தவிசாளர் எச்.எம்.எம்.பாயிஸ், பிரதியமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் டாக்டர் ஹில்மி முகைதீன் பாவா, முன்னால் நகர சபை பிரதி தவிசாளர் சட்டத்தரணி அமீன் முஜீப் உட்பட கல்வியலாளர்கள், உயரதிகாரிகள் என மேலும் கலந்து கொண்டார்கள்.

## ஆட்டோ சாரதிகள் ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பு மாநகரசபையின் செயற்பாடுகளுக்கு எதிராக மட்டக்களப்பு நகர முச்சக்கர வண்டி சாரதிகள் மட்டக்களப்பு நகரில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்தினர்.

மட்டக்களப்பு ஓட்டோ சாதிரிகள் நலன்புரிச்சங்த்தினால் இந்த ஆர்ப்பாட்டம் மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு முன்பாக நடைபெற்றது.

மட்டக்களப்பு நகரின் பிரதான வீதியின் இரு மருங்கிலும் முச்சக்கர வண்டிகளை



நிறுத்தி இந்த ஆர்ப்பாட்டத்தினை முச்சக்கர வண்டி சாரதிகள் நடாத்தினர்.

கடந்த 30வருடமாக மட்டக்களப்பில் தமது சங்கம் செயற்பட்டுவரும் நிலையில் அதன் செயற்பாட்டினை குழப்பும் வகையில் மட்டக்களப்பு மாநகரசபை முதல்வரும் ஆணையாளரும் செயற்படுவதாக முச்சக்கர வண்டி சாரதிகள் நலன்புரிச்சங்க தலைவர் எஸ்.ஜேசுதாசன் தெரிவித்தார்.

பொதுமக்களுக்கு எந்த இடையுறுகளும் பாதிப்புகளும் ஏற்படாத வகையில் தமது போராட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஆர்ப்பாட்;டத்தில் ஈடுபட்டவர்கள் மாநகர முதல்வர் மற்றும் மாநகர ஆணையாளருக்கு எதிரான வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்ததடன் மாநகர முதல்வரின் கொடும்பாவியினையும் கொண்டுசென்றனர்.

காந்திபூங்காவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தினை தொடர்ந்து ஊர்வலமாக மட்டக்களப்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு சென்ற முச்சக்கர வண்டி சாரதிகள் அங்கிருந்து மாவட்ட செயலகம் வரையில் ஊர்வலமாக சென்றனர்.

# நாளை வடக்கில் பூரண ஹர்த்தாலை அனுஸ்டிக்குமாறு கோரிக்கை

**வவுனியா நிருபர்**

வவுனியாமாவட்ட வலிந்துகாணமல் ஆக்கபட்டோர் அமையத்தின் நிர்வாககூட்டம் இன்று வவுனியாவில் நடைபெற்றது. அதன்பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறுதெரிவித்தார். மேலும் தெரிவித்த அவர்;

நாளை 25 ம்திகதி வடக்குகிழக்கின் வலிந்துகாணாமல் ஆக்கபட்ட குடும்பங்களின் அமையம் கிளிநொச்சியில் மாபெரும் ஆர்பாட்டபேரணியை ஏற்பாடுசெய்துள்ளது.

அன்றைய நாள் முழுவதும் வடமாகாணத்தில் ஹர்த்தாலை அனுஸ்டிக்குமாறு அனைத்து தரப்பிடமும் நாம் வேண்டுகோள்விடுக்கின்றோம்.

குறித்தபோராட்டம் கிளிநொச்சி கந்தசாமிஆலயத்தின்முன்பாக ஆரம்பித்து டிப்போசந்தியில் அமைந்துள்ள ஐக்கியநாடுகளின் அலுவலகத்தில் மகஜர் கொடுப்பதுடன் நிறைவடையும்.

பத்து வருடகாலமாக எமதுகோரிக்கைளிற்கு சரியானபதில்கள் அரசினால் வழங்கபடவில்லை. உறவுகளின்



போராட்டங்கள் 700 நாட்களை தாண்டியும் அதற்கானபதில்களை இலங்கை அரசு வழங்கவில்லை.

கடந்த இரண்டுவருடங்களாக இலங்கை அரசிற்கு ஐக்கியநாடுகள் மனிதஉரிமை பேரவை காலஅவகாசத்தைவழங்கியிருந்தது. எனவே எதிர்வரும் 25 ம்திகதி இலங்கைஅரசிற்குமீண்டும் காலஅவகாசத்தை வழங்குவதற்கு எதிர்பினை தெரிவிக்கிறோம். அத்தோடு காலஅவகாசத்தை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளில் தமிழ்தேசியகூட்டமைப்பின்ர உறுப்பினர்களும் ஈடுபட்டிருப்பதனை நாம் அறியகூடியதாக உள்ளது.

இந்த இரண்டுவருடத்தில் அரசானது எந்தவித முன்னேற்றமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாத நிலையில் இருபதுக்கும்மேற்பட்டதாய்மார்கள் மரணத்தைதழுவியிருக்கின்றார்கள்.

எனவே இனிமேலும் காலஅவகாசம்வழங்கபடகூடாது என்பதை நாம் வலியுறுத்துகின்றோம். அத்துடன் எந்தவித தீர்வுகளும் கிடைக்காதநிலையில் தொடர் போராட்டஙகளைமேற்கொள்வதற்கு நாம் எத்தணித்துள்ளோம்.

எனவே குறித்தபோராட்டத்தில் பல்கலைகழகமாணவர்கள்,மதகுருமார்கள்,சிவில்சமூகபிரதிநிதிகள்,பொதுமக்கள்,அஅரசியல் வாதிகள் ஆகியோர் ஒன்றிணைந்து இந்தபோராட்டத்திற்கு வலுசேர்குமாறு நாம் கேட்டுகொள்கின்றோம்.

அண்மையில் கிளிநொச்சியில் வைத்து பிரதமர் ரணில் மறப்போம், மன்னிப்போம் என்று எமது தலைவர்களிற்கு மத்தியில்கூறியநிலையில் அதனை ஒரு தமிழ் தலைமையும்தட்டிகேட்கும் நிலையில் இருக்கவில்லை. எனவேஅவர்கள் தமது பதவிகளை பாதுகாப்பதற்காக எம்மைபயன்படுத்துகிறார்களேதவிரமக்களின்பிர்சினைகள் பற்றி அவர்களிற்கு அக்கறையில்லை என்றார்.




## வவுனியா நாற்சதுர சுவிசே சபை வாலிபர்கள் ஒன்று கூடல்!!

**வவுனியா நிருபர்**

வவுனியா மன்னார் வீதியில் அமைந்துள்ள நாற்சதுர சுவிசேச சபையில் வாலிபர் ஒன்று கூடல் நிகழ்வு வாலிபர் சங்கத்தின் தலைவர் எஸ்.கெவன் தலைமையில் நடைபெற்றது.



இவ் வாலிபர் ஒன்றுகூடல் நிகழ்வில் வாலிபர்களுக்கான விழையாட்டு நிகழ்வுகள், பட்டிமன்றம் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றிருந்தது.

முக்கியமாக போதைக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வுடன் தீங்கான பழக்கங்களை எவ்வாறு தவிர்த்தல் போன்ற விடயங்கள் ஆலயத்தின் தலைமை போதகரால் எடுத்துக் கூறப்பட்டிருந்தது.

இந்நிகழ்வு தொடர்பாக கருத்து தெரிவித்த ஆலயத்தின் தலைமை போதகர் பி.என்.சேகர், விடுமுறை நாட்களில் வாலிபர்கள் தங்களை தீய பழக்கங்களுக்கு உட்படுத்தாமல் மற்றும் ஆறு,குளங்களுக்கு நீராடச் சென்று பெறுமதியான தங்கள் உயிர்களை இழக்காமல் இருக்க இவ்வாறான வாலிபர்கள் ஒன்று கூடல்கள் தடுப்பதுடன் அவர்களுக்கு அறிவை ஊட்டவும் இளமை காலத்தில் ஏற்படும் சந்தேகங்களுக்கான விடைகளை பெற்றுக் கொள்ளுவதற்கான வாய்ப்பாகவும் அமைந்துள்ளதுடன் இவ்வாறான நிகழ்வுகளினூடாக ஒழுக்கமுள்ள ஒரு வாலிப சமுதாயத்தை உருவாக்க முடியும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நாற்சதுர சுவிசேச சபையின் வாலிபர்கள் மற்றும் பிரதேச வாலிபர்களும் கலந்து கொண்டு பயனடைந்திருந்தனர்.

# கிளிநொச்சியில் தெரிவு செய்யப்பட்ட 23 பயனாளிகளிற்கு வாழ்வாதார மற்றும் கற்றல் உதவிகள் வழங்கி வைக்கப்பட்டது

கிளிநொச்சியில் தெரிவு செய்யப்பட்ட 23 பயனாளிகளிற்கு வாழ்வாதார மற்றும் கற்றல் உதவிகள் வழங்கி வைக்கப்பட்டது. கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் அ.சத்தியானந்தன் அவர்களின் ஊடாக புலம்பெயர் உறவுகளால் வழங்கப்பட்ட 5 லட்சம் பெறுமதியான உதவிகள் கிளிநொச்சி மருதநகர் பகுதி மக்களிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பா ம உறுப்பினர் சிறிதரன் கலந்து கொண்டு கால்நடைகள் மற்றம், கற்றல் உதவிகளை வழங்கி வைத்தார். குறித்த நிகழ்வு இன்று காலை 10.30 மணியளவில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வை தொடர்ந்து பா ம உறுப்பினர் சிறிதரன் ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தார். குறித்த சந்திப்பில் அவர் கருத்து தெரிவித்தார்.

இரணைமடு குளத்திலிருந்து யாழிற்கு குடிநீர் எடுத்து செல்லலில் உள்ளி பிரச்சினைகள் தொடர்பில் அவர் குறிப்பிட்டார். தொடர்ந்து காணாமல் போனோர் விடயம், ஐநா மனித உரிமை விடயங்களில் தமிழ்தேசிய கூட்டமைப்பு எவ்வாறு செயற்படும் என்பது தொடர்பிலும் அவர் குறிப்பிட்டார்.

ஐநா மனித உரிமை அமர்வில் இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்கப்படும் என்ற விடயம் தொடர்பில் சுமந்திரன் கருத்து தெரிவித்து வருவது தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் வினவினார். கால அவகாசம் அல்ல, குறித்த விடயங்களை கையாள்வதற்கு தேவைப்பாடும் காலம், எந்த நாடு கையாளப்புாகின்றது என்பது தொடர்பில் அது அமையும். அதனை கால அவகாசமாக பார்க்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார். வழங்கப்பட்ட காலப்பகுதியில் அரசு எதையும் செய்திருக்கவில்லை என்பது தொடர்பிலும் அவர் குறிப்பிட்டார்.



ஐக்கிய தேசிய கட்சி அரசின் அதிகாரம் மிக்க அமைச்சர் போன்று சுமந்திரன் அவர்கள் செயற்படுவது புான்று தென்படுவதாகவும், அவ்வாறான நிலையிலிருந்து கருத்துக்கள் தெரிவித்த வருவதாகவும் கருத்துக்கள் நிலவுகின்றது என அவரிடம் வினவியபோது,

அவர் பாராளுமன்ற உறுப்பினராகவா? கட்சிசார்ந்து கருத்து தெரிவிப்பதாகவா பார்க்கின்றீர்கள் என அவர் திரும்ப எம்மிடம் வினவினார்.

அவருடைய கருத்துக்கள் கட்சி சார்ந்தே உள்ளது என தென்படுவதாக கூறிய போது,

நானும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்தான் என கூறி ஆரம்பித்த பாராளுமன்ற உறுப்பினர் கடந்த காலங்களில் அரசாங்கம் செய்த பல்வேறு படுகொலைகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கருத்து தெரிவித்தார்.

இறுதி யுத்தம் மாத்திரம் அல்ல. சிறுபான்மை இனத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அனைத்து விடயங்கள் தொடர்பிலும் நீதி கோரி சர்வதேசத்திடம் கூட்டமைப்பினராக வலியுறுத்தி வருகின்றீர்கள். இந்த நிலையில் யுத்த குற்றங்கள் மாத்திரமல்ல சிறுபான்மை இனத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை விடயங்கள் உள்ளிட்ட பல குற்ற செயல்களில் ஐக்கியதேசிய கட்சியின் ஆட்சி காலத்திலும் இடம் பெற்றுள்ளது. இச்சூழலில் நீங்கள் அந்த அரசுக்கு ஆதரவு கொடுத்துக்கொண்டு மனித உரிமை விடயங்கள் தொடர்பில் சர்வதேசத்தின் உதவியோடு வலியுறுத்தும்புாது அது தமிழ் மக்களிற்கு பலவீனமாக இருக்குமல்லவா என அவரிடம் வியவியபோது,

அது தாக்கம் செலுத்தும் என கூற முடியாது. 2015ம் ஆண்டுவரை இடம்பெற்ற சூழலிலிருந்து மீள வேண்டி நிலை ஏற்பட்டது. அவ்வாறான நிலையில் புதிய அரசாங்கத்தை உருவாக்கினோம். அந்த அரசாங்கத்தின் காலத்தில் மக்கள் தமது உரிமைக்காக போராட கூடிய நிலை ஏற்படுத்தப்பட்டது. அரசியல் கைதிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. காணிகள் விடுவிக்கப்பட்டன. இந்த நிலையில் அண்மையில் மகிந்த ராஜபக்ச அரசாட்சி அமைப்பதை தடுக்கவே புதிய அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கினோம். இந்த ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவோடும், சர்வதேசத்தின் ஆதரவோடும் செயற்பட்டு மக்களின் பிரச்சினைகளிற்கு தீர்வு காண முடியும் எனவும் அவர் இதன்புாது தெரிவித்தார்.

## கலந்துரையாடல்

புதிதாக கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத தடை நீக்க சட்டம் தொடர்பில் மக்களை தெளிவூட்டும் கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி சோலைவனம் விடுதியில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறித் கலந்துரையாடலில் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ்தனஞ்செயன் வளவாளராக கலந்துகொண்டு குறித்த சட்டமூலத்தில் காணப்படும் சாதக பாதகமான விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தினார். குறித்த கலந்துரையாடலில் பா ம உறுப்பினர் சிறிதரன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

கலந்துரையாடலில் பா ம உறுப்பினர் சிறிதரன் கருத்து தெரிவித்தார்.

குறித்த சட்டமூலம் பாதகமானது எனவு'ம, அதனை தாம் ஒருபுாதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் எனவும் தெரிவித்தார். குறித் சட்டமூலம் இயற்றப்பட்டு பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை மாத்திரமே எனவும், அதனை நிறைவேற்றவதற்கு சில வேளைகளில் 2 வருடங்களும் ஆகலாம் எனவும் தெரிவித்த அவர், அதற்கான வாத பிரதிவாதங்கள, குழு விவாதங்கள் என உள்ள நிலையில் அதனை உடனடியாக நிறைவேற்ற முடியாது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை அண்மையில் கிளிநாச்சியில் பிரமர் மன்னிப்போம் மறப்போம் என தெரிவித்த கருத்து தொடர்பிலம் அவர் தெரிவித்தார்.

குறித்த கூட்டம் பிரதமர் தலமையில் இடம்பெற்றது. அது பாராளுமன்ற அமர்வு அல்ல. குறித்த கூட்டத்ின் இறுதியில் அவர் இவ்வாறு தெரிவிக்கும்போது குறுக்கிடவோ, அல்லது எழுந்து வெளியேறவுா முடியாது. நாகரீகம் கருதி அமைதியாக இருந்தோம் என தெரிவித்தார். தென்னாபிரிக்காவில்இடம்பெற்ற சம்பவம் போன்று எமது நாட்டில் இடம்பெறவில்லை. அங்கு சிறுபாண்மை இனத்தவர் பெரும்பான்மை இனத்தவரை அடக்கி வாழ்ந்தன. குறித்த காலப்பகுதியில் பல்வேறு அநீதிகள் இழைக்கப்பட்டது. பெரும்பான்மையினர் சிறுபான்மையினத்தினரை பல்வேறு வகையில் துன்புறுத்தியுள்ளனர். பாரம்பரிய இடங்களில், தொல்பியல் பகுதிகளில் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் எவ்வாறு நாம் மன்னிப்பது மறப்பது என கேள்வி எழுப்பிய அவர், ஒரு வகையில் பிரதமர் ரணில் தமிழர்களிற்கு அளைக்கப்பட்ட அநீதிகளை மறைமுகமாக மன்னிப்புாம் மறப்புாம் என்ற வார்த்தையின் ஊடாக ஏற்றுக்கொண்டுள்ளார் எனவும் தெரிவித்தார். பயங்கரவாத தடை சட்டத்தின் காலத்தில் கடந்த காலங்களில் பல்வேறு அநீதிகள் இழைக்கப்பட்டதாக சுட்டிக்காட்டிய அவர், குறித்த சட்டத்தை இல்லாது செய்தாலே பொருத்தமாகும் என்பதுடன், அவ்வாறு செய்தால்தான் சர்வதேசத்திடம் மதிப்பெண்ணை அரசு பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

குறித் சட்டமூலம் தொடர்பில் கருத்து தெரிவித்த சட்டத்தரணி எஸ்.தனஞ்சயன் கருத்து தெரிவிக்கையில்,

குறித்த சட்டமூலம் சிறுபான்மை மக்களிற்கு பாதிப்பினை ஏற்படுத்தும் எனவு'ம, ஊடகவியலாளர்களிற்கு மாத்திரமல்ல நிறுவனங்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மீதும் பாதிப்பினை ஏற்படுத்தும் எனவும் அவர் தெரிவித்தார்.

## பயிற்றுவிப்பாளர் இன்றி இயங்கும் நகரசபையின் உடல் வலுவூட்டல் நிலையம்

**வவுனியா நிருபர்**

வவுனியா நகரசபையினரின் உடல் வலுவூட்டல் நிலையம் பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கிவருவதாகவும் அங்கு சென்று பயிற்சிகளை மேற்கொள்பவர்களுக்கு தகுதியான பயிற்றுவிப்பாளர் எவரும் இல்லை. இவ்வாறு உடல் வலுவூட்டல் நிலையத்திற்குச் செல்லும அங்கத்தவர்கள் குற்றச்சாட்டினை முன் வைத்துள்ளனர்.



வவுனியா நகரசபையிலுள்ள உடல் வலுவூட்டல் நிலையத்திற்கு அண்மையில் உபகரணங்கள் சில கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் அது தரமற்றவையாகவும், உபயோகிக்க முடியாமலும் நீண்டகாலமாக பாவனையற்ற நிலையில் அங்கு காணப்படுகின்றது. நகரின் மத்தியிலுள்ள நகரசபையினரின் பூரண கட்டுப்பாட்டிலுள்ள உடல் வலுவூட்டல் நிலையத்திற்கு ஒருவரிடமிருந்து ஆயிரம் ரூபா முற்பணமாகவும் மாதாந்தம் 750ரூபாவும் நகர சபையினரால் அங்கத்தவர்களிடமிருந்து பணம் அறவிடப்பட்டு வருகின்ற நிலையிலும் அங்கு பயிற்றுவிப்பாளர் உட்பட நிலையம் துப்பரவு இன்றியும் மலசலகூடத்திலிருந்து துர்நாற்றம் வீசுகின்றது. போன்ற பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன.

உடல் வலுவூட்டல் நிலையத்திற்கு பயிற்றுவிப்பாளர் இன்மையால் பலர் அங்கு செல்வதில்லை தற்போது இருக்கும் அங்கத்தவர்களுக்குச் சரியான முறையில் பயிற்றுவிப்பதற்கு பயிற்றுப்பாளர் இன்மையால் கடந்த பல வருடங்களாக வவுனியா நகரிலிருந்து உடல் வலுவூட்டல் போட்டியிற்கு செல்லவில்லை. இது வவுனியா நகரிற்கு ஒரு குறைபாடாகவே காணப்படுகின்றது. பல திறமையாளனவர்கள் இருந்தும் நகசரபையினரால் இனங்கண்டு அவர்களை பயிற்று விப்பாளர்களாக இணைத்துச் செயற்பட முடியவில்லை.

நகரின் மத்தியிலுள்ள உடல் வலுவூட்டல் நிலையத்திற்கு பலர் செல்வதற்கு தயார் நிலையிலிருந்தும் அங்குள்ள குறைபாடுகளினால் பலர் செல்வதைத்தவிர்த்து வருகின்றனர்.

நகரசபையின் இக்குறைபாடுகள் தொடர்பாக நகரசபை உப நகர பிதா சு. குமாரசாமியிடம் வினவிய போது,

உடல் வலுவூட்டல் நிலையத்திற்கு பயிற்றுவிப்பாளர்களாக பணிபுரிவதற்கு 21பேரிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. எதிர்வரும் 25ஆம் திகதி இடம்பெறவுள்ள சபை அமர்வில் இவ்விடயங்கள் குறித்து தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. மலசல கூடத்திலிருந்து துர்நாற்றம் வீசுவதாக நகரசபைக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளது. மலசலகூடம் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. துப்பரவுப்பணியாளர்கள் இருவர் கடமையாற்றி வருகின்றனர். எனவே துப்பரவின்மை என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று மேலும் தெரிவித்துள்ளார்.

## வவுனியாவில் 'தாவுலு'என்ற சீன தற்காப்புக் கலை அறிமுக பயிற்சி முகாம்!!





**வவுனியா நிருபர்**

வவுனியாவில் 'தாவுலு' என்ற சீன தற்காப்புக்கலை பாடசாலை மாணவர்கள் மத்தியில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண 'வூசூ' தற்காப்புக்கலை சங்கத்தின் ஏற்பாட்டில் பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லூரி மண்டபத்தில் 'தாவுலு' தற்காப்புகலை பயிற்சி முகாம் நடைபெற்றது.





வவுனியா ஏழாம் அறிவு தற்காப்புகலை சங்கத்தின் தலைவர் எஸ்.நந்தகுமார் தலைமையில் இரு தினங்கள் நடைபெற்ற இப் பயிற்சி பட்டறையில்'தாவுலு' சர்வதேச பயிற்றுவிப்பாளரும், அகில இலங்கை வூசூ பயிற்சி நிறுவனத்தின் பயிற்றுவிப்பாளருமான டபிள்யூ.எம், வசந்த பண்டார கலந்து கொண்டு மாணவர்களுக்கு தற்காப்புக்கலை பயிற்சிகளை வழங்கியிருந்தார்.

வவுனியா கோவிற்குளம் இந்துக்கல்லுரி, அகில இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை, கூமாங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லுரிகளை சேர்ந்த 50 மாணவ, மாணவிகளுக்கு கம்பு, வாள், ஈட்டி போன்ற ஆயுதங்களை தற்காப்புக்காக பயன்படுத்தும் முறைகள் மற்றும் சர்வதேச ரீதியிலான போட்டிகளில் பங்குபற்றும் விதிமுறைகள் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது.

இருநாட்கள் தாவுலு சீன தற்காப்பு கலை பயிற்சியில் கலந்துகொண்ட மாணவ, மாணவிகளுக்கு வூசூ சர்வதேச பயிற்றுவிப்பாளரால் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது.

## சாரணியத்தின் தந்தையின் 162 வது பிறந்த தினம் வவுனியாவில்

**வவுனியா நிருபர்**

வவுனியா விபுலாநந்தாக் கல்லூரியில் சாரணியத்தின் தந்தை ராபர்ட் பேடன் பவல் பிரபுவின் 162 வது பிறந்த தினத்தை முன்னிட்டு பாடசாலையின் அதிபர் திரு.பொன்னையா சிவநாதன் தலைமையில் நடைபெற்றது. இவ் நிகழ்வில் பாடசாலை பிரதி அதிபர்களான மதிவண்ணன் மற்றும் கருணாகரன் அவர்களும் பெண் சாரணியத்தின் ஆசிரியர் திருமதி யசோதா அவர்களும், பாடசாலையின் உதவி சாரண தலைவரும் ஜனாதிபதி சாரணருமாகிய வ.பிரதீபன் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது!

# வடக்கு தந்தி

## வவுனியாவில் விசேட அதிரடிபடையினரின் அதிரடி நடவடிக்கை: ஐவர் கைது



**வவுனியா நிருபர்**

வவுனியாவில் தேசிய நீர் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்து நாடாத்திய திடீர் சுற்றிவளைப்பில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போகஸ்வேவ பகுதியில் இடம்பெற்ற இந்த சுற்றிவளைப்பில் நன்னீர் மீன்பிடித்தலுக்காக தடை செய்யப்பட்ட சட்ட விரோதமான தங்கூசி வலைகளை வைத்திருந்த குற்றத்திற்காக ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், ரூபா 75,000 பெறுமதியான தடை செய்யப்பட்ட தங்கூசி வலைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட வலை மற்றும் நபர்களை நீதிமன்றில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ் சுற்றி வளைப்பினை தேசிய நீர் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் பிராந்திய நீரியல் விரிவாக்கல் அலுவலகத்தின் வவுனியா, மன்னார் மாவட்ட நீர் உயிரின செய்கை விரிவாக்கல் அதிகாரி யோகநாதன் நிசாந்தன் தலைமையில் அலுவலக உத்தியோகத்தர்கள், மடுகந்தை விஷேட அதிரடிபடையின் நிலைய பொறுப்பதிகாரி இன்ஸ் பெக்டர் மனோஹரா அவர்களின் நெறிப்படுத்தலில் விஷேட அதிரடிப்படையினர் ஆகியோர் இணைந்து மேற்கொண்டிருந்தனர்.

இவ் விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்த வவுனியா, மன்னார் மாவட்ட நீர் உயிரின செய்கை விரிவாக்கல் அதிகாரி யோகநாதன் நிசாந்தன்,

தடைசெய்யப்பட்ட தங்கூசி வலைகளை உபயோகித்து மீன்பிடிப்பதன் மூலம் நன்நீர் மாசடைவதாகவும், குளங்களில் மீன்களின் உயிரிழப்புக்கள் அதிகம் ஏற்படுவதாகவும் தொடர்ந்தும் இவ்வாறான சட்ட விரோத நடவடிக்கையில் ஈடுபடுபவர்களை கைது செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## பிராந்திய சுகதார சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வவுனியாவில் தொழுநோய் தொடர்பான விழிப்புணர்வு





**வவுனியா நிருபர்**

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தொழுநோய் தொடர்பான விழிப்புணர்வு செயற்திட்டம் ஒன்று வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பிராந்திய சுகாதார திணைக்களத்தின் பொது சுகாதார பரிசோதகர் எம்.தியாகலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் திருமதி பசுபதிராஜா, பிராந்திய சுகதார சேவைகள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் மகேந்திரன், தொற்று நோயியல் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி வைத்தியர் லவன், தாபரி கலாமன்ற உறுப்பினர்கள், மாணவர்கள், மற்றும் பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது தொழுநோய் ஏற்படுவதற்கான காரணங்கள் மற்றும் அதனைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளக் கூடிய வழிவகைகளை குறித்து ஆராயப்பட்டதுடன், தொழுநோய் கட்டுப்படுத்தும் செயற்திட்டத்தை கடந்த காலங்களில் முன்னெடுத்தவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

## வவுனியா நடைபாதை வியாபாரத்தால் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம்

**வவுனியா நிருபர்**

வவுனியா இலுப்பையடி, சந்தை சுற்றுவட்ட வீதிகளில் நடைபாதையில் வியாபாரம் மேற்கொள்வதால் அவற்றின் கழிவுகள் சென்று கால்வாய்களை அடைத்து நீர் தேங்கி அப்பகுதிலிருந்து டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும், நடைபாதை வியாபாரம் மேற்கொள்வதால் இலுப்பையடி பேருந்து தரிப்பிடத்தில் வாகன நெரிசல் ஏற்பட்டு அப்பகுதியில் விபத்துக்கள் ஏற்பட்டு வருவதாகவும் பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து மேலும் தெரிவிக்கையில்,

இலுப்பையடி, சந்தை சுற்றுவட்ட வீதிகளிலுள்ள கால்வாய்கள், நடைபாதையின் இருபகுதி ஓரங்களில் சிலர் காய்வாயில் வியாபாரம் மேற்கொண்டு வருகின்றனர். தமது கழிவு குப்பைகளை அப்பகுதியில் வீசிவருகின்றனர். இதனால் கால்வாயினால் செல்லும் கழிவு நீர் அப்பகுதியில் அடைப்பு ஏற்பட்டுள்ளது. அதிலிருந்து டெங்கு நுளம்புகள் பெருக்கெடுக்கின்றதாகவும் மாலை நேரங்களில் அப்பகுதியில் நுளம்பு தொல்லைகள் அதிகரித்துக்காணப்படுகின்றன.

சுகாதாரமற்ற முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடைபாதை வியாபாரத்தினைக்கட்டுத்த நடவடிக்கை மேற்கொள்வதுடன் அப்பகுதியிலுள்ள தேவாலயங்கள், வங்கிகள், குடியிருப்புக்கள் என்பன காணப்படுகின்றன.

இலுப்பையடி பேருந்து தரிப்பிடத்தில் நடைபாதை வியாபாரம் மேற்கொள்வதால் வாகன நெரிசல் ஏற்பட்டு விபத்துக்களும் இடம்பெற்றுவருகின்றன. நடைபாதையிலுள்ள வியாபார நடவடிக்கையினை நகரசபை உத்தியோகத்தர்கள் கட்டுப்படுத்தி அவ்வீதியால் இடையூறுகள் இன்றி பொதுமக்கள் தமது பயணத்தினை மேற்கொள்வதற்கும் அப்பகுதி நடைபாதையில் சென்றுவருவதற்கும் அப்பகுதியில் அதிகரித்துக்காணப்படும் டெங்கு நுளம்பு பெருக்கத்தினைக்கட்டுப்படுத்த துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மேலும் அப்பகுதி கடை உரிமையாளர்கள், பொது மக்கள் கோரியுள்ளனர்.



## தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தினால் தண்ணீர் பவுசர்கள் வழங்கி வைப்பு



**வவுனியா நிருபர்**

தேசிய அனர்த்த நிவாரணசேவைகள் நிலையத்தால் அனர்த்த நேரங்களில் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதை நோக்காகொண்டு இரண்டு தண்ணீர் பவுசர்கள் வவுனியா மாவட்டத்திற்கு வழங்கபட்டது.

குறித்த பவுசர்கள் செட்டிகுளம் மற்றும் வவுனியா பிரதேச செயலக பிரிவுகளிற்கு வழங்கிவைக்கபட்டதுடன் வவுனியா மாவட்ட அரசஅதிபர் ஐ.எம். ஹனீபா அதனை குறித்த பிரதேச செயலாளர்களிடம் உத்தியோக பூர்வமாக கையளித்திருந்தார்.

கடந்த வருடமும் இவ்வாறன இரு பவுசர்கள் வழங்கபட்டிருந்ததுடன் வவுனியா வடக்கு மற்றும் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலக பிரிவுகளிற்கு வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

இந் நிகழ்வில் மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார், வவுனியா மற்றும் செட்டிகுளம் பிரதேச செயலர்களான கா.உதயராஜா, க.சிவகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்

## கிளிநொச்சி, யாழ்.மாவட்ட மக்கள் இணைந்து கிளிநொச்சியில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை எதிர்த்து போராட்டம்

கிளிநொச்சி யாழ் மாவட்ட மக்கள் இணைந்து கிளிநொச்சியில் பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை எதிர்த்து போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். குறித்த போராட்டம் இடம்பெற்றது. நாட்டில் கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை கண்டித்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது, மனித உரிமை செயற்பாட்டு இயக்கங்களின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் இன்று முன்னெடுக்கப்பட்டது. கிளிநாச்சி பழைய மாவட்ட செயலகம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட குறித்த போராட்டம் ஏ9 வீதியால் டிப்போ சந்திவரை சென்று அங்கு கவன ஈர்ப்பும் முன்னெடுக்கப்பட்டது, பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தில் காணப்படும் பாதகமான விடயங்கள் தொடர்பில் மக்களை தெளிவு படுத்தம் வகையில் பல்வேறு பதாதைகளை ஏந்தியவாறு மக்கள் கோசமிட்டனர்.

தொடர்ந்து ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த அவர்கள்,


நாட்டில் யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.





இந்த நிலையில் புதிய சட்டம் ஒன்றை இயற்றி நடைமுறைப் படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. சர்வதேசத்தை கண்துடைப்பதற்காக குறித்த சட்டம் இயற்றப் பட்டுள்ளது.இந்த சட்டத்திலும் மோசமான பாதிக்க கூடிய சரத்தக்கள் உள்ளன. எனவே எமமக்கு இந்த சட்டம் வேண்டாம் என தெரிவித்தனர். இவ்வாறான சட்டம் நடைமுறையில் இருந்த நிலையில் எமது உறவுகள் தொடர்ந்தும் அரசியல் கைதிகளாக சிறையில் உள்ளனர். எனவே பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திலும் தொடர்ந்தும் அவர்கள் சிறையில் வாட வழிவகுக்கும் எனவும் தெரிவித்தனர். எனவே இந்த சட்டத்தை முழுமையாக அகற்ற வேண்டும் எனவும் மக்கள் தெரிவித்தனர்.

## வெட்டு காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் பொலிசாரால் மீட்பு



வெட்டு காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளது.கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்டதருமபுரம் 2ம் யூனிட் சம்புகுளத்தில் குறித்த ஆணின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. உயிரிழந்தவர் தர்மபுரம் மேற்கு 6 யூனிட்டை சேர்ந்த 28 வயதுடைய கரன் என அழைக்கப் படும் அரசசிங்கம் கௌவுரியனந்தம் ஒரு குழந்தையின் தந்தை என பொலிசார் அடையாளம் கண்டுள்ளனர். குறித்த சம்வம் தொடர்பிலான விசாரணைகளை தர்மபுரம் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

இரு வேறு குடும்பங்களிற்கு இடையில் ஏற்பட்ட பிரச்சினையே இதற்கு காரணம் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் நேற்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி பொலிஸில் சரண் அடைந்துள்ளார்.







**ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைவாக கிராமம் தோறும் வறுமையை ஒழிப்போம் நிகழ்ச்சித் திட்டத்திற்கு அமைவாக இளவாலை வடமேற்கு கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சேந்தாங்குளம் தொடக்கம் வலிதூண்டல் வரையிலான கடற்கரை துப்பரவாக்கம் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை இங்கு காணலாம். படம்: இளவாலை நிருபர்**

**தென்னிலங்கையின் பல பகுதிகளிலும் இன நல்லிணக்கத்தின் வெளிப்பாடாக வடக்கில் வறுமையில் உள்ள மக்களிற்கு உதவும் நோக்குடன் பௌத்த மத தலைவர்களால் சேகரிக்கப்பட்ட பொருட்களிந் ஒரு பகுதி கிளிநொச்சியில் பகிர்ந்தளிக்கப்பட்டது. இந்த உதவிக்காக தென்னிலங்கையில் மத தலைவர்களால் மடி பிச்சை மூலம் பெற்றுக்கொண்ட உதவிகளே இவ்வாறு பகிர்ந்தளிக்ப்பட்டதாகவும், இவ்வாறான செயற்பாடுகளின் ஊடாக இன நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முடியும் எனவும் தெரிவிக்கின்றனர். குறித்த உதவிகள் பகிர்ந்தளிக்கும் முன்னர் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.**





# இது இன்னொரு வாழ்க்கை!

பகல் நேர பேருந்து பயணம், இம்சையாய் இருந்தது, கலியமூர்த்திக்கு! மனதின் கொதிப்பை விட, புறவெளியின் கொதிப்பு வெறுப்பாய், எரிச்சலூட்டுவதாய் இருந்தது. பஸ் புறப்பட சில நிமிடங்களே இருந்தன. பஸ்சில் ஏறிய இளம் பெண் ஒருத்தி, தான் முன்பதிவு செய்திருந்த இருக்கைக்கு பக்கத்தில் கலியமூர்த்தி உட்கார்ந்திருப்பதைப் பார்த்து, நடத்துனரிடம் சொல்ல, அவர், பக்கவாட்டு இருக்கையில் அமர்ந்திருந்த தம்பதியைப் பிரித்து, இவர் அருகில் உட்கார வைத்து, அந்தப் பெண்ணை மறுபுறமாய் அமர வைத்தார்.

பக்கத்தில் வந்து அமர்ந்த அந்த நபர், கொஞ்சம், பருமனாக இருந்தார். கூடவே, அவருடைய பத்து வயது மகனை, மடி மீது உட்கார வைத்ததும், கலியமூர்த்திக்கு, 'சுள்' என்று வந்தது.

துறுதுறுவென்றிருந்த அந்த பயலோ, நெளியவும், மடங்கவும் என்று, தன் பாதி உடம்பை, கலியமூர்த்தியின் மீது கிடத்தியும், அவர் கால் வைக்கும் இடத்தில் நின்று, ஜன்னல் வழியே வேடிக்கை பார்ப்பதுமாக இருந்தான்.

'பஸ் பயணம்ன்னாலே இம்சை தான்...'என்று முணுமுணுத்து, கண்களை மூடி இருக்கையில் சரிந்தார். மனம் இனம் புரியாத தவிப்பில், இலக்கில்லாத இந்த பயணத்தின் மீது எரிச்சல் வந்தது. நேற்றைய நிகழ்வுகள், கண் முன் படமாய் விரிந்தன...

வீடியோ காலிங்கில் தெரிந்த, அமெரிக்காவில் உள்ள மகனுடைய வீடும், நவீன சோபாவும், அவனுடைய பொருளாதார வளர்ச்சியை காட்டியது.

'சந்துரு... உன்னையும், புள்ளைகளையும் பாக்க உங்கம்மா ரொம்ப ஆசையா இருக்கா... இப்பவும், நீ வர நேரமில்லன்னு சொல்றியேப்பா... இந்த தனிமை எங்கள ரெம்பவும் வாட்டுது..'என்றார் வருத்தமாக!

'ரெண்டு பேர் இருக்கிறது எப்படிப்பா தனிமை ஆகும்... கஷ்டப்பட்டு டாலரா அனுப்புறோம். சகல வசதியோட வீடு, வாசல் இருக்கு. முதுமைய, 'என்ஜாய்' செய்ய வேண்டியது தானே...' என்றான் அலட்சியமாக!

'முதுமை, 'என்ஜாய்' செய்றது இல்ல சந்துரு... வாழ்க்கைக்கான மிச்சத் தேடல். என் குழந்தை, பேரப்பிள்ளைன்னு வாழணும்ங்கிற இறுதி நாட்களுடைய ஏக்கம்...'

'எதுவுமே இறுதி இல்லப்பா; முடிஞ்சு போறது, இன்னொரு துவக்கத்துக்கான ஆரம்பம்...'

'அது எல்லாத்துக்கும் பொருந்தும். மரணத்திற்கு பொருந்தாது...'

அமைதியாக இருந்தான் சந்துரு. பேரப் பிள்ளைகள், கேமரா முன் நின்று, ஹாய் சொல்லின; மருமகள், குனிந்து நமஸ்கரித்து போனாள்.

இவருடைய மவுனமும், அமைதியான முகமும், அவனிடம் மிச்சமிருந்த பந்த பாசத்தை தூண்டி விட்டதோ என்னவோ, குழைவாய் கேட்டான்...


'வருத்தப்படுறீங்களாப்பா, யோசிச்சு பாருங்க... நான் களிமண் மாதிரி பிறந்தேன். என்னை கனவுகளோடு உருவாக்கினது நீங்க. உயரம் தான் உலகத்துடைய பிரதானம்ன்னு கத்து குடுத்த நீங்க, இப்ப, நான் உயரத்தை எட்டும்போது சஞ்சலப்படலாமா...'

'சந்துரு... ஒரு தகப்பனுக்கு, தன் மகனுடைய உயரம், சஞ்சலமா இருக்கும்ன்னா நினைக்கிற... இல்லப்பா... நீங்க உயர உயர எங்க கண்ணை விட்டு வெதுதூரம் போயிடுறீங்க. ஒரு கட்டத்துக்கு பின், அந்த பிரிவை தாங்க முடியல. அதீதமான சவுகரியங்கள் கூட, கொஞ்ச நாள்ல அலுத்து போயிடுது. அந்த ஏக்கத்துல தான், உன்கிட்ட கேட்டேன்... உங்கம்மாவோ, இதெல்லாம் உனக்கு எடுத்து சொல்லத் தெரியாம, கோவிலே கதின்னு கிடக்குறா... இதெல்லாம் உனக்குப் புரியாது..'

'எனக்கான பொறுப்புகளும், கடமையும் புரியுது. ஆனா, நான் கடமைக்காக மட்டும் தான் படைக்கப்பட்டு இருக்கேனா... என் வாழ்க்கைய முழுமை செய்துக்க, இயங்கிட்டு இருக்கேன். ஆனா, நீங்களும், அம்மாவும் உங்களுக்கு மகனா இருக்கிறது மட்டும் தான் என் வேலைன்னு சொல்றீங்க...'

சுரீரென நிமிர்ந்தார்; கண்கள் கலங்கியது. நல்ல வேளை, இந்த வார்த்தையை கேட்க, மனைவி அருகில் இல்லை. 'லேப் - டாப்'பை அணைத்து, வெளியே வந்தார்.

'மார்பிலும், தோளிலும் தூக்கி வளர்த்த பிள்ளையே, 'உங்களுக்கு பிள்ளையாக இருப்பது என் வேலை இல்லை...'என்று சொன்ன பின், வாழ்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது... ஒரு முறை, ஊருக்குப் போய் உறவுகளை எல்லாம் பார்த்து வந்து, ஒரேடியாக போய் சேர்ந்து விட வேண்டியது தான்...' என்ற முடிவுடன் தான், ஊருக்கு கிளம்பி



இருந்தார்.

''தாத்தா தூங்குறாங்க... சும்மா அவுகள இடிச்சுட்டு இருக்கக் கூடாது...'' என்ற பக்கத்து சீட் ஆசாமியின் கட்டையான குரல் கேட்டு கண் விழித்தார்.

''சார் தப்பா நினைக்காதீங்க... பையன் ரெட்டை சுழிக்காரன். பத்து நிமிஷம் ஒரு இடத்துல உட்கார வைக்க முடியாது... உங்கள ரொம்ப தொந்தரவு செய்றான்னு நினைக்கிறேன்...''

பதில் பேசாமல் சிரித்தார், கலியமூர்த்தி. அந்த சிரிப்பை, நட்புக்கான அச்சாரமாக எடுத்துக் கொண்டான்.

''நமக்கு விவசாயம் தான் தொழிலு; தென்னந்தோப்பும் இருக்கு. பெருசா விளைச்சல் இல்லாட்டியும், வீம்புக்காக விவசாயத்தை பிடிச்சுக்கிட்டு, காலத்தை ஓட்டுறோம்...'' என்றவன், ''சாருக்கு எங்க,'' என்றான்.

''அக்கா, தம்பி எல்லாரும் அங்க தான் இருக்காங்க. படிச்சு, நான் வெளியில வந்துட்டேன். பேங்க் மேனேஜர் உத்யோகம்! 32 வருஷம் ஓடிப் போச்சு... ஒரே பையன். அமெரிக்காவுல இருக்கான்...'' என்றார். உடனே, தன் பையனிடம், ''பாரு... சாரோட பையன் படிச்சு, பெரிய உத்யோகத்துல, வெளிநாட்டுல இருக்காரு. நீயெல்லாம் அங்க போக வேணாமா...''என்று, மகனின் தலையை அன்பாய் நீவி சொன்ன போது, கலியமூர்த்திக்கு கோபம் வந்தது.

தன்னை மறந்து, ''இப்படித் தான் நானும் சொல்லி வளத்தேன். கடைசியில, 'உங்களுக்கு புள்ளையா இருக்கறது மட்டும் தான், என்னோட வேலையா'ன்னு கேட்டுட்டான். மனசு ஆற மாட்டேங்குது. இதுகள தூக்கி வளர்க்க கூடாது. அது தான் நாம செய்யுற தப்பு...''என்றவர், சட்டென்று, தன் தவறை உணர்ந்து, நாக்கை கடித்தார்.

அவரையே சிறிது நேரம் உற்றுப் பார்த்த பக்கத்து சீட்டுக்காரன், அவர் கண்களில் தெரிந்த விரக்தி, வெறுமையை கண்டு, 'வருத்தப்படாதீங்கய்யா... எல்லா கஷ்டமும் ஒருநாள் நம்மை கடந்து போயிடும்...'' என்றான், வேதாந்தி போலே!

பரிச்சயம் இல்லாதவன் தான். ஆனால், ஏதோ பந்தமிருப்பவனை போல், ஆறுதலாக பேசியது, இந்த சூழலுக்கு தேவையானதாய் இருந்தது.

''உங்களுக்கு புரியாது தம்பி... ஏன்னா, நீங்க இன்னும் அந்த வயச எட்டல. இதேமாதிரி தான் நானும், என் மகனை மடியிலயும், தோள்லயும் தூக்கி வளர்த்தேன். நாம வளர்க்கிற புள்ள, நாளைக்கு நம்மளவே தூரப்படுத்தி பேசினா, நம்ம வாழ்க்கைக்கு என்ன பாதுகாப்பு இருக்கு சொல்லுங்க...'' என்றார்.

''சார்... நீங்க நிறைய படிச்சவங்க. உங்களுக்கு நான் என்ன சொல்றது... இருந்தாலும், என்னைப் பொறுத்தவர, பிள்ளைங்க மீது எதிர்பார்ப்பை வளர்த்துக்கிறது தப்புன்னு தான் சொல்வேன். அதுக்காக, உலகத்துல இருக்குற எல்லா மகனுகளும் சுயநலவாதிக. பெத்தவங்கள பாத்துக்கிறது இல்லன்னு சொல்ல வரல. நாம தான், நம்ம புள்ளைங்கள சுத்தி, நாம பின்னியிருக்கிற பாச வலையில இருந்து நம்மை விடிவிச்சுக்கணும். நாம வளர்ந்ததும், நம்ம அப்பா, அம்மாவை விட்டு, நம்மள விடுவிச்சுக்கும் போது, இதையெல்லாம் யோசிச்சமா என்ன!

''தன் குஞ்சுகள சிறகுகளுக்குள்ள வச்சு காப்பாத்துற பறவைங்க தான், குஞ்சுக்கு றெக்க முளைச்சதும், அதுங்கள கூட்டைவிட்டு துரத்துதுங்க... அதுக்காக, அதுகளுக்கு பாசம் இல்லன்னு அர்த்தமா என்ன... வாழ்க்கையில், ஒவ்வொரு கட்டத்துலயும் நமக்கு ஏதாவது ஒரு பிடிமானம் தேவைப்படுது. அந்த பிடிமானத்தை பிடிச்சு, அடுத்த கட்டத்துக்கு போன பின்பும், அந்த பிடிமானத்து மேல அபிமானம் வைக்கிறது தப்பிலீங்களா...''என்றான்.

'சொளேர்' என்று நிமிர்ந்து பார்த்தார். அவன் வார்த்தைகளில் இருந்த விஷய ஞானம், அவன் தோற்றத்திற்கு சம்பந்தமில்லாததாய் இருந்தது.

''குழந்தைங்க நம்ம மூலமா வந்தவங்க. நமக்காக வந்தவங்க இல்ல. புள்ளைங்க மேல நம்பிக்கை வைக்கலாம். ஆனா, அவங்கள நம்பியே இருக்கக்கூடாது...''

கண்களை விரித்து, 'என்ன சொல்ல வர்றே..' என்பது போல் பார்த்தார், கலியமூர்த்தி.

''சார்... நமக்கு நடுவே, ஒரு பத்து மணி நேர பயணம் தான்... ஆனா, ஏதோ நம்பளை கட்டி வைக்கிறதா நீங்க நினைக்கிறீங்களான்னு எனக்குத் தெரியாது. ஆனா, நான் நினைக்கிறேன். அந்த நினைப்புல சொல்றேன்... பிள்ளைங்களும், நம்மோட வாழ்க்கையில பயணம் செய்ற பயணிங்க தான். மத்தவங்களுக்கும், அவங்களுக்கும் உள்ள வித்தியாசம், அவங்க நம்ம சொந்த ரத்தம்... அவ்வளவு தான்.

''அவங்கள மட்டுமே நம்மோட உலகம்ன்னு நம்பிட்டு இருக்கிறத விட்டுட்டு, நமக்கான உலகத்துல, மத்தவங்களுக்கும் இடம் கொடுத்து பாருங்க... எந்த ஏமாற்றமும் இருக்காது. யாரையும் இழுத்து பிடிச்சு வச்சுக்கிறத விட்டுட்டு, நாம, நம்ம வேலைய பாத்தா, எல்லாம் தன்னால தேடி வரும்..'' என்று சொல்லி சிரித்தான். சிலிர்ப்பாய் இருந்தது கலியமூர்த்திக்கு!

அப்படியே, கண்களை மூடி இருக்கையில் சரிந்தவர், உறங்கி போனார்.

கணவருடைய போக்கில் தென்பட்ட மாற்றத்தை அதிசயமாக பார்த்தாள், கலியமூர்த்தியின் மனைவி.

'இது வயதான பறவைகளின் சரணாலயம்' என்று வாசலில், 'போர்டு' மாட்டினார். ஹாலில் டேபிள் போட்டு, நோட்டீஸ் மற்றும் வவுச்சருடன் அமர்ந்தார். தினமும் பலர் வந்து போக ஆரம்பித்தனர்.

''என்ன தான் செய்றீங்க... ஒண்ணும் புரியல...''என்ற மனைவியை, புன்னகையுடன் பார்த்து, ''மாடி போர்ஷனை காலி செய்து, 'ஓல்டு ஏஜ் ஹோம்' ஆரம்பிக்க போறேன். பிள்ளைகளால் ஒதுக்கப்பட்ட பெரியவங்க எல்லாரும் இங்க வந்து சேரலாம். மாசம் ஐயாயிரம் ரூபாய் முதல் அவங்க விருப்பப்பட்ட தொகைய தரலாம். அந்த தொகைய கொண்டு, ஏழை முதியவங்கள இலவசமா கவனிச்சுக்கலாம்.

''அது மட்டுமல்ல, வருஷத்துக்கு, ஏதாவது கோவில் இருக்குற ஊருக்கு, டூர் கூட்டிட்டு போற, 'ஸ்கீம்' கூட இருக்கு. விளையாட்டா தான் பேப்பர்ல விளம்பரம் குடுத்தேன். இதோட, நாலு பேர் போன் செய்துட்டாங்க. ஏதோ புதுசா வேலை செய்யப் போற நம்பிக்கை பிறந்திருக்கு...''

''ஐயாவோட புது அவதாரம் நல்லாத்தான் இருக்கு. ஆனா, இந்த ஐயாயிரம் தந்தாத்தான் சேர்த்துப்பேன்னு சொல்றது மட்டும், கொஞ்சம் இடிக்குது...'' என்றாள் கேலியாக!

''அப்படியில்ல... பத்து பேர் சேர்ந்தாலும் சமைக்க ஆள் போடணும். அவங்களுக்கு தேவையானதையெல்லாம் செய்யணும். அதுக்கெல்லாம் நம்மகிட்ட பொருளாதாரம் பத்தாது. நான், லாபம் சம்பாதிக்க, இந்த வேலைய செய்யல... நம்மளைப் போல வயசானவங்களும் இந்த உலகத்துல வாழறதுக்கு அர்த்தம் இருக்குன்னு காட்டத்தான், இந்த முயற்சிய செய்றேன்,'' என்றார்.

''நம்மால் முடியுமாங்க...''

''முடியும்ன்னு நம்புறேன். ஒருவேளை, என்னால முடியாமப் போனா, இங்க வர்றவங்க யாராவது அதை எடுத்து நடத்துவாங்க...''

நாட்கள் வாரங்களாகி, வாரங்கள், மாதங்களாக உருண்டோடின.

அப்பாவிடம் இருந்து போன் காலே இல்லை. 'தன் வார்த்தை அவரை இத்தனை விரக்தியடைய வைத்து விட்டதா...' என்ற குற்ற உணர்ச்சி உண்டானது, சந்துருவுக்கு!

வீடியோ காலீங் செய்தான். தாமதிக்காமல் எடுத்தார், கலியமூர்த்தி. வீட்டில் கேட்ட பேச்சுக்குரலும், நடமாட்டங்களையும் உணர்ந்து, ''என்னாச்சுப்பா... வீட்டில் நிறைய பேச்சுக் குரல் கேட்குது. நம்ம சொந்தக்காரங்க எல்லாம் வந்திருக்காங்களா?'' என்று கேட்டான்.

''அப்படிக்கூட வச்சுக்கலாம்... இவங்களும் நமக்கு சொந்தங்கள் தான். அடுத்த நொடி வாழ்க்கைக்கு பாதுகாப்பையும், நம்பிக்கையும் யார் ஏற்படுத்தி தராங்களோ, அவங்க தான் நமக்கு உறவுன்னு நீ தான் எனக்கு கத்துக்குடுத்ததே... அதனால தான் அடுத்த வேளை வாழ்க்கைக்கு நம்பிக்கையை ஏற்படுத்திக்க, வீட்டில், 'ஓல்டு ஏஜ் ஹோம்' ஆரம்பிச்சுட்டேன்,'' என்றார், சிரித்தபடி!

மறுமுனையில் பதறிப் போனான் சந்துரு.

''என்னப்பா உளறல் இது... சொந்த வீடுப்பா அது... இன்னைக்கு தேதிக்கு, ரெண்டு கோடி ரூபாய் பெருமானமுள்ள வீடு. நீங்க பாட்டுக்கு டிரஸ்ட், அது, இதுன்னு எழுதி வச்சுட்டு, பின்னாடி கஷ்டப்படுத்தாதீங்க. முதல்ல, அம்மாவ கூப்பிடுங்க, நான் பேசணும்...''

''சாரி சந்துரு... ஹோம்ல இருக்குற பிரண்ட்ஸ் கூட சேர்ந்து, தாயம் விளையாடிட்டு இருக்கா, உங்கம்மா. இப்ப, எங்களுக்கும் உனக்கு அப்பா, அம்மாவா இருந்துட்டு, உன்னை எதிர்பார்த்து காத்திட்டு இருக்கிறது மட்டும் வேலை இல்ல. உன்னை கஷ்டப்படுத்த இந்த வார்த்தைய சொல்லல... ஆனா, நீ தான், வாழ்க்கையில எனக்கு கடினமான விஷயத்தை, லேசா புரிய வச்ச... அதுக்கு, உனக்கு நன்றி சொல்லணும்...'' என்ற அப்பாவை, அன்பு மேவ பார்த்தான், சந்துரு. அந்த பார்வை, அவர்களுக்குள் இருந்த இடைவெளியை தகர்த்தது.

**- எஸ்.ஜாஸ்மின்**

# உபகாரம்!

கீழ் வீட்டு லட்சுமி மாமியின் கூக்குரல் கேட்டு, அவசரமாக கீழே இறங்கி வந்து பார்த்த போது, எசகுபிசகாக தரையில் உட்கார்ந்திருந்தார், மாமி. முகத்தில் தாங்கமுடியாத வேதனை.

பதற்றத்துடன், ''என்ன ஆச்சு மாமி...'' என்றவாறு, அவரை கைத்தாங்கலாகத் தூக்கி, கட்டிலில் உட்கார வைத்தேன். பிளாஸ்க்கில் இருந்த தண்ணீரை கொடுக்க, ஒரு மடக்கு குடித்ததும், மாமிக்கு கொஞ்சம் தெம்பு வந்தது.

''ஒரே தலை சுத்தல்... எழுந்திருக்க முடியல...'' என்றார், மாமி, ஈன சுரத்தில்!

வழக்கம் போல் எதையும் பொருட்படுத்தாமல், தன் கால் கட்டை விரலின் காயத்திற்கு, கட்டுப் போட்டபடி இருந்தார், ரங்கராஜன் மாமா. லட்சுமி மாமியின் கூக்குரலோ, வேதனையோ அவரது கவனத்தை கலைத்ததாகத் தெரியவில்லை.

''மாமா... மாமி கீழ விழுந்திட்டாங்க...'' என்று அவர் காதருகே சென்று, சத்தமாக சொன்னேன். திடுக்கிட்டுத் திரும்பி பார்த்து, ''அப்படியா...'' என்று ஒரு ஆச்சரிய ரியாக்ஷன் கொடுத்தவர், ''அங்க, இங்க சும்மா நடக்காதேன்னு சொன்னா கேக்கறாளா...'' என்று முனங்கியவாறே, தன் வேலையைத் தொடர்ந்தார். பின், ''ராஜா... மார்க்கெட் போனேன்னா, கொஞ்சம் பேண்டேஜ் வாங்கிட்டு வாப்பா... தீர்ந்திடும் போல இருக்கு...'' என்றார்.

மாமிக்கு, 70ம், மாமாவுக்கு, 80 வயதையும் தாண்டியிருக்கும். 50 ஆண்டு குடித்தனம். ஆனால், இருவருக்கும் இடையில் எப்போதும் பரஸ்பர கோபம் இருப்பதாகத் தோன்றும். எப்படி இவர்கள் இவ்வளவு ஆண்டுகள் ஒருவரை ஒருவர் சகித்து, வாழ்க்கை நடத்தினர் என்பது, புரியாத புதிர்!

மாமியும், மாமாவும் இந்த வயதில் தனிக் குடித்தனம். பையனும், பெண்ணும் அமெரிக்காவில் இருக்கின்றனர். இவர்களை அமெரிக்கா வரச் சொல்லி அவர்கள் வற்புறுத்தியும், 'சொந்த வீட்டை விட்டு, வேறு எங்கேயும் வரமாட்டேன்...' என்று, பிடிவாதமாக மாமா கூறி விட, அவரது பிடிவாதத்திற்கு முன், மாமியின் விருப்பம் எடுபடவில்லை.

இரண்டு மாடி வீடு. மேல் போர்ஷனில் வாடகைக்குக் குடியிருக்கும் நான் தான் மாமிக்கும், மாமாவுக்கு கேர் டேக்கர். ஒரு நாளைக்கு, குறைந்தது, 20 முறையாவது என்னைக் கூப்பிடாமல் இருக்கமாட்டார், மாமி.

'ராஜா... பேசாம உன் பேரை, ராமான்னு மாத்திக்கோடா... அடிக்கடி, ராமன் பேரை சொன்னா, போற வழிக்கு கொஞ்சம் புண்ணியமாச்சும் கிடைக்கும்...'என்று அவ்வப்போது சொல்வார், மாமி.

மாமியைக் கண்டாலே தெருவில் உள்ள எல்லாருக்கும் பயம்; யார் கண்ணில் பட்டாலும், அவர்களுக்கு ஒரு வேலை வைத்திருப்பார், மாமி.


'ஏண்டிம்மா... நீ மார்க்கெட் போறச்சே, எங்காத்துக்கும் கறிகா வாங்கிண்டு வந்திடேன்...'

'அம்பி... நரசுஸ் காபிக்கடை வழியாத்தானே ஆபீஸ் போவே... வரச்சே, கால் கிலோ காபி தூள் வாங்கிண்டு வாயேன்...' 'சங்கரா... நீ எலக்ட்ரிக் பில் கட்டறச்சே இதையும் சேத்து கட்டிடு...' 'காசி... இந்த, 'ப்ரிஸ்கிரிப்ஷன்'ல மூணாவதா எழுதியிருக்கே... அதுல, ஒரு பத்து மாத்திரை வாங்கிண்டு வந்துடு...'

வயதானவர்கள், தனியாக சிரமப்படுகின்றனரே என்று முதலில் யாருக்கும் அனுதாபம் வரும்; ஆனால், போகப்போக மாமி, நம்மை கொஞ்சம் அதிகமாகவே உபயோகிக்கிறாரோ என்று தோன்ற வைத்துவிடும். அவளின் தொல்லை தாங்காமல், பல நாட்கள் காலையில் சீக்கிரமாக ஆபீஸ் போய், இரவு, நேரம் கழித்து வந்ததும் உண்டு. இன்று, ஆபீசில் முக்கியமான வேலை இருந்ததால், எப்படியாவது மாமியின் கண்ணில் படாமல் நழுவி விட வேண்டும் என்று நினைத்திருந்தேன். ஆனால், இன்று பார்த்து மாமியின் நிலைமை இப்படியாகி விட்டது.

மாமியைக் கைத்தாங்கலாகப் பிடித்து, எழுந்து நிற்க வைத்தேன்; அவரால் இரண்டு நிமிடம் கூட நிற்க முடியவில்லை. என்ன செய்யலாம்... இன்று ஆபீஸ் போயே ஆகவேண்டும்.

'பேசாம ஒரு, 'க்ரோசின்' போடச் சொல்லி, படுக்க வச்சுட்டு ஆபீஸ் கிளம்ப வேண்டியது தான்...' என நினைத்து, மாமியின் மாத்திரைப் பெட்டியை தேடினேன். மாமி ஒரு நடமாடும் பார்மசி; அனேகமாக எல்லா மாத்திரைகளும், அவரது பிளாஸ்டிக் டப்பாவில் இருக்கும். என்னென்ன உபாதைக்கு, என்னென்ன மாத்திரை என்பது அவருக்கு அத்துப்படி!



''என்ன... க்ரோசினா தேடறே...''என்றார் மாமி, என் எண்ணத்தை அறிந்தவராக! நான் பதில் சொல்லும் முன், ''காலையிலேயே ஒண்ணு போட்டுண்டேன். ஒண்ணும் கேக்கல... இது, சாதாரண தலை சுத்தல் மாதிரி தெரியல... எதுக்கும், டாக்டர் கிட்ட அழைச்சுண்டு போறயா...'' என்றார், கண்ணில் கெஞ்சலோடு! கட்டுக்கட்டாக ஆபீஸ் பைல்கள், சிடுமூஞ்சி பாசின் முட்டை கண்கள் எல்லாம், ஒரு நொடி கண் முன் வந்து மிரட்டின. கண்டிப்பாக இன்று ஆபீஸ் போயே ஆகவேண்டும்.

''மாமி... காலையில வெறும் வயத்தோட இருந்தா இப்படித்தான் இருக்கும். என் மனைவிகிட்ட சொல்லி, கொஞ்சம் கஞ்சி போட்டுத்தர சொல்றேன்; அதை குடிச்சா கொஞ்சம் தெம்பு வரும். கொஞ்சம், 'ரெஸ்ட்' எடுங்கோ. நான், சாயங்காலம் ஆபீஸ் முடிஞ்சு வந்ததும், டாக்டர்கிட்ட போகலாம்...'' என்றேன்.

வேறு வழியின்றி, மெதுவாகத் தலையாட்டி, கட்டிலில் படுத்தார், மாமி. காலில் கட்டுப் போட்டு முடித்து, ஆயின்மென்டு, கத்திரிக்கோல், மிச்சமுள்ள பேண்டேஜ் எல்லாவற்றையும், டப்பாவில் போட்டுக் கொண்டிருந்தார், மாமா. நான், மெதுவாக வெளியேறி மாடிக்குச் சென்றேன். 'கடகட'வென்று குளித்து, என் மனைவி தந்த இரண்டு தோசையை அவசரமாக விழுங்கி, சாப்பாட்டுப் பையை எடுத்து வெளியே வந்தேன். கீழ் போர்ஷனைக் கடக்கும் போது, ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தேன். படுத்திருந்தார், மாமி. அவர் முகத்தில் வேதனை தெரிந்தது.

வீட்டை விட்டு, பத்து அடி நடந்ததும், மொபைல் அழைத்தது; ஊரில் இருக்கும் அம்மாவிடம் இருந்து போன்...

''என்னடா ராஜா... ஆபீஸ் கௌம்பிட்டியா...''

''ஆமாம்மா... நீ என்ன செய்துட்டு இருக்கே... சாப்டியா?''

''எனக்கென்ன... ஏதோ இருக்கேன்..'' என்று சலித்துக் கொண்டாள்.

அப்பா போனதிற்குப் பின், அம்மாவை சென்னைக்கு அழைத்து வந்து விட வேண்டும் என்று எவ்வளவோ முயற்சி செய்தும், முடியவில்லை. 'மெட்ராஸ் எல்லாம் எனக்கு ஒத்து வராதுப்பா... நான் பாட்டுக்கு இங்கயே இருந்திடறேன்... பக்கத்துல தான் ஒத்தாசைக்கு எத்தனையோ பேர் இருக்கறாங்க... நீ, கவலைப்படாம உன் வேலைய கவனி...' என்று, ஒவ்வொரு முறையும் வர மறுத்து விடுவாள்.

''ராஜா... நேத்து மத்தியானம் தூங்கி எழுந்திருச்சு, பாத்ரூம் போறப்போ, தூக்கக் கலக்கத்துல கொஞ்சம் நிதானம் தெரியல. அப்படியே தடுக்கி விழுந்திட்டேன்...''

''அய்யயோ... அப்புறம் அடி கிடி பட்டுடுச்சா...'' என்றேன் பதற்றத்துடன்!

''அடியெல்லாம் ஒண்ணுமில்லப்பா... சொன்னா நீ, ரொம்ப பதட்டப்படுவேன்னு தான் நேத்து சொல்லல... பக்கத்து வீட்டு சீனு இல்ல... அவன் தான் உடனே ஓடி வந்தான்... ஆட்டோ வரவழைச்சு, டாக்டர்கிட்ட கூட்டிட்டு போனான். உடனே டாக்டரப் பாத்ததுனால, ஒண்ணும் பெருசா பாதிப்பு இல்ல. மருந்து குடுத்திருக்காங்க; வலியெல்லாம் குறைஞ்சிடுச்சு... ரெண்டு நாள்ல சரியாயிடும்...'' ''ஏம்மா இப்படி தனியா கெடந்து கஷ்டப்படுறே... பேசாம இங்கே வான்னு சொன்னா கேக்கறயா...'' என்றேன், கொஞ்சம் சூடாக! அம்மாவை தனியாகத் தவிக்க விட்டு, இங்கே இருக்கிறேனே என்ற குற்ற உணர்வு, தலை தூக்கியது. ''இங்கே தான் பாத்துக்க ஆளுங்க இருக்காங்கல்ல... சொந்தம் பந்தமா இல்லாட்டாக் கூட, அடுத்தவங்களுக்கு ஒத்தாசை செய்யணும்ங்கற குணம், இன்னும் கொஞ்சம் பேர்கிட்ட இருக்கிறதால தான் நாட்டுல மழை பெய்யுது...'' என்றாள்.

சட்டென்று, மாமியின் வேதனை கலந்த முகம், மனதில் தோன்றியது. ''சரிம்மா... உடம்பப் பாத்துக்கோ... இப்போ ஒரு அவசர வேலையா போய்கிட்டுருக்கேன்... அப்பறமா கூப்புடுறேன்,'' என்று லைனை துண்டித்து, ஆபீஸ் நம்பரைப் போட்டேன்.

லைனில் வந்தார், பாஸ். ''சார் இன்னிக்கு லீவு வேணும்..'' ''லீவா... இன்னிக்கு கண்டிப்பா வரணும்ன்னு நேத்தே சொன்னேனில்ல... அப்படியென்ன தல போற வேலை...'' என்று, எரிந்து விழுந்தார். ''இல்ல சார்... இன்னிக்கு என்னால வர முடியாது. அம்மாவுக்கு உடம்பு முடியல. டாக்டர் கிட்ட போகணும்,'' என்று சொல்லி, அவர் பதிலுக்கு காத்திருக்காமல், லைனை துண்டித்து, மாமி வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தேன்.

**எஸ்.சிவா**



# “நேர்மையான முயற்சிகளுக்கு எப்பொழுதும் மதிப்பிருக்கும்”

இயக்குநர் செழியன்

இது உலக சினிமாக்களை வியந்து கொண்டாடும் தலைமுறையின் காலம். இப்போது தமிழ் சினிமா ஒன்றை உலகமே உச்சிமுகர்ந்து கொண்டாடிக் கொண்டிருக்கிறது. அந்தப் படம் ஒளிப்பதிவாளர், எழுத்தாளர், இயக்குநர் செழியனின் படைப்பாக்கத்தில் உருவாகியிருக்கும் ‘டுலெட்’. உலக அளவில் 100 திரைப்பட விழாக்களில் கலந்துகொண்டு, 84-ல் அதிகார பூர்வமாகத் தேர்வு செய்யப்பட்ட படம்.

சிறந்த தமிழ்ப் படத்துக்கான தேசிய விருது உட்பட, மொத்தம் 32 சர்வதேச விருதுகளை அள்ளிக் குவித்திருக்கும் முதல் தமிழ் சினிமா. உலகம் சுற்றித் திரும்பியிருக்கும் ‘டுலெட்’ இயக்குநர் செழியனைச் சந்தித்து உரையாடியதிலிருந்து

**‘டுலெட்’ படத்தின் போஸ்டரில் இருக்கும் மூன்று பாதச்சுவடுகளின் கதையைக் கூறுங்கள்?**

முகங்களே இல்லாமல் எளிமையாக ஒரு போஸ்டர் இருக்க வேண்டும். அதைப் பார்த்ததுமே படத்தின் கதை புரிய வேண்டும். இதுதான் விருப்பம். எனக்குப் பிடித்த ஓவியர் சந்தோஷ் நாராயணனிடம் பேசினேன். ஒரு குடும்பம் வீடுதேடி அலைகிறது இதுதான் கதை என்று சொல்லி படத்தின் ஒரு காட்சியை மட்டும் காட்டினேன். அலைச்சலைக் குறிக்க ஒரு அப்பா ஒரு அம்மா ஒரு குழந்தை மூவரின் பாதச்சுவடுகள். அதற்கு நடுவில் ஒரு வீடு என்று வரைந்துகொடுத்தார்.

மூன்றாவது படிக்கிற என் மகள் அதிதாவை ‘டுலெட்’ என்று எழுதச் சொல்லி பாதச் சுவடுகளுடன் இணைத்தோம். அவ்வளவுதான். இந்த மூன்று பாதங்களும் உலகத்தையே சுற்றி வந்துவிட்டன.

**சர்வதேச அளவில் இத்தனை விருதுகளைக் குவித்திருப்பதன் மூலம், தமிழ்ப் படைப்பாளிகளுக்கும் பார்வையாளர்களுக்கும் ‘டுலெட்’ திரைப்படம் கூறும் செய்தி என்ன?**

நம்பிக்கைதான். ஒரு சினிமாவை உலகம் போற்றுவதற்குப் பிரம்மாண்டம், பிரபலங்கள் தேவையில்லை. உண்மை மட்டுமேபோதும் என்பதுதான். நாம் உலக சினிமாக்களைப் பார்த்து வியக்கிறோம். நம் சினிமாவைப் பார்த்தும் உலகம் வியக்கும் என்பதுதான். ‘என் வாழ்க்கையே என் செய்தி’ என்று காந்தி சொன்னது போல உலகம் நம்மைக் கவனிக்க எளிமையான கதையும் நேர்மையான அணுகுமுறையும் போதும். இதுதான் ‘டுலெட்’ சொல்லும் செய்தி.

**கார்த்தி, ஆர்யா, சித்தார்த், சசிகுமார் என்று பிரபலக் கதாநாயகர்கள் ‘டுலெட்’ படத்தைப் பற்றிப் பாராட்டி ட்வீட் செய்கிறார்கள். ஆனால், அவர்களைப் போன்றவர்கள், இதுபோன்ற முயற்சிகளில் பங்கேற்க வருவதில்லையே?**

குடும்பத்துக்குள் ஒரு சகோதரன் பரிசு வாங்குகிறான் என்றால் மற்ற சகோதரர்கள் பாராட்டுவதுதான் மரபு. அந்த அன்பையும் பண்பையும் நான் பெரிதும் மதிக்கிறேன்.

வணிக சினிமாவில் இப்படி ஒரு முயற்சியை வெற்றிகரமாகச் செய்து காட்டும்போதுதான் எல்லோரும் அதைச் செய்துபார்க்க முன்வருவார்கள். ‘டுலெட்’ வெளியாகிறது என்று தெரிந்தவுடன் தமிழகம் முழுவதும் இளைஞர்கள், மாணவர்கள், குழந்தைகள் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட போஸ்டர்களை வரைந்து கொண்டிருக்கிறார்கள். இது ஒரு சுவரொட்டி இயக்கமாக மாறிவிட்டது. உலகில் எந்த சினிமாவுக்கும் கிடைக்காத பெருமை இது.

இந்தக் கொண்டாட்டத்தின் தொடர்ச்சியாக நல்ல படங்கள் வரலாம். அப்போது நம் பிரபலங்கள் அதில் நிச்சயம் பங்கேற்பார்கள். அந்த வகையில் ‘டுலெட்’ ஒரு புதிய சினிமாவின் தொடக்கமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

**அதிக விருதுகளைப் பெற்ற படம் என்ற எதிர்பார்ப்புடன் உள்ளே வரும்போது, அவர்களுக்கான திரை அனுபவம் எப்படிப்பட்டதாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்?**

படத்துடன் முழுமையாக உங்களை இணைத்துக் கொள்ள முடியும். வீடு தேடுவது மட்டுமே கதையல்ல. அந்த வீட்டுக்குள் இருக்கும் கணவனுக்கும் மனைவிக்கும் ஒரு குழந்தைக்குமான அன்பும் கோபமும் ஏக்கமும் நம்பிக்கையும்தான் கதை.

விருதுகள் வாங்கிய படம் என்றால் டாகுமெண்டரி மாதிரி இருக்கும் என்று ஒரு பொதுவான கருத்து இருக்கிறது. அது பழைய நம்பிக்கை. ஓஷோவைப் பற்றி ஒரு டாகுமெண்டரி பார்த்தேன். ஹாலிவுட் திரில்லர் படத்தை விடவும் சுவாரசியமாக இருக்கிறது. எனவே, எந்த விஷயத்தைத் திரைப்படமாக எடுத்தாலும் அது சுவாரசியமாக இருக்க வேண்டும். பணம் கொடுத்துப் படம் பார்க்க வருகிற பார்வையாளரின் நேரத்தை மதிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

சுவாரசியம் என்றாலே பாடல்களும் சண்டைகளும் மட்டும்தானா? குடும்பத்துக்குள் அதைவிட அதிக சுவாரசியம் இருக்கிறதே. வேலை முடிந்து உங்கள் வீட்டுக்குத் திரும்புகிற மனநிலையில் தியேட்டருக்கு வாருங்கள். திருமணமானவர் என்றால் கட்டாயம் உங்கள் மனைவி குழந்தைகளுடன் வாருங்கள். ஒரு புது திரைப்பட அனுபவம் காத்திருக்கிறது.

**இன்றைய சூழ்நிலையில் ‘டுலெட்’ போன்ற படங்கள் அதிகரிக்கப் படைப்பாளிகளும் பார்வையாளர்களும் என்ன செய்ய வேண்டும்?**

தாய்லாந்தில் ஒரு கோயிலில் மனிதர்கள் நடமாடுகிற இடத்தில் புலிகள் சாதுவாகப் படுத்திருக்கிற வீடியோ ஒன்றைப் பார்த்தேன். வளர்க்கப்பட்ட விதத்தில் அவை புலிகளின் குணத்தையே மறந்து விட்டன. அதுபோல இலக்கியத்தில், கலைகளில் நம் முன்னோர்கள் புலிகளாக இருந்திருக்கிறார்கள். அவர்களின் எந்தக் குணமும் இல்லாமல் திரைப்பட ரசனையில் நாம் மிகவும் மேலோட்டமாக இருக்கிறோம். அதற்குப் பார்வையாளர்கள் காரணம் அல்ல. படைப்பாளிகள்தாம் காரணம். நல்ல திரைப்படங்களைத் தொடர்ந்து கொடுக்கும்போது பார்வையாளர்கள் அந்த ரசனைக்குப் பழகுவார்கள்.



# வெற்றி, தோல்வி பற்றி கவலையில்லை

‘கண்ணே கலைமானே’ படத்தின் வெற்றி, தோல்வி பற்றி எனக்குக் கவலை இல்லை என பத்திரிகையாளர் சந்திப்பில் பேசினார் உதயநிதி ஸ்டாலின்.

சீனு ராமசாமி இயக்கத்தில் உருவாகியுள்ள படம் ‘கண்ணே கலைமானே’. உதயநிதி ஸ்டாலின் ஹீரோவாக நடித்துள்ள இந்தப் படத்தில், ஹீரோயினாக தமன்னா நடித்துள்ளார். முக்கியக் கதாபாத்திரத்தில் வடிவுக்கரசி, வசுந்தரா ஆகியோர் நடித்துள்ளனர்.

யுவன் ஷங்கர் ராஜா இந்தப் படத்துக்கு இசையமைத்துள்ளார்.

அதில் கலந்துகொண்டு பேசிய உதயநிதி ஸ்டாலின், இதற்கு முன்பு என் பல படங்களின் பத்திரிகையாளர்கள் சந்திப்பில், நான் பல விஷயங்களைப் பேசினேன். ஆனால், இன்று இது ஒரு நல்ல படம் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இந்தப் படத்தின் ஒரு பகுதியாக ஒவ்வொருவருக்கும் நான் நன்றியைக் கூறுகிறேன்.

ஒட்டுமொத்த தொழில்நுட்பக் குழுவும் மிகச்சிறப்பாகப் பணியாற்றி உள்ளனர். ஒளிப்பதிவாளர், கலை இயக்குநர் என ஒவ்வொருவரும் மிகச்சிறந்த விஷயங்களைத் தந்தனர். என் குழந்தைப் பருவ தோழியாக முக்கியக் கதாபாத்திரத்தில் வசுந்தரா நடித்துள்ளார், மிகவும் சவாலான கதாபாத்திரம் அது.

குறைந்தபட்சம் வருடத்துக்கு ஒருமுறை சீனு ராமசாமி சார் படங்களில் தமன்னா நடிக்க வேண்டும் என நான் பரிந்துரை செய்கிறேன். இந்தப் படத்தில் அவரது கதாபாத்திரம் மிகவும் ஊக்கமளிக்கும் மற்றும் பெண்களைப் பிரதிபலிக்கும் ஒரு கதாபாத்திரமாக இருக்கும். பாரதி கதாபாத்திரத்தில் மிகச்சிறப்பாக நடித்துள்ளார்.

படத்தின் இறுதியில் எனக்கும், வடிவுக்கரசி அம்மாவுக்கும் உணர்ச்சிகரமான காட்சி இருக்கிறது. அது மறக்க முடியாதது. முழு படப்பிடிப்பும் முடிந்தபிறகு தான் பாடல்கள் இசையமைக்கப்பட்டன. இது எனக்கு வித்தியாசமான அனுபவமாக இருந்தது.

‘கண்ணே கலைமானே’ படத்தின் வெற்றி அல்லது தோல்வி பற்றி எனக்குக் கவலை இல்லை. ஆனால், நான் இன்னும் ஒரு படத்தில் சீனு சாருடன் இணைந்து பணியாற்றுவேன். ‘மனிதன்’ மற்றும் ‘நிமிர்’ படங்களுக்குப் பிறகு என் கெரியரில் இந்தப் படம் பாராட்டப்படும் ஒரு படமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன் என்றார்.



# அஜி... வெ... மார்...

அஜித் நடித்து...
வைக்கப்பட்டுள்ள...
‘விஸ்வாசம்’ ...
தொடங்கியுள்ளார்...
இதில் அஜித் பங்...
லாகி வருகிறது.
இப்படம் அறி...
யீடு என்று படக்கு...
இருக்கும் என கரு...
யுள்ள ‘Mr.லோக்க...
இது தொடர்ப...
றியை விட, மாபெ...
ரங்குகளில் திரைய...
போது, அதே நடி...
‘தல 59’ படத்தின்...
என்று திரையுலகி...
இது குறித்த த...
புமே தெரிவிக்கவி...
கிறது.
போனிகபூர் த...
யாபாலன், ஷ்ரத்த...
சிதம்பரம், அஸ்வி...
கள்.
இப்படத்தை ...
படத்தில் நடிக்க ...
யுள்ள ஒரிஜினல் க...
டத்தக்கது.



# விரைவில் திரைக்கு வ... காப்பா...

செல்வராகவன் இயக்கத்தில் வெளிவர உள்ள ‘என்.ஜி.கே’ படத்தின் டீசருக்கு கிடை... வரவேற்புக்கு இடையே தற்போது சூர்யா முழு மூச்சாக ‘காப்பான்’ படப்பிடிப்பில் கவனம்... வருகிறார். சென்னையில் இப்படத்துக்காக கிளப் பின்னணி பாடல் படப்பிடிப்பு, கிழக்கு கட... ாலையில் முக்கிய காட்சிகள் என வளர்ந்து வரும் படப்பிடிப்பு விரைவில் முடிய உள்ளது.

பாடல் காட்சிகளுக்கும் அதிக முக்கியத்துவம் அளித்து படமாக்கும் இயக்குநர் கே.வி.ஆ... தையப் படங்களைப் போலவே இப்படத்தின் இறுதிகட்ட படப்பிடிப்பையும் பாடலுட... திட்டமிட்டிருக்கிறார். தற்போது நடந்துவரும் சென்னை படப்பிடிப்பை முடித்துக்கொண்டு... படக்குழு அமெரிக்கா புறப்பட உள்ளது. அங்கே சூர்யா, சாயிஷா உள்ளிட்ட குழுவினரது... முடித்துக்கொண்டு படத்துக்கு ‘பேக் - அப்’ சொல்ல ஆயத்தமாகி வருகின்றனர்.

# சிக்கலில் ‘மன்னவன் வந்தானடி’

செல்வராகவன் இயக்கத்தில் சந்தானம் நடித்துள்ள ‘மன்னவன் வந்தானடி’ படத்தின் வெளியீட்டில் சிக்கல் மேலும் அதிகரித்துள்ளது.

செல்வராகவன் இயக்கத்தில் சந்தானம், அதிதி போகன்கர் உள்ளிட்ட பலர் நடிப்பில் தொடங்கப்பட்ட படம் ‘மன்னவன் வந்தானடி’. சுஷான்ந் பிரசாத், சித்தார்த் ராவ், செல்வராகவன், கீதாஞ்சலி செல்வராகவன் ஆகியோர் இணைந்து தயாரித்தனர். 80% வரை படப்பிடிப்பு முடிந்துவிட்டது. அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பைனான்ஸ் சிக்கலில் படப்பிடிப்பு நிறுத்தப்பட்டது.

இப்படத்தைத் தொடர்ந்தே ‘என்.ஜி.கே’ படத்தை இயக்கி முடித்துள்ளார் செல்வராகவன். ‘மன்னவன் வந்தானடி’ படத்தின் மொத்த உரிமையையும் வேறொரு தயாரிப்பு நிறுவனத்துக்கு விற்க, படத்தின் தயாரிப்பாளர்கள் முயற்சித்ததாகத் தெரிகிறது. ஆனால் படத்தின் நெகட்டிவ் உரிமை, டிஜிட்டல் உரிமை உள்ளிட்ட மொத்த உரிமையையும் ரேடியன்ஸ் மீடியா நிறுவனத்திடம் இருப்பதாக அந்நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இதனால் படத்தின் உரிமையை விற்க தயாரிப்பாளர்களுக்கு உரிமை இல்லை. இதைக் குறிப்பிட்டு தொடரப்பட்ட வழக்கில் ‘மன்னவன் வந்தானடி’ உரிமையை விற்க நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்து வருண் மணியனுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கியுள்ளது.

எனவே, படத்தின் தயாரிப்பாளர்கள் வாங்கிய கடனை அடைத்த பிறகே ‘மன்னவன் வந்தானடி’ பட உரிமையை விற்க முடியும். அவ்வாறு விற்றால் மட்டுமே படத்தின் இதர படப்பிடிப்பு மற்றும் இறுதிக்கட்டப் பணிகளைத் தொடங்க முடியும். இதன் மூலம் ‘மன்னவன் வந்தானடி’ படத்துக்கு பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அனைத்து சிக்கல்களையும் கடந்து படம் வெளியாக சில காலமாகும் எனத் தெரிகிறது.



# அரசியல்வாதிகள் நிச்சயம் ப...

அரசியல் பின்னணியில் ஒரு படம் எடுக்கணும்னு முடிவானதும் மூத்த அரசியல்வாதிகள் தொடங்கி குறிப்பாக, ஒரே தொகுதியில் 5 தேர்தல்களில் வெற்றி பெற்ற மனிதர் வரை சந்தித்தோம். அந்த அனுபவங்கள் எங்களது திரைக்கதை ஆக்கத்துக்கு பெரிய அளவில் பக்கபலமாக இருந்தது. அதிலும், நாஞ்சில் சம்பத், ஐசரி கணேஷ், ஜே.கே.ரித்தீஷ் உள்ளிட்ட அரசியல் அனுபவம் உள்ளவர்களும் படத்துக்கு ஒவ்வொரு விதத்தில் பங்களிப்பு செய்ததால் இது ஒரு பொறுப்பான அரசியல் படமாக மாறியது என்கிறார் ஆர்ஜே பாலாஜி.

தமிழகத்தில் மக்களவை தேர்தல் கூட்டணி விறுவிறுப்பாகியுள்ள நிலையில், ‘எல்கேஜி’ (லால்குடி கருப்பையா காந்தி) என்ற பெயரில் உருவாகியிருக்கும் முழு நீள அரசியல் படம் வழியே கதாநாயகனாக களமிறங்குகிறார் ஆர்ஜே பாலாஜி. அவருடன் ஒரு நேர்காணல்..

**அரசியல் குறித்த பொறுப்பான படம் என்று பேசத் தொடங்குகிறீர்கள். ஆனால், படத்தின் போஸ்டர், உருவான விதம் ஆகியவற்றை பார்க்கும்போது ‘தமிழ்படம்’ போல ஸ்பூஃப் வகை படம் போல தெரிகிறதே?**

‘விண்ணைத் தாண்டி வருவாயா’ படம் வருவதற்கு முன்பு அப்படத்தின் விளம்பர போஸ்டரில் ‘அலைபாயுதே’, ‘உயிரே’ படங் களின் புகைப்படங்களை வைத்து விளம்பரம் செய்தாங்க. அதுபோல, நாங்க செய்ததுகூட மக்களை திரும்பி பார்க்க வைப்பதற்கான முயற்சிகள்தான். அதேநேரம், இங்கு இருக்கும் அரசியல்வாதிகளை கிண்டல், கேலி செய்வதற்கான களமாக மட்டுமே இது இருக்காது. படத்தில் அழுத்தமான செய்தியோடு, அதற்கான தீர்வை யும் பிரதிபலித்திருக்கோம். முக்கியமாக, இது விளையாட்டுத்தனமான அரசியல் படம் அல்ல. இன்றைய அரசியல்வாதிகள் பார்த்தால், நிச்சயம் படம் முடியும் போது எழுந்து நின்னு கைதட்டுவாங்க.

**‘நாயகனாக நடிக்கும் முதல் படத்திலேயே எதற்கு அரசியல்?’ என்று யாரும் கேட்க வில்லையா?**

நாம் எந்த ஒரு விஷயம் செய்தாலும், அதில் நமது பலம் என்ன என்பதைவிட, பலவீனம் என்ன என்பதைத்தான் நன்கு தெரிஞ்சுக்கணும். ஹீரோ என்றால் ஜிம்முக்கு போய் உடம்பை ‘சிக்ஸ்பேக்’காக மாற்றுவது, வெளிநாட்டு பின்னணியில் 2 டூயட் பாடல்கள்.. என்றெல்லாம் யோசிப்பது சிரமம் அல்ல. ஆனால், இந்த பாலாஜியை எந்த அளவுக்கு மக்களுக்கு பிடிக்கும்? எப்படி இருந்தால் என்னை ஏற்றுக் கொள்வார்கள் என்பதை நன்றாகவே உணர்ந்திருக்கிறேன். அதைத்தான் படம் பேசும்.

**கதாநாயகனின் நண்பன், காமெடி கதா பாத்திரம் என நீங்கள் வளர்ந்துவரும் சூழலில் திடீரென ஹீரோவானதற்கு தனிப்பட்ட காரணங்கள் உண்டா?**

கடந்த ஆறேழு ஆண்டுகளில் 20-க்கும் மேற்பட்ட படங்களில் நடித்திருக்கேன். ஒரு ஆர்ஜேவாக, கிரிக்கெட் வர்ணனையாளராக, திரைப்பட நிகழ்ச்சிகளின் தொகுப்பாளராக, பிடித்தமான சமூக ஆர்வலனாக கிடைத்த திருப்தி, ஏனோ நடிகனானபோது முழுமையாக கிடைக்கவில்லை. முக்கிய இயக்குநர்கள், நடிகர்களின் படங்களில் நடித்தபோதும், என் கதாபாத்திரங்கள் ஏனோ எனக்கு திருப்தியானதாக



# ...த் பட ...ளியிட்டில் ...ற்றம்

...வரும் 'தல 59' படத்தின் வெளியீடு மே 1-ம் தேதியிலிருந்து மாற்றி ...தாக தகவல் வெளியாகியுள்ளது.

...படத்தைத் தொடர்ந்து, 'பிங்க்' படத்தின் தமிழ் ரீமேக்கில் நடிக்க ... அஜித். இதன் படப்பிடிப்பு ஹைதராபாத்தில் தொடங்கியுள்ளது. ...கேற்கச் சென்ற போது எடுத்த புகைப்படங்கள் இணையத்தில் வைர...

...விக்கப்பட்ட போதே, அஜித் பிறந்த நாளான மே 1-ம் தேதி வெளி...குழு அதிகாரபூர்வமாக அறிவித்தது. ஆனால், தற்போது அதில் மாற்றம் ...தப்படுகிறது. இதற்காகவே சிவகார்த்திகேயன் நடிப்பில் உருவாகி ...கல்' படத்தின் வெளியீட்டை உறுதிப்படுத்தியுள்ளனர்.

...ாக விசாரித்த போது, 'விஸ்வாசம்' படக்குழுவினர் எதிர்பார்த்த வெற்...பெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. இப்போது வரை பல்வேறு திரைய...ிடப்பட்டு வருகிறது. எப்போதுமே ஒரு படத்தின் தாக்கம் இருக்கும் ...கரின் படத்தை உடனடியாக வெளியிடுவது நல்லதல்ல. அதனால் தான் ... வெளியீட்டை மாற்றலாமா என்று ஆலோசனையில் இறங்கியுள்ளனர் ...னர் தெரிவித்தார்கள்.

...கவல் வெளியானாலும், படக்குழுவினர் இதுவரை எந்தவொரு மறுப்...ில்லை. இதன் மூலம் மே 1-ம் தேதி வெளியீடு இருக்காது எனத் தெரி...

...பாரித்து வரும் இப்படத்தை ஹெச்.வினோத் இயக்கி வருகிறார். வித்...ா ஸ்ரீநாத், ரங்கராஜ் பாண்டே, இயக்குநர் ஆதிக் ரவிச்சந்திரன், அர்ஜூன் ...ின் ராவ், சுஜித் ஷங்கர் உள்ளிட்ட பலர் அஜித்துடன் நடித்து வருகிறார்...

...முடித்துவிட்டு மீண்டும் ஹெச்.வினோத் இயக்கத்தில் உருவாகவுள்ள ...தேதிகள் ஒதுக்கியுள்ளார் அஜித். அந்தக் கதை ஹெச்.வினோத் எழுதி ...கதையாகும். அதையும் போனிகபூரே தயாரிக்கவுள்ளார் என்பது குறிப்பி...



மித்ரன் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிக்கவுள்ள படத்தின் நாயகிக்கு கல்யாணி ப்ரியதர்ஷனிடம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது படக்குழு.

ராஜேஷ் இயக்கத்தில் உருவாகி வரும் 'Mr.லோக்கல்' படத்தில் நடித்து முடித்துள்ளார் சிவகார்த்திகேயன். இப்படத்தின் இறுதிக்கட்டப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. மே 1-ம் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து ரவிக்குமார் இயக்கத்தில் உருவாகும் படத்தில் நடித்து வருகிறார் சிவகார்த்திகேயன். நீண்ட நாட்கள் கழித்து இதன் படப்பிடிப்பு சென்னையில் தொடங்கி நடைபெற்று வருகிறது. சிவகார்த்திகேயன் - ரகுல் ப்ரீத் சிங் சம்பந்தப்பட்ட காட்சிகளைப் படமாக்கி வருகிறது படக்குழு.

இந்த படப்பிடிப்பைத் தொடர்ந்து, அடுத்ததாக 'இரும்புத்திரை' இயக்குநர் மித்ரன் இயக்கத்தில் உருவாகும் படத்தில் நடிக்க தேதிகள் ஒதுக்கியுள்ளார் சிவகார்த்திகேயன். 24 ஏ.எம் ஸ்டூடியோஸ் மற்றும் கே.ஜே.ஆர் ஸ்டூடியோஸ் நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கவுள்ள இப்படத்தின் முதற்கட்டப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

தற்போது இதில் நாயகியாக நடிக்க கல்யாணி ப்ரியதர்ஷனிடம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது படக்குழு. விரைவில் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவார் எனத் தெரிகிறது. மேலும், 'இரும்புத்திரை' படத்தைப் போலவே இப்படத்திலும் முக்கியக் கதாபாத்திரத்தில் அர்ஜுன் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். மார்ச் மாதத்தில் இதன் படப்பிடிப்பு தொடங்க ஆயுத்தமாகி வருகிறது படக்குழு.



# அஞ்சலி நல்ல தோழி

பல்வேறு படங்களில் நாயகனாக நடித்து வந்தாலும், அப்படம் சார்ந்த எந்தவொரு விளம்பரப்படுத்தும் நிகழ்ச்சியிலும் ஜெய் கலந்து கொள்ளாமல் இருந்தார். தற்போது 'பார்ட்டி', 'நீயா 2', 'கருப்பர் நகரம்' உள்ளிட்ட பல படங்களில் நடித்து வருகிறார்.

இனிமேல் தன் படங்களின் விளம்பரப்படுத்தும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வது என்றும் முடிவெடுத்துள்ளார் ஜெய்.

இது தொடர்பாக பத்திரிகையாளர்கள் மத்தியில் ஜெய் கூறியதாவது:

அஞ்சலியுடன் நெருங்கிப் பழகியது உண்மை. ஆனால் அவர் என் காதலி அல்ல, தோழி தான். எங்களுடைய நட்பு தொடரும். நயன்தாரா எனக்கு ரொம்பப் பிடிச்ச நடிகை. அவரோடு இணைந்து 'ராஜா ராணி' படத்தில் நடித்தேன். அப்போதில் இருந்தே எங்கள் இருவருக்கும் நல்ல நட்பு இருக்கிறது. அவருடன் பல படங்களில் நடிக்க வேண்டும் என்று ஆசை.

இன்னும் என் திருமணம் குறித்து யோசிக்கவே இல்லை. திருமணம் செய்து கொள்வதாக இருந்தால், கண்டிப்பாக காதல் திருமணம் தான்.

இவ்வாறு ஜெய் தெரிவித்துள்ளார்.

ஜெய் - அஞ்சலி இருவருமே காதலித்து வருவதாகவும், விரைவில் திருமணம் செய்யவுள்ளதாகவும் செய்திகள் வெளியானது. தற்போது ஜெய் கூறியிருப்பதன் மூலம், இச்செய்திக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.



# நடிகை மீது மோசடி வழக்கு

விஜய் நடித்த 'புதியகீதை' படத்தில் நடித்திருப்பவர் அமீஷா பட்டேல். இந்தி, தெலுங்கு படங்களிலும் நடித்துள்ளார். முன்னணி மற்றும் இளம் ஹீரோக்களுடன் ஜோடியாக நடித்து வந்தவருக்கு திடீரென்று மார்க்கெட் டல்லடித்தது. இதையடுத்து நேரடி மேடை நிகழ்ச்சிகளில் நடனம் ஆட ஒப்புக்கொண்டு வந்தார். அதற்காக லட்சக்கணக்கில் சம்பளம் வாங்கினார்.

சில வருடங்களுக்கு முன் திருமண நிகழ்ச்சி ஒன்றில் நடனம் ஆட ஒப்புக்கொண்டு ரூ 11 லட்சம் சம்பளம் பெற்றார்.

ஆனால் சொன்னபடி திருமண நிகழ்ச்சியில் நடனம் ஆட வராததால் அவரை ஒப்பந்தம் செய்த சம்பந்தப்பட்ட நிறுவனம் அமீஷா மீது மோசடி வழக்கு தொடுத்தது.

அவருடன் மேலும் 4 பேர் இந்த வழக்கில் இணைக்கப்பட்டனர். இதுகுறித்து இரு தரப்பிலும் விசாரணை செய்த நீதிமன்றம் வழக்கை மார்ச் மாதத்துக்கு தள்ளி வைத்துள்ளது.

# காதோடு... காதாக....

திறமையான நடிகர் ஒருவர் பழையபடி சேட்டை செய்யத் துவங்கியுள்ளார். பல திறமைகள் கொண்ட நடிகர் அவர். யார் பேச்சையும் கேட்காமல் ஓவராக ஆட்டம் போட்டதால் மார்க்கெட்டை இழந்தார். அதன் பிறகு அடக்கி வாசிக்கத் துவங்கினார். நடிகர் திருந்திவிட்டார் என்று நம்பப்பட்ட நிலையில் மீண்டும் தன் வேலையை காட்டுகிறாராம். நடிகர் ஒப்பந்தமாகியுள்ள புதிய படத்தில் இளம் நடிகை ஒருவரை ஹீரோயினாக போட இயக்குநர் முடிவு செய்தார். இந்நிலையில் நடிகரோ தனது தோழியை தான் ஹீரோயினாக போட வேண்டும் என்று அடம் பிடிக்கிறாராம். நடிகர் சேட்டை செய்வதை நிறுத்திவிட்டார் என்று நம்பி ஒப்பந்தம் செய்த இயக்குநர் தற்போது செய்வது அறியாது உள்ளாராம். ஹீரோயின் தேர்வில் எல்லாம் நான் தலையிட மாட்டேன் என்று கூறிவிட்டு தற்போது அடம்பிடித்துக் கொண்டிருக்கிறார் நடிகர். இந்த படத்திற்கு முந்தைய படத்தில் நடித்தபோது தயாரிப்பு தரப்புடன் நடிகருக்கு பிரச்சனை ஏற்பட்டது. காசு விஷயத்தில் நடிகர் பிரச்சனை செய்யவே தயாரிப்பு தரப்பு கடுப்பாகிவிட்டதாம். இந்த ஆளை ஹீரோவாக போடாதீங்க என்று பிரபல இயக்குநரிடம் சொல்லும் அளவுக்கு பிரச்சனை பெரிதாகிவிட்டது. நடிகர் திருந்திவிட்டார் என்று நினைத்து அவருக்கு வாய்ப்பு கொடுத்தவர்கள் தற்போது அவர் செய்யும் செயல்களால் எரிச்சல் அடைந்துள்ளார்களாம். நடிகர் நல்ல பெயர் எடுத்த வேகத்தில் கெட்ட பெயரும் எடுக்கத் துவங்கிவிட்டார்.

★★★★★

இளம் நடிகை ஒருவருக்கு எதிரி வெளியில் இல்லை, அவரே தான். நடிப்புத் திறமையால் முன்னுக்கு வந்தவர் அந்த நடிகை. முன்னணி நடிகை அந்தஸ்தை பெறாவிட்டாலும் ரசிகர்கள் அனைவருக்கும் தெரிந்த நபராகிவிட்டார். ஒரு கதாபாத்திரத்தை கொடுத்தால் நச்சென்று நடித்து பெயர் வாங்கிவிடுவார். நடிகை நல்ல பெயர் எடுத்த நிலையில் மேடையில் பேசும் போதும், பேட்டிகள் கொடுக்கும்போதும் தேவையில்லாமல் யாரையாவது குத்திக் காட்டி பேசி வருகிறார். மேடை சர்ச்சையை அடுத்து தற்போது பேட்டி ஒன்றிலும் சக நடிகைகளை குத்திக் காட்டியதாக புகார் எழுந்துள்ளது. நடிகைகள் சிலர் சிவப்பாக மாற ஆசைப்பட்டு அதற்காக சிகிச்சை எடுத்துள்ளார்கள். இந்நிலையில் இந்த நடிகையோ நான் மாநிறமாக இருப்பதில் பெருமை அடைகிறேன். சிவப்பாக மாற சிகிச்சை எடுக்குமாறு என்னிடம் கூறினார்கள். நான் மறுத்துவிட்டேன் என்று தெரிவித்துள்ளார். அவரின் பேச்சை கேட்டு சிகிச்சை எடுத்து சிவப்பாக மாறிய அந்த பெரிய நடிகைக்கு செம எரிச்சலாகியிருக்கும். ரொம்ப காலம் ஒருவரை காதலித்துவிட்டு அவரை பிரிந்த கையோடு இன்னொருவரை எப்படித் தான் காதலிக்கிறார்களோ என்று நடிகை பேட்டி அளித்துள்ளார். அவர் யாரை சொல்கிறார் என்பது எங்களுக்கு புரிந்துவிட்டது என்று நெட்டிசன்ஸ் தெரிவித்துள்ளார்கள். நான் ஒன்றும் ஒரே நாள் இரவில் பெரிய ஆளாகவில்லை. மேலும் காபி கடையில் என்னை பார்த்துவிட்டு வாய்ப்புகள் வரவில்லை என்று நடிகை கூறியிருப்பது சிலரை எரிச்சல் அடைய வைத்துள்ளது. எடுத்த நல்ல பெயரை இப்படி குத்திக்காட்டி பேசியே கெடுத்துக் கொள்வார் போன்று என்று கோடம்பாக்கத்தில் பேசுகிறார்கள்.





# ...ரும் ...ன்

...த்து வரும் ...் செலுத்தி ...டற்கரைச் ச...

...னந்த் முந் ...ன் முடிக்க ... விரைவில் ... பாடலை

# ...பாராட்டுவார்கள்

அமையவில்லை. இதேபோல தொடர்ச்சியாக என்னைப் பார்த்து மக்கள் சோர்வடைந்துவிடக் கூடாது. அதற்கு முன்பு ஏதேனும் செய்யணும் என்று தோன்றியது. அதனால்தான் நாமே யோசித்து, எழுதி, திரைக்கதை அமைக்கும் ஒரு படத்தில் இருந்து இத்தகைய பயணத்தை தொடங்கலாம் என்று நினைத்தேன்.

**இவ்வளவு யோசித்த நீங்களே படத்தின் இயக்குநராகவும் இருந்திருக்கலாமே?**

நான் எழுதி அமெரிக்காவில் நடத்திய ஒரு ஷோ பெரிய அளவில் வரவேற்பை பெற்றது. அந்த அனுபவம், நம்பிக்கைதான் என் நண்பர்களுடன் இணைந்து இந்த படத்துக்கும் கதை, திரைக்கதை உருவாக்க வைத்தது. தற்போது 'எல்கேஜி' தொடர்பாக வெளியே வர்ற ஒரு போஸ்டரைக்கூட 7 மணி நேரத்துக்கு மேல அமர்ந்து செப்பனிடுகிறோம். இது போல எல்லாவற்றிலும் என் கவனம் இருந்தாலும் இக் கதையை நல்லபடியாக நகர்த்திக்கொண்டு போக திறமையான, அனுபவம் வாய்ந்த ஒருவர் தேவைப்பட்டார். பிரபுதேவா, ரவிவர்மன் போன்ற படைப்பாளிகளிடம் பணி புரிந்த பிரபு அதற்கு பொருத்தமாக இருப்பார்னு முடிவு செய்தோம். எதிர்பார்த்தபடியே, அவரும் படத்தை பக்காவாக நகர்த்திச் சென்றிருக்கிறார்.

**ஹீரோ பாலாஜிக்கு ஆர்ஜே என்கிற அணிகலன் இனி தேவைப்படுமா?**

கிரிக்கெட்டர், தொகுப்பாளர் என்று பல பணிகள் செய்திருந்தாலும், என்னை அடையாளப்படுத்தியது ஆர்ஜே பணிதான். அதை ஒருபோதும் விடமாட்டேன். 'ஆண்டுக்கு 10 படம் நடிக்கணும், நிறைய சம்பாதிக்கணும்' என்று நான் இங்கு வரவில்லை. செய்யும் வேலையை ரொம்ப நாட்களுக்கு நிதானமாக, சிறப்பாக செய்தால் போதும்!



# ஏப்ரலில் திரைக்கு வரும் 'அயோக்யா'

அயோக்யா படத்தை ஏ.ஆர்.முருகதாஸ் உதவியாளர் வெங்கட் மோகன் இயக்குகிறார். சமீபத்தில் சென்னை சாலிகிராமம் மோகன் ஸ்டுடியோவில் அமைக்கப்பட்ட நீதிமன்றம் அரங்கில் படப்பிடிப்பு நடந்தது. பார்த்திபன், ராதாரவி, கே.எஸ்.ரவிகுமார், ஆடுகளம் நரேன், வம்சி, ராசி கன்னா, சோனியா அகர்வால், சச்சு ஆகியோருடன் 200க்கும் மேற்பட்ட துணை நடிகர்கள் இணைந்து நடித்தனர்.

இது படத்தின் முக்கிய காட்சி என்பதால், விஷால் தொடர்ந்து நடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவருடன் இணைந்து நடித்த மற்றவர்கள், தங்கள் காட்சி முடிந்தவுடன் வீட்டுக்கு சென்றுவிட்டனர். விஷால் மட்டும் 48 மணி நேரம் ஷூட்டிங்கில் பங்கேற்று இருக்கிறார். படம் ஏப்ரலில் திரைக்கு வருகிறது.



# கீர்த்தியின் புதுப்படம்

தெலுங்கில் மகாநடி (தமிழில் நடிகையர் திலகம்), தமிழில் சர்கார் படங்களுக்குப் பிறகு புதிய படங்கள் எதையும் ஒப்புக்கொள்ளாமல் இருந்தார் கீர்த்தி சுரேஷ். இருபதுக்கும் மேற்பட்ட கதைகள் கேட்டும் அவருக்கு பிடித்த மாதிரியான சப்ஜெக்ட் எதுவும் அமையவில்லை என்பதால் ஒரு சிறிய இடைவெளி எடுத்துக்கொண்டு மீண்டும் நடிக்கலாம் என்று திட்டமிட்டிருந்தார். தெலுங்கு இயக்குநர் நரேந்திரநாத் சொன்ன ஒரு கதை, அவரை மறுக்க முடியாத அளவுக்கு இம்பிரஸ் செய்துவிட்டதாம். ஹீரோயின் ஓரியண்டடான இந்தக் கதையில் நடிக்க உடனே கீர்த்தி சம்மதித்திருக்கிறார்.

தான் நடிக்க அவர் ஒரே ஒரு நிபந்தனை மட்டும்தான் விதித்தாராம். இந்தப் படத்தை மகாநடி மாதிரி தெலுங்கு, தமிழ் இருமொழிகளிலும் வெளியிட வேண்டும். தயாரிப்பு தரப்பு ஒப்புக்கொள்ள, உடனே மேக்கப் போட்டுக் கொண்டு ஷூட்டிங்குக்கு கிளம்பிவிட்டார் கீர்த்தி. படத்தில் ஹீரோ என்று யாரும் சொல்லிக்கொள்ளும்படி இருக்க மாட்டார்களாம். அனேகமாக ஆக்ஷன் சப்ஜெக்ட்டாக இருக்கலாம் என்கிறார்கள்.

# ஆபத்தை உண்டாக்கும் அதிக இரத்தப்போக்கு!

மாதவிடாய் காலத்தில் சிலருக்கு முதல் நாளில் அதிக இரத்தப்போக்கு இருக்கும். சிலருக்கு இரண்டாவது நாள். இது ஒவ்வொருவரின் உடல்நிலையைப் பொறுத்து மாறுபடும். அன்றாடச் செயல்பாடுகளை பாதிக்கும் வகையில் தாங்கமுடியாத வலி, அதிகப்படியான நாப்கின் தேவைப்படுதல், அசௌகரியமாக உணர்தல், இவற்றோடு உடலில் இரத்த அளவு குறையும் அளவுக்கு ஏற்படும் மாதவிடாய் காலத்தையே அதிக இரத்தப்போக்கு ஏற்பட்டிருக்கும் காலம் என மருத்துவர்கள் குறிப்பிடுவார்கள்.



அதிக இரத்தப்போக்கு ஏற்படும்போது, உடலிலுள்ள இரத்தச் சிவப்பணுக்கள் குறைந்து, ரஇத்தச்சோகை ஏற்படக்கூடும். இதனால், உடல் நலிவடைந்து, சோர்வாகக் காணப்படுவார்கள். இவை அனைத்தும் தொடக்கநிலைகள் தாம். இந்தச் சூழலிலேயே பிரச்னையைக் கண்டறிந்துவிட்டால், எளிதாகக் குணப்படுத்திவிடலாம்.

அதிக இரத்தப்போக்கு எடுத்துச்சொல்லும் எச்சரிக்கைகள்...

வயதின் அடிப்படையில், அதிக இரத்தப்போக்கு சில பிரச்னைகளுக்கான அறிகுறிகள் என்று அறிந்துகொள்ளலாம்.

20 - 25 வயதுள்ளவர்கள் Polycystic Ovaries எனப்படும் கர்ப்பப்பையில் நீர்க்கட்டிகள் இருப்பது ஒரு காரணமாக இருக்கலாம். உடற்பயிற்சிகள் இல்லாமல் இருப்பது, உணவு முறை சீராக இல்லாதது போன்றவற்றாலும் அதிக இரத்தப்போக்கு ஏற்படும்.

25 முதல் 35 வயதுள்ளவர்கள் அதிக இரத்தப்போக்கை உதாசீனப்படுத்தக் கூடாது. கர்ப்பப்பைவாய் புற்றுநோய்க்கான மிக முக்கியமான அறிகுறியாகக்கூட இருக்கலாம். அந்தப் பிரச்னையை முதல் நிலையிலேயே கண்டறிந்துவிட்டால், குணப்படுத்திவிடலாம். சில நேரங்களில் இது நீர்க்கட்டிப் பிரச்னையாகவும் இருக்கக் கூடும். அபார்ஷன் ஏற்படுவதைக் குறிக்கலாம். எனவே, அதிக ரத்தப்போக்கை உதாசீனப்படுத்தாமல் உடனே பரிசோதனை செய்துகொள்ள வேண்டியது நல்லது.

45 வயதை தாண்டியவர்கள் (மெனோபாஸ் காலத்துக்குப் பிறகு) அதிக ரத்தப்போக்கென்றால், கர்ப்பப்பைவாய் புற்றுநோய் வரும் வாய்ப்புகள் அதிகம். குறிப்பாக மெனோபாஸ் காலத்துக்குப் பிறகும் ரத்தப்போக்கு ஏற்பட்டால் (Post Menopausal Bleeding), பரிசோதனை செய்து, காரணத்தைக் கண்டறிந்துவிடுவது நல்லது.

எதனால் ஏற்படுகிறது?

★ இரத்தப்போக்குக்கு உதவும் முக்கியமான ஹார்மோன்கள் ஈஸ்ட்ரோஜென் (Estrogen), புரொஜெஸ்ட்ரோன் (Progesterone). இவை இரண்டிலும் ஏதேனும் மாற்றங்கள் நிகழ்வதால் ஏற்படுவதுதான் அதிக ரத்தப்போக்கு. இதை ஹார்மோன் சமநிலையின்மை (Hormone Imbalance) எனக் குறிப்பிடுவோம்.

★ மாதவிடாய் நாள்களில் கருமுட்டை உற்பத்தி செய்யத் தவறும்போது, கர்ப்பப்பை செயலிழப்பதால் ஏற்படலாம்.

★ கர்ப்பப்பை, சினைப்பையில் நீர்க்கட்டிகள் இருப்பது.

★ கர்ப்பப்பை வாய் புற்றுநோயால் ஏற்படலாம்.

★ கர்ப்பப்பைச் சுரப்பு திசுக்கட்டியால் (Adenomyosis)ஏற்படலாம்.

★ தைராய்டு பிரச்சனைகள், சிறுநீரகக் குறைபாடுகள், மருந்து ஒவ்வாமைகளால் ஏற்படலாம்.

இரத்தச்சோகையால் பாதிக்கப்படுபவர்களில், பெரும்பாலானோர் பெண்களே. பருவமடைதல், மாதவிடாய், பிரசவம் போன்றவற்றால் பெண்கள் அதிக இரத்த இழப்பை எதிர்கொள்கிறார்கள். தாய்ப்பால் கொடுக்கும் பெண்களுக்கு, தேவைக்கேற்ற இரும்புச்சத்து கிடைக்காததும் இதற்குக் காரணம். இதுபோன்ற பிரச்னைகளைத் தடுக்க, இரும்புச்சத்து அதிகமுள்ள உணவுகளைச் சாப்பிட வேண்டும். உதாரணமாக, கீரை, மாதுளை, அத்திப்பழம், பப்பாளி போன்ற உணவுகளை உட்கொள்ளலாம். மருத்துவரின் பரிந்துரையோடு சத்து மாத்திரைகளும் உட்கொள்ளலாம். இப்படி, அதிக ரத்தப்போக்கு ஏற்படுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அந்தக் காரணத்தைச் சரியாக அறிந்துகொள்வதே, அதிலிருந்து தப்பிக்க ஒரே வழியாகும்.

# ட்ரெட்மில்லில் பயிற்சி செய்பவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை...



நடைப்பயிற்சி மேற்கொள்ள முடியாமல் இருப்பவர்களுக்கும், தினமும் வெளியில் சென்று பயிற்சி செய்ய முடியாதவர்களுக்கும் ட்ரெட்மில் சிறந்த தீர்வு. ஆனால், இதைச் சரியாக, முறையாகப் பயன்படுத்தினால்தான் அதன் நன்மைகளைப் பெற முடியும். ட்ரெட்மில்லில் பயிற்சி செய்பவர்கள் என்னவெல்லாம் செய்யலாம், செய்யக் கூடாது? என்பது பற்றி விரிவாக அறிந்து கொள்ளலாம்.

ட்ரெட்மில் பயன்படுத்தும்போது, டிரெஸ்ஸிங் சரியாக இருக்க வேண்டும். வெறுங்காலுடன் நடக்கக் கூடாது. சரியான ஷூ, ஷாக்ஸ், டி-ஷர்ட், ட்ராக்ஸ் அணிந்திருக்க வேண்டும். பயிற்சி செய்யும்போது, உடலும் மனதும் ரிலாக்ஸாக இருக்கவேண்டியது அவசியம்.

★ ட்ரெட்மில்லில் நடக்கும்போது, வியர்வையைத் துடைத்துக்கொள்ள பக்கத்திலேயே ஒரு துண்டு வைத்துக் கொள்வது நல்லது. ஜிம் சென்று பயிற்சி மேற்கொள்பவர்கள், இதைக் கண்டிப்பாகப் பின்பற்றவும்.

★ முதன்முதலாக ட்ரெட்மில் உபயோகிப்பவர்கள், வேகத்தை எப்படிக் கூட்டிக்கொள்வது அல்லது குறைப்பது, எமெர்ஜென்சி ஸ்டாப் எப்படிச் செய்வது, பாடல் கேட்பது அல்லது வீடியோக்கள் பார்ப்பது எப்படி என்பதையெல்லாம் பயிற்சியாளரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.

★ ட்ரெட்மில்லின் ப்ளஸ், அதன் டிஜிட்டல் திரை. ஒரு நாளைக்கு எவ்வளவு நேரம் பயிற்சி செய்திருக்கிறீர்கள், எவ்வளவு தூரம் நடந்திருக்கிறீர்கள், பயிற்சியால் உடலில் எவ்வளவு கலோரிகள் கரைந்திருக்கின்றன, இதயத்துடிப்பின் வேகம் எவ்வளவு இருக்கிறது போன்றவற்றைத் தெரிந்துகொள்ள முடியும்.

★ உடல் பருமனாக இருப்பவர்கள், ஜிம்முக்குச் சென்று ட்ரெட்மில் பயிற்சியை ஆரம்பிப்பதுச் சிறப்பு. காரணம், அங்கு வைக்கப்பட்டிருக்கும் இயந்திரங்கள், மிக உறுதியாக இருக்கும்.

★ பயிற்சி செய்யும்போது வெளியேறும் வியர்வை, பயிற்சியை முடிக்கும்போது டீஹைட்ரேஷன் பிரச்னையை ஏற்படுத்தலாம். எனவே, பயிற்சியைத் தொடங்குவதற்கு முன்னர், நிறையத் தண்ணீர் குடிக்க வேண்டும்.

# மூக்கின் முக்கியத்துவம்



மூக்கு, முக அழகுக்கு மட்டுமல்ல சுவாசத்திற்கும் முக்கியமானது. உள் இழுக்கப்படும் காற்றில் உள்ள தூசுகளை வடிகட்டி அனுப்புவது மூக்குதான். வாசனை அறியவும் மூக்கு பயன்படுகிறது. முக்கியத்துவம் நிறைந்த மூக்கு பற்றிய சில சுவாரஸ்யங்களை அறிவோம்...!

★ மூக்கு, வாசனைகளை நுகர்வதற்கான பிரத்தியேக செல்களைக் கொண்டுள்ளன. இவையே நறுமணத்தையும், நாற்றத்தையும் உணர காரணமாக உள்ளன.

★ காற்றில் ஆபத்தான ரசாயனங்கள் இருந்தால் மூக்கினால் உணர முடியும்.

★ மனிதனின் மூக்கு 2 நாசித் துவாரங்களைக் கொண்டது. இந்த துவாரங்களை பிரிக்கும் தடுப்பு, 'நாசல் செப்டம்' எனப்படுகிறது.

★ 'நாசல் செப்டம்' தடுப்பானது ஒரு குருத்தெலும்பு அமைப்பாகும். இது தசைகளைவிட வலிமையானது, ஆனால் எலும்பைவிட நெகிழ்வுத்தன்மை கொண்டது.

★ மூக்கின் உச்சியானது 'நாசிக்குழி' எனப்படுகிறது. இங்குள்ள எத்மாய்டு எலும்பு நாசிக்குழியையும், மூளையையும் பிரிக்கிறது.

★ இந்த எத்மாய்டு எலும்பின் மீதுதான் கண்கள் சுழன்று கொண்டிருக்கின்றன. எனவே இதை கண்ணின் சுழல் அச்சு என்கிறார்கள்.

★ தலையின் உட்பகுதியில் அதிக இடத்தை அடைத்துக் கொண்டிருக்கிறது நாசிக்குழி. வெளிப்புறத்தில் மூக்கு அமைந்திருக்கும் பகுதிக்கு உட்புறத்தில் கண்ணின் பின்னால் அமைந்திருக்கிறது நாசிக்குழி.

★ நாசிக்குழியில்தான் நாம் உள் இழுக்கும் காற்றானது உடலின் வெப்பநிலைக்கு ஏற்ப மாற்றப்படுகிறது. அதாவது அதிக வெப்பமான காற்று உடலுக்கு ஏற்ப குளிர்விக்கப்படுகிறது அல்லது குளிரான காற்று உடல் வெப்பத்திற்கேற்ப சூடாக்கப்பட்டு உள்ளே அனுமதிக்கப்படுகிறது.




★ நாசிக்குழி பகுதியில் காணப்படும் நுண் மயிரிழைகள் போன்ற அமைப்பு காற்றில் கலந்து வரும் தூசுகளையும், நுண்துகள்களையும் வடிகட்டுகிறது.

★ மூக்கின் உச்சிப்பகுதியாக கருதப்படும் நாசிக்குழியே, வாயின் உச்சிப் பகுதியாகவும் அமைந்துள்ளது.

★ வாசனையை நுகர முடியாத நிலை 'அனோஸ்மியா'எனப்படுகிறது.

★ லேசான வாசனையையும் உணர்ந்து கொள்ளும் அதிகப்படியான நுகர்ச்சி திறன் 'ஹைபரரோஸ்மியா' எனப்படுகிறது.

★ வாசனை நுகர்வதில் ஏற்படும் திடீர் மாற்றம் 'டைசோஸ்மியா'எனப்படுகிறது.

★ ஆண்களின் மூக்கு, பெண்களின் மூக்கைவிட பெரியது.

★ மூக்கு சம்பந்தமான அறுவைச் சிகிச்சை 'ரினோபிளாஸ்டி' எனப்படுகிறது.

**மூக்கு பராமரிப்பு**

முக்கியத்துவம் நிறைந்த மூக்கு, பராமரிப்பில் நாம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். மூக்கில் விரல்கள், குச்சிகளைவிட்டு விளையாடக்கூடாது. தண்ணீர் மற்றும் மருந்து போன்ற திரவங்களை மூக்கில் ஊற்றிக் கொள்ளக் கூடாது.


மருத்துவர் பரிந்துரை செய்யும் மருந்தை மட்டுமே மூக்கிற்கு பயன்படுத்த வேண்டும். மூக்கில் தேவையற்ற தூசு துரும்புகள் நுழைந்தால் இயற்கையாகவே தும்மல் ஏற்பட்டு வெளியேறிவிடும். ஒருவேளை அதில் அசுத்தங்கள் மிகுந்துவிட்டால் அதை சுத்தம் செய்ய பருத்தி துணிகளையே பயன்படுத்த வேண்டும். தெரியாத மருந்துகள், பூக்களை மூக்கினால் நுகர்ந்து பார்க்கக்கூடாது.

அசுத்தங்கள் நிறைந்த பகுதிக்கு செல்ல நேர்ந்தால் மூக்கினை கைக்குட்டை அல்லது மருந்து துணியால் மூடிக் கொள்ள வேண்டும். நோய் ஏற்படும்போதும் இவற்றைப் பயன்படுத்தி சுகாதாரம் பேண வேண்டும். மூக்கில் ரத்தக் காயம் ஏற்பட்டால் உடனே மருத்துவரை நாட வேண்டும்.

# ஆயுட்காலத்தை அதிகரிக்கும் பழக்கம்

அலுவலக நெருக்கடி இல்லாத வார இறுதி நாட்களில் அதிக நேரம் தூங்குவது சிலரது வாடிக்கை. அத்தகையவர்கள், தெரிந்தோ தெரியாமலே ஒரு நல்ல வழக்கத்தைப் பின்பற்றி வருகின்றனர்.

ஆம், வார இறுதி நாட்களில் அதிக நேரம் தூங்குவது மரணத்தைத்



தள்ளிப்போடும் என்பது ஆய்வாளர்களின் புதிய கண்டுபிடிப்பு.

சுமார் 38 ஆயிரம் பேரிடம் மேற்கொண்ட ஆய்வின் முடிவில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுவீடன் ஸ்டாக்ஹோம் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் இந்த ஆய்வை மேற்கொண்டிருந்தனர்.

தினமும் 5 மணி நேரத்துக்கும் குறைவாக உறங்குபவர்களின் ஆயுட்காலம் பாதிக்கப்படும் என்றும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

பொதுவாகவே, உழைப்பைப் போல உறக்கத்துக்கும் போதிய முக்கியத்துவம் அளிக்கவில்லை என்றால் பிரச்சினைதான்!

# உடலுக்கு கேடாகும் குளிர்பானம்

குளிர்பானம் என்பது அதிக அளவில் 'பிரக்டோஸ்' எனும் சர்க்கரையும், கார்பன்டை-ஆக்சைடும் கலக்கப்பட்ட ஒரு பானம். இதில் எவ்வித ஊட்டச்சத்தும் இல்லை. இவற்றைக் குடிப்பதால் ஆற்றலும் கிடைப்பதில்லை. முக்கியமாகத் தாகம் தணிவதும் இல்லை.

குளிர்பானங்களின் சுவையை மேம்படுத்துவதற்காக, காபீன் சேர்க்கிறார்கள். இனிப்பை நிலைப்படுத்துவதற்காக சிட்ரிக் அமிலம், பாஸ்பாரிக் அமிலம் போன்றவற்றைக் கலக்கிறார்கள். வண்ணமூட்டுவதற்காக கேராமல், பீட்டா கரோட்டினைப் பயன்படுத்துகிறார்கள். இவை தவிர அஸ்பர்டேம் போன்ற செயற்கை சுவையூட்டிகள், செயற்கை நிறமூட்டிகள், பதப்படுத்தும் வேதிப்பொருட்கள் ஆகியவை அதிக அளவில் சேர்க்கப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில்



நம் உடல் உறுப்புகளுக்கு ஆபத்தை தரக்கூடியவை.

குளிர்பானங்களைப் பெரும்பாலும் அதிகக் குளிர்ச்சியான நிலையில்தான் குடிக்கிறோம். இதனால் இவை உடலைக் குளிர்ச்சியடையச் செய்து, தாகத்தைத் தணிக்கும் என்று நம்புகிறோம். இந்த எண்ணம் முற்றிலும் தவறு. உண்மையில் குளிர்பானங்களை வரம்பின்றி அருந்தும்போது, இவற்றில் உள்ள குளிர்ச்சியானது ரத்தநாளங்களைச் சுருக்கி, உடலின் வெப்பத்தை மேலும் அதிகரித்துவிடுகிறது.

இதன் விளைவால் தாகம் அதிகரிக்கிறது. இது மீண்டும், மீண்டும் குளிர்ந்த மென் பானங்களைக் குடிக்கத் தூண்டுகிறது. இதை உங்கள் அனுபவத்திலேயே உணர முடியும்.

குளிர்பானங்களில் உள்ள 'பிரக்டோஸ் கார்ன் சிரப்' எனும் சர்க்கரை ரத்தத்தில் கலந்து உடல் முழுவதும் பாய்கிறது. 250 மி.லி. குளிர்பானத்தில் 10 தேக்கரண்டி அளவுக்குச் சர்க்கரை உள்ளது.

இதனால் இரத்த சர்க்கரை பல மடங்கு அதிகரிக்கிறது. இதைக் கட்டுப்படுத்த கணையத்தில் இருந்து இன்சுலின் அதிக அளவில் சுரக்கிறது.

மென் பானங்களை அளவில்லாமல் குடிப்போருக்கு இப்படி இன்சுலினும் அடிக்கடி அதிகமாகச் சுரப்பதால், இளம் வயதிலேயே கணையம் களைத்துவிடுகிறது.

இதன் விளைவால் இன்சுலின் சுரப்பு குறைந்து, இளமையிலேயே நீரிழிவு நோய் வந்துவிடுகிறது.

நம் நாட்டில் 'டைப் டூ' நீரிழிவு நோய் இளைஞர்களுக்கு அதிகமாகி வருவதற்கு குளிர்பானம் குடிப்பது முக்கியக் காரணம் என்கிறது ஆய்வு.

தினமும் குளிர்பானம் குடிக்கும் குழந்தைகளில் 60 சதவீதம் பேர் அடுத்த ஒன்றரை ஆண்டுகளில் உடல்பருமன் பிரச்சினையால் பாதிக்கப்படுகின்றனர்.

குளிர்பானம் குடிக்கும்போது ரத்தச் சர்க்கரை அளவு அதிகரிக்கிறது அல்லவா? இந்தச் சர்க்கரை கல்லீரலில் கொழுப்பாக மாற்றப்பட்டு உடலில் சேமித்து வைக்கப்படுகிறது.

இப்படிப் படிப்படியாகச் சேமிக்கப்படும் கொழுப்பு உடற்பருமனை உண்டாக்குகிறது. இந்த உடற்பருமன் இளம் பருவத்திலேயே இதயநோய், உயர் இரத்த அழுத்தம், சிறுநீரக நோய் என்று பல்வேறு பிரச்சினைகளுக்கு அடித்தளம் அமைக்கிறது.

# நோயற்ற வாழ்வு சாத்தியமா?

சுத்தமும், சுகாதாரமும் பற்றி எள்ளளவும் கவலைப்படாமல் இருப்பது தான் பல்வேறு விதமான நோய்களுக்கு அடிப்படையான காரணம். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம், சுத்தம் சோறு போடும் என்றெல்லாம் நம் முன்னோர்கள் அருமையான கருத்துகளை சொல்லியுள்ளார்கள்.

தன் சுத்தம், சுற்றுப்புற தூய்மை பற்றிய புரிதலையும், அவசியத்தையும் குழந்தை பருவத்திலிருந்தே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுத்து வளர்க்க வேண்டும். கண்ட கண்ட இடங்களில் எச்சில் துப்பும் பழக்கம் மிகவும் கெடுதலான செயல். எச்சலில் உள்ள நுண்கிருமிகள் வாயிலாக பல்வேறு தொற்றுநோய்கள் அதனை மிதிப்பவர்களுக்கு உண்டாகிறது.


பொதுவாகவே நம்மவர்கள் தெருவில் துப்புவதை ஒரு பழக்கமாகவே கொண்டுள்ளனர். வெற்றிலை பாக்கு போட்டு துப்பும் பழக்கமுள்ளவர்கள் கிடைக்கும் இடங்களிளெல்லாம் துப்புகிறார்கள். குறிப்பாக பேருந்து பயணத்தில் பேருந்து சென்றுக் கொண்டிருக்கும் போதே கூட துப்புவதால் பேருந்தில் சன்னல் ஓரம் உட்கார்ந்திருப்பவர் முதல் சாலையில் சென்றுக் கொண்டிருப்பவர் வரையும் அர்ச்சனை செய்யப்படுகிறார்கள்.

இங்கே யாருக்கும் யாரைப் பற்றியும் கவலையும், அக்கறையும் இருப்பதாக தெரியவில்லை. தான் மட்டும் வாழ வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி வருவதாக தெரிகிறது. புகைப்பிடிப்பவர்களைப் பற்றியும் அவர்களின் அட்டகாசங்களை பற்றியும் நேரில் காண்பவர்களுக்கு நன்கு புரியும். அடுத்தவரைப் பற்றியும் பொது சுகாதாரத்தைப் பற்றியும் அக்கறையின்றி செயல்படுவதால் நோய்கள் அதிகமாக உண்டாகின்றன.



குறிப்பாக பொது கழிப்பறைகளின் நிலையும் அதை பயன்படுத்துவோரின் பக்குவமின்மையும் மிகவும் மோசமான உணர்வை உண்டாக்குகிறது. பேருந்து நிலையம் போன்ற இடங்களில் திறந்த வெளியில் செய்யப்படும் அசுத்தம் அனைவரையும் முகம் சுளிக்க வைத்து விடுகிறது. உணவகங்களில் இருக்கும் தூய்மை, சுத்தம் பற்றி கேட்கவே வேண்டாம். அந்த அளவுக்கு சுகாதாரமின்றி உள்ளன. சுத்தம் சுகம் தரும் என்பதை அனைவரும் உணர்ந்து செயல்பட்டால் நோயற்ற வாழ்வு அனைவருக்கும் சாத்தியமே.

# திரைப்பட வழிகாட்டி!



திரைப்பட ரசிகர்கள் அடுத்து என்ன படம் பார்க்கலாம் எனப் பரிந்துரைக்கும் இணையதளங்கள் பல இருக்கின்றன. இந்த வரிசையில், 'வாட் மூவீஸ் ஷுட் ஐ வாட்ச் டுநைட்' எனும் பெயரிலான இணையதளம், புதிதாகப் பார்க்கக்கூடிய ஆங்கிலப் படங்களைப் பரிந்துரைக்கிறது. தளத்தின் முகப்புப் பக்கத்தில், ஸ்வைப் செய்தால், ஒரு படத்துக்கான பரிந்துரை தோன்றுகிறது. அதன் முன்னோட்டக் காட்சியையும் காணலாம். இப்படித் தினம் ஒரு படத்தைத் தெரிந்துகொள்ளலாம்.

**இணைய முகவரி:**
**https://what movie should iwatch tonight.com/**

# தொலைபேசி மோகமா?





ஸ்மார்ட் போனைக் கையில் எடுத்தால் கீழே வைக்கப் பலருக்கும் மனமிருப்பதில்லை. இதனால் நேரம் விரயமாவதுடன், வேறு பல பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. இந்த ஸ்மார்ட்போன் மோகத்துக்கு செயலிகளும் முக்கியக் காரணம். இந்த மோகத்திலிருந்து மீள செயலி ஒன்று அறிமுகமாகியுள்ளது. 'ஹோல்ட்' எனும் பெயரிலான இந்தச் செயலி, ஸ்மார்ட்போனைக் கையில் எடுக்காமல் இருந்தால், அதற்குப் பரிசாகப் புள்ளிகள் வழங்குகிறது.

20 நிமிடம் போனைப் பயன்படுத்தாமல் இருந்தால், குறிப்பிட்ட புள்ளிகளைப் பெறலாம். இந்தப் புள்ளிகளைச் சேர்த்து ஆன்லைன் ஷாப்பிங், மால்களில் பொருட்களை வாங்கிக் கொள்ளலாம். கல்லூரி மாணவர்களை மனத்தில் கொண்டு நோர்வேயில் இது உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் தகவல்களுக்கு: https://www.holdstudent.com/

# ஸ்மார்ட்போனைத் தூர வையுங்கள்!

நவீன வாழ்க்கையில் ஸ்மார்ட் போன்கள் எவ்வளவு பயனுள்ளவையாக இருக்கின்றன என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அலாரம் செட் செய்து அதிகாலை கண் விழிப்பது முதல், செய்திகளைத் தெரிந்துகொள்ள, ஷாப்பிங் செய்ய, உணவை ஆர்டர் செய்ய, தகவல்களைத் தேட எனப் பல விதங்களில் ஸ்மார்ட் போன்கள் கைகொடுக்கின்றன. செயலிகள் துணையோடு ஸ்மார்ட் போனிலேயே கற்றுக்கொள்ளவும் செய்யலாம். இன்னும் பலவிதங்களில் ஸ்மார்ட்போனைப் பயன்படுத்த முடிகிறது.

ஆனால், ஸ்மார்ட்போன் பயன்பாட்டுக்கு இன்னொரு முகமும் இருக்கிறது. இது கவனச்சிதறலுக்கான சாதனமாகவும், நேரத்தை வீணடிக்கும் வழியாகவும் இருப்பதுதான் பிரச்சினை. ஃபேஸ்புக், ட்விட்டர் உள்ளிட்ட சமூக ஊடக சேவைகளை போனிலிருந்தே அணுக முடிவதால், நேரம் காலம் இல்லாமல் போனைப் பயன்படுத்த பெரும்பாலானோர் பழகிவிட்டனர்.

பலருக்கும் ஸ்மார்ட்போன் பயன்பாடு ஒரு மோகமாகவே மாறியிருக்கிறது. ஸ்மார்ட்போன் பழக்கம் மோகமாக மாறாமல் இருக்க வேண்டுமா? அப்படியானால், சிலவற்றைப் பின்பற்ற வேண்டும், சிலவற்றைத் தவிர்க்க வேண்டும்.

### நோட்டிபிகேஷன் வேண்டாம்

நோட்டிபிகேஷன் வசதி பயனுள்ளது என்றாலும், கவனச்சிதறலில் அதற்குத்தான் முதலிடம். சமூக ஊடக சேவைகளிலிருந்து வந்திருக்கக்கூடிய அறிவிப்புகள் தொடர்பான எதிர்பார்ப்பால், தேவையில்லாமல் அடிக்கடி போனை எடுத்துப் பார்க்கும் தூண்டுதல் ஏற்படுகிறது. எனவே, முதலில் நோட்டிபிகேஷன் வசதியைத் துண்டிப்பது நல்லது. எப்போது தேவையோ அப்போது மட்டும் போனை எடுத்துப் பார்க்க இதுவே சிறந்த வழி. அதோடு, அடிக்கடி போனை எடுத்துப் பார்க்கும் எண்ணத்தைக் கட்டுப்படுத்திக்கொள்வதும் நல்லது.

### செயலி நீக்கம்

உள்ளங்கையிலிருந்தே சமூக ஊடக சேவைகளை அணுக முடிவது நல்லதுதான். ஆனால், அதிக நேரம் செலவாகிறது எனத் தெரிந்தால், தயங்காமல் சமூக ஊடக சேவை செயலிகளை நீக்கிவிடுவது நல்லது. அவசரத் தேவை எனில், போனில் பிரவுசர் மூலம் இந்த சேவைகளை அணுகலாம். இதேபோலவே பயன்படுத்தாத எல்லாச் செயலிகளையும் நீக்கிவிடுங்கள்.

### சுய கட்டுப்பாடு

போனை எப்போது பயன்படுத்த வேண்டும், எப்படிப் பயன்படுத்த வேண்டும் என உங்களுக்கு நீங்களே ஒரு வரைமுறையை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். மதிய உணவு இடைவேளையின்போது, உணவு சாப்பிடும்போது, நண்பர்களுடன் இருக்கும்போது, சமூக நிகழ்வுகளில், படுக்கையறையில் போனை எடுப்பதில்லை என உறுதிகொள்ளுங்கள். இரவு படுக்கச் செல்லும் முன், இணைய டேட்டா வசதியைத் துண்டித்துவிடுங்கள்.

### கைக்கடிகாரம் போதும்

அலுவலக நேரத்தில் போனைப் பக்கத்தில் வைக்காமல் பாதுகாப்பான இடத்தில் வைத்துவிடுங்கள். அல்லது ஏரோபிளேன் மோடில் போட்டு வையுங்கள். அதேபோல, கைக்கடிகாரம் அணிந்து செல்லுங்கள். நேரம் பார்ப்பதற்காக போனை எடுக்காமல், கடிகாரத்திலேயே நேரம் பார்த்துக்கொள்வது பணியில் கவனம் செலுத்த உதவும்.

### நண்பர்களின் உதவி

ஸ்மார்ட்போன் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவது தொடர்பான உங்கள் நோக்கத்தை நண்பர்களிடம் பகிர்ந்துகொள்ளுங்கள். உங்களை அறியாமல் போனைக் கையில் எடுக்கும்போது அவர்கள் உங்கள் கட்டுப்பாட்டை நினைவுபடுத்தலாம். அவர்களுக்கும் கட்டுப்பாடு தொடர்பான விழிப்புணர்வு உண்டாகலாம்.

இந்த வழிமுறைகளோடு, ஸ்மார்ட்போன் மோகத்திலிருந்து விடுபட போனை ஆக்கபூர்வமான வழிகளில் பயன்படுத்தும் வழக்கத்தையும் மேற்கொள்ளலாம்.



இதற்கான உதாரணங்கள்:

### பேசுங்கள்

சும்மாயிருக்கும் நேரத்தில் போனில் சமூக ஊடகங்களில் உலவ நினைப்பதைவிட, நீண்ட நாட்களாக பேசமால் இருக்கும் நண்பர் ஒருவரை அழைத்து அவரிடம் பேசுங்கள். குறிப்பிட்ட ஒரு கேள்வியைக் கேட்டு அவரிடம் உரையாடுங்கள். சில நிமிடங்கள்தாம் பேச இருப்பதாகக் கூறிவிட்டே பேசலாம். நட்பைப் புதுப்பித்துக்கொண்டதுபோலவும் இருக்கும்.

### திட்டமிடுங்கள்

ஃபேஸ்புக் அல்லது ட்விட்டரில் பதிவிடுவதற்குப் பதில் உங்கள் அன்பானவர்கள் பற்றி யோசியுங்கள். குடும்ப உறுப்பினர்களைத் திரையரங்குக்கோ உணவு விடுதிக்கோ அழைத்துச்செல்லத் திட்டமிடலாம். போனிலேயே முன்பதிவு செய்யலாம். உறவுகளுடன் கூடுலாக நேரத்தைச் செலவிடுங்கள்.

### கேளுங்கள்

போன் திரைதான் மிகப் பெரிய எதிரி. இதற்கு மாற்றாக 'பாட்காஸ்டிங்' எனப்படும் குரல் வழி இணைய ஒலிபரப்புகளைக் கேட்கலாம். ஆடியோ நூல்களைக் கேட்கலாம். உங்கள் குரலில் செய்திகளைப் பதிவுசெய்யலாம். உதாரணத்துக்கு அலுவலகம் முடிந்து வீட்டுக்கு செல்லும்போது, குழந்தைகளுக்கான செய்திகளைப் பதிவுசெய்து அதை அவர்களுடன் பகிர்ந்துகொள்ளலாம்.

### முதலீடுக்கு யோசியுங்கள்

முதலீடு செய்வது தொடர்பான ஆலோசனைகளை வழங்கும் தனிநபர் செயலிகளும் அநேகம் இருக்கின்றன. அவற்றில் நேரத்தைச் செலவிடுவதன் மூலம், பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளலாம். இன்ஸ்டாகிராமில் படம் பார்ப்பதைவிட, ஓய்வு கால நிதித் திட்டமிடல் தொடர்பான குறிப்புகளை வாசிப்பது நல்லது அல்லவா!

### எழுதுங்கள்

சிறந்த விஷயங்கள் அலையடிக்கின்றனவா? அதை போனில் உள்ள குறிப்பேட்டில் எழுதி வையுங்கள். இதற்கென பிரத்யேகச் செயலிகளும் இருக்கின்றன. இது ஒரு பழக்கமாக மாறினால், உங்கள் போனையே ஒரு நாட்குறிப்பைப் போலப் பயன்படுத்தலாம். தேவைப்படும்போது இந்தக் குறிப்புகளைத் திரும்பிப் பார்த்து ஊக்கம் பெறலாம்.

### சொல் புதிது

டிக்ஷனரி செயலிகளை இயக்கி, புதிய சொற்களுக்கான பொருள்களை அறிந்துகொள்ளலாம். தினம் ஒரு புதிய சொல்லைத் தெரிந்துகொள்வது என வைத்துக்கொள்ளலாம். தெரிந்துகொள்ளும் சொல்லைப் பயன்படுத்தியும் பார்க்கலாம். பாக்கெட் போன்ற செயலியைப் பயன்படுத்தி, கட்டுரைகளை வாசிக்கலாம். இணையத்தில் உலவும்போது கண்ணில்படும் நல்ல கட்டுரைகளைப் பின்னர் வாசிக்க இந்தச் செயலி உதவுகிறது.


### மூளைக்கு வேலை

செஸ் போன்ற மூளைக்கு வேலை கொடுக்கும் விளையாட்டுகளில் ஈடுபடலாம். உடற்பயிற்சிக்கு உதவும் செயலிகளைத் தரவிறக்கம் செய்து, பிட்னசில் கவனம் செலுத்தலாம். ஸ்மார்ட் போனைச் சரியாகப் பயன்படுத்துவதன் மூலம், நேரம் வீணாவதைத் தவிர்ப்பதுடன் செயல்திறனையும் அதிகரித்துக்கொள்ளலாம்.

# எழுத்துருவை அறிய...

இணையத்தில் பல வகையான எழுத்துருக்கள் உள்ளன. ஒரு சில எழுத்துருக்கள் எளிமையாகவும் ஈர்ப்புடையதாகவும் இருக்கலாம். இத்தகைய எழுத்துருக்களை நீங்கள் பயன்படுத்த விரும்பலாம். ஆனால், குறிப்பிட்ட அந்த எழுத்துரு தொடர்பான தகவல் தெரிந்தால் மட்டுமே இது சாத்தியம். இதுபோன்ற நேரங்களில் 'வாட்திபாண்ட்' செயலி வழிகாட்டுகிறது. எழுத்துருக்களை போன் கேமராவில் படம் எடுத்து, இந்தச் செயலியில் சமர்ப்பித்தால் அந்த எழுத்துருவின் பெயர் என்ன என்பது உள்ளிட்ட தகவல்களை இந்தத் தளம் தெரிவிக்கிறது. வடிவமைப்பாளர்களுக்கும் எழுத்துருக்களை அதிகம் பயன்படுத்துபவர்களுக்கும் இந்தச் செயலி பயனுள்ளதாக இருக்கும்.

**மேலும் தகவல்களுக்கு:**
**http://www.myfonts.com/WhatTheFont**




# கூகுளில் டிஸ்னிலாண்ட்




தேடியந்திர நிறுவனமான கூகுளின் நூற்றுக்கணக்கான துணை சேவைகளில் சிறிது சர்ச்சைக்குரியது என்றாலும், மிகவும் சுவாரசியமானது கூகுள் ஸ்டீரிட் வீயூ சேவை. உலகின் முக்கிய நகரங்கள், நினைவுச் சின்னங்களை கூகுள் வரைபடத்தின் மீது, 360 கோணத்திலான காட்சிகளாகப் பார்த்து ரசிக்க இது உதவுகிறது.

அமேசான் மழைக்காடுகள், பனிப் பிரதேசத்துத் துருவக் கரடிகள், ஆக்ராவின் தாஜ்மகால், இமையமலைச் சிகரம் எனப் பலவற்றை ஸ்டீரிட் வியூ சேவை மூலம் அணுகலாம். இந்தப் பட்டியலில் இப்போது டிஸ்னி நிறுவனத்தின் பொழுதுபோக்குப் பூங்காக்களும் சேர்ந்துள்ளன.

goo.gl/QDf1EV

# இசைப்பிரியர்களின் தெரிவு ஸ்பாட்டிபை





'ஸ்பாட்டிபை' சேவை ஸ்ட்ரீமிங் முறையில் பாடல்கள், இசைக்கோவைகளைக் கேட்டு ரசிக்க வழி செய்கிறது. உறுப்பினர்கள் கட்டணம் அல்லது விளம்பரம் சார்ந்த வசதியைத் தேர்வு செய்யலாம் என்பதால், இதில் காப்புரிமை பிரச்சினை கிடையாது.

சட்டபூர்வமாக இசையைக் கேட்டு ரசிக்கலாம். 'ஸ்பாட்டிபை' யில் மேலும் பல இசை சார்ந்த வசதிகள் இருக்கின்றன.

இசைப்பிரியர்கள் மத்தியில் பிரபலமாக இருக்கும் ஸ்பாட்டிபை சேவை இந்தியாவில் இன்னும் அதிகாரப்பூர்வமாக அறிமுகமாகவில்லை.

ஆனால், இந்தியா உள்ளிட்ட நாடுகளில் இந்தச் சேவையை விரிவாக்கம் செய்யும் ஆர்வத்தை இந்நிறுவனம் வெளிப்படுத்தியுள்ளது.

# எமோஜி வடிவங்கள்!



வாட்ஸ் அப்பிலும் இதர சமூக ஊடகங்களிலும் உலவும்போது, அழகான எமோஜி உருவங்களைத் தவறாமல் பார்க்க முடிகிறது. சில நேரங்களில் இந்த எமோஜிகளே கலைப் படைப்புகளாக இருப்பதையும் பார்த்திருப்பீர்கள். இந்தக் கலைநயமான எமோஜிகளை நீங்களும் பயன்படுத்த விரும்பினால், எமோஜி ஆர்ட் தளம் அதற்கு வழிகாட்டுகிறது. இந்தத் தளம் விதவிதமான எமோஜி கலை வடிவங்களை அளிக்கிறது. இவற்றைப் பார்த்து ரசிக்கலாம். அப்படியே நகலெடுத்தும் பயன்படுத்தலாம்.

**இணைய முகவரி:** http://emojiart.org/

# இணையத்தில் பயிற்சி

கல்லூரி மாணவர்கள் பணிக்கான முன் அனுபவம் பெற முன்னணி நிறுவனங்களில் உள்ள பயிற்சி நிலைப் பணிகளை நாடுகின்றனர். இத்தகைய பணி வாய்ப்புகளை இணையம் மூலமும் தேடலாம். இதற்கென பிரத்யேக இணையதளங்கள் இருக்கின்றன. இவ்வளவு ஏன், இணையம் மூலமே பயிற்சிப் பணியாளர்களாகப் பணியாற்றும் வாய்ப்பையும் பெறலாம்.

அதாவது, இருந்த இடத்திலிருந்தே உலகின் பல இடங்களில் உள்ள நிறுவனங்களில் பயிற்சி நிலை ஊழியர்களாகப் பணியாற்றி அனுபவம் பெறலாம். இதற்கான பணியிடங்களைப் பட்டியலிடுகிறது ரிமோட் இண்டர்ன்ஷிப்ஸ் இணையதளம். இதில் ஊதியம் அளிக்கக்கூடிய பயிற்சி வாய்ப்புகளையும் காணலாம். இத்தளத்தில் விண்ணப்பிக்கும் வசதியும் இருக்கிறது. மார்க்கெட்டிங், வடிவமைப்பு, பத்திரிகை, மென்பொருள் உருவாக்கம் உள்ளிட்ட துறைகளில் வாய்ப்புகளை நாடலாம்.

**முகவரி:** http://remoteinternships.co/



# ஸ்டீபன் ஹாங்கிங்கின் பொன்மொழிகள்

பல அறிவியல் குறிப்புகள் உட்பட உலகம் முழுவதும் விற்பனையில் சிறந்து விளங்கிய புத்தகங்களை விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங் எழுதியுள்ளார். இவரது கருத்துக்கள் பலராலும் பின்பற்றப்படுகிறது. ''இந்த பிரபஞ்சத்தை விட பெரியது அல்லது பழமையானது எதுவுமில்லை. ''கீழ்நோக்கி உங்கள் பாதத்தைப் பார்க்காதீர்கள், மேல்நோக்கி நட்சத்திரங்களைப் பாருங்கள்.'எப்படியாயினும் கடினமான வாழ்க்கை உருவாகலாம், அங்கு எப்போதும் உங்களால் செயல்பட மற்றும் வெற்றிபெற முடிந்த ஏதாவது இருக்கும்.

''நமது பேராசை மற்றும் மூடத்தனத்தின் மூலம் நாம் நம்மை அழித்துக்கொள்ளும் அபாயத்தில் இருக்கிறோம். ''நீங்கள் எப்போதும் கோபமாகவோ அல்லது குறை கூறிக்கொண்டோ இருந்தால், உங்களுக்கான நேரம் மற்றவர்களிடம் இருக்காது. ''நமது நடவடிக்கையின் உயரிய மதிப்பினை நாம் தேடிப் பெற வேண்டும்.'அமைதியான மக்கள் சத்தமான மனதைக் கொண்டிருக்கிறார்கள். 'வாழ்க்கை வேடிக்கையானதாக இல்லாமல் இருந்தால் துன்பம் நிறைந்ததாக இருக்கும்'' நாம் அறிவியலைப் புரிந்துகொள்வதற்கு முன், இந்த பிரபஞ்சம் கடவுளால் படைக்கப்பட்டது என்று நம்புவது இயற்கையானதே.

# ஆயிரம் இணையத்தளங்கள்!



புதிய இணையதளமான பிளக்.காம் ஒரே இடத்தில் ஆயிரம் இணையதளங்களைத் தொகுத்துத் தந்து வியக்கவைக்கிறது. இணையத்திலிருந்து திரட்டப்பட்ட ஆயிரம் இணையதளங்கள் இதன் முகப்புப் பக்கத்தில் இடம்பெற்றுள்ளன. மேல் பாதியில் தளங்களின் முகவரிகள் அவற்றின் லோகோவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அதன் கீழ், செய்தி, ஷாப்பிங், பொழுதுபோக்கு எனப் பல்வேறு தலைப்புகளின் கீழ் இணைய தளங்களின் முகவரிகள் மட்டும் வரிசையாக இடம்பெற்றுள்ளன. கீழ்ப்பகுதியில் மீண்டும் தளங்களின் லோகோக்கள் அணிவகுக்கின்றன.

எந்த இணைப்பை கிளிக் செய்தாலும் அந்த இணையதளத்துக்கான பக்கம் அருகே திறக்கப்படுகிறது. மொத்தம் ஆயிரம் இணையதளங்கள் இப்படி முகப்பு பக்கத்தில் அடையாளம் காட்டப்பட்டுள்ளன. பிரபலமான யூடியூப், அமேசான், கூகுள், டிவிட்டர் உள்ளிட்ட அனைத்து முன்னணித் தளங்களையும் பார்க்க முடிகிறது.

**இணையதள முகவரி:**
**http://fulck.com/**

# சாம்சங்கின் முன்னோட்ட செயலி

சாம்சங் நிறுவனத்தின் புதிய அறிமுகமான கேலெக்ஸி எஸ் 9 ரக போன்களை வெள்ளோட்டம் பார்க்க விரும்பினால், ஷோரூமைத் தேடிச்செல்லத் தேவையில்லை. சாம்சங் நிறுவனம் உருவாக்கியுள்ள முன்னோட்டச் செயலியைப் பதிவிறக்கம் செய்தாலே போதும். புதிய கேமரா, துணைப் பொருட்கள், செயலிகள் உள்ளிட்ட நான்கு பிரிவுகளில் தகவல்கள் இடம்பெற்றுள்ளன. வீடியோக்களும் உள்ளன. பிளே ஸ்டோரில் இந்தச் செயலி இருக்கிறது. ஆண்ட்ராய்டின் மேம்பட்ட வெர்ஷன்களில்தான் இதைப் பயன்படுத்த முடியும்.





# இது தான் அழகு!

முகத்துக்கு போடும் மேக்கப்பை, கழுத்து, கைகளுக்கு ஒரே சீராக போட வேண்டும். இல்லாவிட்டால் முகம் ஒரு நிறம், கழுத்து ஒரு நிறமாகத் தெரிந்து இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டதற்கு பலன் இல்லாமல் போய் விடும்.

சப்பையான மூக்கை எடுப்பாகவும், சற்று பெரிதான மூக்கை சிறியதாகவும் காட்ட சரிப்படுத்தும் மேக்-அப் மூலம் லைன்கள் வரைந்து சரி செய்து விடுவோம். கன்னத்தில் போடும் சிவப்பழகு மேக்கப் என்பது தனியாக சிவப்பாக தெரியக் கூடாது. முகத்தின் மேக்கப்போடு ஒன்றி வர வேண்டும். இதை சரியான முறையில் போடுவதால் பள்ளம் விழுந்த கன்னங்களாக இருந்தால்கூட அவற்றை உயர்த்திக் காட்ட முடியும்.

இறுதியாக நெற்றியில் வைக்கும் பொட்டு மெரூன் அல்லது பிரவுண் நிறத்தில் வைப்பது நல்லது. அதைச் சுற்றி டிசைன்கள் போட்டுக் கொள்ளலாம். அதிகமாக கல் அல்லது ஜரிகை வைத்த பொட்டுகள், வீடியோ வெளிச்சத்தில் பட்டு மினுங்கினால் நெற்றியில் பொட்டே இல்லாத தோற்றத்தை அளித்துவிடும்.

முன் நெற்றியிலும், கண்களின் ஓரங்களிலும் சிறிய கற்களை வைத்துக்கொள்வது தற்போது பேஷன் ஆகி வருகிறது. இது பொட்டு இல்லாத இடங்களில் வைப்பதில் மேலும் அழகு சேர்க்கிறது.

# ஏ.சி.யினால் ஏற்படும் சரும வறட்சி



ஏசியில் பணியாற்றும் பெண்கள், தங்கள் சருமத்திற்கு ஏற்ற மாய்ஸ்ரைசர்கள் பயன்படுத்துவது அவசியம். ஒரு நாளைக்குக் குறைந்து 3 லிட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும். அதிகமான தண்ணீர் குடித்து உடலை நீர்த்தன்மையுடன் வைத்திருந்தால், சரும வறட்சி, மங்கலாக்கிப் பாதிப்பு ஏற்படுத்துவதில் இருந்து தப்பிக்கலாம்.

உங்கள் சருமத்துக்கு ஏற்ற திரவத்தன்மையுடன் கூடிய லோஷன்களை ஹேண்ட்பேக்கில் வைத்திருங்கள். இதனை 2 மணி நேரத்துக்கு ஒருமுறையோ, அல்லது சருமம் உலர்வாகத் தோன்றும் சமயத்திலோ எடுத்து அப்ளை செய்யுங்கள். ஏசி பயன்பாட்டில் அதிக நேரம் இருப்பவர்கள், ஒரு நாளைக்கு 6 முறையாவது முகத்தைக் குளிர்ந்த நீரால் கழுவுங்கள்.

வாட்டர் ஸ்ப்ரே பாட்டிலில், ரோஸ் வாட்டரை நிரப்பி, உங்கள் டேபிளில் வைத்துக்கொள்ளுங்கள். மூன்று மணி நேரத்துக்கு ஒருமுறை முகத்தில் ஸ்ப்ரே செய்துகொண்டால், முகத்தின் ஈரப்பதம் குறையாமல் இருக்கும். அல்லது ஆல்ஹாகல் சேர்க்காத ஈரத்தன்மையுடன் கூடிய வைப்ஸ் மூலம் அவ்வப்போது முகத்தில் லேசாகத் துடைத்துக்கொண்டால், புத்துணர்வுடன் வைத்திருக்க முடியும்.

குளிக்கும்போது சில சொட்டு தேங்காய் எண்ணெய்யை நீரில் சேர்த்து குளிக்கலாம். இது, சருமத்தில் எண்ணெய்ப் பசை இருக்க உதவும். அதேபோல, குளிப்பதற்கு முன்பு தயிரை உடம்பில் தடவி, மிதமான வெந்நீரில் குளித்துவந்தால், வறண்ட சருமம் சரியாகிவிடும்.

வாழைப்பழக் கூழுடன் பட்டர் ஃப்ரூட் கலந்து, சருமத்தில் பூசி, ஊறவைத்துக் கழுவுவதன் மூலம் சருமம் மிருதுவாகும்.

நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், ஆலிவ் எண்ணெய் மூன்றையும் சம அளவு எடுத்துக் காய்ச்சி வைத்துக்கொள்ளுங்கள். தினமும் குளிக்கும்போது, இந்த எண்ணெய்யை உடலில் தடவிக் கொள்ளுங்கள்.

# கால்களின் ஷேவிங் செய்யும் போது...



கால்களில் ஷேவ் செய்யும் போது செய்யும் தவறுகள் என்ன என்பதை தெரிந்து அதனை தவிர்ப்பதால் உங்கள் முடி வளர்ச்சியைக் குறைத்து சருமத்தை பாதுகாப்பது எப்படி என்பதை தெரிந்து கொள்ளலாம்.

குளிப்பதற்கு முன் சருமம் கடினமாகவும் வறண்டும் இருப்பதால் ஷேவ் செய்வதை தவிர்க்க வேண்டும். முதலில் சருமத்தை நன்கு நனைத்துவிட்டு அதன் பிறகு முடியை நீக்க முயல வேண்டும். இது பெண்கள் கால்களை ஷேவ் செய்யும் போது பொதுவாகச் செய்யும் தவறு.

உங்கள் கால் சருமத்தை ஷேவ் செய்யும் முன் சுத்தம் செய்வது அவசியம். இதனால் வறண்ட மற்றும் இறந்த தோல் பகுதிகள் நீக்கப்பட்டு சரும எரிச்சலும் குறைக்கப்படும்.

சோப்பு உங்கள் சருமத்தை வறட்சியாகவும், அரிப்புடையதாகவும் செய்யும். எனவே சோப்பிற்கு பதிலாக ஷேவிங் பாம்மை உபயோகிப்பது அரிப்பைக் குறைத்து நல்ல பலன் தரும்.

பெண்கள் தங்கள் கால்களை ஷேவ் செய்யும் போது செய்யும் ஒரு பொதுவான விஷயம் பழைய ரேசரை உபயோகிப்பது. ரேசர்கள் காலப் போக்கில் மழுங்கிவிடுவதுடன் நெருக்கமான சேவை தருவதில்லை. மாறாக அவை சரும எரிச்சலையும் தரும் என்பதால் அவற்றை முதலில் தூக்கி எறியுங்கள்.

ஷேவ் செய்ய உகந்த வழி உங்கள் காலின் கீழ் பகுதியில் இருந்து துவங்கி மேல் நோக்கி செய்ய வேண்டும். இதனால் உங்கள் முடி வளர்ச்சி குறைவதுடன் மிருதுவான சருமமும் கிடைக்கும்.

உங்க ரேசரை இன்னொருத்தருக்குக் கொடுக்காதீங்க. இல்ல அவங்களோடதை நீங்க உபயோகிக்காதீங்க இது பல பெண்கள் செய்கிற தவறு. ஏனென்றால் இதில் பல நோய்த்தொற்றுக்கள் மற்றும் பாக்டீரியாக்கள் குடிகொண்டிருக்கும்.

கிரீம் ஷேவிங் செய்வதால் உங்கள் சருமம் வறட்சி அடையும். எனவே ஒரு மாய்ஸ்சுரைசர் உபயோகிப்பது நல்லது. இது எரிச்சல் மற்றும் சரும வறட்சியைத் தடுக்கும்.




# அழகான தொடைகளுக்கு...

அழகான தொடை பெற வேண்டுமென்ற ஆசை எல்லோருக்கும் இருக்கும். குறிப்பாக பெண்களுக்கு தான் இதன் மீது அதிக நாட்டம் இருக்கும். வயிற்று கொழுப்பிற்கு அடுத்தபடியாக தொடையில் உள்ள கொழுப்பை கரைப்பதுதான் மிகவும் கடினமானது. தொடையில் உள்ள கொழுப்பை கரைக்க சில தகவல்கள்:

ஒருசில டயட் மற்றும் உடற்பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக தொடையில் உள்ள கொழுப்பை கரைக்கும் படியான உடற்பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்காக ஒரே உடற்பயிற்சியை மட்டும் செய்து கொண்டிருக்கக் கூடாது. மாறாக வாழ்க்கை முறையில் சிறு மாற்றங்களை கொண்டு வந்தால்தான், தொடையில் உள்ள கொழுப்புக்களை கரைக்க முடியும்.

தினமும் காலையில் எழுந்து வாக்கிங் மேற்கொள்வதன் மூலம், தொடையில் உள்ள கொழுப்புக்களை எளிதில் கரைக்கலாம். மேலும் அலுவலகம் அருகில் இருந்தால், ஆட்டோ, வேன் போன்றவற்றில் செல்லாமல், நடந்து சென்றால், தொடையில் உள்ள கொழுப்பு குறைவதுடன், கால்களும் வலுவுடன் இருக்கும். எப்போதும் லிப்ட், எலிவேட்டர் போன்றவற்றை பயன்படுத்துவதற்கு பதிலாக, படிக்கட்டுகளை பயன்படுத்த வேண்டும். இதன் மூலமும் தொடையில் உள்ள கொழுப்புக்கள் குறைய ஆரம்பிக்கும்.

மேலும் நவீன உலகத்தின் அடையாளமாக தற்போது இருசக்கர வாகனங்கள் பல்வேறு வகையில், வண்ணங்களில் வந்துவிட்டது. இவை லோன் மூலமும் கிடைக்கிறது. இதனால் தற்போது டூவீலர் பயன்படுத்தாதவர்களே இல்லை என்ற நிலை காணப்படுகிறது. இதனால் சைக்கிள் ஓட்டுவோரின் எண்ணிக்கை குறைந்தது. இதனால் தொடைகளில் கொழுப்புக்கள் தங்க ஆரம்பித்துவிட்டது. எனவே பைக்கை அதிகம் பயன்படுத்தாமல், அவ்வப்போது சைக்கிளையும் பயன்படுத்த வேண்டும்.

தொடையில் உள்ள கொழுப்பை கரைக்க உதவும் உடற்பயிற்சிகளில் ஒன்றுதான் ஓடுவது. இத்தகைய ஓட்டத்தை வெளியே காற்றோட்டமாக சுத்தமான காற்றினை சுவாசித்தவாறே மேற்கொள்வது சிறந்தது. யோகாசனத்தில் தொடையை குறைப்பதற்கு என்று ஒருசில ஆசனங்கள் உள்ளன. சூரிய நமஸ்காரம் கூட தொடையில் உள்ள கொழுப்புக்களை கரைக்க பெரிதும் உதவியாக இருக்கும். சிறுவயதில் விளையாடிய ஸ்கிப்பிங் கூட தொடையில் உள்ள கொழுப்புக்களை கரைப்பதற்கு உதவி புரியும். தண்ணீர் அதிகம் குடித்தால், உண்ணும் உணவில் அளவு குறைந்து கொழுப்புக்கள் அதிகரிப்பது குறைவதுடன், உடலில் தங்கியுள்ள டாக்ஸின்களும் குறையும்.





# கிச்சன் டிப்ஸ்

தேங்காய்ப்பால் எடுத்து பிழிந்த சக்கையை தூக்கி எறியாமல், அதனை ஃப்ரீசரில் எடுத்து வைத்துக் கொண்டால், தேங்காய்ப் பூ சேர்த்து செய்யும் பொரியல் மற்றும் அரைத்து விட்ட சாம்பார் இவைகளுக்கு பயன்படுத்தினால் ரத்தக் கொதிப்பு மற்றும் இதய நோயாளி களுக்கும் தாராளமாக கொடுக்கலாம். சுவை நன்றாக இருக்கும்.

பண்டிகை பலகாரம் சாப்பிட்ட பின் வெறும் கடாயில் வறுத்த சீரகத்தை, கல் உப்புடன் பொடித்து, 1 ஸ்பூன் வாயில் போட்டு 1 டம்ளர் வெந்நீரில் பருகலாம் அல்லது இஞ்சி டீ போட்டும் பருகலாம்.

ஒரு கைப்பிடி வில்வ இலைகளுடன் சுக்கு, மிளகு, சீரகம் சேர்த்து இடித்து 2 லிட்டர் நீரில் போட்டுக் காய்ச்சி 1/4 லிட்டராக வற்ற வைத்து, அதை வெவ்வேறு வேளைகளில் பகிர்ந்து சாப்பிடவும். எல்லா வகைக் காய்ச்சல்களும் நீங்கும்.

வெள்ளரிப் பழத்துண்டுகள், தர்பூசணி, முலாம் பழத்துண்டுகளோடு சிறிது மோர், சர்க்கரை, பன்னீர் சேர்த்து ஜூஸ் தயாரித்தால் ருசியே தனிதான்.

காயவைத்த ஆரஞ்சு தோலில் ஒரு துண்டை சேர்த்து தேநீர் தயாரிக்கும்போது உடன் சேர்த்தால் தேநீர் சுவையும் மணமும் கொண்டதாக இருக்கும்.

எந்த ரசம் செய்தாலும் அடுப்பிலிருந்து இறக்கும்போது பதினைந்து திராட்சைப்பழங்கள் இட்டு இறக்கினால், ரசத்தின் சுவை இருமடங்காகும். இது சத்துள்ள ரசம்.

மோர்க்குழம்பு செய்யும்போது ஐந்து மாம்பழத்துண்டுகளை இட்டு கொதிக்க வைத்து இறக்கினால், மிதமான இனிப்புச் சுவையுள்ள மோர்க்குழம்பு ரெடி.

இட்லிக்கு மாவு அரைக்கும் போது இளநீர் அல்லது தர்பூசணிப்பழம் அல்லது வெள்ளரிப்பழத் துண்டுகளை சேர்த்து அரைத்து செய்தால் சுவையாக இருக்கும்.

சிறிது சுண்ணாம்புடன் புளி சேர்த்து, தேனீ கொட்டிய இடத்தில் போட்டால், சிறிது நேரத்தில் வலி நின்று விடும்.

இனிவரும் கோடைக்காலத்தில் கீழாநெல்லி இலையை அரைத்து வாரம் 3 முறை உடலில் தேய்த்து குளித்து வந்தால் தோல் பாதிப்புகள் வராது.

வெங்காய பஜ்ஜி செய்யும் போது வெங்காயத்தை கொஞ்சம் வதக்கி பின் பஜ்ஜி செய்தால் வெங்காயம் வட்டம் பிரிந்து வராது.

கடுக்காயை வலிப்பு நோய் வருபவர்களுக்கு தினமும் எலுமிச்சம் பழச்சாறுடன் கொடுத்து வர நோய் கட்டுப்படும்.

கோடைகாலத்தில் ஐஸ்கிரீம், குளிர்பானம் குடிப்பதால் சிலருக்கு ஜலதோஷம் பிடிக்கும். அந்த மாதிரி ஏற்படும் போது, தூதுவளைப் பழங்களை (நாட்டு மருந்து கடையில் கிடைக்கும்) வாங்கி, அதில் குண்டூசியால் துளைகள் போட்டுத் தேனில் ஊற விடவும். தினமும் காலையில் வெறும் வயிற்றில், ஊறிய பழங்களை இரண்டு, மூன்று எடுத்து தேனுடன் சாப்பிட்டு வர ஜலதோஷம் நீங்கி விடும்.

# கண்களை பாதுகாக்க...

நம் கண்களை அழகாகவும் ஆரோக்கியமாகவும் வைத்துக் கொள்ள வீட்டில் கிடைக்கும் பொருட்களை கொண்டே எளிமையான வழிமுறைகளை பின்பற்றலாம். வீட்டிலிருந்தே கண்களைப் பாதுகாக்கும் எளிமையான இயற்கை வழிமுறைகளை பார்க்கலாம்.

1. அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை, வெள்ளரிக்காய்தான் கண்களுக்கு பெஸ்ட் ட்ரீட்மென்ட். கண்களை மூடிக் கொண்டு, நறுக்கிய வெள்ளரிக்காயை வைத்துக்கொள்ள வேண்டும். இதன்மூலம் கருவளையம் நீங்கி, கண்கள் புத்துணர்ச்சியாக இருக்கும்.

2. வெள்ளரிக்காய் - 1/2, உருளைக்கிழங்கு - 1/2, மஞ்சள் தூள் - சிறிதளவு, எலுமிச்சை - 1. வெள்ளரிக்காயையும் உருளைக்கிழங்கையும் துருவிக் கொள்ளவும். அதனுடன் சிறிதளவு மஞ்சள் தூள், எலுமிச்சை சாற்றை கலந்துகொள்ளவும். பின்னர், கண்களின் மேல் ஒரு காட்டன் துணியை வைத்துக் கொண்டு அதன்மேல் இந்தக் கலவையை பூசிக்கொள்ளவும். 15 நிமிடங்கள் வைத்திருந்து கண்களைக் கழுவவும். (இவை, நேரடியாகக் கண்களின் மேல் படக்கூடாது). இவ்வாறு பயன்படுத்துவதால், கண்கள் புத்துணர்ச்சியுடன் இருக்கும். 3. ஸ்டிராபெர்ரி பழத்தை மெல்லியதாக ஸ்லைஸ் செய்து, கண்களின் மேல் நேரடியாக வைத்துக் கொள்ளவும். இது, கருமையை நீக்கி, புத்துணர்ச்சியை அளிக்கும்.

4. காட்டன் பந்துகளை எடுத்து, அவற்றைக் குளிர்ந்த பாலில் நனைத்து, கண்களைச் சுத்தப்படுத்த வேண்டும். இதன்மூலம் கண்களில் உள்ள அழுக்கை நீக்கலாம்.

5. ரோஸ் வாட்டரை காட்டனில் நனைத்து கண்களை துடைத்து வந்தால், கண்களுக்குப் பொலிவு கிடைக்கும். புத்துணர்ச்சியுடன் இருக்கும்.

6. ஒரு டீஸ்பூன் சோம்பை ஒரு கப் தண்ணீரில் நன்றாகக் கொதிக்க வைக்கவும். அந்தத் தண்ணீரால் முகத்தைக் கழுவி வந்தால், கண்களின் சோர்வு நீங்கும்.

# பெண்களின் ஆடைக்கலாச்சாரம்



மென்மையானதும் கவர்ச்சிகரமானதும் ஆன உடலமைப்பு கொண்ட பெண்கள் அணியும் ஆடைகள் பலவிதமான ஜன்னல்களோடும் உடலோடு இறுக்கமாக ஒட்டியவையாகவும் நீளம் குறைந்தவையாகவும் கைகால்கள் இல்லாதவையாகவும் இருப்பதைக் காண்கிறோம்.

பெண் என்பவள் பலவீனமானவள், அவளது உடலின் கவர்ச்சி கண்டு ஏதாவது அந்நிய ஆண் ஈர்க்கப்பட்டால் அங்கு அவளது கற்பும் தொடர்ந்து உயிரும் பறிபோக வாய்ப்பு உண்டு என்பதை நாம் அனைவரும் அறிந்தே இருக்கிறோம்.

அதனால் இந்த விதமான ஆடைகள் பாதுகாப்பு அற்றவை என்பதை நிரூபிக்க சான்றுகள் தேவையில்லை. அன்றாடம் தொடர்ந்து அதிகரித்துவரும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களே இதை உறுதிப்படுத்துகின்றன.

நமது மகளோ அல்லது உடன்பிறந்த சகோதரியோ அல்லது பெற்றெடுத்த தாயோ அல்லது கட்டிய மனைவியோ மேற்கூறப்பட்ட பாதிப்புகளுக்கு உள்ளாகக் கூடாது என்பதில் நாம் குறியாக இருக்கிறோம். நமது குடும்ப அமைப்பு சீர்குலையக் கூடாது என்பது நம்மில் ஒவ்வொருவரதும் விருப்பம்

பொதுவாகவே நமக்கு சொந்தமான ஒரு விலைமதிப்புள்ள ஒரு பொருளையோ அல்லது பணத்தையோ வெளியே எடுத்துச் செல்லவேண்டி வந்தால் அதை பத்திரமாக பொதுமக்கள் பார்வையில் படாமல் இருக்க மறைத்துதான் எடுத்துச் செல்வோம். காரணம் அதைக் கவர்ந்தெடுக்க கள்வர்கள் வெளியே காத்திருக்கிறார்கள் என்பதை நாம் நன்கு உணர்ந்திருக்கிறோம்.

இங்கு நம் அன்புக்குரியவர்களின் உடலை காட்சிக்கு வைத்து காமுகர்களுக்கு அழைப்பு கொடுப்பதுபோலல்லவா அமைகிறது பெண்களின் ஆடை? இவ்வாறு நம் பணத்தை விட, செல்வத்தை விட விலைமதிக்கமுடியாத நம்மவர்களின் கற்பையும் உயிரையும் துச்சமாகக் கருதச் செய்வது எது?

இவ்வாறு நமக்கும் குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் பெரும் ஆபத்தானது என்று அறிந்து பெண்களின் ஆடைக்குறைப்புக் கலாச்சாரத்தைக் கட்டுப்படுத்த பெண்கள் முன்வர வேண்டும். நாகரீகம் என்ற போர்வையில் உடலை காட்டாமல் கௌரவமாக உடை அணிய பெண்கள் முன்வர வேண்டும்.

அது தான் பெண்களுக்கும், சமுதாயத்திற்கும் பாதுகாப்பானது.

# கோபத்தை குறைப்பது எப்படி?

மனிதர்களிடம் இருக்கும் பல்வேறு குணங்களில் கோபமும் ஒன்று. நியாயமான ஒரு விஷயத்துக்குக் கோபம் வருவது தவிர்க்க முடியாதது. மற்றவர்களும் அதில் இருக்கும் நியாயத்தை உணர்ந்து, தவறாக நினைக்க மாட்டார்கள். ஆனால் பெரும்பாலானவர்கள் தேவையின்றி, சிறிய விஷயங்களுக்கெல்லாம் கோபப்படுகிறார்கள். இது நல்லதல்ல. உடல் நலத்துக்கும் தீங்கானது. கோபமே வராத மனிதர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். என்னுடைய பல வருட நண்பர்கள் இருவர் எந்த விஷயத்துக்கும் கோபப்பட்டு பார்த்ததே இல்லை.

கோபம் வரும் சூழலிலும் ஒரு புத்தரைப்போல் அமைதி காத்துவிடுவார்கள். இந்தக் குணம் அபூர்வமானது.


இந்த நண்பர்களைபோல் இருக்க வேண்டும் என்றுதான் நான் நினைப்பேன். ஆனால் என்னால் சில நேரங்களில் கோபத்தைக் கட்டுப்படுத்த முடிவதில்லை. உங்களை யார் கோபப்படுத்தினாலும் நம் பெற்றோர், நண்பர், சகோதரர், சகோதரி, உறவினர்தானே என்று நினைத்துக்கொள்ளுங்கள்.


அன்பு அதிகம் இருக்கும் இடத்தில் கோபம் வருவதற்குத் தயங்கும். நம் மீது யாராவது கோபப்படுவதை விரும்புவோமா? இல்லைதானே? நம்மைப் போல்தான் பிறரையும் நினைக்க வேண்டும்.

ஒருவேளை கட்டுப்படுத்த முடியாத கோபம் வந்தால், ஒரு தம்ளர் தண்ணீரைக் குடியுங்கள். அல்லது அந்த இடத்தை விட்டு அகன்றுவிடுங்கள்.

அல்லது ஒரு புத்தகத்தை எடுத்து வாசிக்க ஆரம்பித்துவிடுங்கள். நாளடைவில் கோபம் உங்களுக்குக் குறைந்துவிடும். தேவை இல்லாமல் கோபப்பட்டால், அந்தக் கோபத்துக்கும் மதிப்பில்லை.

நம்மைப் பற்றிய மதிப்பீடும் குறையும். அதுவே கோபத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டால், உங்களைக் கொண்டாடுவார்கள்.





# பேராசை!

மகிழம்பூ காட்டில் குரங்கும் அணிலும் வசித்து வந்தன. அவை நல்ல நண்பர்களாகவும் இருந்தன. காட்டில் விளையும் கனிகளையும் கிழங்குகளையும் உண்டு, விளையாடிப் பொழுதைக் கழித்துவந்தன.

காட்டில் மழையே பெய்யவில்லை. அதனால் செடி, கொடிகள் வாடிப் போயின. மரங்களும் பூக்கவோ, காய்க்கவோ இல்லை. குரங்குக்கும் அணிலுக்கும் முன்புபோல உணவு கிடைக்கவில்லை. அவை ஆங்காங்கே மிஞ்சியிருந்த கனிகளையும் கிழங்குகளையும் உண்டு வந்தன. சில வாரங்களில் உணவே இல்லாமல் போய்விட்டது.

உடனே அணில் குரங்கிடம், 'நண்பனே! இனியும் இந்தக் காட்டில் உணவு கிடைக்கும் என்று தோன்றவில்லை. நீ ஒரு திசைக்குச் சென்று உணவு தேடு. நான் வேறு திசைக்குச் சென்று உணவு தேடுகிறேன்' என்று சொன்னது. குரங்கும் ஒப்புக்கொண்டது.

தினமும் காலையில் குரங்கும் அணிலும் உணவு தேடிச் சென்றுவிட்டு, மாலையில் திரும்பிவந்தன. இவ்வாறு சில நாட்கள் கழிந்தன.

ஒருநாள் மாலை திரும்பி வந்த குரங்கு அணிலிடம், 'நண்பனே, நீ மாலையில் தினமும் உற்சாகமாகத் திரும்பி வருவதைப் பார்த்தால் உனக்கு நல்ல உணவு கிடைக்கிறது என்று தெரிகிறது. ஆனால் எனக்கு மிகக் குறைவான உணவே கிடைக்கிறது.

நீ போகும் இடத்துக்கு என்னையும் அழைத்துச் செல்வாயா?'என்று கேட்டது.

குரங்கைப் பார்க்க அணிலுக்கும் பாவமாக இருந்தது. 'சரி நண்பா, நாளை நான் போகும் இடத்துக்கு உன்னையும் அழைத்துச் செல்கிறேன்' என்று சொன்னது அணில்.

மறுநாள் அணில் குரங்கை அருகிலுள்ள கிராமத்துக்கு அழைத்துச் சென்றது. அங்கே ஒரு பெரிய பழத் தோட்டம். பல்வேறு பழங்கள் பழுத்துக் கிடந்தன.

அணில் குரங்கிடம், 'நண்பனே! வேலியோரம் நிற்கும் மரங்களிலுள்ள பழங்களை மட்டும் நாம் சாப்பிட்டுவிட்டுப் போய்விட வேண்டும்' என்று சொன்னது. குரங்கும் 'சரி' என்றும் ஒப்புக்கொண்டது.

குரங்கும் அணிலும் தோட்டத்தின் வேலியோரம் நின்ற மரங்களிலுள்ள பழங்களை மட்டும் சாப்பிட்டுப் பசியாறின. பிறகு இரண்டும் புறப்பட்டுச் சென்றன. குரங்கின் மனதில் வேறு எண்ணம் முளைத்தது.

'என்ன இவன்... இந்தத் தோட்டம் முழுவதும் விதவிதமாக ஏராளமான பழங்கள் பழுத்துக் கிடக்கின்றன. ஆனால் வேலியோரம் மட்டும் உள்ள பழங்களைத் தின்றுவிட்டுப் போகலாம் என்கிறான். இரவு இவன் அறியாமல் நாம் மட்டும் வந்து பழங்களைச் சாப்பிட வேண்டும்' என்று நினைத்துக்கொண்டது குரங்கு.

மறுநாள் காலை அணில் குரங்கைப் பார்க்கச் சென்றது. அங்கே பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.

குரங்கு உடல் முழுவதும் காயங்களுடன் முனகியபடி படுத்துக் கிடந்தது.

'நண்பனே, என்ன ஆனது? உன் உடல் முழுவதும் எப்படிக் காயம் ஏற்பட்டது?'என்று உண்மையான அக்கறையோடு கேட்டது அணில்.

'நண்பனே, நீ அழைத்துச் சென்ற பழத்தோட்டத்துக்காரர் என்னை நன்றாக அடித்துவிட்டார்' என்று கண்ணீரோடு சொன்னது குரங்கு.

'தோட்டக்காரர் உன்னை அடித்தாரா? நானும் பல நாட்களாக அந்தத் தோட்டத்தில் போய்ப் பழங்களைச் சாப்பிடுகிறேன். அவர் என்னை அடித்ததே இல்லையே. உன்னை மட்டும் ஏன் அடித்தார்? நாம் இருவரும் ஒன்றாகத்தானே அந்தத் தோட்டத்துக்குப் போனோம். இதெல்லாம் எப்போது நடந்தது?' என்று அணில் கேட்டது.

'நண்பனே! நேற்று உனக்குத் தெரியாமல் அந்தி சாயும் நேரத்தில் அந்தப் பழத்தோட்டத்துக்கு மீண்டும் போனேன். வேலியோர மரங்களைத் தாண்டி உள்ளே சென்றேன். அங்கே வாழை, சீதாப்பழம், பலாப்பழம் போன்றவை பழுத்துக் கிடந்தன. நான் அவற்றைச் சாப்பிடும்போது தோட்டக்காரர் வந்து என்னை அடித்துவிட்டார்' என்று முனகியபடி சொன்னது குரங்கு.

'நண்பனே, நான்தான் ஏற்கெனவே சொன்னேனே வேலியேரரம் இருக்கும் மரங்கள் எல்லாம் கொய்யா மரங்கள். கொய்யா என்றால் 'பறிக்காத' என்று பொருள். கொய்யாப் பழம் என்றால் மனிதர்கள் பறிக்காத பழம் என்று சொல்வார்கள். அந்தப் பழங்களை மனிதர்கள் நம் போன்ற விலங்குகளுக்காகவே விட்டு வைத்திருக்கிறார்கள். நாம் அவற்றைச் சாப்பிட்டுப் பசியாற வேண்டும். அதைத் தாண்டி போகக் கூடாது என்பதற்காகத்தான் வேலியோரம் அந்த வகை மரங்களை நட்டு வளர்க்கிறார்கள். உள்ளே மனிதர்கள் சாப்பிடவும், வியாபாரம் செய்வதற்கும் உரிய மரங்களை நட்டு வளர்க்கிறார்கள். நீ அவற்றைச் சாப்பிடச் சென்றது தவறுதானே?' என்று கேட்டது அணில்.

'ஆமாம் நண்பா, என் பேராசையால் கிடைத்த துன்பம் இது என்பதை ஒப்புக்கொள்கிறேன். இனி அப்படிச் செய்ய மாட்டேன்' என்று சொன்னது குரங்கு.

'நல்லது நண்பா! கிராமத்து மனிதர்கள் இன்னும் நம் போன்ற பிராணிகள் மீது அன்பு கொண்டவர்கள்தான். அவர்கள் நமக்காகவும் சில மரங்களை வளர்க்கத்தான் செய்கிறார்கள். அதற்காக நாம் அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். பேராசையால் அந்த மக்களின் உழைப்பைத் திருடக் கூடாது' என்றது அணில்.

# இதை கண்டுபிடியுங்கள்!

கீழே உள்ள 10 குறிப்புகள் ஒரு குறிப்பிட்ட நாட்டைக் குறிக்கின்றன. அது எந்த நாடு என்பதைக் கண்டுபிடியுங்கள்.

1. கிழக்கு ஐரோப்பாவிலுள்ள இந்த நாடு யுகோஸ்லாவியாவிடமிருந்து 1991-ல் பிரிந்து சுதந்திரம் பெற்றது. ரத்தம் சிந்தாமல் சுதந்திரம் பெற்ற ஒரே ஐரோப்பிய நாடு.
2. ஐரோப்பிய கண்டத்திலேயே மிகப் பழமையான பெயர் கொண்ட நாடு.
3. ஐ.நா.சபையில் 1993-ல் உறுப்பினரானது.
4. இதன் தலைநகர் ஸ்கோஜி (Skopje).
5. மகா அலெக்சாண்டரின் நாடு.
6. உலகின் நான்காவது மிகப் பழமையான வானியல் கண்காணிப்பகம் இங்கே இருக்கிறது.
7. இங்கே 50 ஏரிகளும் 16 மிக உயர்ந்த மலைச் சிகரங்களும் இருக்கின்றன.
8. அன்னை தெரசா பிறந்த நாடு.
9. அரிசி, கோதுமை, சோளம் முக்கிய விளைபொருட்கள்.
10. குக்லிகா கிராமத்தில் இருக்கும் 'ஸ்டோன் டவுன்' புகழ்பெற்றது. இங்கே 120-க்கும் மேற்பட்ட இயற்கையாக உருவான கல் தூண்கள் காணப்படுகின்றன.



மாசிடோனியா

# பாலைவனத்தை சோலைவனமாக்கும் பேரீச்சம் மரங்கள்



சவுதி அரேபியா பேரிச்சம் பழ ஏற்றுமதியில் உலகின் முதல் 3 நாடுகளில் ஒன்றாக திகழ்கிறது. பெட்ரோலும் பாலைவனமும் நிறைந்த இந்நாட்டில் விவாசாயத்திற்கும் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. கோதுமை, தக்காளி, தர்பூசணி, உருளைகிழங்கு உள்ளிட்ட பல்வேறு விவசாய பொருட்கள் லட்சக்கணக்கான டன் உற்பத்தி செய்யப்படுகிறது. குறிப்பாக பேரீச்சம் பழ விவசாயத்தில் ஏராளமானோர் ஈடுபடுகிறனர்.

அந்நாட்டு அரசாங்கம் இதனை முதன்மைபடுத்தும் விதமாக சவுதியில் பல்வேறு பகுதிகள் பேரீச்சம் பழ திருவிழாக்கள் நடைபெறும் இந்நாட்டின் கிழக்கில் அமைந்துள்ள அல் அஹ்ஷா பகுதி பேரீச்சம் மரங்கள் நிறைந்த உலகின் மிக பெரிய பாலைவன சோலைகளில் ஒன்றாகும். இப்பகுதியில் 10 ஆயிரம் ஹெக்டர் நில பரப்பளவில் லட்சக்கணக்கான பேரீச்சம் மரங்கள் உள்ளன.

சவுதி அரேபியாவில் ஒட்டுமொத்த பேரீச்சம் பழ உற்பத்தியில் இப்பகுதி முக்கிய இடம்பெறுகிறது. பாலைவனத்திலும் ஒரு சோலை என்பதுபோன்றே இப்பகுதி காணப்படுகிறது.




## விடுகதைகளும் விடைகளும்

1. இரவு வீட்டிற்கு வருவான், இரவு முழுவதும் இருப்பான் காலையில் சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டிருப்பான்?

**நிலா**

2. ஒன்று போனால் மற்றொன்றும் வாழாது?

**செருப்பு**

3. பூ கொட்ட கொட்ட ஒன்றையும் தனியே பொறுக்க முடியவில்லை?

**மழை**

4. மழையில் பிறந்து வெயிலில் காயுது?

**காளான்**

5. நீண்ட உடம்புக்காரன், நெடுந்தூரப் பயணக் காரன்?

**ரயில்**

# குதிக்கும் கோவேறு கழுதை

கழுதைகளையும், கோவேறு கழுதைகளையும் (Mule) பார்த்திருக்கிறீர்களா? இரண்டு விலங்கு களிடமும் பெரிய வித்தியாசத்தைப் பார்க்க முடியாது. உற்றுப் பார்த்தால் உருவம் சார்ந்தும், குணம் சார்ந்தும் இரண்டும் வெவ்வேறு விலங்குகள் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

கழுதை வீட்டுப் பிராணியாகும். பாதத்தில் பிளவுபடாத குழம்புகளைக் கொண்ட பாலூட்டி. குதிரை போன்ற உடலைமைப்பைக் கொண்டது. ஆனால், குதிரையைவிட கழுதை உடல் அளவில் சிறியது. குதிரையின் வாலில் இருக்கும் அளவுக்குக் கழுதையின் வாலில் ரோமம் இருக்காது. பிடரி மயிரும் கழுதைக்குக் கொஞ்சமாகவே இருக்கும்.

ஆண் கழுதைக்கும் பெண் குதிரைக்கும் பிறந்த கலப்பினப் பிராணியே கோவேறு கழுதை.

கழுதைகள் இனப் பெருக்கத்தில் ஈடுபட்டு குட்டி போடும். கோவேறு



கழுதைகள் இனப்பெருக்கம் செய்ய முடியாது.

கோவேறு கழுதைகள் வேலைக்குச் சிறந்தவை. கழுதைகளைவிட கோவேறு கழுதைகள் அதிக எடையைத் தாங்குபவை. அதிக எடையை ஏற்றினால் கழுதை மிகவும் கஷ்டப்படும்.

கோவேறு கழுதைகளால் சில அடி உயரத்துக்குக் குதிக்க முடியும். கழுதையால் குதிக்க முடியாது. கழுதைகளைவிட கோவேறு கழுதைகள் புத்திசாலிகள்.

கோவேறு கழுதைகளின் காதுகள், கழுதைகளின் காதுகளைவிடச் சிறியதாக இருக்கும். ஆனால் உருவமோ குதிரை போல இருக்கும். தலை, ஒல்லியான கால்கள், பிடரி மயிர் ஆகியவை கழுதைகளுக்கு இருப்பது போலக் கோவேறு கழுதைகளுக்கு இருக்கும்.

கழுதைகளைவிட கோவேறு கழுதைகள் உயரமாக இருக்கும். கழுத்து, பற்களும்கூட கொஞ்சம் பெரியதாக இருக்கும்.

குதிரையின் வாலைப் போலவே கோவேறு கழுதையின் வால் அடர்த்தியானது. ஆனால், கழுதையின் வாலோ பசுவின் வாலைப் போல இருக்கும்.

கழுதையின் கத்தலையும் கோவேறு கழுதை வெளிப்படுத்தும் சத்தத்தையும் கேட்கும் ஒருவர் எளிதாக அதை அடையாளம் காண முடியும். கோவேறு கழுதை குதிரையைப் போலக் கனைக்கும்.

# வித்தியாசம் கண்டுபிடிப்போம்



## நெறிப்படுத்து...!



உச்சத்தைத் தொடவும் வேண்டும்
ஊரார்க்கும் உதவ வேண்டும்
மெச்சத்தான் வேண்டும் உன்னை
மேதினி மாந்த ரெல்லாம்
அச்சத்தை அகற்றிக் கல்வி
ஆர்வத்தை வளர்த்துக்
கொள்வாய்
மிச்சத்தைக் காலம் நல்கும்
மனத்தினில் கலக்கம்
வேண்டாம்..!

படிப்பதற் கென்றே வாய்த்த
பருவமே இளமைக் காலம்
துடிப்புடன் நண்பர் கூட்டம்
சூழ்ந்துனை திசைதி ருப்பும்!
நடிக்கவே வேண்டாம்: நெஞ்சில்
நினைத்ததை நவின்று பாடம்
படிக்கவே தோழர் தம்மைப்
பாங்குடன் நெறிப்ப டுத்து..!

கூட்டமாய்ச் சேர்ந்தால் என்றும்
குழப்பமே மிச்ச மாகும்:
ஆட்டமே வாழ்க்கை அல்ல
அதற்குமோர் எல்லை உண்டாம்:
கேட்டினை நல்கு தற்கே
கணக்கிலாச் ''சானல்' உண்டாம்:
மேட்டினை நோக்கு தம்பி..
மேன்மைகள் தானே
தோன்றும்..!

ஜோதிடர் த.சத்தியதாஸன்




இவ்வாரம் தனலாபம், பொருள் வரவுண்டு. மனை, வாகன , குடும்பம் அபிவிருத்தியடையும். செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு வங்கி வசதிகள் உண்டாகும். வெளிநாட்டு நிதி வந்து சேரும். செய்தொழில் விருத்தியுண்டு. ஈடுபடும் கரும காரியங்கள் யாவும் ஜெயமளிக்கும். உத்தியோகத்தர் பதவி சிறப்பு, உத்தியோக அதிகாரம் கொள்வர். மாணவர், பெண்கள் சௌபாக்கிய யோகம் அடைவர்.




செய்யும் தொழிலால் இலாபம், உயர்வு ஏற்படும். ஈடுபடும் கரும, காரியங்கள் யாவும் ஜெயமளிக்கும். உத்தியோகத்தர் அதிகாரம் கொள்வர். பதவிச்சிறப்படைவர். குரு ஜீவன தொழில் ஸ்தானத்தை நோக்குவதால் தொழில் உயர்வு கிட்டும். உத்தியோகத்தர் ஏற்றம் காண்பர். வியாபாரிகள் கூட்டு வாணிபத்தையும் புதிய முதலீடுகளையும் தொடங்கலாம். விவசாயிகள் நவீன முறைகளை கையாண்டு பயிர் உற்பத்திகளை பெருக்கலாம்.




உத்தியோகப் பெண்கள் தம் பணிகளில் புது உத்வேகம் அடைந்து ஏற்றம் காண்பர். கன்னியரின் காதல் விவகாரம் ஜெயம் அளிக்கும். சிலருக்கும் திருமணப் பேச்சுக்கள் தொடரும். தனம், பொருள், மனை, குடும்பம் விருத்திகள் உண்டாகும். வெளிநாட்டு நிதிகள் வந்து சேரும். செய்தொழில், இலாபம், சேமிப்பு, நிதி வசதிகள், வங்கி இருப்புக்கள் மன நிறைவைக் கொடுக்கும். மாணவர்கள் சௌபாக்கிய யோகம் அடைவர்.




உத்தியோகத்தர் தம் பணியில் புது உத்வேகம் அடைவர். வியாபாரிகளுக்கு கூட்டு வாணிபம் இலாப முன்னேற்றத்தை கொடுக்கும். விவசாயிகள் நவீன முறைகளை மேற்கொள்ளலாம். பெண்கள் இவ்வாரம் சௌபாக்கிய யோகம் அடைவர். ஆசிரியர், மாணவர், பெற்றோர் உறவு சீராகவே இருக்கும். மாணவர்கள் கல்வி , விளையாட்டுத் துறைகளில் ஊக்கமும், விடாமுயற்சியும் பெறுவர். பரீட்சைச்சித்திகள் ஜெயமளிக்கும்.




செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள் உண்டாகும். வியாபாரிகள் , விவசாயிகள் தத்தம் தொழிலால் நல்ல ஆதாய முன்னேற்றம் காண்பர். அரச மானியம் கிடைக்கும். தனம், பொருள், மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தியடையும். வெளிநாட்டு நிதி வந்து சேரும். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் ஜெயமளிக்கும். இவ்வாரம் திருமணப் பேச்சுக்கள் தொடரும். உத்தியோகத்தர்களுக்கு வேலைச்சுமை குறையும்.




குரு 2ம் தன பாவத்தில் சஞ்சரிப்பதால் வெளிநாட்டு நிதி வந்து சேரும். பணப்புழக்கம் சரளமாகவே இருக்கும். இவ்வாரம் தனம், பொருள், குடும்ப சேமம், மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தியடையும். செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு உண்டாகும். கூட்டு வாணிபத்தையும் புதிய முதலீடுகளையும் தொடங்கலாம். விவசாயிகளுக்கு பண்ணைகளில் மேலதிக உதவி, ஒத்துழைப்புக்கள் கிடைக்கும். விளைப்பொருட்களை சந்தைப் படுத்தலினால் நல்ல ஆதாயம் கிட்டும்.




ஜென்மத்து வியாழ தோஷமிருப்பதால் கிரக தோஷ நிவர்த்தி செய்தால் நன்மை உண்டாகும். கண்டக, ராகு, கேது தோஷம் இருப்பதால் உத்தியோகத்தர் சக ஊழியர்களை அனுசரித்து நடந்தால் நன்மை உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு கணிசமான வேலைப்பழுவும். மேலதிக வேலையும் கிடைக்கும். வியாபாரிகள் தம் முதலுக்கேற்ற ஆதாய முன்னேற்றம் அடைவர். குடும்ப பெண்களின் இல்லற நிர்வாகம் சிரமத்தின் மத்தியில் நடைபெறும்.




9ம் தர்ம பாவத்தில் புதன் திக்கு பலம், குஜன் நோக்குவதால் தர்ம , புண்ணிய கர்மங்களில் ஆர்வம் மிகும். பிதாவழி உதவி, அனுகூலம் கிட்டும். வெளிநாட்டு உதவிகள் கிட்டும். தனம், பொருள், வாகன சுகம், மனை நலம், குடும்ப சேமம் முதலியன உண்டாகும். உத்தியோகத்தர் புது உத்வேகம் கொண்டு ஏற்றம் காண்பர். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் கைக்கூடும். வியாபாரிகள் தம் முதலுக்கேற்ப ஆதாயமடைவர்.




ஏழரை ஜென்மச் சனி , அஷ்டமத்து ராகு, கேது புதன் தோஷமிருப்பதால் கிரக தோஷ நிவர்த்தி செய்தால் இவ்வாரம் நன்மை ஏற்படும். உத்தியோகப் பெண்களும் பணிகளில் உயர்வு பெறுவர். நக ஊழியர்களை அனுசரித்து நடந்தால் வேலைப்பழு குறையும். செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள் மன நிறைவைக் கொடுக்கும். வெளிநாட்டு நற்செய்திகள் நன்மை தரும். உத்தியோகத்தர்களும் பெண்களும் ஏற்றம் காண்பர்.




ஜீவன பாவத்தில் குரு சஞ்சரிப்பதால் செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள் அதிகரிக்கும். ஏழரை முற்கூறு, கண்டக வியாழ ராகு, கேது , புதன் நடைபெறுவதால் கிரக தோஷ நிவர்த்தி செய்தால் நன்மை உண்டாகும். கரும, காரியங்கள் யாவும் ஜெயமளிக்கும். உத்தியோகத்தர்களுக்கு சக ஊழியர்களின் உதவி, அனுசரனையால் வேலைச்சுமை குறைவடையும். வியாபாரிகளுக்கு புதிய முதலீடுகளையும், கூட்டு வாணிபத்தையும் தொடங்கலாம்.




இவ்வாரம் ஜென்ம ஸ்தானத்தைக் குரு நோக்குவதால் நோய் அகன்று தேகம் புதுப் பொலிவு பெறும். கன்னியரின் காதல் விவகாரம் ஜெயம் பெற்று இவ்வாரம் திருமணப் பேச்சுக்கள் தொடரும். உத்தியோகத்தர் பதவி சிறப்பு, உத்தியோக அதிகாரத்தால் ஏற்றம் அடைவர். செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள் மன நிறைவைக் கொடுக்கும். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் கைக்கூடித் திருமணப் பேச்சுக்கள் இவ்வாரமும் தொடரும்.




இவ்வாரம் தன பாவத்தைக் குரு பார்ப்பதால் தனலாபம், பொருள் வரவுண்டு. மனை, வாகன, குடும்ப சேமம் உண்டாகும். பிதாவழி உதவி, அனுகூலம், தர்ம புண்ணிய கர்மங்களில் ஈடுபாடு, நோன்பு , விரதம் அனுஷ்டித்தல், ஆலய தரிசனம் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் பாராட்டையும் ஊக்குவிப்பையும் பெறுவர். உத்தியோகப் பெண்களும் ஏற்றம் காண்பர். வியாபாரிகள் புது முதலீடுகளையும் ஆரம்பிக்கலாம்.

## கோவிலில் வாங்கிய விபூதி, குங்குமத்தை கோவிலிலேயே விட்டுவிடுவது சரியா?

கோவிலில் விபூதி, குங்குமம் தருவதே நம்மைச் சார்ந்தவர்களையும் இறைவனது பிரசாதம் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில்தான். இறைவனின் பிரசாதத்தை அங்கேயே விட்டுவிடுவது என்பது அவனது அருளை வேண்டாம் என்று மறுப்பதற்கு சமம்.

குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக இணைந்து கோவிலுக்கு வந்திருக்கிறோம், எல்லோரும் விபூதி குங்குமப் பிரசாதத்தை நெற்றியில் இட்டுக்கொண்டாகிவிட்டது அல்லது வீட்டில் யாருமில்லை என்றால் கூட, அங்கேயே விட்டுவிட்டு வரக்கூடாது. ஆலயத்தில் நாம் பெறும் விபூதி, குங்குமப் பிரசாதங்களை வீட்டிற்கு எடுத்துவந்து பத்திரப்படுத்தி தினசரி நெற்றியில் இட்டுக் கொள்வதுதான் நல்லது.



## கல்லறைக் காவலர்கள்

இயேசு சிலுவையில் அறையப்பட்டார், உயிர் விட்டார். அரிமத்தியா ஊர் யோசேப்புவின் கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார். கல்லறை வாசல் ஒரு மிகப் பெரிய கல்லினால் அடைக்கப்பட்டது.

இயேசுவின் மரணம் சீடர்களுக்கு அதிர்ச்சியாகவும், கலக்கமாகவும் இருந்த அதே நேரத்தில் மூப்பர்களுக்கும், மறைநூல் அறிஞர்களுக்கும், குருக்களுக்கும் கொண்டாட்டத்தின் நாளாக இருந்தது.

ஒருவழியாக மிகப்பெரிய தொல்லை இன்றுடன் தீர்ந்தது, இனிமேல் பிரச்சினையில்லை.




அவன் பின்னால் சென்ற மனிதர்களையும் நாம் சும்மா விடக்கூடாது. அவர்களையும் நாம் ஏதாவது செய்ய வேண்டும்.

அந்தக் கவலை நமக்கு வேண்டாம். அவனுடைய சீடர்கள் சாதாரணமானவர்கள். அவர்கள் இனிமேல் தங்கள் வேலையைப் பார்க்கப் போய்விடுவார்கள். மீன் பிடிக்கவோ, வரி வசூலிக்கவோ

சிரிப்பொலிகள் அலைந்தன.

அது சரிதான்...

நம்முடைய திட்டம் கனகச்சிதம். அதுவும் பரபாவையா?, இயேசுவையா? யாரை விடுதலை செய்யவேண்டும் என்று மன்னன் கேட்டபோது ஒரு வினாடி




பயந்துவிட்டேன். எங்கே மக்கள் இயேசுவைக் கேட்பார்களோ என்று. நல்லவேளை நாம் கூட்டத்தைச் சரியாகக் கட்டுப்படுத்திவிட்டோம்.

அவர்கள் ஆனந்தமாய் உரையாடிக் கொண்டிருந்தார்கள். தங்கள் முதுகை அழுத்திக்கொண்டிருந்த தேவையில்லாத ஒரு பாரம் இறங்கிப் போன நிம்மதி அவர்களிடம் தெரிந்தது.

ஏய்... எனக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வருகிறது..

என்ன?

இயேசு உயிருடன் இருந்தபோது, மூன்றாவது நாளில் உயிர்த்தெழுவேன் என்று சொல்லியிருந்ததாய் ஞாபகம்

அவனாவது உயிர்த்தெழுவதாவது... அதைப்பற்றி எல்லாம் ஏன் கவலைப்படுகிறாய்? அதெல்லாம் நடக்காது.

நடக்காது என்பது தான் என் நம்பிக்கையும்... ஆனால்...

என்ன ஆனால்...

ஒருவேளை அந்த சீடர்கள் இயேசுவின் உடலை எடுத்துக் கொண்டு போய் ஒளித்து வைத்துவிட்டு இயேசு உயிர்த்தார் என்று கதை கட்டலாம் அல்லவா?

அவன் சொன்னதும் எல்லோரும் நிமிர்ந்தார்கள்.

அப்படி நடந்தால். அது மிகப்பெரிய எழுச்சியை மக்களிடையே உண்டாக்கிவிடும். இயேசு உண்மையிலேயே கடவுள் தான் என்று மக்கள் கூட்டம் நம்பி விடவும் வாய்ப்பிருக்கிறது இல்லையா?

அட... ஆமாம். அதற்கு வாய்ப்பிருக்கிறது. அப்படியானால் நாம் உடனே மன்னனிடம் போய், அந்தக் கல்லறையைக் காவல் காக்க ஏற்பாடு செய்யவேண்டும். என்ன சொல்கிறீர்கள்?

கண்டிப்பாக...

அவர்கள் நேராக பிலாத்துவிடம் ஓடினார்கள்.

மன்னா... இயேசுவைக் கொன்றது எங்களுக்கு மகிழ்ச்சியளிக்கிறது. ஆனால்...ஒரு விண்ணப்பம்...

என்ன விண்ணப்பம் பிலாத்துவின் குரலில் எரிச்சல் தெரிந்தது.

இயேசு குற்றமில்லாதவர் என்றும், இந்தக் கூட்டத்தினரின் பொறாமை தான் அவரைக் கொன்றது என்றும் பிலாத்து அறிந்திருந்தான். எனவே அந்தக் கூட்டத்தினரைப் பார்ப்பதையே வெறுத்தான்.

முதலில் இயேசுவைக் கொல்ல வேண்டும் என்று உயிரை வாங்கினார்கள். பின் யூதர்களின் அரசன் என்ற பெயர்ப் பலகைக்கு பிரச்சினை செய்தார்கள். இப்போது என்ன பிரச்சினையோடு வந்திருக்கிறார்கள்?

மன்னா.. அந்த இயேசு உயிரோடு இருந்தபோது, இறந்தாலும் மூன்றாவது நாளில் உயிர்ப்பேன் என்று சொல்லியிருந்தான்

சரி.. அதற்கென்ன இப்போது? அவர் உயிர்த்தால் பார்த்துக் கொள்ளலாம்

அதில்லை மன்னா. அவனுடைய சீடர்கள் இயேசுவின் உடலை எடுத்து எங்கேயாவது போட்டு விட்டு அவன் உயிர்த்துவிட்டான் என்று கதை கட்டிவிடலாம் அல்லவா?

நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்று புரியவில்லை பிலாத்து கேட்டான்.

மன்னா.. இந்த மூன்று நாட்களும் அந்தக் கல்லறையைக் காவல் காக்கவேண்டும். மூன்று நாளில் உயிர்த்தெழுவேன் என்பது தான் அவனுடைய பேச்சு. எனவே மூன்று நாட்கள் மட்டும் காவலுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதே எங்கள் விண்ணப்பம்

உங்களிடமே வீரர்கள் உண்டே. அவர்களைக் கொண்டு நீங்கள் காவல் புரியுங்கள். என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள் பிலாத்து எரிச்சல் குறையாமல் பேசினான்.

உங்கள் அனுமதிக்கு நன்றி அரசே கூட்டத்தினர் கலைந்தனர்.

உடனே சென்று படைவீரர்களை ஏற்பாடு செய்தனர்.

சில படைவீரர்கள் இயேசுவின் கல்லறைக்குச் சென்று அவருடைய உடல் கல்லறையில் இருக்கிறதா? என்பதை உறுதிப்படுத்தினார்கள். பின் கல்லறையை மூடி அதை சங்கிலிகளால் பொருத்தி சீல் வைத்தனர்.

படை வீரர்கள் அந்தக் கல்லறை வாசலில் கண் விழித்துக் காவல் இருந்தார்கள். அங்கே ஐம்பது படை வீரர்கள் வரை இருந்திருக்கலாம் என வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இயேசுவின் மரணத்தையும், உயிர்ப்பையும் அருகிருந்து தரிசிக்கும் பாக்கியத்தை அந்த வீரர்கள் பெற்றார்கள்.

## பறவைகளின் மொழி தெரிந்த சுலைமான் (அலை)

தாவூத் (அலை) அவர்களின் மறைவுக்கு முன்பாகவே சுலைமான் (அலை) அவர்களை, தாவூத் (அலை) அரசராக்கினார்கள். இறைவன் சுலைமான் (அலை) அவர்களுக்குக் கல்வி ஞானத்தை முழுமையாகக் கொடுத்து, மிகவும் நியாயமான நேர்மையான முறையில் நல்லாட்சி புரியவும் அருளினான். சுலைமான் (அலை) அவர்களை இறைவன் தன்னுடைய தூதராக்கினான்.

மக்களின் நலனில் அக்கறையுடையவராக இருந்த சுலைமான் (அலை), மக்களிடம் இரக்கம் காட்டுபவராக இருந்ததால் இறைவனும் அவர்கள் மீது இரக்கம் காட்டினான்.

சுலைமான் (அலை), புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது. அவன் தான், மூமின்களான தன் நல்லடியார்களில் நம்மை மேன்மையாக்கினான் என்று இறைவனுக்கு நன்றி செலுத்துபவராக இருந்தார்கள். சுலைமான் (அலை) அவர்களின் காலத்தில் குதிரைகள்தான் பயணத்தில் நடைமுறையாக இருந்தன. ஒருநாள் பயிற்சியளிக்கப்பட்ட வசீகரமான குதிரையை, சுலைமான் (அலை) அவர்கள் அதன் அழகை வர்ணித்தபடி தடவிக் கொடுத்துக் கொண்டே இருந்தார்கள். மாலை நேரத் தொழுகையையே அது மறக்கடித்துவிட்டது.

சூரியன் திரைக்குள் மறைந்து விடும் வரை அதை அறியாமல், இறைவனை நினைப்பதை மறந்து இதன் மேல் அதிக அன்பு பாராட்டிவிட்டேன் என்று தமது நிலையை உணர்ந்து இறைவனிடம் பிரார்த்தித்தார்கள். என் இறைவா, என்னை மன்னித்தருள்வாயாக. எக்காலத்திலும் எவருமே அடைய முடியாத ஓர் அரசாங்கத்தை எனக்கு நீ நன்கொடையளிப்பாயாக! நீயே மிகப் பெருங்கொடையாளி என்று கேட்டார்கள்

மேலும் தனக்குப் பறவைகளின் மொழியைக் கற்றுக் கொடுக்கும்படியும், ஜின்களை வசப்படுத்தும் வித்தையையும், கடுமையாக வீசும் காற்றைக் கட்டுப்படுத்தம் ஆற்றலையும், இன்னும் தான் விரும்பியவற்றை இறைவன் நிறைவேற்றித் தருமாறு பிரார்த்தித்தார்கள்.

இறைவனும் சுலைமான் (அலை) அவர்களுக்கு, தம் அருள் கொடையை விசாலமாக்கினான்.

அல்லாஹ் தான் நாடியவர்களுக்குக் கணக்கின்றிக் கொடுக்கிறான்.

திருக்குர் ஆன் 27:15:19. 21:79-81, 38:30-40





# மரங்களுக்கு இடையில் மம்மிகள்!



மிக நீண்ட கடல் பறப்பில் அது ஒரு குட்டி தீவு, அந்த தீவின் மலைகளில் பல பிரமாண்ட பாறைகள், அந்த பாறைகளில் சதுர வடிவில் பல பொந்துகள். பாறைகளில் மட்டுமல்ல, அங்குள்ள பழமையான மரங்களிலும் இப்படியான பொந்துகள். பறவைகளோ, விலங்குகளோ, மனிதர்களோ எளிதில் நெருங்க முடியாத வகையில், அந்த பொந்துகள் உருவாக்கப் பட என்ன காரணம் தெரியுமா?

இந்தோனேஷியா தீவுகளில் ஒன்றான தென் சுலாவெசி மாகாணத்தின் மலைப்பகுதிகளில் வசிக்கும், டோராஜா இனத்தவர்கள், அவர்கள் இனத்தில் இறந்தவர்களின் உடல்களை இந்த பொந்துகளில் தான் பாதுகாத்து வருகின்றனர். டோராஜா மக்களுக்கும், இந்த பொந்துகளுக்கும் மிகப்பெரிய தொடர்பு உள்ளது.

தங்களின் இறப்பிற்கு பிறகும் வாழ்க்கை இருக்கிறது என்பதை டோராஜா இன மக்கள் உறுதியாக நம்புகின்றனர். எனவே தங்கள் இனத்தில் ஒருவர் இறந்துவிட்டால், அவர்களை அடக்கம் செய்வதற்கு, முதலில் பாறைகளை தேர்வு செய்வார்கள். இறந்தவர்களின் உடல் அளவிற்கேற்ப சதுரவடிவில் பாறைகளை துளையிடுவார்கள். பின் இறந்த உடலை துணிகளை கொண்டு முழுவதுமாக சுற்றி, உருவாக்கிய பொந்துகளில் உடலை பாதுகாப்பாக வைப்பார்கள். பெரியவர்களுக்கு மட்டுமே இந்த நடைமுறை. இறந்து கைக் குழந்தையாக இருந்தால், மரத்தில் சதுர வடிவில் பொந்து ஏற்படுத்தி குழந்தை உடலை அதில் அடக்கம் செய்வார்கள்.

பண்டைய எகிப்து நாகரிகத்தில் இறந்தவர்கள் மறுஉலகிற்கு செல்கின்றனர், அவர்களுக்கு அவ்வுலகில் வாழ உடல் தேவை என்பதால் இறந்தவர்களின் சடலங்களை பாதுகாப்பது அவசியம் என்ற நம்பிக்கை இருந்தது. எனவே இறந்தவர்களின் சடலங்கள் பதனிடப்பட்டு பாதுகாக்கப்பட்டது. மனிதர்களின் சடலங்கள் மட்டுமல்ல முதலை, பூனை போன்ற விலங்குகளின் சடலங்களும் பாதுகாக்கப்பட்டன. ஆனால் டோராஜா மக்களின் நம்பிக்கை சற்று வேறுபடுகிறது.


பாறைகளிலும், மரங்களிலும் அடக்கம் செய்யப்பட்ட உடல்களை, மூன்று வருடங்கள் கழித்து மீண்டும் வெளியே எடுக்கின்றனர். அவ்வாறு எடுக்கப்பட்டவர்கள் மீண்டும் உயிருடம் வந்திருப்பதாக உணர்கின்றனர். எனவே, அந்த உடல்களை நீரால் நன்கு சுத்தம் செய்து, தேவைப்பட்டால் சுண்ணாம்பு, பெயிட்களை கொண்டு அவர்களுக்கு வர்ணம் பூசி, அழகான முறையில் அவர்களுக்கு ஒப்பனை செய்து, புத்தாடைகளை உருத்திவிட்டு, நறுமணப் பொருட்களை கொண்டு அவர்களை திருவிழாவிற்கு தயார்படுத்துவார்கள்.

இதுமட்டுமல்லாது, இறந்தவர்களின் நிறைவடையாத ஆசைகளை இந்த நாளில் தீர்த்து வைப்பார்கள். அந்த உடல்களுடன் பேசுவார்கள், கட்டி அழுவார்கள். சடங்குகள் முடிந்த பிறகு, மீண்டும் உடலை, துணிகளைக் கொண்டு சுற்றி, அந்தந்த பொந்துகளில் வைத்துவிடுவார்கள். இவ்வாறு இறந்தவர்களுக்கு, அவர்களின் இறப்பிற்கு பின் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை செய்துவருகிறார்கள்.

இச்செயல்கள் சிலருக்கு, மூடநம்பிக்கையா தெரியலாம், சிலருக்கு தவறாக தோன்றலாம், சிலருக்கு அருவறுப்பு தரலாம். ஆனால் டோராஜா மக்களுக்கு அவ்வாறு அல்ல. சுயநலமே பிரதாணமாக கொண்ட இந்த உலகில், தாங்கள் அளவு கடந்து நேசித்த உறவுகளின் ஆசைகளை, நிறைவேற்றுகிறோம் என்கிற மகிழ்ச்சியையும், மனதிருப்தியை இம்மக்கள் பெறுகிறார்கள்.

டோராஜா மக்கள், கம்போடியா வம்சத்தை சேர்ந்தவர்கள் என்று ஆய்வுகள் சொல்கிறது. இந்தோனேசியா மக்களுக்கே இப்படி ஒரு இன குழு இருப்பது, பல வருடங்களாக தெரியாமல் இருந்தது. 1909களில் இந்தோனேசியாவிற்கு டச்சிக்காரர்களின் வருகைக்கு பிறகே இந்த இனம் உலகிற்கு தெரிய துவங்கியது. இவர்கள் வாழும் வீடு, படகு அமைப்பு கொண்டது. திருமணங்கள் அற்புத சடங்குகள் கொண்டது. கலை உருவாக்கங்களில் டோராஜா இன மக்கள் தனித் தன்மை கொண்டவர்கள்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன் இந்தோனேசியா அரசு, சுலாவெசி மாகாணத்தின் குறிப்பிட்ட சில மலைப்பகுதிகளை சுற்றுலா தளமாக அறிவித்தது. இன்று பல கலாச்சார மாற்றங்களை இந்த இன மக்கள் சந்தித்து வருகின்றனர். இருப்பினும் கூட தங்களின் பாரம்பரியங்களை இழந்துவிடக்கூடாது என்பதற்காக டோராஜா மக்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள்.





## மர்ஹூம் முஹம்மது கனிபா (மருதூர்க்கனி)யின் 5 நூல்கள் அறிமுக விழா

மருதமுனை மண்ணில் மணம் பரப்ப பிறந்த மண்ணின் மைந்தர்களில், மக்களின் மனதில் என்றுமே அழியாத இடம் பிடித்து அரியணையில் அமர்ந்திருக்கும் மக்கள் கவி மருதூர்க்கனி 1942 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் தேதி உதுமாலெப்பை சுலைஹா உம்மா தம்பதியினரின் ஏழு குழந்தைகளில் தலை மகனாகப் பிறந்தார். இவரின் இயற் பெயர் முஹம்மது ஹனீபா இளவயது முதலே துடிப்பும், சுதந்திர உணர்வும் அவரிடம் நிறைந்து காணப்பட்டது. கண்முன் நடக்கும் கொடுமைகளை கண்டு, கொதித்தெழுவதும், அதன் பலனாக தண்டனைகள் பெறுவதும் அவருக்கு சர்வ சாதாரணமாய் அமைந்திருந்தது. தனது ஆரம்பக் கல்வியை ஆங்கில மொழியிலேயே தொடங்கிய போதும் தமிழ் மேல் அவருக்கிருந்த பற்றுதலினால் பள்ளிப் படிப்பை தமிழிலேயே எஸ்.எஸ்.சி வரை கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் பயின்றார். அதன் பலனாக 18வது வயதிலேயே அவருக்கு ஆசிரியர் தொழிலும் கிடைத்தது. பின் அட்டாளைச்சேனை ஆசிரியர் கலாசாலையில் இரண்டு வருடங்கள் ஆசிரியர் பயிற்சி பெற்றார்.

தனது செயல்கள், சிந்தனைகள் ஒவ்வொன்றும் இனி வரும் தலைமுறையினருக்கு ஓர் முன்னுதாரணமாக இருக்க வேண்டும் என நினைத்தார். தான் காதலித்த ஒரு சாதாரண குடும்ப பெண்ணான காமிலாவை 1968ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். அப்போது முதுசமாகவும் அவரிடம் எதுவும் இருக்கவில்லை. வாழ்வை அடிமட்டத்திலிருந்து ஆரம்பித்தார். அதனாலேயே என்னவோ அவரின் உணர்வுகள் அடிமட்டம் ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்களுக்காக தனது கவனத்தை செலுத்தினார்.

நான்கு பிள்ளைகளைப் பெற்று அவர்களுக்கு நல்ல கல்வியைக் கொடுத்து அவர்கள் தலை நிமிர்ந்து வாழ வழிகாட்டி, அவரும் அரசனாகவே வாழ்ந்து காட்டினார். இன்றைய தலைமுறையினருக்கு அவரை ஒரு கவிஞராகவும், அரசியல் சித்தாந்தகராகவும் மட்டுமே தெரிந்திருக்கும் நல்ல கல்வியைப் போதித்த நல்லாசனாக

நலிந்தவர்களின் நலனுக்காக போராடிய தொழிற்சங்கவாதியாக கொந்தளிக்கும் கடலில் வலையோடு சென்று மீன்பிடித்து வந்த மீனவனாக, மருதமுனை நெசவை வடக்கு வரை எடுத்துச் சென்று வாழ்வு நடத்திய தொழிலாளியாக, நாட்டு நடப்புக்களை தைரியமாக பக்கச் சார்பின்றி பத்திரிகைக்கு எழுதிய நிருபராக, புகைப்பட கலைஞனாக அவர் வாழ்ந்திருக்கிறார்.

இவரின் முதற் கவிதை ‘நினைவு’ ஒரு காதல் கவிதையாகவும். 1963ல் பிரசுரமாகியது. இவரது முதற் கதை ‘பசி’க்கு செய்திப் பத்திரிகை நடாத்திய சிறு கதைப் போட்டியில் முதலிடம் கிடைத்தது. சிறுகதை, கவிதையுடன் மட்டுமல்ல நாடகம் இயற்றுவதிலும், நடிப்பதிலும் தனது திறமையை வெளிக் காட்டியுள்ளார். இவரது ‘‘சோழன் மகன்’’ கவிதை நாடகம் அகில இலங்கை ரீதியில் சிறந்த நாடகமாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

இவரது எழுத்து ஒடுக்கு முறைகளுக்கும் சுரண்டலுக்கும் எதிராக எப்பொழுதும் குரல் கொடுத்து வந்துள்ளது. மக்கள் எப்பொழுதும் சுதந்திர காற்றை சுவாசிக்க வேண்டும் என விரும்பினார். முற்போக்கு சிந்தனையுடைய இவர் வர்க்க பேதமற்ற வாழ்விலேயே ஒடுக்கு முறைகளும் சுரண்டலும் இல்லாது ஒழியும் என நம்பினார். எதைக் கண்டு அவர் மனம் வெந்து அதை கதைகளாகவும் கவிதைகளாகவும் எழுதினாரோ இன்றும், இன்னமும் அப்படியே இருக்கிறது. வர்க்க முரண்பாடு வழிவழியாக தொடர்ந்து கொண்டே வருகிறது. தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்று வாழுகின்ற இந்த சமூகத்தை தன் எழுத்துக்களால் விழிக்கச்

செய்யலாம் என்று நினைத்தார். உறங்குபவனை எழுப்பிவிடலாம் உறங்குவது போல பாசாங்கு செய்பவனை எவ்வாறு எழுப்புவது.

இவரது கவிதைகளும் கதைகளும் பெறுமினே பொழுது போக்கிற்காக வாசித்து விட்டு தூக்கிப் போட்டு விட்டுச் செல்லக் கூடிய ஒன்றல்ல ஒவ்வொன்றும் படிப்பினை. அவற்றைப் படிக்கும் போதே படிப்பவர் உள்ளமும் அநீதிகளைக் கண்டு கிளர்ந்தெழத்துடிப்பதை அவர் எழுத்துக்களை படித்த வாசகர்கள் அனைவரும் உணர்ந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

மருதூர்க்கனி 5 புத்தகங்களை எழுத்துருவில் கொண்டு வந்தார். ஆனாலும் அவற்றில் ‘மண் பூனைகளுக்கு எலி பிடிக்கும்’ என்ற சிறுகதைத் தொகுதியும் ‘அந்த மழை நாட்களுக்காக’என்ற கவிதைத் தொகுதியுமே அவரால் 2002ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

சந்தனப் பெட்டகமும் கிலாபத் கப்பலும், மருதூர்க்கனி

கவிதைகள், என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும் ஆகிய மூன்று நூல்களும் அவுஸ்திரேலியா

மெல்பேனில் அவர்களது குடும்பத்தினரால் வெளியிடப்பட்டது. இவ் வெளியீட்டு விழாவில் இவரின் வாழ்வும் பணிகளையும் சித்தரிக்கும் ஒளிப் படக் காட்சியும் திரையிட்டு காண்பிக்கப்பட்டது விஷேட அம்சமாகும்.

இளம் பருவம் தொட்டே வர்க்க முரண்பாடுகளுக்காக குரல் கொடுத்து வந்தார். மக்கள் நலன் கருதியே அரசியலிலும் களமிறங்கினார். முற்போக்கு சிந்தனையுடைய இவர் ஆரம்பத்தில் ஒரு இடதுசாரியாக போராடினார் முஸ்லிம் சமூகம் அவர்களின் பிரச்சினைகள், உரிமைகள் என்பவற்றிற்காக நடுநிலையாக நின்று சிந்தித்துச் செயற்படவென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களுடன் இணைந்து 1981ஆம் ஆண்டு ஒரு இயக்கமாக

உருவாக்கினார். பின் 1988ஆம் ஆண்டு அது அரசியல் கட்சியாக அங்கீகாரம் பெற்றது. இடைப்பட்ட காலத்தில் மக்களுக்காக இவர்கள் பாடுபட்டதும் அவர்கள் இவர்களை தூக்கி எறிந்ததும் பின் ஏற்றுக் கொண்டதும் வரலாறு. கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்களாக முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களுடன் தோள் கொடுத்துள்ளார். இவர்கள் இருவரும் இனவாத வெயிலிருந்து மக்களை காக்க ஒரு விருட்சத்தை முளையிலிருந்து வளர்த்தார்கள். அது பூத்து காய்த்து குலுங்கும் போது தலைவர் அவர்கள் இறையடி சேர்ந்தார். அதன் பின் இவர் கண் முன்னேயே அது சூரையாடப்பட்டு தனித்து துண்டாக்கப்பட்டதைக் கண்டு மனம் நொந்து நடைப்பிணமானார்.

1989ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலில் புலிகளின் பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் போட்டியிடாமல் ஒழித்தோடிய பலரிற்கு மத்தியிலும் உயிரைப் பணயம் வைத்து போட்டியிட்டார் மருதூர்க்கனி அவர்கள். இருந்த போதும் மருதமுனை மக்கள் இவருக்கு ஆதரவு கொடுக்கவில்லை. இருந்தும் தான் பிறந்த மண், தனது மக்கள் என அவர்களுக்கு சேவை செய்வதற்காகவே 2000ஆம் ஆண்டு தேசியப்பட்டியலில் பாராளுமன்றத்துக்கு சென்றார். மருதமுனையின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் என்ற பெருமையும் இவரையே சாரும். தன் மக்களுக்கு சேவை செய்ய கிடைத்தோ ஒரே ஒரு வருடம் இருப்பினும் தன்னால் முடிந்தவரை வேலை வாய்ப்புகளையும், அபிவிருத்தியையும் செய்துள்ளார்.

உள்ளூர் மற்றும் வெளியூர் மக்களை வசீகரிக்கும் மருதமுனையின் அழகிய கடற்கரை இரவு வேளைகளில் இருளில் மூழ்கிக் கிடந்ததைக் கண்டு கடற்கரை நெடுகிலும் வீதி விளக்குகளையும் மக்கள் இளைப்பாற கருங்கல் வாங்குகளையும் அமைத்துக் கொடுத்தார். தனது கிராமத்திற்கென்று ஒரு மகப்பேற்று மருத்துவமனையும் அமைத்துக் கொடுத்தார். ஆனால் இவை இரண்டும் இப்பொழுது எம்மால்

காணக் கிடைக்காது. ஏனெனில் 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் அழிவடைந்தது. மேலும் மருதமுனையில் அமைந்துள்ள பொது நூலகத்தின் விஸ்தரிப்புக்கும், புதிய கட்டிடங்களை அமைக்கவும் நிதி ஒதுக்கீடு செய்தார். இன்று இப் பொது நூலகம் மருதூர்க்கனி ஞாபகார்த்தபொது நூலகம் என அழைக்கப்படுகிறது.

இவரின் மக்கள் சேவையை கௌரவிக்கும் முகமாக 1998ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்க அவர்களால் லங்காதிலக விருது வழங்கப்பட்டது. எழுத்தே இவரின் உயிர் மூச்சாக இருந்தது. ஆரம்பத்தில் சுரண்டப்பட்ட மக்களுக்காக கதைகளும் கவிதைகளும் எழுதியவர் மக்களின் நலன் கருதி அரசியலில் இணைந்த பின்னும் தனது எழுத்துக்களை அரசியல் போராட்டத்திற்காக பயன்படுத்தினார். நாள் தோறும் இவரது அறிக்கை இல்லாமல் தமிழ் பத்திரிகை பிரசுரமாவதே அரிது. அவர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக பத்திரிகை ஒன்றை நடாத்தி வந்தார். இதன் பயனாக 1989 ஆம் ஆண்டு புலிகளால் கடத்திச் செல்லப்பட்டார். பின் 1990ஆம் ஆண்டு ஆயுத முனைகளில் தங்க நகைகளையும், பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றதன் விளைவாக புகழிடம் தேடி கொழும்பு மாவட்டத்துக்கு குடும்பத்தோடு சென்று வாழத் தொடங்கினர்.

எப்போதே எழுதப்பட்ட மார்க்சிம் கோர்க்கியின் ‘தாய்’இப்போது மூன்றாம் உலக நாட்டுத் தொழிலாளர்களின் பாடப்புத்தகமாக இருப்பது போல எனது சில கதைகளாவது முற்போக்கு உதாரண எழுத்தாய் நின்று நிலை பெறும் என்று நம்புகிறேன் என்று தனது சிறுகதை தொகுதியின் முன்னுரையிலேயே அன்று மருதூர்க்கனி கூறிச் சென்றது. இன்று நிஜமானகியுள்ளது. 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தப்பட்ட புதிய பாடத்திற்கான தரம் 11இன் தமிழ் மொழியும் இலக்கியமும் பாடப் புத்தகத்திலே ‘மண்பூனையும் எலி பிடிக்கும்’ எனும் சிறுகதை பிரசுரமாகி அவரின் கனவொன்று நனவாகியுள்ளது.

இப்படியான அழகிய நூல்களைத் தந்த மருதூர்க்கனியின் ஒரு சிறுகதைத் தொகுதியும் நான்கு கவிதை நூல்களும் வரும் 24ஆம் திகதி மருதமுனை மருதூர்க்கனி ஞாபகார்த்த பொது நூலக கூட்ட மண்டபத்தில் எழுத்தாளர் மர்ஹூம்

வீ.எம்.இஸ்மாயில் (மருதூர் கொத்தன்) அரங்கில் மருதூர்க்கனி மன்றத்தின் ஏற்பாட்டில் வெளியிடப் படவுள்ளது.

இவ்புத்தக வெளியீட்டின் வரவேற்பு உரையும் தலைமையுரையும் ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர் மருதமுனை ஹஸன் நிகழ்த்தவுள்ளார். விஷேட உரையை பேராசிரியர் மௌன குருவும் நூல் அறிமுக விமர்சன உரைகளை‘மண்பூனையும் எலி பிடிக்கும்’ எனும் சிறுகதை தொகுதியை எழுத்தாளர் உமா வரதராஜன், கவிதை நூல்களான ‘அந்த மழை நாட்களுக்காக’ பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ், ‘மருதூர்க்கனியின் கவிதைகள்’ பேராசிரியர் செ.யோகராசா, ‘என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும்’ஆய்வாளர் சிறாஜ் மஸ்ஹூர், ‘சந்தனப் பெட்டியும் கிலாபத் கப்பலும்’ கலாநிதி பிர்தௌஸ் சத்தாரும்

ஏற்புரையை நூலாசிரியரின் மகள் டாக்டர் வஜ்றா றபீக்கும் நிகழ்த்தவுள்ளார்கள்.

**மருதமுனை நிருபர்**

# பிரமிடுகள் வெறும் சமாதிகளல்ல!

எகிப்து நாட்டிலுள்ள பிரமிடுகள் என்று கூறியதுமே, மம்மி திரைப்படங்கள் தான் நம் நினைவிற்குள் முதலில் குதிக்கின்றன. பிரமிடுகள் என்றாலே மிகவும் மர்மமான, திகிலான மற்றும் சிக்கலான கட்டமைப்புகள் அல்லது எகிப்திய சாம்பிராஜ்யத்தின் சமாதிகள் என்ற எண்ணத்தை இந்தியர்களுக்கு மட்டுமில்லாமல், உலகம் முழுக்க விதைத்த பெருமை - மம்மிக்கள் சார்ந்த திரைபடங்களையே சேரும். சரி திரைப்படங்களை சற்று ஓரங்கட்டிவிட்டு, அறிவியல் கண்கொண்டு ஆராய்ந்தால் எகிப்து பிரமிடுகள் மீதான மர்மங்கள் விலகுமா என்று கேட்டால்.? - ''அதற்கு சினிமாவே தேறலாம்''என்பது தான் பதில்.

பிரமிடுகள் பல நூற்றாண்டுகளாக நிபுணர்களையும், அறிவியல் - தொல்லியல் ஆய்வாளர்களும் குழப்பிக்கொண்டு தான் இருக்கிறது. ஒட்டுமொத்த எகிப்து பாலைவனத்திலும் ஒரே ஒரு பிரமிட் கட்டமைக்கப்பட்டிருந்தால் கூட - இதெப்படி சாத்தியம்.? இது யாரால் (எதனால்) கட்டமைக்கப்பட்டது.? போன்ற கேள்விகள் கிளம்பியிருக்கும். ஆனால் எகிப்து தேசமோ தன்னுள் எண்ணற்ற பண்டைய கலாச்சாரங்களின் பிரதிபலிப்பான பிரமிடுகளை கொண்டுள்ளது என்கிற போது கேள்விகளும் அதற்கான பதிலும், எண்ணற்றத் தன்மையை தானாகவே பெறுகின்றன.

முதலில் பிரமிடுகள் என்றதுமே எகிப்து நாட்டை நினைத்துக்கொள்வதை நிறுத்துங்கள். ஏனெனில் பிரமிட்கள் எகிப்



தில் மட்டுமல்ல மெக்ஸிகோவிலும் உள்ளன. ஆக இந்த பிரமிடு அமைப்புகள் இந்த இரண்டு நாடுகளுக்கும் மட்டுமே உள்ளன என்ற முடிவிற்கு வந்துவிட வேண்டாம். மத்திய அமெரிக்காவில் மட்டுமே 1000-க்கும் மேற்பட்ட பிரமிடுகள் உள்ளன.

இன்னும் சொல்லப்போனால் எகிப்தில் வெறும் 120 பிரமிடுகள் மட்டுமே உள்ளன. சீனாவில் மொத்தம் 300 பிரமிடுகளும் மற்றும் சூடானில் 200-க்கும் மேற்பட்ட பிரமிடுகளும் உள்ளன. ஆக, பூமியின் எந்தவொரு பகுதியிலும் பிரமிடு எனும் புதிரான கட்டமைப்பை, ஒரு கணிக்கமுடியாத கதைபின்னலுடன் பூர்வகாலப் பண்பாடுகள் நமக்கு விட்டுச்சென்றுள்ளதை கண்கூடாய் பார்க்க முடிகிறது.

பூமி முழுவதும் சிதறிக்கிடக்கும் ஆயிரக்கணக்கான பிரமிடுகள் நமக்கு கூறுவது என்ன.? குறிப்பாக ஏன் பெரும்பாலான பிரமிட்கள் வடிவமைப்பில் ஒற்றுப்போகின்றன.? உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றான - கிரேட் கிஸா பிரமிட், ஒரு தொல்பொருள் மர்மம் மட்டுமின்றி ஒரு புவியியல் அதிசயமாகவும் இருப்பது எப்படி.? பண்டைய நாகரிகங்கள் இந்த பிரமிட்களை கட்டியெழுப்ப காரணம் தான் என்ன.?

பண்டைய எகிப்தியர்கள் பூமியின் அனைத்து நிலப்பகுதிகளுக்குமான சரியான மையத்தில் கிரேட் கிஸா பிரமிடை நிர்வகித்தது எப்படி போன்ற எண்ணற்ற கேள்விகள் பிரமிடுகள் மீது திணிக்கப்பட்டாலும், மிக முக்கியமான,மிகவும் சமானியத்தனமான ஒரு கேள்வி என்னவென்றால் - ஏன் பிரமிடுகள் கட்டப்பட்டன.? என்பது தான். இவைகளெல்லாம் வெறும் கல்லறைகள் தான் என்றால், ஏன் பண்டைய கலாச்சாரங்கள் இந்த அற்புதமான நினைவுச்சின்னங்களை நிறுவுவதற்கு ஆகப்பெரிய செயல்முறைகளை மேற்கொண்டிருக்க வேண்டும்.? ஆக, நிச்சயமாக அவர்கள் எதோவொரு மிக முக்கியமான காரணத்திற்காகவே பிரமிட்களை எழுப்பியிருக்க வேண்டும்.

உக்ரேனில் உள்ள இயற்பியல் நிறுவனத்தின் விஞ்ஞானியான டாக்டர் வோலோடிமிர் ரஸ்னோஹாலோவெட்ஸ் , ஒரு தசாப்தத்திற்கும் மேலாக பிரமிடுகளுடன் செலவழித்து, அதன் பல உயரங்களுக்கு இடையிலேயான வேறுபாடு மற்றும் விகிதாச்சாரங்களை ஆய்வு செய்தப்பின்னர் - ஏன் பிரமிடுகள் கட்டப்பட்டன.? என்றவொரு தீர்க்கமான முடிவிற்கு வந்துள்ளார். பிரமிடு கட்டமைப்புகள் இதற்கெல்லாம் உதவியிருக்கலாம் என்ற தனது ஆய்வின் முடிவுகளை நம்முன் முன்வைக்கிறார்.

பிரமிடுகள் சார்ந்த ஆய்விற்காக மாஸ்கோவில் 144 அடி உயரமான பிரமிடு ஒன்று கட்டமைக்கப்பட்டது, அதை கட்டியெழுப்ப ரஷ்ய அரசாங்கத்திற்கு உதவியாக இருந்ததோடு, டாக்டர் வோலோடிமிர் ரஸ்னோஹாலோவெட்ஸ் அந்த கட்டமைப்பின்கீழ் நிகழ்த்திய ஆய்விலிருந்து - ஒரு நாள் முதல் ஐந்து நாட்களுக்கு பிரமிட்டில் சேமித்து வைக்கப்பட்ட விதைகள் மகசூலில் 30 -100% அதிகரிப்பை காட்டியுள்ளது என்பதை கண்டறிந்துள்ளார்.

மேலும் பிரமிடுகளின் கட்டமைப்பு, உயிரினங்களின் நோய் எதிர்ப்பு அமைப்பு (அதாவது வெள்ளை இரத்த அணுக்களையும்) மற்றும் நமது திசுக்களின் மீளுருவாக்கத்தினையும் (regeneration of tissue) மேம்படுத்துவதையும் கண்டறிந்துள்ளார்.

ஆய்வு நோக்கம் கொண்டு மாஸ்கோவில் கட்டமைக்கப்பட்ட பிரமிட் பகுதிக்கு மேலே ஓசோனில் குறிப்பிடப்பட்ட முன்னேற்றங்கள் தெரிவதையும் டாக்டர் டாக்டர் வோலோடிமிர் ரஸ்னோஹாலோவெட்ஸ் கண்டறிந்துள்ளார்.

மேலும் தொடர்ச்சியான ஆய்விலிருந்து பிரமிடு கட்டமைக்கப்பட்ட அருகாமை பகுதிகளில், நில அதிர்வு நடவடிக்கைகளின் கடினத்தன்மையும், அளவும் குறைந்துள்ளன என்பதும், பிரமிடுகள் அருகே நிலவும் வானிலை அதன் வன்முறைதன்மையை குறைத்துக் கொண்டுள்ளது என்பதும் கண்டறியபட்டுள்ளது. மறுபக்கம் தெற்கு ரஷ்யாவில் (பாஷ்கிரியாவில்) கட்டப்பட்டிருக்கும் பிரமிடுகள் எண்ணெய் உற்பத்தியில் சாதகமான விளைவைக் கொண்டிருப்பதை வெளிப்படுத்துகிறது. அதாவது அப்பகுதியில் கிடைக்கும் எண்ணெய் 30 சதவிகிதம் குறைவான பிசுபிசுப்புத்தன்மை கொண்டுள்ளது மட்டுமின்றி அங்குள்ள எண்ணெய் கிணறுகள் அதிக மகசூலையும் வழங்குகிறது என்கிறது ஆய்வின் முடிவுகள்.


ஆய்வின் ஒரு பகுதியாக, பிரமிடு ஆற்றல் புலத்தின் (pyramid energy field) வெளிப்பாடின் கீழ் சுமார் 5000 கைதிகள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.



ஆய்வின் முடிவில் கைதிகள் குறைந்த அளவிலான வன்முறை விகிதம் மற்றும் சிறப்பான ஒட்டுமொத்த நடத்தையை வெளிப்படுத்தியுள்ளனர். பிரமிடுகளுக்கு அடியில் நிகழ்த்தப்பட்ட தரநிலை திசு வளர்ப்பு (Standard tissue culture tests) சோதனைகளின்கீழ், வைரஸ்கள் மற்றும் பாக்டீரியாக்களின் தொற்றுக்குப் பிறகு வெளிப்படும் செல்லுலார் திசுக்களின் உயிர் பிழைப்பதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன என்பதும் ஆய்வின் முடிவில் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் கதிரியக்க பொருட்களில் இருந்து வெளிப்படும் கதிர்வீச்சுவானது பிரமிடுக்குள் குறைவாக வெளிப்படுவதும் கண்டறியப்பட்டுள்ளது மற்றும் சில தன்னிச்சையான கேப்பாசிட்டர் சார்ஜிங் நிகழ்வுகளையும் இந்த ஆய்வு சந்தித்துள்ளது. குறிப்பாக பிரமிடுகளுக்குள் தீவிரமான வெப்பநிலை வரம்புகளிலும், கார்பன் நானோ பொருட்களின் பண்புகளிலும் கணிசமான மாற்றங்களை இயற்பியல் வல்லுநர்கள் கண்டுள்ளனர். எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு பிரமிட்டின் உள்ளே சேமிக்கப்பட்ட நீர் ஆனது, மைனஸ் 40 டிகிரி செல்சியஸ் வரை திரவமாக இருப்பதும், வெளிப்படும் பட்சத்தில் அது உடனடியாக உறைநிலைக்கு மாறுவதும் கண்டறியப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்டுள்ள இந்த 13 அடிப்படையான காரணங்களில் எது மிகவும் சாத்தியமானதாக இருந்திருக்கலாம் என்பதை முடிவு செய்யும் முன்பு, நம்மால் கண்டறிய முடியாத முற்றிலும் வேறொரு காரணத்திற்க்காக கூட இந்த பிரமிடு கட்டமைப்புகள் எழும்பியிருக்கலாம் என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.



# சுத்தமான நெய்யை கண்டுபிடிப்பது எப்படி?

சைவமாக இருந்தாலும் சரி, அசைவமாக இருந்தாலும் சரி, நெய் ஒரு பொது உணவுப் பொருள். தென்னிந்திய உணவில் இரண்டறக் கலந்து விட்ட நெய், அண்மைக்காலமாக நம் வாழ்க்கையில் இருந்து மெள்ள மெள்ள விலகிப் போய்க் கொண்டிருக்கிறது. பெரும்பாலான வீடுகளில் பண்டிகைக் காலங்கள், விரத நாட்கள், சுப காரியங்களில் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

ஒரு காலத்தில் வீட்டுக்கு வீடு பசு மாடுகள் இருக்கும். வீட்டிலேயே வெண்ணெய் எடுத்து உருக்கிப் பயன்படுத்துவார்கள். வாசனையும் சுவையும் அவ்வளவு அற்புதமாக இருக்கும். மாடு இல்லாதவர்கள் இந்தத் தூய ஹோம் மேட் தயாரிப்பை வாங்கிப் பயன்படுத்துவார்கள். இப்போது மாடுகளே அற்றுப்போய் விட்டன. இபோதெல்லாம் நெய் விதவிதமாக பேக் செய்யப்பட்டு கடைகளில் விற்பனைக்கு வந்து விட்டது.

எல்லா உணவுப் பொருட்களைப் போலவே, நெய்யிலும் ஏகப்பட்ட கலப்படங்கள் செய்யப்படுகின்றன. பொதுவாக கடைகளில் விற்பனை செய்யப்படும் நெய்யில் சேர்க்கப்படும் பொருட்களின் பட்டியலைப் பார்த்தால் அதிர்ச்சியாக இருக்கிறது. எலும்புத்துகள்கள், ரசாயனங்கள், குரங்குக் கொழுப்பு, பன்றிக் கொழுப்பு... போன்றவை சேர்க்கப்பட்டிருப்பது பல்வேறு கட்ட சோதனைகளில் தெரியவந்துள்ளன.

பெரும்பாலும் டப்பாக்களில் 'இது சுத்தமான பாலின் கொழுப்பு' (ஷுடிடூடு ஹுச்ஞு) என்று குறிப்பிட்டிருப்பார்கள். ஆயுர்வேத மருத்துவப் பொருட்களை விற்கும் நிறுவனங்கள் கூட ஷுடிடூடு ஹுச்ஞு என்று போட்டே விற்றுக் கொண்டிருக்கிறார்கள். நெய்க்கும், பாலின் கொழுப்புக்கும் வேறுபாடுகள் உண்டு. பாலில் இருந்து பெறப்படும் கொழுப்பு ஒருபோதும் நெய்யாகாது.

இதற்கு மிக முக்கிய மூலக்கூறு பால். அந்த பாலினை நன்றாகக் காய்ச்சி, பிறகு அதை ஆற வைத்து, அதில் ஒரு துளி தயிரைக் கலந்து ஆறு மணி நேரம் உறைய வைக்க வேண்டும்.

ஆறு மணி நேரத்துக்குப் பிறகு அதை எடுத்துப் பார்த்தால் முழுவதுமாக அந்த பால் தயிராக மாறியிருக்கும். அந்தத் தயிரில் சிறிது நீர்விட்டு நன்றாகக் கடைந்தால் வெண்ணெய் தனியாக பிரிந்து வந்துவிடும். அந்த வெண்ணெயை வாணலியில் இட்டுக் காய்ச்சினால் தனியாகப் பிரிந்து வரும். இதுவே உண்மையான முறை. இதற்குப் பதிலாக பாலிலிருந்து கிடைக்கும் கொழுப்பை நெய்யாக்குவது சரியான முறை அல்ல.

பாலைத் தயிராக்கி தயிரை வெண்ணெயாக்கி அதை நெய்யாக்குவதுதான் சுத்தமானது. இதற்குத்தான் நோய் தீர்க்கும் மருத்துவக் குணங்கள் உண்டு.

மாறாக நேரடியாக பாலிலிருந்து கிடைக்கும் கொழுப்பு நெய்யை உண்டால் உடலால் அதனை ஜீரணிக்க முடியாது. கொழுப்பாகவே உடலில் சேர்த்து வைக்கும். அது தேவையற்ற பிரச்னைகளை உருவாக்கும்.

சராசரியாக 40 லிட்டர் பாலைத் தயிராக்கி பிறகு அதிலிருந்து வெண்ணெயை எடுத்து நெய்யாக்கினால் ஒருகிலோதான் கிடைக்கும். ஆனால், வணிகம் என்று வந்து விட்டால் இதில் பெரிய லாபம் இல்லை. அதனால், இயற்கையான எந்த நடைமுறையையும் பின்பற்றாமல் நேரடியாக பாலில் இருந்து கொழுப்பை எடுத்து அதோடு பல ரசாயனங்கள் மற்றும் விலங்கு கொழுப்புகளைச் சேர்த்து விற்பனைக்குக் கொண்டு வருகிறார்கள்.

ஆட்டுப்பால், எருமைப்பாலில் இருந்தும் இதைத் தயாரிக்கலாம். ஆனால் அதற்கு பெரிய மகத்துவம் இல்லை. நாட்டு மாடுகளின் நெய்யே நோய் தீர்க்கும் மருந்தாக இருக்கும். இதுமாதிரியான உண்மையான பொருள் வேண்டுமென்றால், நாமே வீட்டில் பசும்பால் வாங்கி காய்ச்சி, தயிராக்கி, கடைந்து வெண்ணெய் பெற்று நெய்யாக்கிப் பயன்படுத்தலாம்.

நாட்டு மாடுகள் குறைந்த அளவு பாலையே கொடுக்கும். திமில்கள், மாடலான கழுத்து, கொம்புகள் உள்ள நமது நாட்டுக்குச் சொந்தமான ரகங்களில் இருந்து பெறப்படும் நெய்க்கே அனைத்து மருத்துவக் குணங்களும் உண்டு. இதுதான் உடலின் செல்களுக்குள் எளிதாக ஊடுருவி தேவையான அனைத்துச் சத்துகளையும் வழங்கும். தேவையற்றக் கழிவுகளையும், உடல் நச்சுகளையும் வெளியேற்றும்.

இந்த நெய்யை நாள்தோறும் உட்கொண்டால் ஜீரண சக்தி மேம்படும், உடலின் வளர்சிதை மாற்றம் சீராகும். நரம்புகள், எலும்புகள் பலப்படும், மூளை வளர்ச்சிக்கு நல்லது, ரத்த ஓட்டம் சீராகும், உடல் பருமன் சீராகும், இதய நோய், மூட்டு வலி சீராகும். அனைவரும் எதிர்பார்க்கும் ஒமேகா சத்துகள் இதில் உள்ளது அதுமட்டுமல்லாமல் பல வைட்டமின்களும் உடலுக்குத் தேவையான நல்ல கொழுப்பும் இதில் அடங்கியுள்ளன.

### தூயநெய்யைக் கண்டறியும் முறை!

சுத்தமான நெய், அறை வெப்பநிலையிலேயே உருகிவிடும். சிறிதளவு நெய்யை உள்ளங்கையில் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். சிறிது நேரத்தில் நெய் உருகத் தொடங்கினால் அது தூய நெய்.

மஞ்சள் நிறத்தில் இருந்தால் நல்ல நெய் என்று சிலர் சொல்வார்கள். ஆனால் அது உண்மையில்லை. பசுவின் தன்மையைப் பொறுத்தும், அது வளரும் சூழலைப் பொறுத்தும் மஞ்சள், அடர் மஞ்சள் மற்றும் வெள்ளை போன்ற நிறங்களில் நெய் கிடைக்கும். ஆக நிறத்தை வைத்து நல்ல நெய், கெட்ட நெய் என்று கண்டு பிடிப்பது எளிதல்ல.

வெண்ணெய் வாங்கி உருக்கி நெய் ஆக்கும்போது கவனம் தேவை. பசுவின் பாலில் இருந்து எடுக்கப்படும் வெண்ணெயை காய்ச்சும்போது மணல் மணலாக வருவதுடன் நல்ல மணம் வீசும். எருமை மாட்டுப் பாலில் இருந்து பெறப்படும் நெய்யும் நறுமணம் வீசும்.

ஆனால் சிறிது கொழகொழப்புத்தன்மை இருக்கும். பசுவின் பாலைப் பெற்று நாமாகவே நெய் தயாரித்துக் கொள்வதே சிறந்தது. சராசரியாக ஒரு குடும்பத்துக்கு ஒரு நாளைக்கு ஒரு லிட்டர் பால் தேவைப்படும். அப்படி ஒரு லிட்டர் பால் வாங்கினால் அதிலிருந்து 3 ஸ்பூன் நெய்யைப் பெறலாம். பெருநகரங்களில் அ2 மில்க் கிடைக்கிறது. அதிலிருந்தும் நெய் தயாரித்துக் கொள்ளலாம்.

# ஆபத்தை உண்டாக்கும் பிளாஸ்ரிக் போத்தல் குடிநீர்!



குடிக்கும் நீரைக் கூட விலைக்கு வாங்கக்கூடிய நிலமைக்கு வந்துவிட்டோம். சுத்தம்,நாகரிகம் என்ற பெயரில் வெளியிடங்களில் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீரை வாங்கி பருகுவதையே பழக்கப்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதை விட அந்த போத்தலையே மீண்டும் தண்ணீர் பிடிக்க, குடிக்க என்று உபயோகிக் கின்றோம். இப்படி மறுபயன்பாடு செய்வது உடல்நலனுக்கு பெரும் தீங்கை விளைவிக்கும்.

மற்ற பொருட்களை விட பிளாஸ்டிக் பொருட்களில் அதிகப்படியான பக்டீரியா வளரும். அதனை சரியாக சுத்தம் செய்யாவிட்டால் பக்டீரியா அதிலேயே தங்கி பல்கிப் பெருகும். நமக்கு பக்டீரியா தொற்று ஏற்பட்டால் டயேரியா வயிற்றுவலி போன்ற உபாதைகள் ஏற்படும்.

சந்தையில் கிடைக்க கூடிய பெரும்பாலான மினரல் தண்ணீர் போத்தல்களில் பாலிதைலின் டெரிப்தலேட் என்ற கெமிக்கல் பயன்படுத்தப்படுகிறது. இதனை பயன்படுத்தியிருந்தால் அந்த பொருளை மறுஉபயோகம் செய்யக்கூடாது. தொடர்ந்து மறுஉபயோகம் செய்வதால் அந்த கெமிக்கல் உங்கள் உடலுக்குள் சென்றிடும். இந்த கெமிக்கல் நம் உடலில் கான்சர் செல்களின் வளர்ச்சியை தூண்டிவிடும்.

பெரும்பாலான பிளாஸ்டிக் பொருட்களில் பிபிஏ இருக்கும். தண்ணீர் போத்தல்களில் மட்டுமல்லாது, குழந்தைகள் விளையாடும் பிளாஸ்டிக் பொம்மைகளில் கூட இந்த கெமிக்கல் இருக்கிறது. முதல் முறை பிளாஸ்டிக் போத்தலில் குடிக்கும் போது இந்த கெமிக்கலின் அளவு குறைவாக இருக்கும். இதனையே நாம் மீண்டும் மீண்டும் பயன்படுத்தும் போது, போத்தலில் இருக்கும் கெமிக்கல் தண்ணீரோடு கலந்து நம் உடலுக்குள் சென்றிடும். அப்படிச் செல்லும் கெமிக்கலால் நமக்கு ஹார்மோன் மாற்றம் உண்டாகும், இதனால் இதயம், நரம்பு தொடர்பான பிரச்சனைகள் ஏற்படலாம்.

பிளாஸ்டிக் பாட்டில் தண்ணீர் குடிப்பதால் நம் உடலுக்கு மட்டுமல்ல இந்த சுற்றுச்சூழலுக்கும் அதிக பாதிப்புகள் ஏற்படுகின்றன. தண்ணீர் போத்தல் மட்டுமின்றி சோடா போத்தல், ஜூஸ் போத்தல் போன்ற எல்லாவற்றிலுமே கெமிக்கல் இருக்கிறது. இவற்றை ஒரு முறை பயன்படுத்துவதால் உடல் நலனுக்கு ஏற்படும் பாதிப்பிலிருந்து ஓரளவுக்கு தப்பித்தாலும் அவற்றை அப்புறப்படுத்தில் நாம் காட்டும் மெத்தனம் சுற்றுச்சூழலுக்கு பெரும் கேடு விளைவிக்கும்.

போத்தலில் தண்ணீர் எடுத்துச் செல்வது அவசியமானது. ஆனால் பிளாஸ்டிக்கினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து தற்காத்துக் கொள்ளவும் சில வழிகள் இருக்கிறது. குறைந்த அடர்த்தியில் பாலிதைலின் இருக்கும் போத்தலை பயன்படுத்தலாம். சந்தையில் இருக்கும் இயற்கை அங்காடியில் கிடைக்கும். இதைத் தவிர ஸ்டீல் அல்லது அலுமினியம், கண்ணாடி போத்தலிலும் தண்ணீரை கொண்டு செல்லலாம்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 24.02.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.